
சாவி
பப்ளிகேஷன்ஸ்



# ஆப்பிள் பசி

சாவி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# ஆப்பிள் பசி

சாவி

சாவி பப்ளிகேஷன்ஸ்
8-எ/ஏழாவது பிரதான சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-28

முதல் பதிப்பு : 1988
மூன்றாம் பதிப்பு : 1997

© பதிப்புரிமை ஆசிரியருக்கே

விலை : ரூ. 85.00


அட்டை வண்ணப்படம் : கோபுலு

சித்திரங்கள் : கோபுலு

அச்சிட்டோர் : ஸ்ரீ ஸ்கந்தா ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-600 029.

Wrapper printed by : Madras Classic Prints (P) Ltd., Chennai-34

# 1



ஊர் எல்லையில் காம்பவுண்டுச் சுவரில் தெரிந்த போஸ்டரில் —

''ராஜபார்ட் ரங்கதுரை, கோமாளி சாமண்ணு, ஜில் ஜில் ரமாமணி ஆகியோர் நடிக்கும், 'வள்ளித் திருமணம்' ஸ்பெஷல் நாடகம். காதர் பாட்சா கால் ஆர்மோனியம். அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும். ஆட்ட காலசட்டத்தை அனுசரிப்பதே முறை'' என்றுகொட்டை எழுத்துக்கள் உரத்துக் கூறின.

பாகவதர் மாதிரி ஜில்பாக் குடுமியுடன் கோமாளி சாமண்ணு கோணங்கித்தனமாக அந்த போஸ்டரில் சிரித்துக் கொண்டிருந்தான்.

எந்தக் கோணத்தில் பார்த்தாலும் அவன் தன்னைப் பார்த்துச் சிரிப்பது போலத் தோன்றியது பாப்பாவுக்கு. அவள் வெட்கத்தோடு சிரித்துக் கொண்டாள். 'ஐயே, மூஞ்சியைப் பாரு!'

சாலையோர வயல்களில் கரும்புச் சாகுபடி நடந்துகொண்டிருந்ததால் வெல்லப்பாகு வாசனை மூக்கைத் துளைத்தது.

''அப்பா, கரும்புச்சாறு குடிக்கணும் போல இருக்கப்பா. கொடுப்பாங்களா?''

''வாங்கிட்டு வாரேன் கண்ணு.''

வண்டி முழுதும் பச்சைப் புற்களை அடர்த்தியாய்ப் பரப்பி அதன் மீது சாயம் போன ஜமுக்காளத்தை விரித்திருந்தான் குமாரசாமி.

அந்தப் புற்களைக் கை நிறைய அள்ளி மாட்டுக்கு முன்னால் போட்டதும், ''இதோ வந்துர்ரேன் பாப்பா! இங்கேயே நில்லு'' என்று சொல்லிக் கொண்டே சரிவில் இறங்கி நடந்தான்.

'அம்மாடி!' என்று பாப்பாவும் கீழே குதித்து மரத்துப் போன தன் கால்களைப் பிடித்துவிட்டுக் கொண்டாள்.

குமாரசாமி இதற்குள் மண் குடுவை ஒன்றில் நுரை ததும்பக் கரும்புச் சாறு கொண்டு வந்து, ''இந்தா, வடி கட்டி வாங்கியாந்திருக்கேன்'' என்றுகொடுக்கவும் அதை ஆவலோடு வாங்கிக் குடித்த பாப்பா, ''நெஞ்செல்லாம் இனிக்குதப்பா. நீயும் கொஞ்சம் குடி!'' என்றாள்.

''ஜாவாக் கரும்பாச்சே. அப்படித்தான் இனிக்கும்.''

அதைக் குடித்து முடித்ததும், ''புறப்படுவமா? டயம் என்ன ஆச்சு? இருட்டுக்கு முன்னாலே நகைக் கடைக்குப் போயிரணும்'' என்றான். 'வாச்'சைப் பார்த்த பாப்பா ''அஞ்சரை ஆகுது'' என்றாள். அவள் எட்டாவது படிக்கும்போது அம்மா வாங்கிக் கொடுத்தது. இப்போது அம்மா இல்லை.

அந்த ஒற்றை மாட்டு வண்டி ஏறத்தாழ நகர எல்லைக்குள் வந்துவிட்டிருந்தது. சாலை மரத்து அக்கூ பட்சிகள் மழையைக் கூவி அழைத்துக் கொண்டிருந்தன.

''ரொம்ப இறுக்கமாயிருக்குதில்லே மழை வரும் போல....'' என்று மகளிடம் சொல்லிக் கொண்டே, ''ஹய்.... ஹய்....!'' என்று வண்டியை வேகமாகச் செலுத்தினான்.

மெயின் ரோடு நாற்சந்தியில் ஐந்து லாந்தரைச் சுற்றி வண்டியைத் திருப்புகிறபோது முனிசிபல் தெரு விளக்குகள் மஞ்சளாய்ச் சிணுங்கின.

தைப்பூச விழாவோடு சந்தைக் கூட்டம் வேறு.

திடீரென்று அதிர்ந்த திருவிழா வேட்டுச் சத்தத்தில் மிரண்ட மாட்டை இழுத்துப் பிடித்தான் குமாரசாமி. வண்டியைச் சந்தை மைதானத்தில் கொண்டு நிறுத்தி தாழங்குடையையும் சோற்று மூட்டையையும் பத்திரப்படுத்திவிட்டு, ''வாம்மா போகலாம்'' என்றான்.

ஓரத்தில் புதுப் பானைகள் மலையாய்க் குவிந்து கிடந்தன. இன்னொரு பக்கம் சாம்பல் பூசணிக்காய்கள்.

காடா விளக்கு ஒளியில் கண்ணாடி வளையல்களைப் பரப்பிக் கொண்டு பட்டை நாமம் தீட்டியிருந்த வளையல் வியாபாரி தெலுங்கு பேசிக் கொண்டிருந்தார். சுவர் ஓரமாக அடுப்பு வைத்து மசால் வடை வேகும் வாசனை போவோர் வருவோரைச் சுண்டி இழுத்தது.

கைநிறைய வளையல்களை அடுக்கிக் கொண்டு, வாய் நிறைய மசால் வடையைத் திணித்துக் கொண்ட பாப்பா,

''சோடா'' என்றாள் அப்பாவிடம். சற்றே தூரத்தில் அரச மரத்தடியில் பொய்க்கால் குதிரை ஆட்டம் நடப்பதைப் பார்த்த அவள், ''அங்கே போய் வேடிக்கை பார்க்கலாமா?'' என்பது போல் கண்களால் கேட்டாள்.

''அதுக்கெல்லாம் நேரமில்லே. இப்ப முதல்ல நகைக் கடைக்குப் போய் உன் அம்மாவின் வளையல், காசு மாலை, கம்மல் அத்தனையும் வித்து காசாக்கிடணும். தங்கம் நல்ல விலை போகுதாம். அப்புறம் இந்த ஊர்ல நம்ம உறவுக்காரப் பையன் ஒருத்தன் எலக்ட்ரிக் ஆபீஸ்ல வேலை செய்யறானும். உன் அழகுக்கு ஏத்த பையனும். அம்மா சொல்லிட்டுப் போயிருக்கா, உன்னை அவனுக்குத்தான் கட்டிக் கொடுக்கணும்னு. அவன் விலாசம் கேட்டு வாங்கி வச்சிருக்கேன்.''

''எனக்குக் கலியாணமும் வேணும். ஒண்ணும் வேணும்'' என்றாள் பாப்பா.

''அப்படின்னா?''

''ராத்திரிக்கு டிராமா பார்க்கலாம்பா. வள்ளித் திருமணம்.''

''முதல்லே வள்ளித் திருமணம். அப்புறம்தான் உன் திருமணங்கறயா? நல்ல பெண்ணம்மா நீ! வா, ஐயர் கடைக்குப் போய் ஏதாச்சும் சாப்பிடலாம்.''

''எனக்குப் பசி இல்லே. கரும்புச் சாறும் மசால்வடையும் நெஞ்சைக் கரிக்குது.... நீங்க சாப்பிடுங்க.''

இருவரும் ஐயர் கிளப்பை நோக்கிச் செல்லும்போது, ''அரிக்கன் விளக்கு வாங்கணும்னு சொன்னீங்களே, அத பாருங்க, அந்தக் கடையிலே.....'' என்றாள் பாப்பா.

வண்டியைத் தெரு ஓரமாக நிறுத்திவிட்டு இருவரும் அரிக்கன் விளக்கு ஒன்றை விலை பேசி வாங்கி அதில் நாடா போட்டு, 'குரங்கு மார்க்' கெரஸினும் ஊற்றிக் கொண்டார்கள்.

பாண்டு வாத்தியம் இசைக்க, ஆகாச வேட்டுகள் முழங்க, தண்டமாலையும் தங்க ஆபரணங்களும் மத்தாப்பு வெளிச்சத்தில் தகதகக்க, ஊரே குதூகலத்தில் எக்களிக்க தைப்பூச உற்சவர் ஏக தடபுடலாய் வீதிவலம் போய்க் கொண்டிருந்தார்.

கூட்டம் அலைமோதிக் கொண்டு நகர்ந்தபோது, இளமையின் பூரிப்பில் பதினேழைக் கடந்து நின்ற பாப்பாவின் அழகை மத்தாப்பூ வெளிச்சத்தில் கண்டு மயங்கிய வாலிபர்கள் அவளையே கண்கொட்டாமல் பார்த்தார்கள்.

''பாப்பா, சாமி பார்த்தது போதும், வா. இந்த ஆசாமிங்க கண்ணிலிருந்து தப்பிப் போயிரலாம்'' என்று அழைத்தான் குமாரசாமி.





நகைக் கடைக்குப் போய் அம்மாவின் நகைகளைக் கல்லில் உரசி, மாற்றுப் பார்த்து, குந்துமணி எடை போட்டுப் பணம் வாங்குவதற்குள் மணி ஒன்பதுக்கு மேல் ஆகிவிட்டது. 'டிராமா வுக்கு லேட்டாயிடுத்தே!'

குமாரசாமியின் இடுப்பில் இப்போது நகைகளுக்குப் பதிலாக நூறு ரூபாய் நோட்டுகளாய் மாறி இருந்தன. அடிக் கொரு தடவை இடுப்பைத் தொட்டுப் பார்த்துக்கொண்டவன், "ஐயாயிரம் எதிர்பார்த்தேன். ஆறுயிரமாக் கெடச்சுட்டுது" என்று காவிப் பற்களைக் காட்டினான்.

"உரக்கப் பேசாதீங்க. எவனாவது பிக்பாக்கெட் அடிச் சுடப் போறான்."

"அவன் பொழைச்சுருவானா அப்புறம்?" என்று மீசை யைத் தடவியவன், "இனிப்பு ஏதாச்சும் சாப்பிடறயாம்மா. ஜாங்கிரி, மைசூர்ப்பாகு!" எதிரில் பெட்ரமாக்ஸ் விளக்கில் பிரகாசித்த மிட்டாய்க் கடையைக் காட்டினான்.

"வேணாம்."

"காராசேவு?"

"ஊஹூம், டிராமா போவம்."

சூரியகுளம் தகரக் கொட்டகையில் வள்ளித்திருமணத்தை முன்னிட்டு வாசலில் சரிகைத் தொப்பிக்காரர்கள் பாண்டு வாசித்துக் கொண்டிருந்தார்கள். தெரு ஓரம் சாய்ந்திருந்த வேப்ப மரக் கிளைகளில் கலர் மின்சார பல்புகள் நிர்வாணமாய் எரிந்து கொண்டிருந்தன.

திருவிழாவுக்கு வந்திருந்த கிராமத்து மக்கள் அத்தனை பேரும் நாடகம் பார்க்க 'ஜே ஜே' என்று நெரிசலாய் நின்றார் கள். அந்தக் கூட்டத்தில் எப்படியோ முண்டி அடித்துப் புகுந்து டிக்கட் பொந்தில் கையை விட்டு இரண்டு முதல் வகுப்பு டிக்கட்டுகளை வாங்கி வந்துவிட்டான் குமாரசாமி.

ஒன்பது மணி என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் நாடகம் பத்தரை மணிக்குத்தான் ஆரம்பமாயிற்று.

திரைக்குள்ளேயிருந்து சாம்பிராணி மணம் வீச, "ஜெய ஜெய கோகுல பாலகா...." என்று காதர் பாட்சா கணீரென்று குரலெடுத்துப் பாட அந்தக் குரலும் ஹார்மோனிய நாதமும் கொட்டகையை நாத வெள்ளத்தில் மிதக்கச் செய்தன.

"கோகுலாட்டமிக்கும் குலாம் காதருக்கும் என்ன சம் பந்தம்னு கேட்பாங்களே, பார்த்தியா பாப்பா! இப்ப பாடறவரு காதர் பாட்சா சாயபு — பாட்டு 'கோகுல பாலகா!' வேடிக்கை யா இல்லே?"

பாப்பாவின் கவனமெல்லாம் எப்போது திரை விலகும். எப்போது கோமாளி சாமண்ணாவைப் பார்க்கலாம் என்பதி

லேயே இருந்தது. மாலையில் போஸ்டரில் பார்த்த அந்த ஆசை முகம் அடிக்கடி அவள் நினைவில் தோன்றித் தோன்றி.....

கடைசியாகத் திரை விலகி சாமண்ணு மேடைக்கு வந்தான்.

வரும்போதே கண்களைச் சுழற்றினான். சார்லி சாப்ளின் மாதிரி கால்களைத் தொட்டி போல் வளைத்தான். பிரம்பைச் சுழற்றினான். குல்லாயைப் பிரம்பால் தூக்கித் தலைக்கு மேல் சுழற்றினான். குளுகுளுவென்று கொட்டகை முழுதும் சிரித்தது! அவனுடைய ஒவ்வொரு அசைவுக்கும் கைதட்டலும் ஆரவாரமும் பிரமாதப்பட்டது.

"மாடி மேலே மாடி
அதன் மேலே ஒரு லேடி
அவளும் நானும் ஜோடி."

என்று பாடிக் கொண்டே ஆர்மோனியத்தின் அருகில் வந்து நின்றான்.

காதர்பாட்சா அந்த மெட்டிலேயே சரளி வாசித்தார். சாமண்ணு சுழன்று சுழன்று ஆடி, தலைகீழாக ஒரு பல்டி அடித்து அந்த வேகத்திலேயே எழுந்து நின்றபோது கொட்டகை அதிர்ந்தது.

"ஒன்ஸ்மோர்!" என்ற விஸில் சத்தம்! சாமண்ணுவுக்கு உற்சாகம் தாங்கவில்லை. மறுபடியும் அந்தர் பல்டி!

அடுத்த காட்சியில் வள்ளி வேடத்தில் வரப் போகும் ஜில் ஜில் ரமாமணி இப்போது லேடி வேடத்தில் வந்து நின்றாள். சாமண்ணுவுக்கு எதிர்ப் பாட்டுப் பாடினாள். சிருங்காரமாய் அவனைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சினாள்.

சாமண்ணுவை அவள் அணைத்துக் கொஞ்சியது பாப்பாவுக்குப் பிடிக்கவில்லை. 'இந்தப் பொறாமை உணர்வு தனக்கு ஏன் வர வேண்டும்? யாரோ ஒரு கூத்தாடிப் பையனை யாரோ ஒரு கூத்தாடிப் பெண் தொட்டால் அதைக் கண்டு நான் ஏன் பெருமூச்சு விட வேண்டும்?' பாப்பாவின் உள் மனம் கேட்டது.

அவனுடைய அந்தக் கோணங்கி 'மேக்கப்' புக்குப் பின்னால் ஓர் அழகு இருந்தது. கண்களில் வசீகரம் தெரிந்தது. அந்தக் காலத்து நாகரிகமான பாகவதர் ஜில்பாக் குடுமியே அவனுக்கு ஒரு கவர்ச்சியைத் தந்தது.

அரிதாரம் பூசி மேக்கப் மூலம் அவன் தன் வயதை உயர்த்திக் காட்டியிருந்தபோதிலும் அந்த முகத்தில் இருபது வயதின் இளமை ஒளிந்திருந்தது. நாடகம் முடிந்ததும் அவனை நேரில் பார்த்து நாலு வார்த்தை பாராட்டிப் பேச நினைத்தாள் பாப்பா.

நாடகம் சூடு பிடித்து சுவாரசியமாகப் போய்க் கொண்டிருந்த கட்டத்தில் திடீரென்று வானம் பொத்துக் கொண்டது போல் பேய்மழை கொட்டத் தொடங்கியது. கனத்த மழைத் துளிகள் தடதடவென தகரக் கொட்டகை மீது விழும் சத்தத்தில் நாடக பாத்திரங்களின் பேச்சு அமுங்கிப் போகவே, தரை மகா ஜனங்கள் விசில் அடித்து கலாட்டா செய்தனர். ''பணம் வாபஸ் கொடு'' என்று சில குரல்கள். ''ஆட்ட கால சட்டத்தை அனுசரிப்பதே முறை'' என்று பதிலுக்குச் சில குரல்கள். தொடர்ந்து பெய்த மழை காரணமாகக் கொட்டகையின் கூரை ஒழுகத் தொடங்கி, அடுத்த சில நிமிடங்களுக்குள் கீழே வெள்ளம் புரளவே எல்லோரும் அவசரம் அவசரமாக எழுந்து வெளியே ஓடத் தொடங்கினர்.

பாப்பாவும் குமாரசாமியும் மழைக்கு அஞ்சி வாசல் படிக்கட்டில் நின்றனர்.

குமாரசாமி தான் வைத்திருந்த ஈச்சங்குடையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, ''நீ இங்கே நில்லு பாப்பா. நான் போய் வண்டி கொண்டாரேன்'' என்று வேகமாக நடந்தான்.

நாடகத்துக்கு வந்த கூட்டம் கரைந்து கொண்டிருந்தது. இதற்குள் அரிதாரத்தை அழித்துக் கொண்டு முகத்தைத் துடைத்தபடியே வெளியே வந்து நின்றான் சாமண்ணா. படியில் நின்று கொண்டிருந்த பாப்பா தன் தந்தை சென்ற திசையிலேயே பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று தத்திக் குதித்த தவளை ஒன்று அவள் பாதத்தில் பட்டு சில்லென்று உறைக்கவே, பயந்து போய் 'ஆத்தாடி!' என்று அலறிக் கொண்டே பின்பக்கம் சாய்ந்தாள். படிக்கட்டில் தவறி விழப் போன அவளை சாமண்ணா சட்டென்று தன் கைகளால் தாங்கிக் கொண்டு, ''தவளைக்கா இப்படிப் பயந்துட்டீங்க?'' என்று சிரித்தான். பாப்பாவுக்கு நெஞ்சம் படபடத்தது. வெட்கத்தில் முகம் சிவந்தவளாய், ''மன்னிச்சுருங்க'' என்று கூறி விலகிக் கொண்டாள்.

''பரவாயில்லை. ஆனால் பாவம்! தவளைதான் ரொம்பப் பயந்துருச்சு!'' என்று ஜோக்கடித்தான் சாமண்ணா. பாப்பாவுக்கு இன்னும் படபடப்பு அடங்கவில்லை. நாணத்தோடு அவன் முகத்தைப் பார்த்தாள்.

'இந்த அழகு முகமா இத்தனை கோணங்கி செய்யுது!' என்று எண்ணிக் கொண்டாள்.

''நீங்க முன் வரிசையில்தானே உட்கார்ந்திருந்தீங்க? கூட உட்கார்ந்திருந்தவர் யாரு? உங்க அப்பாவா?''

''ஆமாம்; அதோ வண்டி கொண்டாரப் போயிருக்கார். இப்ப வந்துருவார்.''

''சாரல் அடிக்குது, இப்படித் தள்ளி வந்து நில்லுங்க.''

"உங்க நடிப்பும் பேச்சும் ரொம்ப தமாஷாயிருந்தது. பாழாப் போன இந்த மழை வந்து கெடுத்துட்டுது" என்று சொல்ல நினைத்தாள். ஆனால் பேச்சு வரவில்லை.

"எந்த ஊரு?"

"பூவேலி."

"இப்ப கிராமத்துக்கா போறீங்க?"

"இல்லை. ராத்திரிக்கு எங்கயாவது லாட்ஜில தங்கிட்டு காலம்பற கிராமத்துக்குப் போலாம்னு பாக்கறோம்."

"மணி பன்னிரண்டு ஆகப் போகுது. மழை வேறே. லாட்ஜில இந்த நேரத்துல எங்க இடம் கிடைக்கப் போகுது? திருவிழாவாச்சே! உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா ராத்திரி என் வீட்டிலேயே தங்கிட்டுப் போகலாம்" என்று அழைத்தான் சாமண்ணா.

"அப்பாவைக் கேளுங்க."

குமாரசாமி வண்டியைக் கொண்டு வந்து நிறுத்திய போது பாப்பாவும் சாமண்ணாவும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு, "அடடே, நீங்களா! ரொம்ப சிரிப்பா நடிக்கிறீங்களே!" என்றான்.

"அப்பா! நம்மை இவர் வீட்டுக்குக் கூப்பிடறாரு. லாட்ஜிலே இடம் கிடைக்காதாம். ராத்திரி தங்கிட்டுப் போகலாம்னு சொல்றாரு...."

"தம்பிக்கு எதுக்கு சிரமம்?"

"சிரமம் ஒண்ணும் இல்லீங்க...?"

"நீ என்னம்மா சொல்றே?"

பாப்பா பேசாமலிருந்தாள். அதில் அவள் சம்மதம் தெரிந்தது.

"சரி, தம்பி! உங்களுக்குத் தொந்தரவு இல்லேன்னா வாரோம். ஏறிக்குங்க" என்றான்.

சாமண்ணா முன்பக்கமாவே வண்டிக்குள் புகுந்து குமாரசாமி பக்கத்தில் உட்கார, பாப்பா பின்பக்கமாய் மூலையிலேயே உட்கார்ந்து அடைப்புக் கம்பியைச் செருகிக் கொண்டாள்.

"எப்படிப் போகணும் தம்பி? வழி சொல்லுங்க!"

"தெற்கால திருப்பி ஓட்டுங்க. அதோ தெரியுது பாருங்க ஒரு லாட்ஜ், அதுக்குப் பின் சந்துதான். அங்கே ஒரு சின்ன மாடி வீடு தெரியும். அதுதான் என் வீடு."

"மாடி மேலே யாராச்சும் லேடி இருக்காங்களா?" என்று கண் சிமிட்டினான் குமாரசாமி.

"யாரும் இல்லீங்க, நான் ஒண்டிக் கட்டைதான். என் அப்பா அம்மா சின்ன வயசிலேயே காலமாயிட்டாங்க. அதிகம் படிக்கல. கூத்தாடியாயிட்டேன்."

"அப்படிச் சொல்லாதீங்க. கலைஞனாயிட்டேன்னு சொல்லுங்க."

"ஆமாம். இந்தக் கலைஞன் அரை வயிற்றுச் சோற்றுக்கு தினம் தினம் அந்தர் பல்டி அடிக்க வேண்டியிருக்குது!"

"சோறு சாப்பிட்டீங்களா?"

"இனிமே எங்கே சாப்பிடறது? ஏகாதசிதான்."

"நாங்க சாப்பாடு கொண்டாந்திருக்கோம். சாப்பிடறீங் களா?"

"புளியோதரையா?"

"எப்படித் தெரியும்?"


"அதான் மணக்குதே!"

வாசலை அடையும் போது மழை வேகம் தணிந்திருந்தது. படிக்கட்டுகளின் அடிவாரத்தில் படுத்திருந்த பசி நாய் ஒன்று எழுந்து நின்று 'படபட'வென்று காதடித்து வாலைக் குழைத்தது.

"ஜிம்மி!" என்று அழைத்தவன், "எப்பவும் இங்கத்தான் கிடக்கும். நான் அரைப்பட்டினி, இது முழுப் பட்டினி!" என்று சிரித்துக் கொண்டே போய்க் கதவைத் திறந்தான் சாமண்ணா.

பாப்பா வலது காலை எடுத்து வைத்து அந்த வீட்டிற்குள் சென்றாள்.

# 2



"கொஞ்சம் நில்லுங்க — நான் போய் முதல்லே லைட்டைப் போடறேன். அப்புறம் நீங்க வரலாம். இது எனக்குப் பழக் கப்பட்ட இருட்டு!" என்று கூறி நாலே எட்டில் மாடிக் கதவை அடைந்து பூணூலில் கோத்திருந்த சாவியால் பூட்டைத் திறந்த சாமண்ணா ஸ்விச்சைப் போட்டதும் அழுக்கு பல்பு ஒன்று சோகமாய்ச் சிரித்தது.

"அட, எலக்ட்ரிக் விளக்கு!" என்று வியந்து கொண்டே பின்னோடு வந்து நின்றான் குமாரசாமி.

"சத்தம் போட்டுச் சொல்லாதீங்க. ஓட்டல்காரர் காதிலே விழுந்தா 'ஓசி வீட்டுக்கு விளக்கு வேறு கொசுறா?'ன்னு 'கட்' பண்ணிடச் சொல்வார். இது அவர் வீடு" என்றான் சாமண்ணா.

"அப்படின்னா இந்த வீட்டுக்கு வாடகை கிடையாதா?"

"ஊஹூம், இதை ஓட்டல்ல வேலை செய்யறவங்களுக்கு விட்டு வச்சிருந்தார். இப்ப அவங்க எல்லாரும் காலி பண்ணிட்டாங்க."

"ஏன்?"

"ஒரு ஸர்வர் திடீர்னு இங்கே தூக்கு மாட்டிக்கிட்டு செத்துட்டானாம். ஏதோ காதல் விவகாரமாம். மத்த பசங்க பயத்துலே காலி பண்ணிட்டுப் போயிட்டாங்க. அப்புறம் பேய் பிசாசு இருக்கும்னு யாருமே குடி வரலை இங்கே. ஊருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோயில் ஆண்டி, நான் மாட்டிக் கிட்டேன். அந்த ஓட்டலுக்கு தினமும் சாப்பிடப் போவேன். ஒருநாள் அந்த ஓட்டல்காரரிடம் ஏதாவது வாடகைக்கு ரூம்

கிடைக்குமான்னு கேட்கப் போக, அவர் 'வாடகை ஒண்ணும் தர வேணும். பாவம், உன்னைப் பார்த்தா ஏழையாத் தெரியுது. சும்மாவே இருந்துக்க' என்றார்."

"ஓட்டல்காரர் ரொம்ப நல்ல மனுசன்னு தோணுது.

"நீங்க ஒண்ணு. சோழியன் குடுமி சும்மா ஆடுமா? அவருக்கு ஒரு பெண் இருக்குது. இன்னும் கல்யாணம் ஆகல்லே. அரைப் பைத்தியம். பௌர்ணமி, அமாவாசையிலே முழுசாயிடும். அந்தப் பைத்தியத்தை என் தலையில கட்டப் பார்க்கிறார் ஓட்டல்காரர். அதுக்காகத்தான் இதெல்லாம். ஒரு கல்லிலே ரெண்டு மாங்காய்!"

"இங்கே தனியா இருக்க பயமா இல்லையா?"

"எனக்கென்ன பயம்?"

"ஆவி கீவி ....."

"ஆவியாவது கீவியாவது? எமனைக் கண்டாலே பயப்பட மாட்டேன் நான்!"

"எமனைப் பார்த்திருக்கிங்களா?"

"சத்தியவான் சாவித்திரி நாடகம் போடறமில்ல. அதிலே தினம் தினம் எமனைப் பார்த்து பயம் தெளிஞ்சு போச்சு!"

பத்துப் பதினைந்து பேர் தாராளமாய்ப் படுத்துத் தூங்கும் அளவுக்கு நீளமான ஹால். அதை ஒட்டி ஒரு சின்ன ரூம்.

நுழைந்ததுமே, அந்த வீட்டையும் அங்குள்ள சாமான்களையும் நுணுக்கமாய் கவனித்துக் கொண்டாள் பாப்பா.

சுவரில் கணேஷ் காப்பி கம்பெனி பிள்ளையார் படம்.

கதவில்லாத அலமாரியில் கோதைநாயகி. வடுவூர் ஐயங்கார் நாவல்கள், அமிர்தாஞ்சன் டப்பா, பாதி வரை எரிந்து அணைந்து போன ஊதுவத்தி. அதிலிருந்து விழுதாய் ஊசலாடிய ஒட்டடைச் சாம்பல்.

மூலையில் மண் பானை வைத்து அதன் மீது அலுமினியத் தம்ளர்.

"நீங்க ஐயர்தானே?" என்று தயங்கிக் கேட்டான் குமாரசாமி.

"எப்படிக் கண்டுபிடிக்சீங்க?"

"பூணூலில் சாவி மாட்டியிருக்கிங்களே!"

பாப்பா ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டு நின்றாள்.

தூரத்தில் டீக்கடை வெளிச்சம் தெரிந்தது. தேய்ந்து போன கிராமபோன் ரிகார்டில் 'கோடையிலே இளைப்பாறி'க் கொண்டிருந்தார் எஸ்.ஜி.கிட்டப்பா.

ஜன்னலை ஒட்டினாற்போல் பெரிய காலி மனை. சுவர் ஓரத்தில் வேப்ப மரம். இன்னொரு பக்கம் ஓட்டலுக்குச் சொந்தமான உருட்டுக் கட்டைகளும் பிளந்த விறகுகளும் குவிக்கப்

பட்டிருந்தன. அதன் மீது பரங்கிக் கொடிகள் அடர்ந்து படர்ந்து மஞ்சளாய்ப் பூத்திருந்தன. அருகே இரண்டு கழுதைகள் அசையாமல் நிழல் சித்திரமாய் நிற்க, நாலைந்து தவளைகள் ஜலதோஷக் குரலில் சமீபத்திய மழையை வாழ்த்திக் கொண்டிருந்தன.

"சாப்பிடுவோமா, தம்பி!" என்று குமாரசாமி கேட்க, பாப்பா சட்டென்று அந்த இடத்தைப் பெருக்கி இலை போட்டுப் புளியோதரையை எடுத்து வைத்தாள்.

சாமண்ணா சாப்பிட அமர்ந்தான்.

"சங்கோசப்படாதீங்க தம்பி! இது உங்க வீடு!" என்றான் குமாரசாமி.

"வீடு ஒட்டல்காரருடையது. சாப்பாடு உங்களுடையது!" என்று சிரித்தான் சாமண்ணா.

"தமாஷப் பேசறீங்களே! தம்பிக்கு எப்ப கல்யாணம்?"

"இந்தக் கூத்தாடிக்கு யாருங்க பெண் கொடுப்பாங்க? கொடுத்தாலும் அரைப்பைத்தியம், முழுப்பைத்தியம் இப்படித்தான் வரும்..."

பாப்பா அவன் இலையில் இன்னும் கொஞ்சம் புளியோதரை வைத்தாள்.

"போதும்: அவ்வளவையும் எனக்கே போட்டுடாதீங்க."

"நிறைய்ய இருக்குங்க. நீங்க சாப்பிடுங்க" என்றாள் பாப்பா.

"உங்களை ஒண்ணு கேட்கணும்னு நினைச்சேன், கேட்கலாமா?"

"தாராளமாக் கேளுங்க..."

"நாடகம் ஆரம்பிக்கறதுக்கு முந்தி சாப்பிடற வழக்கமில்லையா?"

"சில நாளைக்குச் சாப்பிடுவேன். சில நாளைக்குக் காசு இருக்காது. நாடகத்திலே ஒரு சீன்ல நான் நாலு ஆரஞ்சு, அஞ்சு பலாச்சுளை அரை டஜன் வாழைப்பழம் அவ்வளவையும் அப்படியே விழுங்கறாப்பல ஒரு காட்சி வரும். ஜனங்க அதை ரொம்ப ரசிப்பாங்க. இன்னைக்கு மழை வந்து நாடகம் பாதியிலே நின்னு போச்சா? அதனாலே அந்த சீன் இல்லாமப் போயிட்டுது. நான் ஒரு அதிர்ஷ்டம் இல்லாத ஆளுங்க" என்றான்.

திடீரென்று அந்த அழுமூஞ்சி பல்பு அணைய பாப்பா விரைந்து அந்த அரிக்கன் விளக்கை ஏற்றி வைத்தாள்.

"இதுக்குத்தான் வீட்டிலே ஒரு பெண் பிள்ளை இருக்கணுங்கறது..." என்றான் குமாரசாமி.

"டிராமாவிலே என் சீன் வர்றப்பத்தான் மழை வந்து கெடுக்கும். சாப்பிடறப்போ விளக்கு அணைஞ்சு போகும். லாட்டரி டிக்கெட் வாங்கினால் முதல் பரிசுக்கு அடுத்த நம்பர் என்னு

டைய நம்பராயிருக்கும். சின்ன வயசிலேயே அப்பா அம்மாவை இழந்து அனுதையா ஊர் ஊரா அலேஞ்சேன். கடைசியிலே டிராமாக் கம்பெனியிலே சேர்ந்தேன். அங்கேயும் கோமாளி வேஷம்தான். அரைப்பட்டினிதான். என் வாழ்க்கையே ஒரு நாடகமாப் போச்சு. மொத்தத்திலே நான் ஒரு கத்தரி யோகக்காரன்'' என்று விரக்தியோடு சொன்னுன் சர்மண்ணு.

''கவலேப்படாதீங்க. சீக்கிரமே நல்ல காலம் பொறக்கும்'' என்முன் குமாரசாமி.

அப்போது மீண்டும் அந்த மின்விளக்கு எரிய ஹால் பிரகாசமாயிற்று. ''பார்த்தீங்களா!''

காலேயில் காகம் கரையும் முன்பே எழுந்துவிட்ட பாப்பா அந்த வீட்டையும் வாசலேயும் பெருக்கிச் சுத்தப்படுத்தி விட்டு, ''சர்மண்ணு படுத்துள்ள அறையைப் பெருக்கலாமா?'' என்று எட்டிப் பார்த்தாள்.

அவன் அசையாமல் தூங்கிக் கொண்டிருந்தான்.

'அப்பா கூட இன்னும் எழுந்திருக்கலேயே! இவங்க எழுந்திருப்பதற்குள் குளியல் வேலேயை முடித்துவிடலாம்' என்று எண்ணியவளாய் பாத்ரூமுக்குள் சென்றபோது கதவு மக்கர் செய்தது. காலின் கீழே கிடந்த செங்கல்லேத் தள்ளிக் கதவுக்கு முட்டுக் கொடுத்து, சடுதியில் குளியலே முடித்துக் கொண்டு வெளியே வந்தாள். குமாரசாமி வேப்பங்குச்சி ஒடித்துப் பல் விளக்கிக் கொண்டிருந்தான்.

''அப்பா, அவர் எழுந்துட்டாரா பாருங்க.''

குமாரசாமி அறையில் எட்டிப் பார்த்து 'தம்பி!' என்று குரல் கொடுக்க, சர்மண்ணு எழுந்து உட்கார்ந்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன. ''உடம்பெல்லாம் வலிக்குது, தலேவலி தாங்க முடியலே...'' என்முன்.

''டாக்டரை அழைச்சுட்டு வரட்டுமா?''

''வேணுங்க. சூடா காப்பி சாப்பிட்டா எல்லாம் சரியாப் போயிடும். இதுக்கெல்லாம் டாக்டரைக் கூப்பிட்டா கட்டுப்படியாகுமா?''

அவனேத் தொட்டுப் பார்த்த குமாரசாமி, ''உடம்பு சுடுதே!'' என்முன்.

பாப்பா பதறிப் போய், ''அப்பா, நீங்க சீக்கிரம் போய்க் காப்பி வாங்கிட்டு வாங்க'' என்முள்.

குமாரசாமி படி இறங்கிப் போனதும், ''தலேயை ரொம்ப வலிக்குதா?'' என்று கேட்டுக் கொண்டே சர்மண்ணு அருகில் போய் அவன் நெற்றியைப் பிடித்து விட்டாள்.

சர்மண்ணுவுக்கு அது இதமாக, ஆறுதலாக, இனிமையாக இருந்தது. வலியெல்லாம் குறைந்து விட்டது போல் தோன்றியது.

அந்த ஜுர வேகத்தில் பாப்பாவின் கரங்களைத் தன் கைகளால் பற்றிக் கொண்டு; "பாப்பா! நீ எப்பவும் இந்த மாதிரி என்னோடேயே இருக்கணும் போல இருக்குது. என்னைத் தனியா விட்டுட்டுப் போயிட மாட்டியே...?" என்று அவளைத் தன் பக்கமாக இழுத்து அணைத்துக் கொண்டான்.

"ஐயோ, விடுங்க என்னை" என்று வெட்கத்தோடு திமிறிக் கொண்டாள் பாப்பா. அவள் கைகள் நடுங்கின. கண்களில் பயமும் படபடப்பும் தெரிந்தன.

"கோவமா, பாப்பா?"

அவள் பதில் எதுவும் கூறாமல், "அமிர்தாஞ்சனம் கொண்டு வரட்டுமா?" என்று கேட்டாள்.

"உம்" என்றான்.

அவள் அமிர்தாஞ்சனம் எடுத்து வந்து அவன் நெற்றியில் தேய்த்தாள்.

"உன்னோடு பழகினது கொஞ்ச நேரம்தான். ஆனாலும் ரொம்ப நாளாப் பழகின மாதிரி தோணுது. உன் அளவுக்கு என்னிடம் அன்பு காட்டினவங்க, ஆதரவாப் பேசினவங் கன்னு இதுவரை யாருமே கிடையாது. என் வாழ்க்கையிலே நீ ஒருத்திதான் முதல் முதல்..."

அவள் மௌனமாக இருந்தாள்.

"நான் நேற்று ராத்திரி ஒரு வேடிக்கையான கனவு கண் டேன். அதைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க."

"திடீர்னு நான் செத்துப் போயிடறேன். எனக்காக யாருமே அழலே. "சர்மண்ணா, நீ செத்துப் போயிட்டயா"ன்னு நாலைஞ்சு பேர் மட்டும் அழறாங்க. அவங்க யார்னு பார்த்தா அத்தனை பேரும் சர்மண்ணா!"

"அப்புறம்?"

"நாலு பேர் என்னைச் சுடுகாட்டுக்குத் தூக்கிட்டுப் போறாங்க... அந்த நாலு பேர் யாருன்னு பார்க்கிறேன்."

"யார் அது?"

"அவங்களும் நானேதான். நாலு சர்மண்ணா என்னைத் தூக்கிட்டுப் போறாங்க..."

"அப்புறம்?"

"நெருப்புச் சட்டி தூக்கறவன், கொள்ளி வைக்கிறவன், எலும்பு பொறுக்கறவன், பால் விடறவன், அஸ்தி கரைக்கி றவன் எல்லாமே நான்தான். ரொம்ப வேடிக்கையாயில்லே."

"ரொம்பப் பரிதாபமாயிருக்குங்க."

"இப்ப எனக்காகக் கண்ணீர் விட நீ ஒருத்தி இருக்கேங்கற நினைப்பே எனக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கு தெரியுமா?"

"பாப்பா, சுடச்சுட காப்பி கொண்டு வந்திருக்கேன்" என்று கூஜாவைக் கொண்டு வைத்தான் குமாரசாமி.





"இந்தாங்க காப்பி. இதைக் குடிங்க. தலைவலி பறந்துரும்" என்றாள் பாப்பா.

"பல் விளக்கலையே...!" என்று இழுத்தான் சர்மண்ணா.

"யானை பல்லா விளக்குது?" என்று குமாரசாமி கேட்க, சர்மண்ணா சிரித்துக் கொண்டே காப்பியை வாங்கிக் குடித்தான். தன்னுடைய அத்து மீறிய செயலுக்காகப் பாப்பா தன் மீது கோபப்படவில்லை. அப்பாவிடமும் அது பற்றிச் சொல்ல வில்லை என்று எண்ணும்போது அவனுக்கு வியப்பாகவும் ஆறுதலாகவும் இருந்தது.

காப்பியைக் குடித்து முடித்ததும் அவன் உடம்பெல்லாம் ஒரு முறை குப்பென்று வியர்த்துக் கொட்டியது.

"ஜூரம் விட்டுப் போச்சு போல இருக்கு" என்று சிரித்தாள் பாப்பா.

"தம்பி, அப்ப நேரமாகுது. மழைக்கு முன்னே நாங்க புறப்பட றோம். உடம்பைப் பார்த்துக்குங்க. பூவேலிக்கு ஒரு முறை வந்துட்டுப் போங்க..." என்றான் குமாரசாமி.

அந்த நேரம் 'சர்மண்ணா' என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டு, "யார் பாருங்க, காதர் பாட்சா மாதிரி தெரியுது" என்றான் சர்மண்ணா.

காதர் பாட்சாவேதான்!


"தம்பி! இன்னும் கொஞ்ச நாளைக்கு நாடகம் கிடையா தாம்" என்று சொல்லிக் கொண்டே வந்தார் காதர்.

"ஏனாம்?"

"இந்த மழை அடியோட நின்னப்புறம்தான் மறுபடி நாடக மாம். லெட்டர் போட்டப்புறம் வந்தாப் போதுமாம். நம்மை யெல்லாம் அவங்கவங்க ஊருக்குப் போகச் சொல்லிட்டார் க்காண்ட்ராக்டர். எல்லாருக்கும் சம்பளம் பட்டுவாடா பண்ணிக்கிட்டிருக்காரு. நீயும் போய் வாங்கிக்க!" என்றார் காதர்.

"என்ன சொல்றே காதர் நீ? சம்பளத்தை வாங்கிக்கிட்டு நான் எங்கே போவேன்? எனக்கு ஊரார், உறவினர் யாரும் கிடையாதே!" என்று பாப்பாவைப் பரிதாபமாய்ப் பார்த்தான் சர்மண்ணா.

# 3



"தம்பி, அப்படின்னு என்ன செய்யப் போறீங்க? டிராமா தான் இல்லையாமே. எங்களோடு பூவேலிக்கு வந்துடுங்களேன்," பாப்பாவின் முகத்தைப் பார்த்து, "என்னம்மா, நான் சொல்றது சரிதானே?"

அவள் சர்மண்ணுவின் முகத்தைப் பார்த்தாள்.

சர்மண்ணு சொன்னான்.

"நீங்க ஏதோ டிராமாவுக்கு வந்தீங்க. வந்த இடத்திலே தற்செயலா என்னைப் பார்த்தீங்க. மழைக்குத் தங்கினீங்க. சாப்பாடு போட்டீங்க, காப்பி வாங்கி வந்து கொடுத்தீங்க. இதுக்கெல்லாம் நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன். இப்ப நான் வரலையேன்னு வருத்தப்படாதீங்க."

"உனக்கு உடம்பு சரியில்லாதப்போ தனியா விட்டுட்டுப் போறது மனசுக்கு அவ்வளவு சமாதானமா இல்லே...! அதான் யோசிக்கறோம்."

"பரவாயில்லைங்க. என் வாழ்க்கையில இதெல்லாம் சகஜமாயிட்டுது. பட்டினியும் கிடப்பேன். பாயசமும் சாப்பிடுவேன்! பெரிய பெரிய குடும்பத்துப் பெண்களெல்லாம் நாடகம் பார்க்க வருவாங்க. பார்த்துட்டு என்னைப் புகழ்ந்து பேசுவாங்க. விருந்துக்கு அழைப்பாங்க. சில பெண்கள் வலிய வந்து என்னோடு சிரிச்சுப் பேசி சிநேகமாப் பழகறதும் உண்டு. ஆனால் நாடகக் கம்பெனி அடுத்த ஊருக்குப் போயிட்டா, அத்தோடு எல்லாம் நின்னு போயிடும்."

"எங்க சிநேகத்தையும் அந்த மாதிரி நினைச்சுராதீங்க. தொடர்ந்து இருக்கும்" என்றாள் பாப்பா.

''ரொம்ப சந்தோஷம். இப்ப லாட்ஜுக்குப் போய் ஏதாவது சாப்பிட்டுட்டுப் போகலாம் வாங்க. இந்த நேரத்துக்கு சூடா இட்லி கிடைக்கும் மல்லியப் பூ மாதிரி'' சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு புறப்படத் தயாரானான் சாமண்ணா.

வண்டி அம்பாள் லாட்ஜ் வாசலில் போய் நின்றது. வாசலில் குடுகுடுப்பைக்காரன் உடுக்கை அடித்துக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தான். ''வழிவிட்டு நில்லுப்பா'' என்று உள்ளே போனவர்கள் ஒரு மூலையில் இருந்த கடப்பைக் கல் டேபிளைத் தேடிச் சென்று உட்கார்ந்தார்கள். அலம்பி விட்டதால் தரையெல்லாம் ஈரம் காயாமலிருந்தது.

கல்லா மேஜைக்கு மேலே லட்சுமி, சரஸ்வதி, பாலாஜி படம். மீட்டர் பெட்டிக்கு மேல் சிகப்பு பல்ப் வெளிச்சம். எதிர் சுவரில் ஓட்டல்காரர் போட்டோ என்லார்ஜ்மெண்ட்.

மீசை வைத்த பால்காரரும் மளிகைக் கடைக்காரரும் பொங்கல், வடை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு சின்னப் பெண் கல்லா மேஜை ஓரம் காப்பிக் கூஜாவுடன் பார்சலுக்குக் காத்திருந்தாள்.

ஸில்க் ஜிப்பாவுக்குள் தங்க செயின் தெரிய ஓட்டல் ஐயர் உள்ளே வந்து கல்லாவில் அமர்ந்தார்.

மூலையில் உட்கார்ந்திருந்த சாமண்ணாவையும் அவன் பக்கத்தில் இருப்பவர்களையும் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே காலணா, அரையணா நாணயங்களைத் தனித் தனியாக மேஜை மீது அடுக்கி வைத்தார்.

பில் பணம் கொடுக்க சாமண்ணா எதிரில் வந்து நின்ற போது, ''எட்டரையணா மூணு பேர்'' என்று உள்ளிருந்தபடியே கட்டைக் குரலில் கூவினான் சர்வர்.

ஓட்டர் ஐயர், ''இவாள்ளாம் யாரு?'' என்று சாமண்ணாவிடம் கேட்டார்.

''நாடகம் பார்க்க வந்தாங்க. வெளியூர். மழைக்காக ராத்திரி இங்கே தங்கிட்டு இப்ப ஊருக்குப் போறாங்க.''

''இன்னிலேர்ந்து நாடகம் இல்லையாமே!''

''ஆமாம். சம்பளம் வாங்கத்தான் போய்ட்டிருக்கேன். அப்புறம் வந்து பேசறேன்'' என்று அவசரமாகப் புறப்பட்டான் சாமண்ணா. ஐயர் பாப்பாவையே உற்று உற்றுப் பார்த்தார். அவர் பார்வையில் சந்தேகம் இருந்தது.

'இந்த முகத்தை எங்கேயோ பார்த்திருக்கேனே! எங்கே? எப்போது?' என்று இருபது வருஷங்களுக்கு முன் தேடினார்.

''ஆமாம். அதே முகம். அதே ஜாடை! தாசி அபரஞ்சி மகளாயிருப்பாளோ?''

நாடகக் கொட்டகை வரை வண்டியிலேயே போய் இறங்கிக்கொண்ட சாமண்ணா அவர்கள் இருவரையும் ஊருக்கு

அனுப்பிவிட்டு, காண்ட்ராக்டர் வருகைக்காகக் காத்திருந்து சம்பளத்தை எண்ணி வாங்கிக் கொண்டபோது மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டது. நோட்டும் சில்லறையுமாகக் கிடைத்த இருபத்தேழு ரூபாயில் புருஷோத்தமன் ஷாப்பில் ஒரு சோப்பும் மூலைக் கதர்க் கடையில் ஒரு ரெடிமேட் சட்டையும் வாங்கிக் கொண்டான். வாடகை சைக்கிள் பிடித்து லாட்ஜுக்கே திரும்பிப் போய் இன்னொரு காப்பி சாப்பிட்டான்.

ஓட்டல் முதலாளி சுதேசமித்திரனில் 'மிராசுதார் துயர'த்தில் மூழ்கியிருந்தார். சாமண்ணாவைக் கண்டதும் "வா சாமண்ணா! ராத்திரி அவங்க உன்னோடதான் தங்கியிருந்தாங்களா?" என்று விசாரித்தார்.

"ஆமாம்."

"உனக்கு அவங்களை ரொம்ப நாளாத் தெரியுமோ?"

"ஊஹூம். நேத்துதான்; டிராமாவுக்கு வந்தப்பதான்..."

"அந்தப் பெண்ணை நான் எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது. ஆனா எங்கேன்னு தெரியல்ல. அப்புறம்தான் ஞாபகம் வந்தது. தாசி அபரஞ்சி முகம் அப்படியே உரிச்சு வச்சிருக்கு. அவள் மகளாய்த்தான் இருக்கணும்! அந்தக் காலத்திலே அபரஞ்சி அழகிலே மயங்காதவங்க கிடையாது...." என்றார்.

சாமண்ணாவுக்கு இது அதிர்ச்சியைத் தந்தது. 'அபாண்டமாயிருக்குமோ?' ஆனாலும் உணர்ச்சியை வெளியே காட்டிக் கொள்ளாமல், "அப்படியெல்லாம் இருக்காது....." என்றான்.

"நீ அவளைக் கல்யாணம் செய்துக்கப் போறதாக் கேள்விப் பட்டேனே!" என்று கேலியாகச் சிரித்தார்.

"யார் சொன்னாங்க?"

சிரித்தார். "எனக்கு அப்பப்ப எல்லா நியூஸும் வந்துடும் சாமண்ணா! காலையில காதர் பாட்சா வீட்டுக்கு வந்திருந்தான்."

"நினைச்சேன். அவனுக்கு மண்டை வெடிச்சுடுமே. அவன் வெச்ச வத்திதானா இது? நான் அவளைத்தான் கல்யாணம் செய்துக்கப் போறேன்."

"ஏண்டா இதுக்குத்தான் உனக்கு இலவசமா வீடு கொடுத்து வைச்சிருக்கனா? பாவம், ஏழைப் பையனாச்சே, பிராமணப் பிள்ளையாயிருக்கியே, எதிர்காலத்துலே எனக்கும் ஒத்தாசையாயிருப்பியே என்று என் மகளை உனக்குக் கொடுத்து உன்னை வீட்டோடு மாப்பிள்ளையா வச்சுக்கலாம்னு நினைச்சேன். நீ என்னடான்னா அந்தத் தேவடியாச் சிறுக்கியை..."

"என்ன சொன்னீங்க? நாக்கை அடக்கிப் பேசுங்க."

"தேவடியாச் சிறுக்கின்னு சொன்னேன். கூத்தாடிப் பயலுக்கு வேற எந்தப் பெண் கிடைப்பாள்....?" கேலியாக எக்காளமிட்டார்.

சாமண்ணாவுக்கு ரோசம் பொத்துக் கொண்டது. ஆவேசத்





தில் உடல் படபடத்தது. "என்னடா சொன்னே, ஓட்டல்காரப் பயலே! உடம்பு எப்படி இருக்கு? பணத் திமிரா?" என்று எம்பி அவர் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்தான்.

செயலற்றுப் பிரமித்து நின்ற ஓட்டலகாரர் கன்னத்தைத் தடவிக் கொண்டு, "டேய், அவனைப் பிடிங்கடா, உதைங்கடா!" என்று கூப்பாடு போட்டு சிப்பந்திகளை அழைத்தார். யாரும் கிட்டே வரவில்லை. "ஐயருக்கு நல்லா வேணும்!"

சாமண்ணா அங்கே நிற்காமல் அடுத்த கணம் சைக்கிளில் ஏறி மாயமாய் மறைந்துவிட்டான்.

அன்று பகல் எங்கெங்கோ அலைந்துவிட்டு அறையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த சாமண்ணா கீழே நாய் குரைக்கும் சத்தம் கேட்கவே யாரோ வருகிறார்கள் என்பதை ஊகித்தான். கதவு தட்டப்படும் சத்தம் கேட்டதும் எழுந்து போய்க் கதவைத் திறந்தான். அங்கே இரண்டு போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

"கொஞ்ச நாளைக்கு முன்னே யாரோ ஒருத்தன் தற்கொலை பண்ணிக்கிட்ட வீடுதானே இது?"

"ஆமாம், அதுக்கென்ன இப்போ?"

"இல்லே, அப்ப ஒருமுறை இங்கே வந்திருந்தோம். இப்ப நாங்க வந்தது அது சம்பந்தமா இல்லே. இது வேற கேஸ். உங்களைத்தான் தேடி வந்திருக்கோம்".

"என்னையா? என்ன சங்கதி?"

"இந்த வீட்டைச் சோதனை போடச் சொல்லி உத்தரவு."

"எதுக்கு?"

"உங்க பேர்ல அம்பாள் லாட்ஜ் முதலாளி கம்ப்ளெயிண்ட் கொடுத்திருக்கார். அவர் மகளுடைய தங்கச் சங்கலியைக் காணலேயாம். நீங்கதான் எடுத்துட்டு வந்திருக்கணும்னு சந்தேகப்படறார். தெஃப்ட் கேஸ்...."

"அடப்பாவி! இது அக்கிரமம்! அந்த அயோக்கியன் என் மீது வீணப் பழி போடறான். நான் யார்னு தெரியாதா உங்களுக்கு? நீங்க அந்த ஓட்டல்காரன் பேச்சை நம்பறீங்களா? அவன் பெண்ணை, அந்தப் பைத்தியத்தை நான் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன்னு தெரிஞ்சதும் இப்படி என் மேலே திருட்டுக் கேஸ் ஜோடிச்சிருக்கான்."

"உங்களை எங்களுக்கு நல்லாத் தெரியுங்க. அதான் டிராமாவிலே தினம் பாக்கறமே! ஆனாலும் எங்க டூட்டி. மேலிடத்து உத்தரவு."

"நல்லாப் பாருங்க. உள்ளே வாங்க."

முதலில் அலமாரியிலுள்ள புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்து உதறினார்கள். மடிக்கப்பட்ட இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் கீழே விழுந்தன.

''இது ஏது ரூபாய்? இங்கே எப்படி வந்தது?''

''ஐயோ, எனக்குத் தெரியாது. சத்தியமாத் தெரியாது. எனக்கும் இந்தப் பணத்துக்கும் சம்பந்தமே இல்லே. என் சம்பளப் பணத்தை இதோ பாக்கெட்டில் வச்சிருக்கேன்'' என்று பணத்தை எடுத்துக் காட்டினான்.

''அப்ப இந்த இருநூறு ரூபாய் உங்களது இல்லையா?''

''நிச்சயமா இல்லே.''

''ம்... அந்தத் தகரப் பெட்டியைத் திறந்து பாருப்பா....''

''தாராளமாப் பாருங்க.''

டிராமா போஸ்டர், சில கடிதங்கள், வேட்டி சட்டைகளைத் தவிர அதில் வேறெதுவும் தென்படவில்லை.

ஒரு கான்ஸ்டபிள் பாத்ரூமுக்குள் போய்த் தேடினான். அங்கிருந்த சோப்புப் பெட்டியைத் திறந்து பார்த்த அவன், ''இதோ, இதில் இருக்குங்க செயின்!'' என்று சத்தமாகச் சொன்னான்.

''எனக்கு ஒண்ணுமே தெரியாது. இதெல்லாம் ஓட்டல்காரர் சூழ்ச்சி. நான் இல்லாதபோது கொண்டு வச்சிருக்கார்'' என்று அலறினான் சாமண்ணா.


''நீங்களே நேரே வந்து இன்ஸ்பெக்டர்கிட்டே சொல்லிடுங்க. ஸ்டேஷனுக்கு வரீங்களா?''

''இந்த ஊரில் மானம் மரியாதையோடு இருந்துகிட்டிருக்கேன். நான் ஒரு கலைஞன். உங்களோடு தெருவிலே வந்தால் நாலு பேர் என்ன நினைப்பாங்க. நீங்க இப்படி என்னை அவமானப்படுத்தலாமா?''

''நாங்க என்னங்க செய்ய முடியும்? நீங்க இன்ஸ்பெக்டர் ஐயாகிட்டே வந்து பேசிக்குங்க. உங்களுக்கு அவமானமா இருந்தா தனியாவே போய் இன்ஸ்பெக்டரைப் பாருங்க. அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லே. நாங்க போய் ஓட்டல்லே காபி சாப்பிட்டுட்டு பின்னோடயே வந்துடறோம். நீங்க போய்க்கிட்டு இருங்க'' என்றனர்.

சாமண்ணா சைக்கிளில் புறப்பட்டான்.

# 4



இடிந்து மண்மேடிட்டுப் போயிருந்த பெருமாள் கோயிலுக்கு சாட்சியாக கருடகம்பம் மௌனமாய் நிற்க, அரச மரத்தின் சலசலப்போடு கிராமத்துச் சிறுவர்கள் பம்பரம் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சைக்கிளை நிறுத்திக் கீழே இறங்கினான் சாமண்ணா.

அந்தச் சிறுவர்களில் ஒருவனை அழைத்து, ''தம்பி! குமாரசாமி வீடு எங்கே இருக்கு தெரியுமா?'' என்று கேட்டான்.

''பாப்பா வீடா? அதோ ஒத்தை வண்டி தெரியுது பாருங்க, அதான்'' என்று கைகாட்டினான் ஒரு பையன்.

உள்குரல்:

''ஆறு மாதங்களுக்குப் பின் சற்றும் எதிர்பாராமல் தன்னைப் பார்க்கும்போது பாப்பா என்ன நினைப்பாள்? என்னைச் சரியான முறையில் வரவேற்பாளா? ஒருவேளை அடியோடு மறந்து போயிருப்பாளா?''

சைக்கிளைத் திண்ணை ஓரமாக நிறுத்தினான்.

வாழைப் பூ வடிவத்தில் விட்டத்தில் தொங்கிய நெற்கதிர்களைச் சுற்றிக் குருவிகள் 'லூட்டி' அடித்துக் கொண்டிருந்தன.

ஜூலை மாதத்து வெயில் முதுகைப் பிளந்தது. உள்ளே முற்றத்து வெயிலில் தாம்பாளம் நிறையக் கீரை விதைகள் கறுப்பாக உலர்ந்து கொண்டிருந்தன.

சாமண்ணா தயக்கத்தோடு எட்டிப் பார்த்தான். பாப்பாவும் அவள் சிநேகிதி அலமேலுவும் தாழ்வாரத்தில் பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

பின்பக்கம இரண்டாம் கட்டிலிருந்து 'தொம் தொம்' என்று நெல் குத்தும் ஓசை, வீடெங்கும் நிறைந்திருந்த தானிய மூட்டைகளைக் கண்ட சாமண்ணுவின் உள்குரல்: "சுபிட்சமான பணக்காரக் குடும்பம் போலிருக்கு."

யாரோ கனைக்கும் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்த பாப்பா, ரேழியில் சாமண்ணு நிற்பதைப் பார்த்துவிட்டு ஆச்சரியம் கலந்து பூரிப்புடன், "உள்ளே வாங்க" என்றாள். மகிழ்ச்சிப் பெருக்கில் உள்ளம் சிறகடித்தது.

இதற்குள் அவள் தோழி அலமேலு கொல்லைப்புறத்து வழியாக ஓட்டமாய் ஓடி மறைந்துவிட்டாள்.

"அப்பா இல்லையா?"

"பனங்கா வெட்டி வரப் போயிருக்கார். இப்ப வந்துருவார். அம்மா பின்கட்டிலே இருக்காங்க" என்றாள் பாப்பா.

சாமண்ணுவின் உள்குரல்: 'அம்மாவா? எந்த அம்மா? யாரைச் சொல்றா?'

"ஓடறாளே, அந்தப் பெண் யாரு?" என்று கேட்டான்.

"அடுத்த வீடு. என் சிநேகிதி. கூடப் படிச்சவ. வாங்க, இப்படி வந்து உட்காருங்க" என்று அழைத்து ஊஞ்சலைக் காட்டினாள். "எங்களை மறந்துட்டீங்களோன்னு நினைச்சோம். இத்தனை நாளா எங்க போயிருந்தீங்க? நானும் அப்பாவும் உங்களைத் தேடி ஒரு தரம் டவுனுக்குக் கூடப் போய்ப் பார்த்தோம். சரியான தகவல் எதுவும் கிடைக்கலே, டிராமாலயும் உங்களைக் காணலே...." என்று கூறியவள் தாகத்துக்கு மோர் கொண்டு வந்து கொடுத்தாள். "எங்க ஞாபகமே வரலையா, உங்களுக்கு?"

"உன்னை நான் கல்யாணம் செஞ்சுக்கப் போறதா அந்த ஓட்டர் ஐயர்கிட்ட போய் வத்தி வச்சிருக்கான் காதர்பாட்சா. அதைக் கேட்டுட்டு அந்த ஓட்டல்காரன் என்னைக் கண்டதும் ஒரேயடியா எகிறிக் குதிச்சான். அவன் மகளை அந்த அரைப் பைத்தியத்தை என் தலையில் கட்டிடணும்னு காத்திருந்தவனுக்கு இது ரொம்ப ஏமாற்றமாயிட்டுது. நான் அன்னைக்கு உங்களை வழி அனுப்பிச்சுட்டு ஓட்டலுக்குப் போனதும்....

'ஏண்டா, அந்தத் தேவடியாச் சிறுக்கியைக் கல்யாணம் பண்ணிக்கப் போறயாமே! இதுக்குத்தான் உனக்கு இலவசமா வீடு கொடுத்து வச்சிருந்தனா? கூத்தாடிப் பயலே! உனக்கு வேறு யார்ரா பெண் கொடுப்பாங்க? தாசி மகதான் கிடைப்பா' என்று கேலியாகச் சிரித்தான். அதைக் கேட்டதும் எனக்கு ரோசம் பொத்துக்கிட்டது. ரத்தம் கொதிச்சுது. பேயா மாறிட்டேன்.

'ஏண்டா ஓட்டல்காரப் பயலே! என்ன சொன்னே? நாக்கை அடக்கிப் பேசு! பணத் திமிரா?'ன்னு பதிலுக்குக் கேட்டு



அவன் கன்னத்திலே ஓங்கி அறைஞ்சுட்டேன். உடனே 'லபோ லபோ'ன்னு கத்தி ஊரைக் கூட்டினான். ஒருத்தரும் அவன் உதவிக்கு வரலே....''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? போலீசுக்கு லஞ்சம் கொடுத்து என் மேல திருட்டுக் குற்றம் சாட்டி எனக்கு ஆறு மாசம் ஜெயில் தண்டனை வாங்கிக் கொடுத்தான்....''

''அடப்பாவி! திருட்டுக் குத்தமா? உங்க பேர்லயா?''

''ஆமாம். நான் வீட்டிலே இல்லாத சமயம் பார்த்து மாறு சாவி போட்டுக் கதவைத் திறந்து அவன் மகள் செயினைக் கொண்டு வந்து வச்சுட்டு என் மேலே சந்தேகப்படறதாப் போலீஸ்ல சொல்லியிருக்கான். போலீஸ்காரங்க வந்து சோதனை போடறப்போ பாத்ரூமில செயினும் அலமாரியில இரண்டு நூறு ரூபா நோட்டும் கிடைச்சுது....

''இந்த ரூபா ஏது? உன்னுதா'ன்னு கேட்டாங்க போலீஸ்ல. அது என் பணமில்லேன்னேன்.

''செயின் மட்டும்தானே காணமப் போயிட்டதா கம்ப்ளெயிண்ட் கொடுத்திருக்கார். அப்படின்னா இந்த ரெண்டு நூறுரூபாய்நோட்டும் இங்கே எப்படி வந்தது'ன்னு கேட்டாங்க. எனக்குத் தெரியாதுன்னேன்.... பாப்பா ஏன் அழுறே? நீயும் என்னைத் திருடன்னு நினைக்கறியா?''

''இல்லே, அந்த நோட்டு ரெண்டையும் உங்களுக்கு உதவியா யிருக்கட்டுமேன்னு நான்தான் புஸ்தகத்துலே மறைச்சு வச்சுட்டு வந்தேன். அதுவே உங்களுக்கு அபகாரமாயிட்டு தேன்னு நினைக்கிறப்ப ரொம்ப துக்கமாயிருக்கு....''

''ஓகோ, நீ வச்ச பணம்தானா அது! நான் செய்யாத குற்றத் துக்கு என்னை ஜெயில்லே போட்டு அவமானப்படுத்திட்டான் அந்த ஓட்டல்கார அயோக்கியன்! நான் மானத்தோடு வாழ்ந்து கிட்டிருந்தேன். என்னை அந்த ஊரார் முன்னே தலை குனிய வெச்சுட்டான் இருக்கட்டும். அவனை நான் சும்மா விடப் போறதில்லை'' என்று கறுவினான்.

''குற்றம் செய்யறதுதான அவமானம். செய்யாத குற்றத் துக்கு ஜெயிலுக்குப் போறது அவமானம் இல்லே'' என்றாள் பாப்பா.

''நான் ஜெயிலுக்குப் போனதைக்கூட பெரிசா நினைக்கலே. உன்னை அவன் தாசி மகள்னு ஏசினதை நினைக்கறப்பதான் உடம்பெல்லாம் பத்தி எரியுது. ஜெயில்லேருந்து நேத்துதான் வெளியே வந்தேன். நேரா நாடகக் கொட்டகைக்குப் போனேன். காண்ட்ராக்டரைப் பார்த்தேன். அவர் காப்பி வாங்கிக் கொடுத்துட்டு, 'சாமண்ணா, உன்னை நான் மறுபடி யும் நாடகத்துலே சேர்த்துக்க முடியாது. என் நிலைமை அப்படி.

என் பேர்ல வருத்தப்படாதே'ன்னு சொல்லிட்டார். ஏன் அப்படிச் சொல்றீங்கன்னு கேட்டேன்.

'ரொம்ப நஷ்டமாயிட்டுது. ஓட்டல்காரர்தான் கடன் கொடுத்து கை தூக்கிவிட்டார். கடன் கொடுக்கறப்பவே, சாமண்ணு திரும்பி வந்து வேலை கேட்டா, வேலை தரக்கூடா துன்னு கண்டிப்பா சொல்லி வச்சிருக்கார். கம்பெனியே இப்ப அவர் பேர்லதான் நடக்குது. ஓட்டல்காரருக்குச் சொந்தம் மாதிரிதான்' என்றார்.

அங்கிருந்து நேரா ஓட்டலுக்குப் போனேன். என்னைக் கண்டதும் அந்த அயோக்கியன் பதறிப் போனான். திருதிருன்னு முழிச்சான். வேகமாகப் போய் அவன் சட்டையைப் பிடிச்சு இழுத்து தரதரன்னு நடு ரோட்ல கொண்டு வந்து நிறுத்தி 'ஏண்டா கலப்பட எண்ணெய்! என் மேலே பொய்க் கேஸ் போட்டு என்னை ஜெயிலுக்கு அனுப்பிச்சதுமில்லாம திரும்பி வந்தா வேலை தரக்கூடாதுன்னு வேறே காண்ட்ராக்டர்கிட்டே சொல்லி வச்சிருக்கியாமே!' என்று அவன் மென்னியை இறுக்கப் பிடிச்சேன்.

'ஐயோ, ஐயோ என்னைக் கொல்றானே! எல்லாரும் இப்படி வேடிக்கை பார்த்துட்டு நிக்கறீங்களே!' என்று கூப்பாடு போட்டான்.

'சத்தம் போட்டே, கொலையே விழும். ஜாக்கிரதை'ன்னு தொந்தியிலே ஓங்கி ஒரு குத்துவிட்டேன். அம்மாடின்னு அப்படியே விழுந்துட்டான்.

இதுக்குள்ளே கூட்டமான கூட்டம் கூடிட்டுது.

விட்டுருங்க பாவம், விட்டுருங்கன்னு. என்னைப் பிடிச்சு இழுத்து, அழைச்சிட்டுப் போயிட்டாங்க. அப்பவும் நான் சும்மா இல்லே. தெருப்புழுதியை வாரி அவன் மேலே வீசினேன்.

'டேய், மோசக்காரா! பொய்க் கேஸ் போட்டு ஜெயிலுக்கு அனுப்பினே இல்லே என்னை! இரு, இரு! இன்னும் கொஞ்ச நாளில் இதே ஊர்ல நானே சொந்தமா நாடகக் கம்பெனி ஆரம்பிச்சு உன் கம்பெனியை க்ளோஸ் பண்றனா இல்லையா பார். அது மட்டும் இல்லே. உன்னையும் நடுத் தெருவிலே நிக்க வைக்கலே என் பேர் சாமண்ணு இல்லே'ன்னு நாலு பேர் முன்னால் சத்தியம் செஞ்சுட்டு வந்திருக்கேன். என் ரத்தம் கொதிச்சுப் போச்சு. உன்னைப் பார்த்து தாசி மகள்னு சொன்னவன் நாக்கை அறுத்து எறிய வேணும்! ஆமாம், என் சபதத்தை நிறைவேத்தினப்புறம்தான் உன் கழுத்திலே தாலி கட்டப் போறேன். அதைச் சொல்லிட்டுப் போகத்தான் இப்ப வந்திருக்கேன்.''

பாப்பா பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"நீ அழாதே பாப்பா! நீ ஏன் அழறே?"

"நீங்க எனக்குத் தாலி கட்ட முடியாது. எனக்கு அப்பவே கலியாணம் ஆயிட்டுது. இத பாருங்க தாலி!" என்று தன் கழுத்தில் மறைந்திருந்த தாலியைத் தொட்டுக் காட்டினுள் பாப்பா.


"என்னது! உனக்குக் கலியாணம் ஆயிட்டுதா!"

"ஆமாம்."

"அப்படின்னு உன் புருஷன்....?"

"நான் தாசி மகளாம்! அவன் என்னைத் தள்ளி வச்சுட்டான். இப்ப நான் வாழா வெட்டி" என்ருள் பாப்பா.

# 5



"அம்மா, நான் குளிச்சு இன்னியோடு நாப்பத்தேழு நாளாச்சு!" என்று சொல்லும்போதே அபரஞ்சியின் கண்கள் மலர்ந்து காது மடல் சிவந்து போயிற்று.

"அடிப்பாவி! அந்த மேட்டுப்பட்டி மிராசுதார் புள்ளையா வயித்துல?" என்று தாயார் நாகரத்னம் வியக்க, பதில் ஏதும் கூறாமல் கால் கட்டை விரலால் தரையைக் கீறினாள் அபரஞ்சி.

"சொல்லித் தொலையேண்டி. அந்த ஐயர் சிநேகத்தை விட்டுருன்னு எத்தனை முறை சொல்வேன்? நீயானால் பெரிய பெரிய இடங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளிட்டு எந்நேரமும் அவர் நினைப்பிலேயே மிதந்துட்டிருக்கே?"

"அவருக்கென்ன குறைச்சலாம்? பெரிய மிராசுதாராச்சே?"

"ஆத்துலே வெள்ளம் ப்ரண்டாலும் நாய் நக்கித்தாண்டி குடிக்கணும். அவர் மிராசுதாராயிருந்தா நமக்கு என்னடி ஆச்சு? பொட்டு கட்டிக்கிட்டவளுக்கு எல்லாரும் பொது. தனிப்பட்ட முறையில் ஆசையை வளர்த்துக்கக் கூடாது. நம்ம குலதர்மம் அப்படி. ஒருத்தன் கூட சிநேகம் வச்சுக்கவா உனக்குக் கோயில்ல வச்சு பொட்டு கட்டினேன்."

"மாட்டேன். நான் அவரைத் தவிர, வேற யாரையும் தொட மாட்டேன்."

"என்னடி சொன்னே?" என்று கையை ஓங்கினாள் நாகரத்னம்.

"சரிதான், நிறுத்தும்மா! உன் மிரட்டலுக்கு நான் பயப்படப் போறதில்லே!" என்று மிஞ்சினாள் அபரஞ்சி.

"என்னடி ரொம்பத்தான் பேசறே! கத்த வித்தையெல்லாம்

பெத்த தாய் கிட்ட காட்டறயா?''

"பெத்த தாயாவா நடந்துக்கற நீ? பொட்டு கட்டித் தொலச்சாச்சு. தாசி குலம்னு முத்திரை குத்தி வாசல்ல பலகை மாட்டாத குறைதான். எனக்கு இந்த அசிங்க வாழ்க்கை பிடிக்கல. பல பேருக்கு உடம்பைக் கொடுத்துட்டு பட்டும் பகட்டுமா காசு மாலையைச் சாத்திக்க மனசு இடம் தரலே.''

"ஒருத்தனோட குடும்பம் நடத்தறதுக்காக ஆண்டவன் நம்மைப் படைக்கலடீ! பல பேருக்குச் சந்தோஷம் கொடுக்கற பிறவிகள் நாம். மேட்டுப்பட்டி ஐயரோட மட்டும் நீ சிநேகமா இருக்கிறதால என்ன லாபம்? ஊரும், உலகமும் உன்னை உத்தமின்னு பேசிடப் போகுதா? தாசிங்கிற பேரு மாறிடப் போகுதா?''

"எனக்கு உலகைப் பத்திக் கவலையில்லே. அது எப்பவும் என்ன வேணலும் பேசிட்டுத்தான் இருக்கும். இந்த அவலங்கெட்ட வாழ்க்கை எனக்குப் பிடிக்கலேன்னு என்னை விட்டுடு. நீ சம்பாதிச்ச சொத்தை நீயே வச்சுக்க. எனக்கு வேணும் அது. உனக்கு இந்த எச்சில் வாழ்க்கை பிடிச்சிருக்கலாம். மணம் வீசலாம். ஆனல் எனக்குப் பிடிக்கல்லே. உடம்பெல்லாம் முள் குத்தற மாதிரி இருக்கு.''

வாசலில் தாழம்பூ மணம் வீசியது.

நிமிர்ந்து பார்த்தாள் நாகரத்னம்.

குமாரசாமி கையில் தாழம்பூவோடு வந்து கொண்டிருந்தான்.

"வா, குமாரசாமி! என்ன விசேஷம் இன்னைக்கு? ஏது தாழம்பூ?'' என நாகரத்னம் கேட்க, "பாப்பாவுக்குத் தலை பின்னி விடற நேரமாச்சே. அதுக்குப் பிடிக்குமேன்னு ஏரிக்கரைப் புதர்லேர்ந்து வெட்டி வந்தேன்.''

"பாவம், உனக்குத்தான் இந்தக் குடும்பத்து மேலே எத்தனை அக்கறை?'' என்று சூள் கொட்டினள் நாகரத்னம்.

"அது சரி, அம்மாவுக்கும் பொண்ணுக்கும் என்ன தர்க்கம்?''

"எப்பவும் உள்ளதுதான். அவளுக்கு இந்த வாழ்க்கை பிடிக்கலையாம். மிராசு ஐயரோடதான் வாழப் போருளாம். குமாரசாமி! நீ இப்பவே ஐயர்கிட்டே போய் அபரஞ்சி முழுகாம இருக்காங்கற செய்தியைச் சொல்லிட்டு வா.''

"சொல்றேன் அபரஞ்சி. ஆனு இப்ப அதுக்கு நேரம் சரியில்லே. ஐயாவோட சம்சாரம் உடம்புக்கு முடியாமப் படுத்திருக்காங்க. பாவம், நாலு நாளா நல்ல காய்ச்சல்! வண்டி அனுப்பி வைத்தியரைக் கூட்டியாரச் சொன்னுங்க. நான்தான் போய்க் கூட்டி வந்தேன். ஜன்னி மாத்திரை தேய்ச்சுக் கொடுத்திருக்காரு வைத்தியர். அந்தம்மாவுக்கு உடம்பு நல்லபடி குண

மாயிடணும்னு மாரியாத்தாளை வேண்டிக்கிட்டிருக்கேன். காலையிலேர்ந்து சாப்பிடக் கூட நேரமில்லே.''

''பலகாரம் சாப்பிடறயா? புட்டு செஞ்சு வச்சிருக்கேன்.''

''புட்டா? திடீர்னு என்ன புட்டு மேலே ஆசை வந்திருச்சு, உனக்கு?''

''எனக்கில்லே. அபரஞ்சிக்குத்தான். புள்ளைதாச்சிப் பொண்ணு கேட்டுதேன்னு செஞ்சிருக்கேன்.''

''எனக்கு மனசே சரியில்லேம்மா. இப்ப எதுவும் இறங்காது.''

இந்தக் குமாரசாமி ஒரு வித்தியாசமான பிறவி.

நாலு ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு, ஊருக்கு நல்ல வனாய், நாலு பேருக்கு உபகாரமாயிருந்து கொண்டு ஜீவனம் நடத்தும் அபூர்வப் பிறவி. ஐயர் குடும்பத்தைப் போலவே, அபரஞ்சி குடும்பத்தையும் ஒரு வாஞ்சையோடு நேசித்து ஆதர வாகப் பழகி வருபவன்.

அபரஞ்சியை நெஞ்சுக்குள் வைத்துத் தினமும் ஆராதிக்கும் ஒரு ஊமைக் காதலனாய் வாழ்ந்து கொண்டிருந்தான். இப்போது அந்தக் காதலும் நீறுபூத்த நெருப்பாகி, அதுவும் சாம்பலாகி விட்டது.

மேட்டுப்பட்டி ஐயரின் மனைவி தலையைச் சாய்த்து ஒரு மாதம் ஓடிவிட்டது.

ஆரம்ப துக்கங்கள் ஓரளவு வடிந்து மிராசு ஐயர் மறுபடியும் திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்ற வதந்தி ஊருக் குள் அடிபட்ட போதிலும் ஐயர் அதையெல்லாம் லட்சியம் செய்யாமல் இரவு பகலாக அபரஞ்சியின் மூச்சுக் காற்றையே சுவாசித்துக் கொண்டிருந்தார்.

ஆனாலும், அபரஞ்சிக்கு அதைக் கேட்காவிட்டால் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. ''கல்யாணம் செஞ்சுக்கப் போறீங்களாமே? பேசிக்கிறாங்களே?''

''ம்.... அதையெல்லாம் நீ நம்பறயா? வயசு அம்பதுக்கு மேல ஆச்சு! இனிமே கல்யாணம் என்ன வேண்டிக் கிடக்கு? என் பேர் சொல்ல பிள்ளையா குட்டியா?''

''பிள்ளை இல்லங்கற கவலை வேணாம் உங்களுக்கு. இப்ப உங்க குழந்தை என் வயிற்றிலே வளருது.''

''கேள்விப்பட்டேன். குமாரசாமி சொன்னான். ஹூம்...'' என்று பெருமூச்சு விட்டார் மிராசுதார்.

''ஏன் விரக்தியாப் பேசறீங்க? பெருமூச்சு விடறீங்க? சந் தோஷமா இல்லையா உங்களுக்கு? நானே இதை உங்களுக்கு என் வாயாலே சொல்லலையேன்னு வருத்தமா?''

''அதெல்லாம் இல்லே. உன் வயிற்றில் பிறக்கப் போகிற அந்தப் பிள்ளை என் குழந்தைதான்னு நான் ஊர் அறியச் சொல்லிக்க முடியாதே!''





"அப்படின்னு அந்தக் குழந்தையைப் பற்றின கவலை உங்களுக்கு இல்லையா?"

"இருக்கு. ஆனாலும் என்ன செய்ய முடியும்?"

"அப்ப அதன் எதிர்காலம்?"

"அதை நீதான் முடிவு செய்யணும்!"

அபரஞ்சிக்குத் தலை சுற்றியது. மயங்கிக் கீழே விழப் போனவளை அப்படியே தாங்கிப் பிடித்துக் கொண்டார் ஐயர். நாகரத்னம் ஓடி வந்து, "ஐயோ, என் அபரஞ்சிக்கு என்ன ஆச்சு?" என்று பதறியபடி தண்ணீரை முகத்தில் தெளித்தாள். அபரஞ்சி மயக்கம் தெளிந்து எழுந்ததும் ஐயர் அவளிடம், "நீ கொஞ்சம் படுத்துத் தூங்கு. நான் அப்புறம் வந்து பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்து போனார். அவர் வெளியே போனதும் அபரஞ்சி தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள்.

"புனிதமான உணர்வுகளோடு ஒருத்தருக்கு சமூக அந்தஸ்து தரும் தகுதி எனக்கு இல்லையா?

"என் வயிற்றில் வளரும் இந்தச் சிசு உலகத்தைப் பார்க்கும் போது அதுக்குக் கிடைக்கக் கூடிய பட்டம்:

'தேவடியா பெத்த குழந்தை!'

நான் இதை வளர்க்கக் கூடாது.... அவரும் இதை வளர்க்கப் போறதில்லை. ஒரு வேளை எனக்குப் பிறக்கப் போகிற குழந்தை பெண் குழந்தையாப் பிறந்துட்டா? பிற்காலத்தில சமூகம் என் மகளை ஏற்றுக் கொள்ளுமா? ஐயோ, அதை நினைக்கவே பயமாயிருக்கு. வேற யார் கிட்டேயாவது கொடுத்து வளர்க்கச் சொல்ல வேண்டியதுதான். யார்கிட்ட, யார்கிட்ட?

குமாரசாமி கண்முன் தோன்றிப் பளிச்சென்று மறைய, "அம்மா குமாரசாமியைக் கொஞ்சம் கூப்பிட்டு வரச் சொல்றயா? நான் அவரோடு நிறையப் பேசணும்."

ஒரு வெள்ளிக்கிழமை, விளக்கு வைக்கும் நேரத்தில்..... பாப்பா பிறந்தாள்.

"உனக்கு எப்ப கல்யாணமாச்சுன்னு என்கிட்டே சொல்லவேயில்லையே!"

"நான் உங்களைச் சந்திச்ச ஒரு மாசத்துக்கெல்லாம் ஆயிட்டுது. இப்பத்தானே உங்களைப் பாக்கறேன்."

"நான் ஜெயிலுக்குப் போனப்புறமா? அப்படின்னு உன் புருஷன் இப்ப எங்க இருக்கான்?"

"நீங்க இருக்கிற அதே ஊர்லதான். என்னை அவர் தள்ளி வச்சதுக்காகக் கூட நான் வருத்தப்படலை. ஆனா தாசி மகள்னு சொல்லி விரட்டியதைத்தான் பொறுத்துக்க முடியலை. நான் ஒழுங்கா, கௌரவமா, குடும்பப் பெண்ணா வாழ்ந்துகிட்டிருக்

'கும்போது நதிமூலம் ரிஷிமூலம் பாக்க வேண்டிய அவசியம் எதுக்குன்னு எனக்குப் புரியலை.''

"நான் இப்பவே அவனைப் போய்ப் பார்க்கட்டுமா?''

"வேணும். ஒரு தடவை நீங்க கோபப்பட்டு ஓட்டல்காரனோடே மோதிப் பட்ட துன்பம் போதும். இனியும்....''

"நான் கோபப்பட மாட்டேன், பாப்பா! நீ என்னை நம்பு. நியாயத்தைத்தான் எடுத்துச் சொல்வேன்.''


"வேண்டாங்க. அதெல்லாம் இப்ப அவர் காதிலே ஏறுது. அந்த ஓட்டல்காரன் பொய்யும் புளுகும் பேசி அவர் மனசைக் கலைச்சு விஷத்தைப் பாய்ச்சி வச்சிருக்கான். அதைக் கேட்டுக் கிட்டு அவர் ஆவேசம் வந்த மாதிரி குதிச்சு எவ்வளவு கேவலமாப் பேச முடியுமோ அவ்வளவும் பேசி என்னை வீட்டை விட்டே துரத்திட்டாரு. அப்புறம் என்ன பேச்சு வேண்டிக்கிடக்கு? அவரோடு இனி என்னால வாழ முடியாது."

"அதனாலே இப்படியே வாழாவெட்டியாவே இருந்துடப் போறயா?''

"வாழ்நாள் முழுக்க ஒருத்தி ஒருவனோடு வாழணுங்கறதெல் லாம் இப்ப இல்லே. காலம் மாறிப் போச்சு. ஒருவனைப் பிரிஞ் சப்புறம் இன்னொருவனுடன் வாழறதிலேதப்பில்லைன்னு ஆயிட் டுது. ஒருவனை விடாம இன்னொருவனுடன் வாழறதுதான் தப்பு. ஒரு பெண் எப்போது எவனோட வாழறாளோ அப்போது அவனுக்கு துரோகம் செய்யாமலிருந்தாப் போதும். அதுதான் கற்புன்னு ஏதோ ஒரு புஸ்தகத்துலே படிச்சிருக்கேன். எனக்கு அந்தக் கருத்து புடிச்சிருக்கு. நான் அப்படித்தான் வாழப் போறேன்! அப்படி இன்னொருத்தனுடன் வாழறதுன்னு தீர் மானிச்சா அந்த இன்னொருத்தர் நீங்களாத்தான் இருப்பீங்க."

சாமண்ணா சுவரோரம் நின்ற பழைய இரும்புப் பெட்டியைப் பார்த்தான். அதற்குமேல் சுவரில் மாட்டப்பட்டிருந்த அபரஞ்சி போட்டோவுக்கு மாலை போட்டு எதிரில் சின்ன குத்துவிளக்கு ஏற்றிவைத்திருந்தார்கள்.

# 6



பூவேலி கிராமத்தில் பாரதத் திருநாளை முன்னிட்டு பதினெட்டு நாள் உற்சவம். எல்லைக்கோடியிலுள்ள தர்மராஜா கோயிலில் தாரையும் தப்பட்டையும் அதிர்வேட்டுமாக அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

“ஊர்ல என்ன விசேஷம்?” என்று பாப்பாவிடம் கேட்டான் சாமண்ணா.

“தர்மராஜா திருநாள். கோயிலுக்குப் பக்கத்துலே பந்தல் போட்டு, பாரதம் படிச்சு கூத்து நடத்தறாங்க. இன்னிக்கு அர்ஜுனன் தபஸ்.....”

“அப்பாவைக் காணோமே இன்னும்?”

“வர நேரம்தான். அதுக்குள்ளே நீங்க குளிச்சு ரெடியாயிருங்க. சோப்பு கொண்டு வரேன். அதோ வெந்நீர் ரூம்ல தண்ணி காஞ்சிட்டிருக்கு, பாருங்க” என்றாள் பாப்பா.

சாமண்ணா சந்தன சோப்பில் குளித்து முடித்து வாசனையோடு வெளியே வந்தபோது கண்ணைக் கசக்கிக் கொண்டான்.

“சோப்பு கண்ணுல பட்டுட்டுதா?”

“இல்லே, அடுப்பிலந்து வந்த புகைச்சல்....!”

“இலுப்ப விறகு, ஈரம் காயலே போலிருக்கு” என்றவள், “இந்தாங்க சீப்பு....”

உள்ளே சமையல்கட்டிலிருந்து பாயச வாசனை மணத்தது.

சாமண்ணாவின் உள்குரல்: ‘பாயசத்துக்கு என்ன விசேஷம்? திருவிழாவுக்காக இருக்குமோ? அல்லது எனக்காக ஸ்பெஷலா?’

வாசலில் யாரோ பேச்சுக் குரல் கேட்கவே பாப்பா எட்டிப் பார்த்தாள்.

ஊர் நாட்டாமைக்காரர், கணக்குப் பிள்ளை, கிராம முனுசிப், தலையாரி, தெருக்கூத்து நடிகர் (அர்ஜுனன் வேஷக்காரர்) இப்படி நாலைந்து பேர் கும்பலாக வந்திருந்தார்கள்.

"அப்பா இருக்காரா?" என நாட்டாமைக்காரர் கேட்க, "தோப்புக்குப் போயிருக்கார். வர நேரம்தான்" என்றாள் பாப்பா.

"இது யாரு இங்க சைக்கிள் விட்டிருக்காங்க?"

"டவுன்லருந்து வந்திருக்கார். டிராமாவில நடிக்கிறாரே அவர்."

"யாரு சாமண்ணாவா?"

"ஆமாம்... உங்களுக்குத் தெரியுமா அவரை?"

"அவரைத்தான் நாங்களும் பாக்கணும்னு பேசிக்கிட்டிருந்தோம். இந்த வருசம் விளாவில ஒருநாள் அவரை அழைச்சு வந்து கௌரவப்படுத்தணும்னு...."

சாமண்ணா வெளியே வந்தான்.

"கும்பிடறமுங்க. டவுன்ல உங்க நாடகம் அடிக்கடி பார்த்திருக்கம். 'மாடி மேல மாடி'ன்னு பாடுவீங்களே....! இப்ப இங்க பாரதக் கூத்து நடக்குது. இன்னைக்கு அர்ச்சுனன் தவசுல இவர்தான் அர்ச்சுனன் வேசம் கட்டறாரு. நீங்க அவசியம் பாக்கணும். நாங்களே டவுனுக்கு வந்து உங்களை அழைக்கணும்னு நினைச்சுட்டிருந்தோம். தேடப் போன மருந்து மாதிரி நீங்களே....."

"உங்க கால்ல சிக்கிட்டனுக்கம்!" என்று சாமண்ணா சிரிக்க, "அப்படிச் சொல்லக் கூடாதுங்க. நீங்க பெரிய நடிகருங்க..."

"கூத்துன்னா விடிய விடிய நடக்குமா?"

"ஆமாங்க. மத்தளம் தட்டி ரெண்டு மணி நேரத்துக்கப்புறம் நடுச் சாமத்துலேதான் அர்ச்சுனன் வருவார். நீங்களும் அந்த நேரத்துக்கு வந்தாப் போதுங்க. கொஞ்சம் முன்னாடி நாங்க தீவட்டியோடு இங்க வந்து உங்களைக் கூட்டிட்டுப் போறோம். நாற்காலி போட்டு வைக்கட்டுங்களா?"

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம். தரையில உட்கார்ந்தே பாக்கறேன். தெருக்கூத்துன்னா அப்படித்தான் பார்க்கணும். அர்ஜுனன் கிரீடம் வச்சு புஜம் கட்டியிருப்பாரில்ல?"

"அப்படியேதாங்க.... கையில மரக்கத்தி புடிச்சி, ஒவ்வொரு பாட்டுக்கும் பாவாடை பறக்கச் சுத்திச் சுத்தி வருவாரு. தூள் பறக்கும்."

"தெருக்கூத்து பார்த்து ரொம்ப நாளாச்சு. எனக்கும் ஆசையாத்தான் இருக்கு. ராத்திரி வந்துடறேன். குமாரசாமி வந்ததும் அவர்கிட்டயும் ஒரு வார்த்தை சொல்லிடுங்க."

"இதோ, அவரே வந்துட்டாரே!"

"என்ன கும்பலா எல்லாரும் இப்படி....?" என்று கேட்டுக் கொண்டே வந்த குமாரசாமி சாமண்ணாவைப் பார்த்துவிட்டு,

"வாங்க தம்பி, நீங்க எப்ப வந்தீங்க?"

"இப்பத்தான், கொஞ்ச நேரமாச்சு, இன்னைக்கு ராத்திரி நான் கூத்து பாக்க வரணுமாம்....!"

"நீங்க ஒரு பெரிய நடிகர் இல்லையா? நீங்க வந்தால் அது இந்தக் கிராமத்துக்கே பெருமையாச்சே!"

தர்மராஜா கோயிலுக்கு முன்னுல் அர்ஜுனன் தபசுக்காக, பனை மரம் வெட்டி வந்து, அதன் மீது பரண் கட்டியிருந்தார்கள். அர்ஜுனன் அந்தப் பரண் மீது அமர்ந்து தவம் செய்வான். மேலே ஏறும்போது ஒவ்வொரு படிக்கும் ஒரு பாட்டுப் பாடுவான். தவம் முடிவதற்குள்ளே ஏறத்தாழ பொழுதே விடிந்து போகும்! அப்புறம்தான் அர்ஜுனன் கீழே இறங்கி வருவான்.

அன்று சாமண்ணு வந்திருக்கும் உற்சாகத்தில் கூத்து ரொம்ப நேரம் நீண்டுவிட்டது. கிழக்கு வெளுத்து சூரியன் தலைகாட்டுகிறபோதுதான் அர்ஜுனன் கீழே இறங்கி வந்தான். கிராம மக்கள் சார்பில் சாமண்ணுவுக்கு மாலை போட்டு மரியாதை செலுத்திய அர்ஜுனன் நாலு வார்த்தை பேசும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க சாமண்ணு எழுந்து பேசினுன்.

"பூவேலி கிராம மக்களே வணக்கம்! இங்கே இன்று மிகச் சிறப்பாக 'அர்ஜுனன் தபஸ்' நடத்திய தெருக்கூத்துக் கலைஞர்களைப் பாராட்டுவதில் பெருமைப்படுகிறேன். நடிகர்களைக் கூத்தாடி என்கிருர்கள். அது கேவலம் அல்ல. அம்பலத்தில் கூத்தாடுகிற நடராஜப் பெருமான் கூட ஒரு கூத்தாடிதான். சுமக்க முடியாத இவ்வளவு பெரிய பூமாலையைப் போட்டு என்னைப் பூவேலிக்குள் அடைத்துவிட்டீர்கள். நீங்கள் உங்கள் அன்பினுல் மட்டும் என்னைக் கட்டுப்படுத்தவில்லை. இந்தப் பூவேலியாலும் கட்டுப்படுத்திவிட்டீரகள்" என்று கூறிய போது கிராம மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். தன் பேச்சை பாப்பா ரசிக்கிருளா என்று சாமண்ணு சாடையாகத் திரும்பிப் பார்த்தபோது அவளும் கைதட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

"வண்டி கொண்டாந்திருக்கேன். வீட்டுக்குப் போவமா?" என்று சாமண்ணுவிடமிருந்த மாலையை வாங்கிக் கொண்டார் குமாரசாமி.

"கொஞ்ச தூரம்தானே? நடந்தே போயிடலாமே?"

"வேண்டாம் தம்பி! கூத்து பாத்தவங்க வழியெல்லாம் மூத்திரம் வழிய விட்டிருப்பாங்க. காலை வைக்க முடியாது" என்ருன் குமாரசாமி.

சாமண்ணுவும் பாப்பாவும் வண்டியில் ஏறி அமர ஒரு சின்ன கும்பல் அவர்களை வழி அனுப்பி வைத்தது.

வண்டி வீட்டு வாசலில் போய் நின்றதும், "நான் இப்பவே

புறப்படலாம்னு பாக்கறேன். அப்பத்தான் வெயிலுக்கு முன்னால் டவுனுக்குப் போய்ச் சேரலாம்'' என்றான் சாமண்ணா.

''என்ன அவசரம் தம்பி? ரெண்டு நாளைக்கு இங்கதான் தங்கிட்டுப் போறது. பாப்பா எல்லாத்தையும் விவரமா சொல்லிட்டுது. நடந்ததைப் பத்திக் கவலைப்படாதீங்க. இது உங்க சொந்த வீடு மாதிரி....''

''ரொம்ப சந்தோஷம். ஆனாலும் இப்ப நான் இங்கே தங்கறது அவ்வளவு சரியாயிருக்காது. கிராமத்துலே நாலு பேர் நாலு தினுசாப் பேசுவாங்க. அதுக்கெல்லாம் இடம் தரக் கூடாது பாருங்க. பாப்பாவுக்குக் கல்யாணமாயிட்டுதே! அவள் கணவன் அநியாயமா நடந்துகிட்டதையெல்லாம் பாப்பா சொன்னு....''

''டவுனுக்குப் போய் என்ன செய்யப் போறீங்க? எங்கே தங்கப் போறீங்க? அங்கதான் டிராமாவிலே சேர்த்துக்க முடியாதுன்னு சொல்லிட்டாங்களாமே?''

''ஆமாம். இருந்தாலும் இன்னொரு முறை கேட்டுப் பாக்கறேன். காண்ட்ராக்டருக்கு உள்ளூர என்னைச் சேத்துக்கணுங்கற எண்ணம்தான். ஆனா அந்த ஓட்டல்கார அயோக்கியன் தான் தண்டை போட்டு வெச்சிருக்கான். இருக்கட்டும். அவனை நான் சும்மா விடப்போறதில்லே.'' என்று பற்களை நறநறவென்று கடித்தான் சாமண்ணா.

''அவனை மறந்துடுங்க தம்பி! எதுக்கு வீண் வம்பு? கொஞ்ச நாளைக்குப் பொறுமையா இருங்க. நீங்க இப்ப டவுனுக்குப் போறதில் பாப்பாவுக்குக் கொஞ்சம்கூட இஷ்டமில்லே....''

''பாப்பா மனசிலே என்ன இருக்குன்னு எனக்கு நல்லாத் தெரியும். எனக்கு ஒரு லட்சியம் இருக்கு. அதுதான் இப்ப எனக்கு முக்கியம், மற்றதெல்லாம் அப்புறம்தான். என் மூச்சு பேச்சு எல்லாமே நாடகம்தான். என் நடிப்பைக் கண்டு இந்த நாடே வியக்கணும். என் கோமாளி வேஷத்தையும் நடிப்பையும் பார்த்து எல்லாரும் சிரிக்கிறாங்க. ஆனா இதிலே எனக்கு திருப்தியோ மகிழ்ச்சியோ இல்லே. நான் ஒரு ஹீரோவா, கதாநாயகனா மாறி என் நடிப்பாலே ஊரையே அழ வைக்கணுங்கறதுதான் என் ஆசை. அதை நடத்தியே தீருவேன். எனக்குள்ளே ஒரு பிசாசு இருக்கு.

'சாமண்ணா! நீ ஒரு பிறவி நடிகன். உன் நடிப்பைக் கண்டு இந்த உலகமே பாராட்டப் போகுது. ம்.... புறப்படு. உன் லட்சியப் பயணத்தை இப்பவே தொடங்கு' என்று என்னை அது தூண்டிக்கிட்டே இருக்கு. உடம்பெல்லாம் எப்பவும் ஒரு ஆவேசம் வந்த மாதிரி இருக்கு'' என்று கூறியவன் திரும்பி பாப்பாவைப் பார்த்து, ''நான் வரட்டுமா?'' என்று கேட்டான். பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு, ''நீங்க





போகத்தான் வேணுமா?'' என்பதுபோல் கண்களால் கேட்டுக் கொண்டே ஒப்புக்குத் தலையசைத்தாள் பாப்பா.

''வெந்நீர் போட்டிருக்கு. குளிச்சு இட்லி சாப்பிட்டுப் போங்க. அப்பத்தான் கூத்துப் பாத்த மயக்கம் தெளியும்'' என்றான் குமாரசாமி.

''இட்லி சாப்பிட்டப்புறம் ஒரு தூக்கம் போடச் சொல்லுங்க. தூங்கி எழுந்திருப்பதற்குள் மணி ஒண்ணரையாயிடும். அப்புறம் சாப்பிட்டு விட்டுப் போகச் சொல்வீங்க...'' என்று சிரித்தான் சாமண்ணா.

''சாப்பாட்டுக்கு மேல்தான் புறப்படுங்களேன். வெயில் தாழ்ந்தாப்பல....'' என்றாள் பாப்பா.

''ஆமாம். அதுக்குள்ளே ராகுகாலமும் போயிடும்!' என்றான் குமாரசாமி.

அவர்கள் பேச்சைத் தட்ட விருப்பமின்றி ஒரு தூக்கம் போட்டு சாப்பிட்ட பிறகே புறப்படத் தயாரானான். எழுதி வைத்திருந்த கடிதம் ஒன்றை அவனிடம் தந்த பாப்பா, ''இதைக் கொஞ்சம் போஸ்ட் பண்ணிர முடியுமா?'' என்று கேட்டாள்.

''லெட்டர் யாருக்கு?''

''விலாசம் கவர் மேலேயே எழுதியிருக்கேன்.''

அதை வாங்கிச் சட்டைப் பையில் திணித்துக் கொண்ட சாமண்ணா சைக்கிள் ஏறிச் சென்றபோது, தெருக்கோடி வரை அவனையே கண் கொட்டாமல் பார்த்து நின்றாள் பாப்பா.

சூரியகுளம் நாடகக் கொட்டகை வெறிச்சோடிக் கிடந்தது. கொட்டகையில் யாரையுமே காணவில்லை.

எலெக்ட்ரீஷியன் சிட்டிபாபு மட்டும் மின்சார வயர் ஒன்றைப் பல்லால் கடித்து ஃப்யூஸ் போட்டுக் கொண்டிருந்தான். சாமண்ணாவைக் கண்டதும், ''வாங்கய்யா'' என்று ஜீவனில்லாமல் சொன்னான்.

''என்ன பாபு! இன்னைக்கு நாடகம் இல்லையா?''

''அர்த்தால் நடக்கப் போகுதாம். அந்நியத் துணிகளை நடுரோடில கொளுத்தப் போறாங்களாம். பெரிய கலாட்டாவாயிருக்கும் போல இருக்கு. அதனால டிராமாவை நிறுத்தி வெச்சிருக்காங்க.''

''காண்ட்ராக்டரை எங்கே காணோம்?''

''இப்பத்தான் வீட்டுக்குப் போனார்.''

''காதர் பாட்சா?''

''அவன் லீவ்ல போயிட்டான்!''


''சரி; காண்ட்ராக்டர் வந்தா நான் அப்பறம் வந்து பாக்கறேன்னு சொல்லு.''

சாமண்ணா வெளியே வந்து கொஞ்ச தூரம் நடந்து அரைக் கதவாய்ச் சாத்தி வைத்திருந்த 'அஞ்சு ராந்தல்' தண்ணீர்ப்

பந்தலுக்குள் நுழைந்தபோது சில பேர் அவனை விநோதமாகப் பார்த்து ரகசியக் குரலில் பேசிக் கொண்டார்கள். அவசரமாக ஒரு காப்பி வாங்கி குடித்துவிட்டுப் பக்கத்து வெற்றிலை பாக்குக் கடை முன் போய் நின்றான். அங்கே, சுதேசமித்திரன் வால்போஸ்டரில் —

“அம்பாள் லாட்ஜ் ஓட்டல் முதலாளி மர்மக் கொலை! சாமண்ணா மீது சந்தேகம்! போலீஸ் சாமண்ணாவைத் வலை போட்டுத் தேடுகிறது!”

# 7



தலையில் ஜரிகைத் தலைப்பாகையுடன் முனகாலா ராமா நாயுடு மிடுக்குடன் காணப்பட்டார். புஷ்டியான அடர்த்தி மீசை அவர் முகத்துக்கு கம்பீரம் தந்தது.

வெட்கமும் வேதனையும் உடம்பெல்லாம் பிடுங்கித் தின்ன, சாமண்ணா அவர் எதிரில் ஒரு துரும்பாக நின்றான்.

“என்னப்பா சொல்லு! நீ குடியிருந்த மாடியிலதான் கொலை நடந்திருக்கு. ஓட்டல்காரர் மண்டையில உருட்டுக் கட்டையால அடிச்சிருக்காங்க. உனக்கும் அந்த ஓட்டல்காரருக்கும் ஒரு நாள் பெரிய ‘ரப்சர்’ நடந்திருக்காம். அன்னைக்கு அந்த ஓட்டல் காரரை நீ ஆவேசமா சட்டையைப் பிடிச்சு இழுத்து நடு ரோட்ல கொண்டு போய் மல்லாத்தி, ‘உன்னைச் சும்மா விடறனா பாரு’ன்னு மண்ணை வாரி இறைச்சயாம். இப்ப எனக்கு ஒண்ணுமே தெரியாதுங்கறே. கொலை நடந்தப்ப ஊர்லயே இல்லேன்னு சாதிக்கிற. இதையெல்லாம் என்னை நம்பச் சொல்றயா?”

இன்ஸ்பெக்டர் தலைக்கு மேல் பிரேமுக்குள்ளிருந்து ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி நீலக் கண்ணில் பார்த்துக் கொண்டிருந்தார்.

சற்று எட்டத்து அறையில் அடைபட்ட கைதி ஒருவன் கம்பிக் கதவைப் பிடித்தவாறு நின்றான்.

ஸ்டாண்டில் நான்கு துப்பாக்கிகள் குத்திட்டு நின்று கொண்டிருந்தன.

“நான் அன்னைக்கு சத்தியமா ஊர்ல இல்லே சார்! அதுக்கு ஆதாரம் இருக்குங்க” என்றான் சாமண்ணா.

''உன் பேரு என்ன சொன்னே?''

''சாமண்ணு!''

''நகப்பனுர் பேர்?''

''கைலாசம் அய்யர். காலமாகிவிட்டார்.''

''நீ என்ன செஞ்சிட்டிருக்கே?''

''சின்னேயா கம்பெனில நான் ஒரு நடிகன்.''

''ஓட்டல்காரரை எத்தனே நாளாத் தெரியும்?''

''ஒரு வருஷமாத் தெரியும். அடிக்கடி நாடகத்துக்கு வருவார். நானும் அவர் ஓட்டலுக்குப் போவேன். அங்கிருந்து வீட்டுக்கு அழைச்சிட்டுப் போவார். ஸ்வீட் கொடுப்பார். அன்பாப் பழகுவார்....''

''அப்புறம் எப்படி ரப்சர்?''

''அவருக்கு ஒரு பெண் இருக்கா. அரைப் பைத்தியம். அதைக் கலியாணம் செஞ்சுக்கச் சொன்னுர். நான் முடியாதுன்னேன். அதிலிருந்து ஆரம்பிச்சதுதான்....''

''நீ குடியிருந்த மாடி வீட்டுச் சாவி அவர்கிட்டே எப்படிப் போச்சு?''

''அது அவருடைய வீடாச்சே! அவர்கிட்ட இன்னெரு சாவி இருந்திருக்கும்.''

''வாடகை கொடுக்காம பாக்கி வைச்சிருந்தியா?''

''வாடகையே வேணும். சும்மா இருந்துக்கோன்னு பலமுறை சொல்லியிருக்கார்....''

''அப்புறம் ஒருநாள் வாடகை கேட்க வந்தப்பதான் கொலே செஞ்சயா?''

''நான் எதுக்கு அவரைக் கொல்லணும்?''

''இந்தாப்பா உண்மையைச் சொல்லிடு. இந்தப் போலீஸ் உத்தியோகத்துலே உன் மாதிரி எத்தனே பேரை பார்த்திருப்பேன் தெரியுமா? 302 இந்த ஆளே அந்த ரூமுக்குக் கொண்டு போ! மயிலே, மயிலே இறகு போடுன்னு போடமாட்டார் போலிருக்கு....''

கான்ஸ்டபிள் சாமண்ணுவை அந்த அறைக்குக் கொண்டு போனுர்.

அந்த அறை ஒரு கிடங்கு போல் காற்று வசதி, வெளிச்சம் இல்லாமல் இருந்தது. இன்ஸ்பெக்டர் முனகாலா நுழைந்தார்.

சாமண்ணு அழுது கொண்டிருந்தான்.

'ஹீரோவாக இருந்து மேடையில் அழ வேண்டும் என்று நினேத்தேன். கோவலன் வேஷத்துல அழ வேண்டியவன் இப்படி கொலேக்களத்திலே....'

''உண்மையைச் சொல்லிடு. நாடகத்திலே நடிக்கிறதாச் சொல்றே? என்ன வேஷம் போடுவே?''

''அரிச்சந்திரன், கோவலன், நல்லதங்காள் இப்படி எல்லா நாடகத்துலேயும் சின்னச் சின்ன வேஷம்....''

"அரிச்சந்திரன் பொய் சொல்ல மாட்டான். ஆனா நீ பொய் சொல்றே. உண்மையைச் சொல்லிடு. இல்லேன்னா கேஸ் ரொம்ப ஸீரியஸாப் போயிடும்."

"அன்னிக்கு நான் ஊர்லயே இல்லாதபோது இந்தக் கொலையை நான் எப்படி செஞ்சிருக்க முடியும்?"

"எங்கே போயிருந்தே?"

"பூவேலி கிராமத்துக்கு...."

"அங்கே என்ன?"

"தெருக் கூத்து பார்த்துக்கிட்டிருந்தேன். அர்ஜுனன் தபஸ், அன்னி ராத்திரி ஊர் ஜனங்க என்னைக் கௌரவிச்சாங்க. நான் ஒரு கலைஞன் என்கிற முறையிலே எனக்கு மாலை போட்டாங்க."

"சாட்சி இருக்கா?"

"ஊர் முழுக்குமே சாட்சிதான்!"

"அப்படியா?"

முனகாலா யோசித்தார். "இந்தாப்பா கான்ஸ்டபிள்! இவனை லாக்—அப்பிலே போட்டு வை. அப்புறம் விசாரிக்கலாம்" என்று உத்தரவு போட்டார். சாமண்ணா லாக்—அப் அறைக்குக் கொண்டு போகப்பட்டான்.

உள்மனம், 'இப்படி நாடகக் கம்பெனியிலே சேரவும் வேண்டாம்; அடுத்தடுத்து சோதனை வரவும் வேண்டாம். அரிச்சந்திரனுக்குக் கூட இவ்வளவு சோதனை வந்திருக்காது.'

சின்ன வயசில் எத்தனையோ பேர் புத்தி சொன்னாங்க. கேட்டனா? படித்திருக்கலாம். அப்பா மாதிரி கனபாடிகளாயிருக்கலாம். நாலு ஊரில் பாரதம் படித்துச் சம்பாதிச்சிருக்கலாம். எதுவும் வேண்டாம் என்று சொல்லி விட்டு இப்படி விடாப்பிடியாக நாடகத்தில் சேர்ந்தேன். என் தலையெழுத்து! ஒரு பக்கம் மாலை மரியாதை! இன்னொரு பக்கம் போலீஸ் லாக்அப்...!

மறுநாள் காலை கான்ஸ்டபிள் கதவைத் திறந்த போது, 'இன்னும் என்ன நேரப் போகிறதோ' என்று நடுங்கினான்.

கான்ஸ்டபிள் அவனை இன்ஸ்பெக்டர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

யாரோ ஒருத்தர் வக்கீல் மாதிரி இன்ஸ்பெக்டரிடம் பேசிக் கொண்டிருந்தார். தலையில் தலைப்பாகை, நெற்றியில் ஸ்ரீசூரணம், காதில் வைரக் கடுக்கன். கறுப்பு கோட்.

"என்னங்க, இவ்வளவு தூரம்? காலையிலேயே கிளம்பி வந்துட்டீங்களே?" என்று போலீஸ் நாயுடு அவரிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

சாமண்ணா உள்ளே நுழைந்ததும் வக்கீல் அவனை உன்னிப்பாய்ப் பார்த்தார்.

முனகாலா திரும்பினார்.

"இந்தா மேன்! உனக்கு ஜாமீன் கொடுத்திருக்காங்க! நீ போலாம்! ஆனு ஊருக்குள்ளேயே இருக்கணும்; தெரிஞ்சுதா? தினமும் ஒரு தடவை இங்கே ஆஜராகணும்..."

தலையை ஆட்டினுன்.

"அப்போ நான் வரேன் நாயுடு" என்று இன்ஸ்பெக்டரிடம் சொல்லிக் கொண்டு ஒரு தோரணையோடு புறப்பட்டார் வக்கீல்.

சர்மண்ணு வக்கீல் பின்னேடு நாய்க்குட்டி போல் தொடர்ந்து சென்று, "ரொம்ப நன்றி ஐயா, எனக்கு ஜாமீனில் விடுதலை வாங்கித் தந்த உங்களை ஆயுசுக்கும் மறக்க மாட்டேன். நீங்க யாரு? எனக்கு எப்படி உதவி செய்ய வந்தீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" என உணர்ச்சி பொங்கக் கேட்டான்.

"மத்தியானம் மூணு மணிக்கு மேல வீட்டுக்கு வந்து என்னைப் பாரு. தென்னை மரத்துத் தெரு, வக்கீல் வரதாச்சாரி வீடுன்னு கேளு."

வாசலில் குதிரை பூட்டிய பெரிய பீட்டன்'வண்டி நின்றது.

வரதாச்சாரி தார்ப்பாய்ச்சிய பின்புறம் தெரிய உள்ளே குனிந்து ஏறி மெத்தையில் அமர்ந்தார். கடுக்கன் அப்படியும் இப்படியும் வெட்டு வெட்டியது. வாயாடித்தனமும் ஓர் அலட்சியமும் சேர்ந்த கம்பீரம் முகத்தில் தெரிந்தது.

ஃபைல் கட்டை எதிர் மெத்தையில் வீசிவிட்டு, காலரைத் தளர்த்திஞர்.

மேலே ஏறி உப்பரிகை சீட்டில் உட்கார்ந்த'வண்டிக்காரன் 'டிங், டிங்' என்று காலை அழுத்தி மணி அடிக்க, குதிரைகள் இரண்டும் முறித்து இழுத்து பீட்டனைக் கிளப்பிச் சென்றன.


ஓட்டுச்சார்பு இறங்கிய 'போர்டிகோ'வுடன் பெரிய வீடு. வாசலில் 'ஆர்ச்' போல் வளைந்த கம்பிகளின் மீது மல்லிகைக் கொடி மண்டிக் கிடந்தது. ஆள் கதவைத் திறக்க, வரதாச்சாரி சொகுசாகக் கீழே இறங்கிஞர்.

வாசலில் பாம்பாட்டி மகுடி ஊதிக் கூடை பெட்டியிலிருந்த சர்ப்பத்தைச் சீண்டி ரோஷம் உண்டு பண்ணிஞன். அது பெரிதாகப் படமெடுத்துச் சீறியது. உள்ளிருந்து மடிசார் மாமி அரிசி கொண்டு வந்து போட்டாள். தலையில் ஈரத்துணி சுற்றிக் கூந்தலோடு சேர்த்துக் கோடாலி முடிச்சுப் போட்டிருந்தாள்.

படிகள் ஓரம் செம்மண் இட்ட கோலம் வரி வரியாகப் போட்டிருக்க, வாசல் நடையில் ஏறிஞர் வரதாச்சாரி.

பாதி வெளிச்சமாய் ஒரு கூடம். பெரிய பெரிய கண்ணுடி பீரோக்கள். ஒரு பீரோ நிறைய கொலு பொம்மை.

தலைப்புப் புடைவையை இழுத்து மூடி, பேசரியும், அட்டிகையும் மின்ன கணவனைத் தொடர்ந்து கூடத்திற்கு வந்தாள்.



"சர்மண்ணு தெரியுமோ உனக்கு?" என்று மனைவியிடம் கொஞ்சலாகக் கேட்டார் வரதாச்சாரி.

"கோமாளி சர்மண்ணுவா?" என்று மாமி கேட்ட போது அத்தனைப் பற்களும் பளீர் பளீர் என்று ஒளிவீசின.

"ஆமாம்! அவன் நாடகத்தில் வந்துட்டா வாயிலே ஈ பூந்தாக் கூடத் தெரியாம சிரிப்பியே..."

கோமளம் ஒரு தோளைக் குலுக்கிக் கன்னத்தில் இடித்துக் கொண்டாள்.

"அவன் தமாஷ் எனக்குப் பிடிக்கும்னு, நீங்க இப்படித்தான் கேலி' பண்ணுவேள்! பக்த ராமதாஸிலே மிளகாப் பொடித் தமாஷ் பண்ணுவான் பாருங்கோ. சிரிச்சு வயிறு புண்ணாயிடும். காதர் பாச்சா ஆர்மோனியமும், சர்மண்ணு கோமாளித்தனமும் சேர்ந்துட்டா சொல்லவே வேணும்."

"உனக்கு சர்மண்ணுவைப் பார்க்கணுமா?"

"ஏன்! நம்மாத்துக்கு வரப் போறுனு?"

"மத்தியானமா வரச் சொல்லியிருக்கேன். பாவம், ஒரு கொலைக் கேஸ்ல மாட்டிண்டிருக்கான். இன்னைக்கு அவனை ஜாமீன்ல மீட்டுண்டு வந்திருக்கேன்."

கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்தார்.

அன்று நடந்தது பூராவையும் ரிப்போர்ட் செய்தார்.

"ஆமாம்! இந்தப் பிள்ளையாண்டான் (சர்மண்ணு) கொலை பண்ணியிருப்பான்னு நீங்க நம்பறேளா?"

"ஏண்டி, டிராமாக்காரனுக்கு என்ன புத்திடி வரும்? குடிப்பான். கூத்தி வச்சுப்பான். அப்புறம்ஒண்ணெண்ணு எல்லாம் தான் செய்வான்."

"சர்மண்ணுவை அப்படிச் சொல்லாதீங்க! 'மானீர்! கள்ளுக் குடியாதீர்!'னு ஒரு பாட்டுப் பாடுவானே நாடகத்துலே."

"அது நாடகம்! அசல் வாழ்க்கையில அப்படியே நடந்துப் பான்னு நம்பறியா?"

"எனக்கென்னவோ அவன் கொலையெல்லாம் செய் வான்னு தோணல்லே..."

"அவனை ஜாமீன்ல விடுதலை' பண்ணிக் கொண்டு வரச் சொன்னது யார் தெரியுமோ? அதைக் கேட்கலையே நீ?"

"தெரியாதே, யாரு?"

"மேட்டுக்குடி மிராசுதார் சாம்பசிவ ஐயர் தெரியுமோ?"

"ஏன் தெரியாது! உங்க பெரிய தாத்தாவுக்கு நல்ல பழக்கம்னு சொல்வேளே!"

"அபரஞ்சின்னு ஒருத்தியை அவர் வச்சிண்டிருந்தார்."

"ஓ! தஞ்சாவூர் நவராத்திரி தர்பார்லே ஆடுவாளாமே அவளா? ரொம்ப அழகா இருப்பாளாமே!"

''அவளுடைய சாட்சாத் மகள்தான் இப்ப இவனுக்கு ஜாமீன் கொடுத்திருக்கா. அந்தப் பொண்ணுக்கு பாப்பான்னு பேரு.''

''அந்தப் பெண்ணு!''

''ஆமாம்; அம்மாவை அப்படியே உரிச்சு வச்சிருக்கா. கழுத்திலே மூக்கிலே மாட்டிண்டு வந்து நிக்கறயே நீ! அவள் ஒண்ணுமே போட்டுக்கலே! ஒரு ஜோடி தோடு. ஒரு சின்னச் சங்கிலி! அழகுன்னு அப்படி ஒரு அழகு! அசந்துட்டேன்...''


''தெரியுமே! இவ்வளவு காலேல கோர்ட்டுக்குப் போறேன்னு அத்தரும் புனுகுமா நீங்க கிளம்பறப்பவே நினைச்சேன். அந்தப் பெண்ணைப் பாக்க்றதுக்குத்தான் அத்தனை அவசரமா புறப்பட்டேளா?''

''ஏண்டி எனக்கென்ன வயசு? அந்தப் பொண்ணுக்கு என்ன வயசு? என்னைப் போய்...''

''சபலம்தானே? இந்த ஆம்பிளைகளை நம்பவே கூடாது. அதுசரி; அந்தப் பெண்ணுக்கும் சர்மண்ணுவுக்கும் அப்படி என்ன உறவாம்? அவனை மோகிக்கிறளாமா...?'' என்று கேட்டவள் சட்டெனப் பேச்சை நிறுத்தினாள்.

வாசலில் ஒரு நிழல் தெரிந்து அவள் திடுக்கிட்டாள்.

8



வாசலில் ஓட்டல்காரர் மகள் லல்லு நின்று கொண்டிருந்தாள். 'அச்சச்சோ' போல, கையால் முகத்தை மூடி மூடித் திறந்து கொண்டிருந்தாள். பிறகு தாவணி தடுக்காமலிருக்க 'ததக் பிதக்' என்று காலை வைத்து உள்ளே வந்தாள்.

வக்கீல் மாமி கோமளத்திற்குக் கதி கலங்கிற்று. அவள் லல்லுவைப் பலமுறை பார்த்திருக்கிறாள். சும்மா இருந்தால் இருப்பாள். இல்லாவிட்டால் யாரையாவது ஒரு அடி அடிப்பாள். ஊர்ப் பசங்கள் அவளை 'அடி' லல்லு என்று கூப்பிட்டு அவளுடைய எலிவால் தலைமயிரைப் பிடித்து இழுப்பார்கள். லல்லு அவர்களை அடிப்பதற்குத் துரத்துவாள்.

"வா, லல்லு" என்று கோமளம் வாய் நிறையச் சிரித்து அழைத்தாள்.

உண்மையில் சிரிக்கவில்லை. பயத்தை மாற்றிக் கொண்டு சிரிப்பது போல் பாசாங்கு செய்தாள். "ரே, ரே, லல்லுவா?" என்றார் வரதாச்சாரி.

"மாமா! மாமா! சர்மண்ணாவை ஜெயில்லே போட்டிருக்காளாமே! உங்களுக்குத் தெரியுமா?" என்று சோகத்தோடு கேட்டாள் லல்லு.

"தெரியாதேம்மா!"

"எங்க அப்பாவை அவர் கொன்னுட்டார்னு சொல்லி போலீஸ்ல அவரைப் பிடிச்சுண்டு போய் ஜெயில்லே வச்சிருக்காளாமே! எனக்கு அழுகையா வரது மாமா! நீங்க எனக்குக் கொஞ்சம் உதவி பண்ணுவேளா?"

"என்ன செய்யணும்?"

"பாலு மாமா கிட்ட போய் உதவி கேட்டேன். அவர் வக்கீல் மாமாகிட்டே போன்னு சொல்லிட்டார். நீங்க போய் போலீஸ் காரா எல்லாரையும் ஜயிச்சு சாமண்ணாவை இழுத்துண்டு வரணும்." என்று மாமி பக்கம் திரும்பி, "வக்கீல் மாமா கிட்ட நீங்க சொல்லுங்க மாமி!"

"சொல்றேன். மாமாவுக்கு என்ன ஃபீஸ் தருவே!"

"எவ்ளோ வேணாலும் தருவேன். எங்கப்பா பீரோ நிறையப் பணம் வெச்சிருக்கார்!"

"சரி செய்யறேன். சர்மண்ணாகிட்டே உனக்கு ஏன் இத்தனை அக்கறை?"

"தெரியாதா மாமா! அவரைத்தானே நான் கல்யாணம் செஞ்சுக்கப் போறேன். அப்பா சொல்லிண்டிருந்தாரே!"

"அவன்தான் கொலை பண்ணிட்டு கேஸ்ல மாட்டிண்டிருக்கானே!"

"ஐயோ! அது அவர் செய்யலை மாமா! வேற ஆளு" தலையில் அடித்துக் கொண்டாள்.

"யாரு அது?"

"எனக்குத் தெரியும். முதல்ல நீங்க சர்மண்ணாவை ஜயிச்சுண்டு வாங்கோ. அப்புறம்தான் நான் அதைச் சொல்வேன்."

வந்தது போலவே திரும்பினாள். வாசலை நோக்கி வேகமாகப் போனாள். வாசல் படிகளில் நொண்டி அடித்து இறங்கினாள். தெருவில் ப்ாண்டி ஆடுவது போலக் குதித்துக் குதித்துப் போனாள்.

மத்தியானம் மூணு மணிக்குச் சொல்லி வைத்தாற் போல் சர்மண்ணா வந்தான்.

வாசலில், தென்னை மரத்தின் கீழ் பசு மாட்டைக் கட்டிக் கறந்து கொண்டிருந்தான் வேலைக்காரன்.

உள்ளே காப்பி களேபரத்தில் இருந்தாள் கோமளம். கூடத்தில் டிகாக்ஷன் மணத்தது.

வரதாச்சாரி தமது கருங்காலி மேஜை முன் உட்கார்ந்து, மறுநாள் கேசுகளின் பைல் பார்த்துக் கொண்டிருந்தார். கண்ணுசாமி இழுக்க, மேலே பங்கா ஆடியது.

"ஸார்" என்று அடங்கிய குரலில் அழைத்தான் சர்மண்ணா. வரதாச்சாரி திரும்பிப் பார்த்தார்.

"வாப்பா!" என்றார்.

உள்ளே வந்தவன் உட்காராமல் பவ்யமாக நின்று கொண்டே இருந்தான்.

"உட்காரப்பா" என்றார்.

பெஞ்சு ஓரத்தில் சொல்பமாக உட்கார்ந்தான். கண்கள் லேசாகக் கலங்கி இருந்தன. களைப்பாக இருந்தான்.

''ஸார்! நீங்க இப்படி ஒரு டிராமா நடிகன் மேல பெரிய மனசு பண்ணி, விடுதலை வாங்கித் தந்தீங்களே, ஏழேழு ஜன்மத்துக்கும் கடமைப்பட்டிருக்கேன்,'' என்று வரதாச்சாரி எதிர்பார்ப்பதற்கு முன் அவர் காலடியைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டு எழுந்தான்.

வேண்டாம் என்பது போலக் கால்களைத் தூக்கிக் கொண்டார் வரதாச்சாரி. ''இதெல்லாம் எதுக்கு சாமண்ணா? யாரோ பணம் கொடுத்தாங்க. நான் என் தொழிலைத்தான் செஞ்சேன். இதிலே வேறே ஒண்ணுமில்லே.''

இதற்குள் கோமளம் கூடத்திற்குள் வந்து சாமண்ணாவைப் பார்த்ததும் தயங்கி நின்றாள்.

''வா! சர்மண்ணாதான்! வந்து பாரு'' என்றார் வரதாச்சாரி.

கோமளத்தின் நினைவில் சர்மண்ணாவின் நாடகச் சேட்டைகள் எல்லாம் நிழலாட, பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு ஒதுக்கமாக நின்றாள்.

''நமஸ்காரம் மாமி என்று உள்ளே பார்த்து ஒரு கும்பிடு போட்டுவிட்டு, ''உங்காத்து மாமாதான் என்னைக் காப்பாத்தினார். ஜன்மத்துக்கும் மறக்க மாட்டேன். எனக்கு நேர்ந்த இந்த அவமானத்தை என்னால தாங்க முடியலே. நான் கொலைகாரன் இல்லேங்கறதை வக்கீல் ஸார்தான் வாதாடி நிரூபிக்கணும், அப்பதான் நான் நாலு பேருக்கு முன்னால தலைநிமிர்ந்து நடமாட முடியும்'' என்றான்.

''உங்க டிராமா நிறையப் பார்த்திருக்கேன். உங்க நடிப்பு எனக்கு ரொம்பப் பிடிக்கும். கடவுள் உங்களைக் காப்பாத்துவார். கவலைப்படாதீங்க'' என்று சொன்ன கோமளம் உள்ளே போய் இரண்டு பேருக்குமாகக் காப்பி கலந்து கொண்டு வைத்தாள்.

சூடாக அதைச் சாப்பிட்ட பிறகுதான் வக்கீல் ஸார் புது மனிதர் போலப் பேசினார்.

குரலை வெகுவாகத் தணித்து, ''ஏம்பா, உனக்கும் அந்தப் பாப்பாவுக்கும் ஏதாவது உறவு இருந்தா எங்கிட்ட கூச்சப் படாமல் சொல்லு'' என்றார்.

சர்மண்ணா காலி டம்ளரைத் தள்ளி வைத்தான்.

''அப்படி எதுவுமில்லே ஸார்! அந்தப் பெண்தான் என்னைக் கல்யாணம் செய்து கொள்ளணும்னு நினைக்கிறா!''

''நீ அப்படி நினைக்கலேயாக்கும். அவ மட்டும்தான் உன் மேலே பிரேமை வச்சிருக்காளா? உனக்குஇஷ்டமில்லேயா?''

''இஷ்டமில்லேன்னு சொல்ல மாட்டேன். நான் இன்னும் ஒரு முடிவுக்கு வரலே. அவள் என் நடிப்பிலே ஒரு ரசிப்பு

வச்சிருக்கா! அந்த வகையில் நானும் அவளோட சிநேகமாயிருக்கேன்.''

''அவ்வளவுதானே. ஒரு வேளை வேற சம்பந்தம் ஏதாவது உண்டோன்னு...''

''அப்படியெல்லாம் கிடையாது ஸார்!''

''அதானே கேட்டேன்'' என்று சொல்லி வரதாச்சாரி இழுத்தார்.

''சொல்லப் போனு ஏதோ அபிமானத்துலதான் அவள் இந்த உதவியை எனக்குச் செய்திருக்கணும். அவளைப் பார்க்கவே எனக்கு வெட்கமாயிருக்கு. எனக்கு முழு விடுதலை வாங்கித் தந்துட்டீங்கன்னு ஊரை விட்டே போயிடுவேன். வேறு எங்கயாவது டிராமாக் கம்பெனியிலே சேர்ந்துப்பேன்!''

''இரு! இரு! விசாரணை முடியட்டும். முதல்ல நீ கொலை செய்யலைன்னு நிரூபிச்சாகட்டும். அப்புறம்தான் மற்றதெல்லாம்'' என்றார் வரதாச்சாரி.

சர்மண்ணு மறுபடியும் வந்து பார்ப்பதாகச் சொல்லி விட்டுப் புறப்பட்டான். எட்ட நின்றபடியே மாமிக்கு நமஸ்காரம் செய்துவிட்டு, ''காப்பி ரொம்ப நன்றாயிருந்தது மாமி! காலையிலிருந்து தலைவலி மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. இப்ப பட்டுனு நின்னுப் போச்சு'' என்றான்.

மாமிக்குப் பரம சந்தோஷம்.

**சா**யங்காலம் பாப்பா வந்தபோது வரதாச்சாரி தமது அலுவலக அறையில் உட்கார்ந்திருந்தார்.

வாசலில் வண்டிச் சத்தம் கேட்டதும் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்.

பாப்பா ஒரு மின்னல் போலப் பின் படியில் இறங்கிக் கொண்டிருந்தாள்.

மயில் நிறத்தில் புடைவை, மேலே இடது தோள் ஓரம் ப்ரூச் குத்தியிருந்தாள். இடுப்பை இறுக்கி ஒட்டியாணம்.

குமாரசாமி அவள் பின்னேடு வந்தான்.

அறைக்குள் வந்தபோது பரிமளம் வீசிற்று.

நல்ல நிலவில் சமைத்த முகம். இரு கண்ணும் மருட்சியாகப் பார்த்தபோது யௌவனம் அவளைக் கனவு சுந்தரியாகக் காட்டியது.

கண்களில் கவலை தெரிய, வந்ததும் வராததும், 'ஸார், காரியம் வெற்றியா?'' என்று வக்கீலைப் பார்த்துக் கேட்டாள்.

வரதாச்சாரி சிரித்தார். ''கவலைப்படாதேம்மா! எல்லாம் சரியாப் போயிடுத்து. ஜாமீன்ல விட்டாச்சு! முனகாலா அவசரப்பட்டுக் கைது பண்ணிட்டார்! சர்மண்ணு கிட்டே வலுவான அலிபை இருக்கு! அன்னி ராத்திரி பூரா உங்க ஊர்



தெருக்கூத்திலே இருந்திருக்கான். அந்த ஊரே கூடி வந்து சாட்சி சொல்லுமே, இது போதும் எனக்கு. இனிமே போலீஸ் அவன் மேல கை வைக்க முடியாது. அது சரி; வாசனை ஜமாய்க் கிறதே. என்ன ஸெண்ட் அது? ஆட்டோ தில்' பஹாரா?''

பாப்பா முகம் தாமரையாக மலர, ''அவரை விட்டாச்சா? இப்ப எங்கே இருக்கார்?''

''எனக்குத் தெரியாது. அப்புறம் வரேன்னு சொல்லிட்டுப் போயிருக்கான். எங்கேபோவான்? டவுன்லதான் எங்கேயாவது இருப்பான்.''

''ஏதாவது சொன்னரா?''

''அதிகமாப் பேசலே, அப்படியே நன்றிப் பெருக்கிலே நனைஞ்சு போய் நின்னன். தழதழத்துப் போயிட்டான்.''

''ஜாமீனுக்கு ஏற்பாடு பண்ணினது யார்னு கேட்டாரா?''

''கேட்டான்!''

''என்ன சொன்னீங்க?''

''உன் பேரைச் சொன்னேன்!''

''அப்ப என்ன சொன்னரு?''

''உன் பேரைச் சொன்னதும் முகமெல்லாம் பிரகாச மாச்சு!''

''அப்புறம்?''

''ரொம்ப ஒண்ணும் பேசலே. முகத்துல நன்றி தெரிஞ்சுது.''

''அப்புறம்?''

வக்கீல் விழித்தார். பாப்பாவின் கேள்விகளில் அவளது தத்தளிப்பு தெரிந்தது.

''வேறே ஒண்ணுமே சொல்லலேயா?''

''சொன்னன், மாமியைப் பார்த்து, ''நீங்க கொடுத்த காப்பி நன்னயிருந்தது'ன்னு சொல்லிட்டுப் போயிட்டான்.''

''என்னைப் பார்க்கணும்னு ஒரு வார்த்தை கூடச் சொல்ல லேயா?''

வக்கீல் சற்றுத் தவித்தார்.

''அதெல்லாம் அவர்கிட்ட சொல்வான? ரொம்ப நல்ல பையன்! கட்டாயம் அவனே உன்னைத் தேடிண்டு வருவான் பாரு!'' என்றுள் கோமளம் மாமி.

''மாமி, இவர் எப்ப வந்தார்? எவ்வளவு நேரம் இருந் தார்? நீங்க அவரோட பேசினீங்களா?''

''இதோ இந்த பெஞ்சு ஓரத்துலதான் உட்கார்ந்துண்டிருந் தான். அரை மணி நேரம் இருந்தான். காப்பி கொடுத்தேன்... சாப்பிட்டான்.''

அவசரமாக அந்த ஓரத்தை ஒரு பார்வை பார்த்துத் திரும்பினுள்.

''அவனுக்குப் பெரிய நிம்மதி. விடுதலை கிடைச்சுது கோடி சம்பத்து கிடைச்ச மாதிரி!''

குமாரசாமி ஒரு கித்தான் பை கொண்டு வந்திருந்தான். அதிலிருந்து ஒரு வெள்ளித் தட்டையும் பழங்களையும் எடுத்தான்.

பாப்பா அதை வாங்கி நன்றிப் பெருக்கோடு வரதாச்சாரியிடம் கொடுத்து விட்டு நமஸ்காரம் செய்தாள்.

"இதெல்லாம் எதுக்கம்மா?", என்று அவர் தயங்க, "இருக்கட்டும்! எனக்கு நீங்க பெரிய உதவி செஞ்சிருக்கீங்க! இது என் வாழ்க்கையிலே மறக்க முடியாத கட்டம்!" என்றாள் பாப்பா.

"வரட்டுங்களா?" என்று வக்கீலிடம்விடைபெற்றுக்கொண்டான் குமாரசாமி.

"சரி, அடுத்த வாரம் ஒரு நடை வந்துட்டுப் போங்க. வரச்சே, நல்ல முருங்கைக்காயா கிராமத்திலிருந்து கொண்டு வாங்க" என்றார் வரதாச்சாரி.

தந்தையும் மகளும் புறப்பட்டார்கள். குமாரசாமி போவதற்கு வழிவிட்டு, பாப்பா தயங்கினாள். சட்டென்று அந்த பெஞ்சு ஓரத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். அது, சீதை அனுமனிடமிருந்து கணையாழியை வாங்கி ஒற்றிக் கொண்ட மாதிரி இருந்தது.

தட்டைப் பார்த்துக் குனிந்திருந்த வரதாச்சாரி தலைதூக்க அந்தச் செய்கையை உடனே கவனித்து விட்டார்.

ஒருகணம் அவர் கண் பனித்தது.

குமாரசாமியும் பாப்பாவும் போனதும் வக்கீல் மாமி, "மூக்கும் முழியுமா தேச்சு வச்ச குத்து விளக்காட்டம் ரவி வர்மாப் படம் மாதிரி எத்தனை அழகா இருக்கா இந்தப் பெண்? சர்மண்ணா கிட்ட உயிரையே வெச்சிருக்காளே. அந்தப் பிள்ளையாண்டான் என்னடான்னா விட்டேத்தியா ஒட்டுதல் இல்லாம இருக்கான். அவன் வந்தா புத்தி சொல்லணும்..." என்றாள்.

"நீ கூடச் சின்ன வயசிலே இப்படித்தாண்டி இருந்தே!" என்று மனைவியின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினார் வக்கீல்.


ஒரு வாரம் வரை, சர்மண்ணா மேக்—அப் மேன் வீட்டு மாடியில் தங்கி இருந்தான். வெளியில் எங்கும் போகவே இல்லை. துக்கமாக இருந்தது. நாடக வாழ்வு முடிந்தது போலத் தோன்றியது.

இனி கொலைக் கேஸ் முடிகிற வரை நாடகம் எங்கே நடக்கப் போகிறது?

வேறு ஊருக்குப் போய் விடலாமா? வேறு கம்பெனி எங்கேயாவது பார்த்துச் சேரலாமா? எத்தனை நாள் இப்படி வேலை எதுவுமில்லாமல் வண்டியை ஓட்ட முடியும்?

வாசல் கதவை யாரோ தட்ட, சற்றுக் கலங்கிய கண்களுடன் சர்மண்ணா எழுந்து போய்த் திறந்தான்.

# 9



ஒரு வாரம் வரை கொலைக் கேஸ் பற்றி எந்தத் தகவலும் இல்லை. இன்ஸ்பெக்டர் முனகாலா கூப்பிட்டு விடுவார் என்று சாமண்ணு தினமும் எதிர்பார்த்தான். யாரும் கூப்பிடவில்லை. வக்கீலிடமிருந்தும் எந்தச் செய்தியும் வரவில்லை.

அரிதாரம் பூசிக் கொள்ளாத நாட்கள் எல்லாம் அவனுக்கு அறவே பிடிக்கவில்லை. பொழுதும் போகவில்லை. தூக்கமும் வர வில்லை. மனசு அரித்துக் கொண்டே இருந்தது.

டிராமா போட்டு ஊரில் ஏழெட்டு மாதங்களாக ஏற்பட் டிருந்த களை இப்போது அடியோடு போய் விட்டது. கிழிந்த நோட்டீசுகள் ஆங்காங்கே ஊசலாடிக் கொண்டிருந்தன. பாண்டு வாத்தியம் ஊமையாகி விட்டது. 'சூரியகுளம்' டிராமாக் கொட் டகை 'அம்போ' என்று சோர்ந்து கிடந்தது.

நாடகம் நின்று போனதில் சாமண்ணுவின் துக்கத்தைக் காட் டிலும், வக்கீல் மனைவியின் வருத்தம்தான் அதிகம்.

ஊரில் பொழுது போவதற்கு வேறு என்ன இருக்கிறது? தை, சித்திரை மாதங்களில் பெரிதாகத் திருவிழா நடந்து அதுவும் உடனே அடங்கி விடும். மற்ற நாட்களில் ஒன்றுமே கிடையாது. கடந்த சில மாதங்களாய் டிராமாதான் அந்த ஊரின் உயிரோட்ட மாயிருந்தது.

வக்கீல் வீட்டு வாசலில் கலாய்க்காரர் பாத்திரங்களுக்கு ஈயம் பூசிக் கொண்டிருந்தார். தெரு ஓரம் பள்ளம் தோண்டி ஈர மண்ணில் துருத்தியைப் பொருத்தி, 'கலாய்' பூச வேண் டிய பாத்திரங்களுக்கு நவசாரம் பூசிக் கொண்டிருந்தான் துருத்தி ஊதும் பையன். வக்கீல் மாமி நிறையப் பாத்திரங்கள் கொடுத்திருந்ததால் வாசலில் வந்து காவலாக நின்று கொண்

டிருந்தாள். சைனுக்காரன் ஒருவன் முதுகில் மூட்டையுடன் 'சில்க்' துணிகள் என்பதை விநோதமாய் ஒரு ஒலி எழுப்பிக் கூவிக் கொண்டு போனான்.

பள்ளிச் சிறுவர்கள் இரண்டு பேர் தெருவில் பாடிக் கொண்டு நடந்தார்கள்.

"ஆனா ஆவன்னா! அலேக் ராஜா சாமண்ணா!"

அதைக் கேட்டதும் கோமளத்துக்கு சாமண்ணாவின் நினைவு வர, சட்டென்று உள்ளே போய் வரதாச்சாரியைப் பார்த்து, "ஏன்னா! அப்புறம் சாமண்ணா கேஸ் என்னாச்சு! எல்லாம் கப்சிப்புனு இருக்கே! சாமண்ணா ஊர்லதான் இருக்கான்? நாடகம் கீடகம் நடக்குமா, நடக்காதா?" என்று கேட்டாள்.

வரதாச்சாரி பருமனான 'லா' புத்தகத்தை மடக்கி நகர்த்தி வைத்துக் கொண்டே, "கேஸ் என்னடி கேஸ்! கொலை நடந்த அன்னைக்கு சாமண்ணா ஊர்லயே இல்லையே! இன்ஸ்பெக்டர் முனகாலா மூக்கு உடைபட்டுப் போனான் தெரியுமோ? சாமண்ணாவைப் பத்தி என்னவோ இல்லாததும் பொல்லாததுமாப் பேசினான். பொய்க் கேஸ் ஜோடிக்கிறதுலே அவன் பெரிய புலியாச்சே! ஆனா அந்தப் புலி என்கிட்டே வாலாட்ட முடியலை. அவ்வளவையும் தகர்த்தெறிஞ்சுட்டேன். முனகாலாவுக்கு யாரையாவது இப்ப இந்தக் கேஸ் சம்பந்தமா அரெஸ்ட் பண்ணி ஆகணும். பாவம், கிடந்து திண்டாடறான்."

"அது சரி; சாமண்ணா என்ன ஆனான்? அப்புறம் அவனைக் காணவே காணமே! மறுபடியும் நாடகம் நடத்தப் போறானாமா? இல்லை, இனி நடக்கவே நடக்காதா?" என்று வருத்தப்பட்டாள்.

வரதாச்சாரி பேசவில்லை.

"வாயை மூடிண்டு பதில் சொல்லாம இருந்தா எப்படி? பாவம், அந்த சாமண்ணாவை நினைச்சா எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கு. அந்த அப்பாவிப் பையனைப் பார்த்தா கொலை பண்ணினவன் மாதிரியா இருக்கு! அவன் முகத்திலே தேஜஸ் ஜொலிக்கிறதே! அவனுக்கு ஏதாவது ஒரு வழி பண்ணுங்கோ! ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுங்கோ."

கோமளம் கொஞ்சம் தாங்கலோடு ஊஞ்சலில் போய் உட்கார்ந்தாள்.

"வாப்பா, வா! உனக்கு ஆயுசு நூறு" என்ற வரதாச்சாரியின் குரல் கேட்டுத் திரும்பினாள். இரண்டாம் நிலை வாயிலின் வழியே சற்று இளைத்துப் போன உருவம் உள்ளே நுழைந்தது. "உள்ளே போ. உன்னைப் பார்க்கவே முடியலையேன்னு மாமி தவிச்சுண்டிருக்கா. உன் கேஸ் என்ன ஆச்சுன்னு ரொம்பக் கவலைப்படறா" என்று வக்கீல் சொல்ல, வருவது சாமண்ணா என்று தெரிந்ததும், கோமளத்தின் முகம் பிரகாசமாயிற்று.

சாமண்ணா கைகூப்பி நின்றான். "வா. வா, உட்காரு, உட்காரு" என்று மாமி இரண்டு முறை ஆர்வத்தோடு அழைத்த



பிறகும் சாமண்ணு உட்காராமல் கூடத்துத் தூணில் சாய்ந்தும் சாயாமலும் நின்றபடி, ''பரவாயில்லே மாமி!'' என்றான்.

பக்த பிரகலாதன் நாடகத்தில் அவன் பிரகலாதனாக வந்து தூண் பக்கத்தில் நிற்கும் சாயல் போலவே இருந்தது அது. கோமளத்திற்குச் சிரிப்பு வந்துவிட்டது! சாமர்த்தியமாக அதை அடக்கிக் கொண்டாள்.

''சாமண்ணு! இப்போ என்ன செய்துண்டிருக்கே? எப்படி இருக்கே? உங்க டிராமா இல்லாமே இந்த டவுனே டல்லாப் போச்சுப்பா. ஊர்ல உற்சாகமே இல்லே. பாவம், இளைச்சுட்டியே!'' என்றாள் ஆயாசத்தோடு.

''என்ன சொல்வேன் மாமி! நானும்தான் டிராமா இல்லாமே ரொம்பக் கஷ்டப்படறேன். நாடக நடிகன்னு வாழ்க்கையில் அவன் வேறு எதுக்குமே லாயக்கில்லே! மத்தவா மாதிரி வேறு தொழில் செய்து பிழைக்கவும் தெரியாது. திரும்பவும் நாடகம் எப்ப ஆரம்பிக்கப் போறாங்கன்னுதான் நானும் காத்துட்டு இருக்கேன். ஹ்ம்... அதுக்கிடையிலே இந்தக் கேஸ் வேறே'' என்று பெருமூச்சு விட்டாள்.

''ஏன்? மிச்சப் பேரெல்லாம் என்ன செஞ்சிண்டிருக்கா? எல்லோரும் சேர்ந்து ஆரம்பிக்கலாமே!''

''செய்யலாம், பணம் வேணுமா?''

''பணமா!'' என்று சற்றே பார்வையை உயர்த்திய கோமளம், ''நீ நினைச்சா பணம் வராதா என்ன?''

''எப்படி மாமி வரும்? நானே இங்கே சோற்றுக்கு லாட்டரி அடிச்சிண்டிருக்கேன்!''

''அப்படியெல்லாம் பேசாதே! அனுமான் பலம் அனுமானுக்குத் தெரியாது. உன் நடிப்பிலே மயங்கிப் போனவா எத்தனை பேர் தெரியுமா? தலையெழுத்தா உனக்கு? கையில வெண்ணெயை வெச்சுண்டு நெய்க்கு அலைவாளோ?''

''கையில் வெண்ணெயே இல்லே. வெறும் திண்ணையிலதான் உட்கார்ந்துண்டு பொழுது போக்கறேன். வெண்ணெய் எங்கே இருக்கு?''

''நன்னு யோசிச்சுப் பார்த்தாத் தெரியும்.''

''புதிர் போடாதீங்க; எனக்கு ஒண்ணும் விளங்கலே.''

''அந்தப் பொண்ணு பாப்பா இருக்காளே! அவகிட்டே எக்கச்சக்கப் பணம் இருக்கே! உனக்காக அவள் உயிரையும் கொடுப்பாளே! லேசா ஒரு வார்த்தை விட்டாப் போதுமே! மகாலட்சுமி மாதிரி கொண்டு வந்து கொட்டுவாளே! உனக்கில்லாததா?''

''கொடுப்பாள்; ஆனால் அதிலே எனக்கு விருப்பமில்லையே...''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''காரணமாத்தான்! எனக்கு இஷ்டமில்லேன்னு அதில

ஏதோ விஷயம் இருக்குன்னு வச்சுக்குங்க...''

''அப்படியா? அவள் ஜாமீன் மட்டும் வேணுமாக்கும்? அது பரவாயில்லையோ?''

''நானு அவளை ஜாமீன் கேட்டேன்? அவளாவேதான் எனக்குத் தெரியாம இதைச் செஞ்சிருக்கா. முன்னாடியே இது தெரிஞ்சிருந்தா நான் அனுமதிச்சிருக்கவே மாட்டேன்.''

''அவள் இல்லேன்னு வேறே யாரு உன்னை வெளியிலே கொண்டு வந்திருக்கப் போறு? ஜெயில்ல கிடந்து திண்டாடியிருப்பே. அதுக்காக நீ அவளுக்கு நன்றி சொல்லணும். அதை விட்டுட்டு யார் செய்யச் சொன்னு, எவா செய்யச் சொன்னுன்னு கேட்கிறியே, இது உனக்கே நியாயமாயிருக்கா?'' என்று சிறிது காரமாகவே பேசிய கோமளம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

''யாரும் செய்திருக்க மாட்டாங்கறது நன்னுத் தெரியும். நன்றியோட இருக்கணுங்கறதும் தெரியும். நீங்க வருத்தப் படாதீங்க. என்னைப் பத்தித் தப்பா நினைச்சுக்காதீங்க. என் மேலேகோபப்படாதீங்க. இந்த விஷயத்துலே நான் நினைக்கிறது வேறே. அதையெல்லாம் உடைச்சுப் பேச இது சந்தர்ப்பம் இல்லே. பின்னாலே நானே சொல்றேன் உங்களுக்கு'' என்றான்.

''என்னவோ, அந்தப் பெண் உன் மேல வெச்சிருக்கிற பிரியத்தை நீ புரிஞ்சுண்டா சரி.''

''பிரியமாத்தான் இருக்கா, ஒத்துக்கறேன். ஆனு அதுக்கு மேலே போயிடக் கூடாதேன்னுதான் கவலைப்படறேன். உங்களுக்குத் தெரியாததில்லே. நான் பிராமணக் குடும்பத்துல பிறந்தவன். எங்கப்பா சாமவேதம் படிச்சவர். கௌரவமா வாழ்ந்தவர். அவர் வயத்துலே பிறந்த நான் எங்க குடும்ப கௌரவத்தைக் காப்பாத்தணும் இல்லையா? சாதாரண நிலையிலேருந்து ஏதோ கொஞ்சம் முன்னேறி என் வயத்தைக் காப்பாத்திக்கிற நிலைக்கு வந்திருக்கேன். ஒரு சமயம் நினைச்சா, அது கூட வந்தாச்சான்னு சந்தேகமா இருக்கு!''

''அதெல்லாம் வந்தாச்சு. அசம்பாவிதமா இந்தக கொலைக் கேஸ் குறுக்கிட்டு உன்னை நிம்மதியில்லாமப் பண்ணிடுத்து. இல்லேன்னு இத்தனை நேரம் நீ ஜாம்ஜாம்னு நாடகத்திலே ராஜாவாட்டம் நடிச்சிண்டிருப்பியே!''

''அதுக்குத்தான் நானும் ஆசைப்படறேன். ராஜா ஆகாட்டாலும் ராஜா மாதிரி நடிக்கிறதுக்காவது 'சான்ஸ்' கிடைக்காதான்னு ஏங்கிண்டு இருக்கேன்.''

''நிச்சயமாக் கிடைக்கும்; கவலைப்படாதே!''

''கிடைக்கணும்! உங்க ஆசீர்வாதம். அப்புறம் பாருங்கோ, எனக்குச் சின்ன வயசிலே பெரிசு பெரிசா கனவு கண்டே வழக்கமாயிடுத்து. நான் ஓகோன்னு வரணும்! ஆமாம்! சாதாரணமா செலவுக்குக் கிடைச்சது வரவு என்கிற மாதிரி இல்லா

மல் அமோகமா வாழணும். எங்க தாத்தா அப்படி வாழ்ந்தாராம். அம்மா சொல்லிச் சொல்லி ஆச்சரியப்படுவா. அந்த அமோகத்தை நானும் எட்டணும். அதுக்குக் கடவுள் அனுக்கிரகம் இருக்கணும்.''

''நடக்கும்! நடக்கும்! ஏன் நடக்காது?''

''இருந்தாலும் மனித யத்தனம்னு ஒண்ணு இருக்கோல்லியோ! நான் இப்ப அந்த யத்தனத்திலே இருக்கேன் — எத்தனை நாள், எத்தனை காலம் யத்தனம் பண்ணணுமோ, அதுவரைக்கும், அந்த லட்சியத்தை அடையற வரைக்கும், நான் என் சொந்த சுகத்தில், சொந்த வசதியில் ஆழ்ந்துடக் கூடாதுன்னு கங்கணம் கட்டிண்டிருக்கேன்.''

கோமளம் சற்றே வியப்பாக நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவள் குரலில் ஒரு வைராக்கியம் தொனித்தது.

"மாமி! சாமண்ணாவுக்கு ஆசை, பாசம், நேசம், இதயம் இதெல்லாம் எதுவும் இல்லேன்னு நினைச்சுடாதீங்கோ! எல்லாமே இருக்கு! நிறையவே இருக்கு! நான் நடிகனாச்சே! இல்லாத உணர்ச்சியை எல்லாம் கூட இருக்கும்படி காட்டணுமே! ஆனா மாமி இந்த உணர்ச்சி எல்லாத்தையும் நான் மறக்கடிச்சுட்டு புழுவா வாழ்ந்திருண்டிருக்கேன். என் மேலே அனுதாபப்பட்டு யாராவது உதவி செய்ய முன்வந்தால் அவாளையும் என் துரதிர்ஷ்டம் துரத்தும். அப்படி ஒரு ராசி எனக்கு! என்ன ஆனாலும் சரின்னு நான் ஒரு வெறியோடு, லட்சியத்தை நோக்கிப் புறப்பட்டிருக்கேன். எங்கே போய் நிற்பேனோ எனக்கே தெரியாது. நான் திடமாச் செயல்படணும். அப்பப்போ சோதனை வரும். அதுக்கெல்லாம் ஈடுகொடுத்து நிமிர்ந்து நிற்கணும். உள் மனம் அப்பப்போ என்னைச் சுண்டி விட்டுக் கொண்டே இருக்கு. 'டேய் சாமண்ணா, எச்சரிச்கையா இருடா. இப்போ கிடைக்கிற களாக்காய் மேலே கண் வைக்காதேடா. அப்புறம் பலாக்காய் கிடைக்காமல் போயிடும்'னு. அதனால்தான் இந்த ஆசையையெல்லாம் மூட்டை கட்டி வச்சுட்டேன் மாமி!'' என்றான்.

கோமளத்திற்கு அவன் பேச்சு வியப்பைத் தந்தாலும் அதனூடே மனம் உடைந்து போன ஒரு நடிகனின் லட்சியக் குரல் கணீர் என்று ஒலித்தது.

''அப்படின்னா இப்ப என்ன செய்யப் போறே? அந்தப் பெண் உதவியே வேண்டாம் என்கிறாயா?''

''செய்த உதவி வரைக்கும் சரி. அதுக்காக அவளுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கேன். ஆனால் அது என் மனசிலே ஒரு பாசத்தை வளர்த்து எங்கள் உறவைப் பலப்படுத்திடக் கூடாதேன்னுதான் பயப்படறேன்.''

''அதென்ன மர்மமோ? அதென்ன பயமோ! கேட்டாலும் சமயம் வரப்போ சொல்றேங்கறே? அப்படின்னா உனக்கு யார்

உதவியும் வேண்டாம் என்கிறயாக்கும்?''

''அப்படிச் சொல்லுவேனு? இப்போ வேறு யாராவது தனவான், கனவான் உதவி செய்வதாயிருந்தால் அதை தாராளமா ஏத்துப்பேன்...''

அவளை மீறி ஒரு நாடகச் சிரிப்புச் சிரித்தான்.

''நீ சொல்றதெல்லாம் நியாயமாத்தான் இருக்கு. ஆனு இப்ப இந்த இக்கட்டிலிருந்து நீ தப்பிக்கணுமே! அதுக்கென்ன வழி? அதுதான் எனக்குப் பெரிய கவலையாயிருக்கு. மாமாவைப் பார்த்துப் பேசிட்டுப் போ. அவர் உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார். அடிக்கடி வந்து அவரைப் பார்த்துப் பேசு. நானும் அவரிடம் சொல்றேன். நல்லது நடக்கும்.''


சாமண்ணு கைகூப்பி, ''வரேன் மாமி! உங்க ஆசீர்வாதம் எப்பவும் இருக்கணும்!'' என்றுன்.

வரதாச்சாரி உள்ளே வந்தார். ''சாமண்ணு சொல்றதைக் கேட்டேளா?'' என்று இழுத்தான்.

''கேட்டேன்! கேட்டேன்! எனக்கு மட்டும் பாப்பா மாதிரி அழகோடும் சொத்தோடும் ஒரு பெண் கிடைச்சிருந்தா இந்த நிமிஷத்திலேயே அவளைக் கல்யாணம் பண்ணிண்டிருப்பேன்'' என்ருர் வக்கீல்.

''உக்கும்! பண்ணிப்பேளே! இன்னும் நாலு கல்யாணம் கூடப் பண்ணிப்பேள். எனக்குத் தெரியுமே!'' என்று தோளில் இடித்துக் கொண்டாள் கோமளம்.

# 10



பன்னீர் மலை, பூவேலிக்கு வடமேற்கில் மூன்று மைல் தள்ளி உள்ள முருகன் ஸ்தலம். பன்னிருகை வேலன் கோயில் பிரசித்தமானது. வேலனின் ஒவ்வொரு கையிலும் சம்ஹாரக் கருவிக்குப் பதிலாக யாழ், குழல் போன்ற இசைக் கருவிகள் இருந்தன.

இதனால்தானோ என்னவோ அங்கே ஆண்டுதோறும் ஆடி மாதக் கடைசி வார வெள்ளிக்கிழமையில் பெரியவர், சின்னவர் என்ற வித்தியாசமில்லாமல் சுற்று வட்டாரக் கலைஞர்கள் எல்லோரும் ஒன்றுகூடி, இருபத்து நாலு மணி நேரமும் பெரிய விழாக் கொண்டாடுவார்கள்.

சிம்மப்பாதையிலிருந்து தாசிகுலக் கன்னிகைகள் சதிர் ஆடிக் கொண்டு அபிஷேகத்திற்குத் தீர்த்தம் கொண்டு வரும் காட்சியைப் பார்ப்பதற்கென்றே அக்கம் பக்கத்துக் கிராம மக்கள் அத்தனை பேரும் கூடி விடுவார்கள்.

வக்கீல் வரதாச்சாரியும் அவர் மனைவி கோமளம்மாளும் வழக்கம்போல் அந்த வருட விழாவுக்கும் வந்திருந்தார்கள்.

மொட்டையாக நின்று கொண்டிருந்த தேர்ச் சப்பரத்துக்கு அருகே வரதாச்சாரியின் பீட்டன் வண்டி வந்து நின்றது. வாதாச்சாரிக்கு ஏக வரவேற்பு. கோயில் நிர்வாகிகள் அவரை முதல் வரிசைக்கு அழைத்துப் போய் உட்கார வைத்தார்கள். மஞ்சள் நீராடி, புதுசு உடுத்தி, பளீர் பளீர் என்று கன்னிகைகள் வெள்ளிக்குடத்தில் நீர் மொண்டு ஊர்வலமாகக் கோயிலுக்குள் போவதைக் கோமளம்மாள் மட்டும் வண்டியிலிருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“மாமி!” என்று பரிச்சயமான குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தபோது நிலவு போல பாப்பா நின்று கொண்டிருந்தாள். நகை ஏதும் அணியாமல், பளிச்சென்ற மேனி, மூன்றாவது அழகுக் கண் திறந்தது போல் நெற்றியில் குங்குமப் பொட்டு.

“வாம்மா! வா! ஏறிக்கோ. இந்தக் கூட்டத்திலே நான் வந்திருப்பது உனக்கு எப்படித் தெரிஞ்சது?” என்று கேட்டாள் மாமி.

“பீட்டன் வண்டியைப் பார்த்தேன். நீங்க வந்திருப்பீங்கன்னு நினைச்சேன்!” என்றாள் பாப்பா.

“நீ குடம் எடுக்கப் போகலையா?”

“ஆசைதான் மாமி! ஆனா அதுக்கு எனக்கு அருகதை உண்டோ இல்லையோன்னு சந்தேகமாயிருந்தது. அதனாலே போகலே” என்று குரலில் சிறிதே வருத்தம் தொனிக்கக் கூறினாள்.

“அதுக்கென்ன, பாப்பா! நீயும் குடம் எடுத்தா யார் வேண்டாங்கப் போறா?” என்றாள் மாமி.

“எனக்கு எதிலுமே புத்தி போகலே மாமி! அவர் வந்திருக்கார் பார்த்தேளா?” என்றாள்.

“யாரு, சாமண்ணாவா?”

“ஆமாம்! அவர் மட்டுமில்லே. எல்லா நாடகக்காரர்களும் வந்திருக்காங்க. சிங்காரப் பொட்டு செல்லப்பா கூட வந்திருக்கார்.”

“உடம்பு சரியில்லாமல் இருந்தாரே, அவர் எப்படி வந்தார்?”

“ஆமாம்! கொஞ்ச நாளாகவே படுத்த படுக்கையா இருந்தாராம். முருகன் அருளாலே இப்ப பூரணமா குணமாயிட்டுதாம்.”

“நாடகங்களில் கதாநாயகன் வேஷம் போடுவார். ஜில்பாக் குடுமி வைத்துக் கதுப்புக் கன்னங்களில் குழி விழச் சிரிச்சார்னா ஊரே மயங்கிப் போகுமே!”

“இப்ப சொந்தக் கம்பெனி ஆரம்பிச்சு மறுபடியும் நாடகம் நடத்தப் போறாராம். அதுக்காகத்தான் இங்கே வந்திருக்கார்னு அப்பா சொன்னார். பல பெரிய மனுஷாளைச் சந்திக்கிறதுக்கு இது ஏத்த இடமாச்சே! எல்லாரும் இங்கே வந்திருக்காபாருங்கோ!”

“சந்திச்சு என்ன செய்யப் போறார்?”

“எல்லாப் பெரிய மனுஷாகிட்டேயும் பணம் வசூல் பண்ணிக்கிட்டு இருக்காராம்!”

“அடி சக்கை! அப்படின்னா சீக்கிரமே புதுக் கம்பெனி ஊர்லே வந்துடும்னு சொல்லு” என்று சந்தோஷப்பட்டாள் கோமளம்.

“வரலாம்” என்று தலைகுனிந்து கூறினாள் பாப்பா.

“ஏன் பாப்பா! உனக்கு இதில் ஏதாவது வருத்தமா?”

"இல்லே மாமி" என்று சொல்லும்போதே ஒரு பெருமூச்சு வந்து அவளது உண்மை நிலேயைக் காட்டியது.

"ஏதாவது மனசுலே இருந்தாச் சொல்லிடு. எங்க ஆத்துக்காரர் உங்க குடும்ப வக்கீல் இல்லேயா? உங்களுடைய சுகதுக்கத்துல எங்களுக்கும் பங்கு உண்டே! நீ எதையும் என்கிட்டே மனம் திறந்து பேசலாம்!" என்ருள் கோமளம்.

"இல்லே மாமி! அவரை நான் பார்த்தேன்."

"யாரு, சாம்ண்ணுவையா?"

"ஆமாம்."

"அவர் என்னேப் பார்த்தும் பார்க்காத மாதிரி போயிட்டார். மனசு சுக்கலாப்போச்சு. அப்படி நான் என்ன மாமி இவருக்குத் தப்புச் செய்தேன்? நான் வந்திருக்கேன்னு தெரிஞ்சு, மத்த நாடகக் காரர்களெல்லாம் ஒரு அபிமானத்துக்கு என்னே வந்து பார்த்துட்டுப் போளு, எங்க அம்மா காலத்திலே இவர்களுக்கெல்லாம் எவ்வளவு செஞ்சிருக்கோம் தெரியுமா? அந்தப் பழைய விசுவாசம். இவருக்கு என்னேப் பிடிக்கலேன்னு பிடிக்காமப் போகட்டும். அதுக்காகப் பார்த்த கண்ணே இப்படியா வெட்டி முறிச்சு வேறு பக்கம் திருப்பிட்டுப் போகணும்?"

"அழாதேம்மா, இதுக்கெல்லாம் கண் கலங்கலாமோ?" என்று மாமி அவளேத் தேற்றினுள்.

"நாடகத்திலே இவர் நடிப்பையும் ரூபத்தையும் பார்த்து மயங்கிப் போனேன். எதேச்சையா அன்னேக்கு ஒரு நாள் நாங்க இவர் வீட்டுக்குப் போனப்போ ரொம்ப அக்கறை காட்டி அன்பாகப் பழகினுர். இப்ப திடீர்னு அவருக்குப் பிடிக்கலே போல இருக்கு. போனுப் போகட்டும். யாரும் வற்புறுத்தலேயே!"

"ஸ்திர புத்தி இல்லாம இருக்காண்டி அவன். என்னென்னவோ பேசுருன். கேஸ் வேறே குழப்பிட்டுதா! கொஞ்ச நாள் போகட்டும்; எல்லாம் சரியாப் போயிடும். நான் அவனுக்குப் புத்தி சொல்லிண்டுதான் இருக்கேன். நான் சும்மா விடப் போறதில்லே அவனே. இப்படியா ஒரு பெண்ணே வயிற்றெரிச்சல் கொட்டிக்கிறது?" என்று சற்று ஆவேசமாகப் பேசினுள் கோமளம்.

"நான் அப்படி என்ன கொடுமை பண்ணிட்டேன்? ஏன் இப்படி நடந்துக்கிருர்? நினேக்க நினேக்க இதயமே வெடிச்சுடும் போல இருக்கு மாமி!"

தலேப்பை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

"இந்தா பாப்பா! சின்னக் குழந்தையாட்டம் அழாதே! எதுக்கு அழணும்? அவன் போனுப் போருன். விட்டுத் தள்ளு. நன்றிகெட்டவன்! நீ மட்டும் வக்கீல் மாமாகிட்டே சிபாரிசுக்கு வரலேன்னு இவன் இந்தக் கேஸ்லேருந்து தப்பி வெளியே வந்திருக்க முடியுமா? போலீஸ் இன்ஸ்பெக்டர் முனகாலா

சும்மா விட்டிருப்பாரா? முட்டியைப் பெயர்த்துட்டுத்தானே வெளியிலே அனுப்பிச்சிருப்பார்! கொஞ்சமாவது நன்றி இருக்கா? உன்கிட்டே நேரிலே ஒரு வார்த்தை சொல்ல வேணுமோ? எங்கிட்டே சொல்லி என்ன பிரயோசனம்? வரட்டும்! வரட்டும்'' என்று கறுவினுள் மாமி.

''ஐயோ, மாமி! கோபப்பட்டு அவரை எதுவும் உங்க வாயாலே சொல்லிடாதீங்க. சாபம் கொடுத்துராதீங்க. பெரியவங்க வாக்குப் பலிச்சுடும். அவர் எப்படி வேணு இருந்துட்டுப் போகட்டும். ஆனு அவருக்கு எந்தக் கெடுதலும் வரக் கூடாது. அவர் நன்னுயிருக்கணும். நான் உதவி செஞ்சது உங்களுக்கும் எனக்கும் தெரிஞ்சாப் போதும். இப்பவும் அவருக்கு நான் ஏதாவது செய்யணும்னுதான் நினைக்கிறேன்! இந்தச் சிங்காரப் பொட்டுக்காரர் ஒவ்வொரு பெரிய மனுஷாளாய்ப் பார்த்து சகாயம் கேட்கிருர். அவர் பின்னுலே இவர் அலையருர். இவர் ஏன் போகணும்? தலையெழுத்தா இவருக்கு? சொல்லுங்கோ. என்னை அவர் பார்க்க வேண்டாம். என்கிட்டே பேச வேண்டாம். தூரத்திலேயே இருந்துக்கட்டும். ஒரு வார்த்தை சொல்லிவிட்டிருந்தா இவருக்கு நான் ஒரு டிராமாக் கம்பெனியே ஆரம்பிச்சுக் கொடுத்திருப்பேனே!''

''ஐயோ பாப்பா! திருப்பித் திருப்பி ஏன் புலம்பறே? அவனை விடு! உனக்கு ஏன் இப்படி துக்கம் பீறிப் பீறிண்டு வர்றது? அவன் ஏதோ புத்தி தடுமாறிப் போயிருக்கான். நாலு இடத்திலே போய் முட்டிக் கொண்டு வரட்டும். பட்டால்தான் தெரியும் அவனுக்கு.''

''மாமி! நீங்க எனக்கு ஒரு உபகாரம் பண்ணுவீங்களா?''

''என்ன செய்யணும் சொல்லு?''

''நான் அவருக்கு எப்படியாவது, எந்த விதத்திலாவது உதவியாயிருக்கணும்னு நினைக்கிறேன். இப்ப அவருக்கு அது தெரிய வேண்டாம். பின்னுடி அவர் தெரிஞ்சுக்கிட்டு மனம் மாறி என்கிட்ட வரணுங்கிறதுக்காக இல்லே. சத்தியமா அந்த எண்ணம் இல்லே. ஒரு நல்ல நடிகர் வாழ, நான் உதவணும்னு தான் மனப்பூர்வமா விரும்பறேன். அதுக்காகத்தான் உதவி செய்யணும்னு நினைக்கிறேன். அதுக்கு இந்த அனதைக்கு ஒத்தாசை செய்யணும்.''

''ஏன் இப்படியெல்லாம் பேசறே? அனுதைன்னு சொல்லிக் காதே! உனக்கென்ன குறைச்சல்? அப்படி அனுதை ஆக நாங்களெல்லாம் விட்டுற மாட்டோம். என்ன செய்யணும் சொல்லு!''

''அவர் கஷ்டப்படக் கூடாது மாமி! அதுதான் நான் வேண்டிக்கிறது, நீங்கதான் அவரைக் காப்பாத்தணும். அவருக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும், எவ்வளவு பணம் வேணும்னுலும் நீங்களே கொடுத்து உதவுங்க. நான் அதையெல்லாம் உங்களுக்குத் தந்துடறேன். ஆனு, நான்தான் இதெல்லாம் செய்யறேன்னு அவருக்குத் தெரிய வேண்டாம்.''


''இது என்ன பெரிய விஷயம்? உனக்காக அவசியம் செய்ய றேன். கவலையே படாதே! ஆனா எனக்கு இன்னொரு யோசனை தோண்றது. அது சரியாயிருக்குமான்னு பாரு. சொல்லட்டுமா?''

''சொல்லுங்கோ.''

''சிங்காரப் பொட்டு பணத்துக்காக அலையறூர்னு சொல்லியே! நீ ஏன் சிங்காரப் பொட்டுக்கே ஒரு டிராமாக் கம்பெனி ஆரம்பிச்சுக் கொடுக்கக் கூடாது? அந்தக் கம்பெனியிலே சாமண்ணு சேர்ந்துக்கலாமே! அது மறைமுகமாக இவனுக்கு உதவின மாதிரி இருக்குமே! என்ன சொல்றே?''

மாமி நிறுத்த, பாப்பா பரவசத்தோடு யோசித்தாள்.

# 11



அன்று மாலை சூரியகுளம் மைதானத்தைப் பார்த்தவர்கள் அதிசயித்துப் போனார்கள்.

மூன்று மாதங்களாய் வெறிச்சோடிக் கிடந்த அந்த இடத்தில் பன்றிக் குட்டிகள் உலவிக் கொண்டிருந்தன. இன்னொருபுறம் சாணத்தை மலைபோல் குவித்து, வறட்டி தட்டிக் கொண்டிருந்தார்கள்.

இப்போது அந்த இடம் ஒரு புதுமைச் சிலிர்ப்புடன் தோரணங்களும் வண்ணக் காகிதக் குழல்களுமாய் விழாக் கோலம் பூண்டிருந்தது.

'மனோ ரஞ்சனி கந்தர்வ கான சபா' என்ற கொட்டை ஜிகினா எழுத்துக்களில் நீண்ட பானர் துணி மேலும் கீழும் அலைவீசிக் கொண்டிருந்தது.

ஆங்காங்கே காஸ் லைட்டுகள் ஜொலிக்க, டிக்கெட் கவுண்ட்டர்களில் கூட்டம் முண்டி அடித்துக் கொண்டிருந்தது.

உள்ளே சபை நிறைந்து சோடாக் கலர் சத்தம் காதைப் பிளந்து கொண்டிருந்தது.

நீர் ஊற்று பொழியும் தோட்ட ஸீன் படுதாக் காட்சி. மேடையில், மெதுவாக ஆடிக் கொண்டிருந்தது.

6.35 ஆனதும் 'ட டாம்' என்று சத்தம்.

'ஜோதி சுந்தர விநோதா, ஆதிகண நாதா' என்ற விநாயக ஸ்துதிப் பாடல் கும்மென்ற ஹார்மோனிய சுருதியுடன் கோரஸாக ஒலிக்க, மேடையின் இடுக்குகள் வழியே வந்த ஊதுவத்தி சாம்பிராணிப் புகை சபை முழுவதும் மணம் பரப்பியது.

சபையோரின் ஒருமொத்த ஆவல் மேடையை நோக்கி லயித்திருந்தது.

வக்கீல் வரதாச்சாரி ஐந்து நிமிடம் தாமதமாக வந்தார். அவரை வரவேற்க நாலைந்து பேர் வாசலுக்கு ஓடினார்கள். இரண்டு முக்கிய நிர்வாகிகள் அவரை வரவேற்று, முன் வரிசைக்கு அழைத்துச் சென்று அமரச் செய்தனர்.

"உங்க ஆசீர்வாதத்தாலும் உதவியாலும் இந்தப் புதிய நாடகக் கம்பெனியைத் தொடங்கி இருக்கோம்" என்றார் நிர்வாகிகளில் ஒருவர்.

கோமளம் வைரச் சிரிப்போடு உடம்பில் ஜரிகையும், தங்கமும் மின்ன பணக்கார தோரணையுடன் வந்திருந்தாள்,.

அடுத்தாற்போல் டி. எஸ். பி. மனைவி ஏக அமர்க்களமாக உள்ளே நுழைந்தாள்.

டி. எஸ். பி. நாராயணசாமி ஜிப்பா போட்டு, குதப்பிய வெற்றிலையுடன்விசிறிமடிப்புஅங்கவஸ்திரத்தில்ஒருகலியாண வீட்டு விருந்தாளி போல் காணப்பட்டார்.

அடுத்தபடி தாசில்தார், பிறகு மிட்டாதார், மிராசுதார், பக்கத்து ஜமீன் எல்லாருமே ஒவ்வொருவராய் வந்து இறங்கினர்.

இந்த ஆர்ப்பாட்ட வைபவங்களிடையே மெல்லிய தென்றல் உள்ளே வருவது போல் பாப்பா வந்து கொண்டிருந்தாள்.

அவளைக் கண்டதும் அத்தனை ஆண்களின் மூச்சும் தடைப்பட்டு நின்றன. பெண்கள் அவளைப் பொல்லாக் கண்களோடு பார்த்தார்கள்.

அத்தனை பேருக்கும் தன் அபிநயக் கைகளால் அழகாகக் கும்பிடு போட்டு அடக்கமாகப் பின் வரிசை நாற்காலி ஒன்றில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

கணபதி ஸ்தோத்திரப் பாடல் இசை வெள்ளமாய்ச் சபையை நிறைக்க திரை சுருண்டு சுருண்டு மேலே போக, அத்தனை கண்களும், 'அடுத்தது என்ன?' என்பது போல் ஆவலோடு நோக்கின.

சிவலிங்கத்திற்குப் பத்மாவதி பூஜை செய்யும் முதல் காட்சி ஆரம்பமாயிற்று.

'கர்ணா — அர்ச்சுனா' நாடகம்.

"மகேசுவரா! என் மனோரதம் என்று பூர்த்தியாகும்? உம்முடைய கிருபையினால்தான் நான் என் மனதுக்குகந்த மணாளனை என்று பெறுவேன்? என் ஜீவியத்தையும், யௌவனத்தையும் நான் யார் பாதங்களில் அர்ப்பணம் செய்யப் போகின்றேன்?" இந்த நீண்ட வசனத்தைத் தொடர்ந்து ஆனந்தபைரவியில் ஒரு சுலோகம்.

பாப்பா பலமாகப் பெருமூச்சு விட்டாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. பத்மாவதியாக நடிக்கும் ஜில்ஜில் என்ன உருக்கமாகப் பிரார்த்தனை செய்கிறாள்? பாப்பா தன்னையே பத்மாவதியாக எண்ணிக் கொண்டாள்.

அதே முறையில்தானே அவள் மனமும் பிரார்த்தனை செய்கிறது?

'என் யௌவனத்தையும் வாழ்க்கையையும் யாரிடம் ஒப்படைக்கப் போகிறேன்?' என்று மனத்துக்குள் கேட்டுக் கொண்டாள் பாப்பா.

'சாமண்ணா எப்போ வருவார்?' அவள் நினைவெல்லாம், கவனமெல்லாம் சாமண்ணாவின் மீதே இருந்தது.

சுப்பன், குப்பன் என்ற இரண்டு விதூஷகர்கள் இடையில் வந்து கொச்சை மொழியில் உரையாடித் தமாஷ் செய்துவிட்டுப் போனது அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

சாமண்ணா வந்திருந்தால் கொட்டகை அதிர்ந்திருக்குமே! அப்படி ஒரு நடை போட்டுக் காட்டுவாரே!

புது நாடக சபா தொடங்கி, புது நாடகம் உருவாக்கி இருக்கிறார்கள். நாடகம் வெற்றிகரமாக நடக்க வேண்டும். அப்போதுதான் நடிகர்கள் பிழைப்பார்கள்.

ஆமாம், சிங்காரப் பொட்டு நடத்த ஆரம்பித்துள்ள இந்த நாடக கோஷ்டியில் சாமண்ணா இருக்கிறாரா, இல்லையா?

நிச்சயம் இருக்க வேண்டுமே! சாமண்ணா புது வேடம் போடப் போவதாகச் சொன்னார்களே! எந்த வேடத்தில் வருவாரோ?

இடைவேளை வந்தது. ஆனால் சாமண்ணாவைத்தான் காணவில்லை. பாப்பா குழம்பிப் போனாள்.

வக்கீல் வரதாச்சாரி வெளியில் எழுந்து போனபோது முன் வரிசையில் இருந்த கோமளம் பின்பக்கம் திரும்பிப் பாப்பாவுக்கு ஜாடை காட்டினாள்.

பாப்பா சுருக்கென்று எழுந்து தளிர்நடையாகக் கோமளத்தின் அருகில் போய் அமர்ந்தாள்.

"என்ன பாப்பா இவன்! ஏதாவது அக்கிரமம் பண்றானா? இன்னும் ஆசாமி வரவேயில்லையே! ஒருவேளை வராமலே இருந்து விடுவானோ?' என்று சாமண்ணாவைக் குறித்துக் கவலைப்பட்டாள் கோமளம்.

"அதான் மாமி நானும் யோசிக்கிறேன். இந்த நாடகக் கம்பெனியில் சேர்ந்திருக்கிறாரா, இல்லையா என்றே சந்தேகமாயிருக்கிறதே! ஒருவேளை இந்த நாடகத்தில் அவருக்கு வேஷமே இல்லையோ, என்னவோ!" என்று தவித்தாள்.

"சேர்ந்திருக்கேன்னுதான் சொன்னான். பார்க்கலாம், இன்னும் பாதி இருக்கே!"


"மாமி! சிங்காரப் பொட்டு நல்லவர்தானே?"

"நல்லவனாத்தான் இருக்கணும்."

"பணத்தை வாங்கி முழுங்கிட மாட்டானே?"

"முழுங்கினா, தொடர்ந்து மூணு வேளைச் சாப்பாடு கிடைக்க வேண்டாமோ? நாடகம் நடந்தாத்தானே கிடைக்கும்."

"நீங்க கண்டிஷன் பேசிட்டுத்தானே பணம் கொடுத்திருக்கீங்க?"



"கண்டிஷனு? வக்கீல் மாமா சும்மா கொடுத்துடுவாரா? பத்திரம் கொண்டு வந்து கையெழுத்து வாங்கினப்புறம்தான் பணம் கொடுத்திருக்கார். இப்போ மாமா எதுக்கு வெளியிலே போயிருக்கார்னு தெரியுமா?''

"எதுக்கு?''

"இன்னிக்கு வசூல் கணக்கைப் பார்க்கத்தான்.''

பாப்பாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. வரதாச்சாரி இவ்வளவு தூரம் அக்கறை எடுத்துக் கொண்டிருப்பது அவளுக்கு ஆறுதலாயிருந்தது.

தணிந்த குரலில், "மாமி! நான் பணம் கொடுத்த விஷயம் யாருக்கும் தெரியாதே?'' என்று கேட்டாள்.

"மூச்! ஒரு வார்த்தை வெளியில் போகாது!''

"சிங்காரப் பொட்டுவுக்குக் கூட நீங்கள் கொடுக்கிறதாத்தானே சொல்லியிருக்கீங்க?''

"ஆமாம், நாங்க ஒருத்தர்தான் கொடுத்தோம்னு சொன்னா சந்தேகப்படுவாரேன்னு நாலு பேர் சேர்ந்து பணம் போட்டிருப்பதாகச் சொல்லி வச்சிருக்கோம்.''

"என்னவோ! எலலாம் நல்லபடியா நடக்கணும். அதோ மாமா வரார்! நான் என் ஸீட்டுக்குப் போறேன்.''

பாப்பா எழுந்து தன் இடத்துக்குப் போய் விட்டாள்.

வரதாச்சாரி வந்து உட்கார்ந்ததும் கர்ணன் வேடம் பூண்டிருந்த சிங்காரப் பொட்டு மேடையிலிருந்து கீழே இறங்கி வந்து, "வக்கீல் ஸார்தான் எங்களுக்கு ஆதரவு திரட்டி இந்த நாடகக் கம்பெனியை ஆரம்பிச்சு வைத்தவர். அவருக்கும் அவர் நண்பர்களுக்கும் எங்கள் நன்றியைச் சொல்லி இந்த மலர் மாலையை அவருக்குச் சூட்டுகிறேன்' என்று கொஞ்சம் நாடகத் தமிழ் பேசி மாலையைச் சூட்டினர்.

பாப்பாவுக்கு இதெல்லாம் மகிழ்ச்சியாக இருந்த போதிலும் சாமண்ணாவை அதுவரை மேடையில் காணவில்லையே என்ற கவலையும் ஒருபுறம் வாட்டிக் கொண்டிருந்தது.

திரை உயர்ந்து, கையில் வில்லுடனும் கிரீடத்துடனும் பட்டு பஞ்சகச்சத்துடனும் வந்த அதி ரூப சுந்தரனைப் பார்த்ததும் பாப்பாவுக்குப் பக்கென்று நெஞ்சு அடைத்தது.

மத்யமாவதியில் கம்பீர எடுப்புடன் தித்திக்கும் சாரீரத்தில் பாடிக் கொண்டு சபையை பிரமிக்க அடிப்பவர் யார்?

அடி வயிற்றிலிருந்து ஒரு இன்ப உணர்வு அவள் அங்கமெல்லாம் பாய்ந்தது.

ஏற்கெனவே தாபம் கொண்டவள், இப்போது தாபம் மிகையாகி விட, ஒரு நீண்ட வெப்பப் பெருமூச்சு விட்டு, சாமண்ணாவைத் தன் காதல் நிறைந்த கண்களால் விழுங்கிக் கொண்டிருந்தாள்.

'ஆகா! சாமண்ணா! எத்தனை அழகு! என்ன ராஜகம்பீரம்! இத்தனை நாளும் இவர் பொருத்தமில்லாத கோமாளி வேடம் போட்டுத் தன் நாடக வாழ்க்கையையே பாழாக்கிவிட்டாரே!'

அடுத்து,

'மெச்சினனே, உன்னையே — வில் விஜயனே!' என்று கிருஷ்ணன் குந்தள வராளியில் பாடவும்,

அதற்கு அடுத்து இந்துஸ்தானி அஸாவேரியில், 'உன் உயர் அன்பை நான் என்னவென்பேன்?' என்று சாமண்ணு அமுத கானமாகப் பதிலுக்குப் பாடி முடிக்க, சபையில் எழுந்த பரவச உற்சாகங்கள் கரகோஷங்களாக மாறின.

உணர்ச்சி வசப்பட்ட பாப்பாவுக்குக் கண்ணீர் மல்கியது.

அன்று அரக்கனாக வந்த சாமண்ணு அத்தனை பேரையும் கவர்ந்து விட்டான்.

அதுவும் கடைசிக் காட்சியில் கர்ணனைப் பார்த்து, "ஆ! சகோதரா! உன்னைச் சகோதரன் என்று தெரியாமல் கொன்றேனே!" என்று உணர்ச்சி ததும்பக் கூறியபோது சபையே கலங்கி விட்டது.

நாடகம் முடிந்ததும் பாப்பா பூமிக்கு இறங்கி வரச் சற்று நேரம் பிடித்தது.

எல்லோரும் சாமண்ணுவின் நடிப்பைப் பாராட்டிப் பேசியபடி வெளியே போய்க் கொண்டிருந்தார்கள்.

பாப்பா வெளியில் வந்து நின்ற போது அவள் கண்ட காட்சி அவளை உறைய வைத்தது.

ஃபோர்ட் ஸெடான் கார் பளபளவென்று நிற்க, அதன் அருகில் டாக்டர் ராமமூர்த்தியும் அவர் மகள் சகுந்தலாவும் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

சகுந்தலா நாகரீக யுவதியாகக் கையில் வாட்ச் கட்டி, ஸாரியில் புரூச் குத்தி சொகுசாக நின்று கொண்டிருந்தாள். அவள் விழி சாமண்ணுவின் மீது லயித்திருந்தது. அவள் எதிரே சாமண்ணு இன்னும் வேஷத்தைக் கலைக்காமல் அர்ச்சுனனாகவே நின்று கொண்டிருந்தான்.

"பிரமாதம் போங்க! உங்களை மறக்கவே முடியாது! அர்ச்சுனன்னு நீங்கதான்! ஷேக்ஸ்பியர் நாடகம் பார்த்தா அப்படி அனுபவம் வரும்னு சொல்வாங்க. இன்னிக்கு உங்க நாடகத்தைப் பார்த்து எனக்கு அந்த அனுபவம் கிடைத்தது!"

அந்தப் பெண் பரவசமாய்ப் பேசினாள். சிறிது கூட வளையவில்லை. கூசவில்லை. கம்பீரமாக ஓர் ஐரோப்பிய மாது நிற்பது போல நின்று கொண்டிருந்தாள்.

டாக்டர் ராமமூர்த்தியும் சாமண்ணுவை வெகுவாகப் புகழ்ந்தார்.

விடைபெறும்போது, "அப்பா அவரை நம் வீட்டுக்குச் சாப்பிட அழையுங்களேன்!" என்றாள் சகுந்தலா.

"ஆமாம் சாமண்ணு! சாப்பாட்டுக்கு வரணும். கம்பவுண்டரை அனுப்பறேன். என்னிக்கு வரேன்னு சொல்லு" என்றார் டாக்டர்.

அர்ச்சுன சாமண்ணு கைகூப்பி நன்றி தெரிவிக்க, அவனது

கண்கள் மென்மையாகச் சகுந்தலா மீது விழுந்தன.

அவள் கண்களும் அவனை நோக்கி இருக்க, இருவர் கண்களும் ஆயிரம் செய்திகள் பேசிக் கொண்டன.

இதையெல்லாம் சற்று எட்ட நின்று பார்த்துக் கொண்டிருந்த பாப்பா ஒரு கற்சிலை போல் உறைந்து போனாள்.

# 12

சகுந்தலா கார் ஏறச் சென்றவள் சற்றுத் தயங்கினாள். சாமண்ணாவிடம் இன்னும் கொஞ்சம் பேச வேண்டும். அவனை மனமாரப் பாராட்ட வேண்டும் போலிருந்தது அவளுக்கு. தயங்கி நின்றவள் வசீகரமான முத்துப் பல் வரிசையில் சிரித்து, "என்ன பிரமாதம் போங்கள். கடைசியில கண்ணீர் வந்துடுத்து!" என்றாள்.

"நல்ல வசூல் ஆகும் பாருங்கோ" என்றார் டாக்டர் ராமமூர்த்தி.

"எல்லாம் உங்க ஆசிர்வாதம்!" என்று சாமண்ணா கைகூப்பினான்.

"இன்னொரு தடவை கூடப் பார்க்கணும் போல இருக்கு. வெள்ளிக்கிழமை மறுபடியும் வரலாமா, அப்பா?" என்று கேட்டு சாமண்ணாவைத் தன் அழகிய விழிகளால் பார்த்துக் கொண்டே ஸெடானின் பின்புறம் போய் உட்கார்ந்தாள். டாக்டரும் ஏறி அமர்ந்து கையைக் காண்பித்தார்.

தேவரதம் ஒன்றில் இருவரும் கொலு வீற்றிருப்பது போல் இருந்தது அது.

அத்தனை நேரமாக அந்தக் காட்சியைச் சற்று எட்ட இருந்தபடியே கவனித்துக் கொண்டிருந்த பாப்பாவுக்கு உள்ளத்தில் ஒரே எரிச்சலாய்ப் புகைந்தது.

"என்னிடம் ஒரு வார்த்தை பேசினாரா? நான் இங்கே வந்திருப்பது கூடத் தெரியாததுபோல் ஓர் அலட்சியமா? அந்தப் பெண்ணோடு எத்தனை இளிப்பு!" என்று பொருமினாள்.

உள்மனம்: 'நீ நிற்பதை அவர் கவனிக்கவில்லை பாப்பா! ஏன் ஆத்திரப்படுகிறாய்? கவனித்திருந்தால் பேசாமல் இருப்பாரா?'

பாசம் வைக்கிறவர்களுக்கு அதன் விளைவாக நேரும் துன்பங்கள் நிறையப் பிடிக்கும். அதுவும் பாசத்துக்கு உரியவரிடமிருந்தே அந்தத் துன்பம் வரும்போது அதை ரசிக்கவே செய்வார்கள்.

பாப்பா இரவு பூராவும் சாமண்ணாவின் அலட்சியப் போக்கை நினைத்து மருகினாள். "என்னைப் பார்க்கவே இல்லை. என்னிடம் பேசவே இல்லை" என்று தனக்குத் தானே திரும்பத் திரும்பச் சொல்லிப் புலம்பினாள்.

பொழுது விடிந்ததுதான் தாமதம். குளித்துச் சாப்பிட்டு முடித்தவுடன் அப்பாவிடம் வண்டியைத் தயார் பண்ணச் சொல்லி வக்கீல் வீட்டுக்குப் புறப்பட்டாள்.

வெயில் சுள்ளென்று உரைத்தது.

வரதாச்சாரி மனைவி கோமளம் கையில் ஆரணி குப்புசாமி முதலியார் எழுதிய 'தேவ சுந்தரி' கனத்துக் கிடக்க,

அதில் வரும் தேவசுந்தரி, தனது கற்பைக் காப்பாற்றிக் கொள்ளும் இக்கட்டு நிலையில் இருந்து கொண்டு, கெட்ட எண்ணத்தோடு வரும் ஜெகந்நாதனிடம்,

"ஐயா! நீர் உயர் குடியில் பிறந்தவராய் இருந்தும் இம்மாதிரி அனாதையாகிய ஒரு ஸ்திரீயை அவமானம் செய்வது நீதியாகுமா? நீர் உடனே என்னைப் போகும்படி விட்டு விடவில்லையெனில் நான் உதவி கோரிக் கூச்சலிடுவேன்" என்று சொல்லிக் கொண்டிருக்க,

வாசலில் குதிரை வண்டியிலிருந்து பாப்பாவும் குமாரசாமியும் இறங்குவதைப் பார்த்ததும், படித்த இடத்திற்கு அடையாளக் குறியாய்த் தனது மூக்குக் கண்ணாடிக் கூட்டை வைத்து விட்டு, "வா, வா" என்று பாப்பாவை வரவேற்றாள்.

குமாரசாமி பாப்பாவைப் பார்த்து, "நீ உள்ளே போம்மா. நான் அரை மணியில் திரும்பி வந்துடறேன்" என்று சொல்லி வண்டியோடு புறப்பட்டுப் போய் விட்டான்.

பாப்பா! வந்து ஊஞ்சலில் சுவாதீனமாக உட்கார்ந்தாள்.

"பாப்பா நீ வருவேன்னு எனக்குத் தெரியும்! எதிர்பார்த்துண்டேதான் இருந்தேன்" என்றாள்.

"அதெப்படி தெரியும் உங்களுக்கு?" எனக் கேட்டாள் பாப்பா.

"எப்படியோ! நேத்தே ஊகிச்சுட்டேன். நான் ஊகிச்சது சரியாப் போச்சா, இல்லையா?"

"நேத்திக்கு நடந்ததைப் பார்த்தேளா மாமி?" என்று பாப்பா ஆரம்பிக்க,

"அர்ஜுன மகாராஜாதானே? அமர்க்களம். அந்த வேஷத்துல எத்தனை அழகா இருந்தான் பார்த்தாயா அந்த சாமண்ணா!" என்று கோமளம் வியக்க,

"என்கிட்டே ஒரு வார்த்தை கூடப் பேசல்ல மாமி" என்று பாப்பா துக்கம் தொண்டையை அடைக்கச் சொன்ன போது கோமளத்துக்குப் பரிதாபமாயிருந்தது.

"ஏன், என்னாச்சு? எதுக்கு இப்படி வருத்தப்படறே?" என்று அனுதாபத்தோடு கேட்டாள் கோமளம்.

டாக்டரையும், அவர் பெண்ணையும் ரொம்ப அக்கறையா கார் வரை போய் வழி அனுப்பி வச்சவருக்கு நான் எதிரிலேயே மலை மாதிரி நிக்கறது கண் தெரியலையாக்கும்! என்னைப் பார்க்கலேன்னாலும் உங்களையாவது வந்து பார்த்திருக்கலாம் இல்லையா?"

"இதப் பாரு! பாப்பா! எங்காத்துக்காரர் குணம்தான் உனக்கு நன்னாத் தெரியுமே! வெளியிலே சடசடன்னு வந்து வண்டி ஏறிடுவார். கூட்டத்தில் நிற்கிறதே அவருக்குப் பிடிக்காது. அதனாலே ஒருவேளை பார்க்க முடியாமல் போயிருக்கலாம். இதையெல்லாம் நாம் பெரிசா நினைச்சு ஒரு குத்தமா எடுத்துக்கக் கூடாதும்மா..."

"இருக்கட்டும். நீங்க விடுவிடுன்னு போறதாகவே இருக்கட்டும். அதுக்குள்ளே ஓடி வந்து ஒரு வார்த்தை சொல்லி வழி அனுப்பியிருக்க வேண்டாமோ? நீங்க ரெண்டு பேரும் எவ்வளவு முக்கியம்னு கூடத் தெரியாமப் போச்சா? இந்த டிராமா நடக்கறதுக்கே நீங்கதானே மூல காரணம்?"

"இந்தா பாப்பா! நாங்க வெறும் மூல காரணம்தான். மூலதனக் காரணம் நீதானே?" என்று சிரித்த கோமளம் மாமி, "சாமண்ணா நீ நினைக்கிற மாதிரியெல்லாம் இல்லம்மா. அவன் ரொம்ப நல்ல பையன். அந்த கும்பல்ல அவன் கண்ணிலே நீ பட்டிருக்க மாட்டே. இல்லாட்டா நிச்சயம் உன்னண்டை வந்து பேசியிருப்பான். அதோட அர்ச்சுன வேஷத்துல அப்படியே வெளியே எத்தனை நேரம் நிப்பான்? சந்தர்ப்பம் அப்படி. உன் பேர்லயோ எங்க பேர்லயோ அவனுக்கு விரோதமா, என்ன? அசட்டாட்டம் பேசாதே! அவன் மனசு எனக்குத் தெரியும். நாடகம் நடக்கிறப்போ கவனிச்சுண்டுதான் இருந்தேன். ஒவ்வொரு பாட்டு ஆரம்பிக்கும் போதும் ஆர்மோனியக்காரர் வந்து நின்னுண்டு அவரைப் பார்க்கிறாப் போல உன்னை ஒரு பார்வை பார்க்கத் தவறலையே!"

"என்னைப் பார்த்தாரா? நிச்சயமா என்னைப் பார்த்தாரா? அதென்னவோ நீங்கதான் சொல்றீங்க! எனக்கு அப்படித் தெரியலே" என்று அகமும் முகமும் மலரக் கூறினாள் பாப்பா.

"உன்னைப் பார்க்கறதுன்னா அப்படி அப்பட்டமா நேர





டியாப் பார்ப்பானு? ஆர்மோனியக்காரரைப் பார்க்கிற மாதிரி நாசூக்கா... நீயும்தான் கவனிச்சயே! நான் அதைப் பார்த் தேனே!'' என்று உதடும் மூக்கும் பேசரியும் புன்னகையில் மூழ்கச் சொன்னுள் கோமளம்.

''எனக்குச் சந்தேகமா இருந்தது மாமி!'' என்ருள் பாதி மகிழ்ச்சியை விழுங்கிக் கொண்டு.

''போ, இதுக்கெல்லாம் சந்தேகமாக்கும். ஓர் அபிநயத் திலே மனசை முழுக்கக் காட்டறதிலே நீங்கள்ளாம் கெட்டிக் காராளாச்சே! உன்னாலே இதைப் புரிஞ்சுக்க முடியலேன்னு நான் நம்புவேனு? இரு, இதோ காப்பி கொண்டு வர்றேன்.''

கோமளம் மாமி போவதையே பார்த்துக் கொண்டிருந்த பாப்பாவின் மனம் பரவசமாகிக் கையைத் திருகிக் கொண் டிருக்க, வாசல் பக்கம் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''மாமி இல்லேயா?'' என்று கேட்டுக் கொண்டே சாமண்ணு உள்ளே வந்து எதிரில் நின்றபோது பாப்பாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. மொழுக்குப் போல எண்ணெய்ப் பசையோடு மினுமினுத்தான். கண்களில் தூக்கம் தெரிந்தது. அவனைத் தொடர்ந்து நாய் ஒன்று வாலைக் குழைத்துக் கொண்டே உள்ளே வர அவன், ''சூ சூ!'' என்று அதை விரட்டிய வேகத்தில் அவன் விரலிலிருந்த மோதிரம் நழுவித் தரையில் உருண்டு ஓடியது. சட்டென்று அதைக் குனிந்து எடுத்த பாப்பா, ''இந்தாங்க'' என்று அவனிடம் கொடுத்தாள். அப்படிக் கொடுக்கும்போதே, 'அது முந்தைய இரவு அர்ச்சுன வேடத்தில் அவன் அணிந்த பகட்டு மோதிரம், நிஜ மோதிரம் அல்ல' என்பதைத் தெரிந்து கொண்டாள்.

''சாதாரண மோதிரந்தான்! வேஷம் கலைக்கிறப்போ கழற்றி வைக்க மறந்து போச்சு'' என்ருன்.

''உண்மைக்கும் பகட்டுக்கும் எனக்கு வித்தியாசம் தெரியும்!'' என்ருள்.

'பாப்பா ஏன் இப்படிப் பேசுகிருள்? இதற்கு என்ன அர்த்தம்? இவளுக்கு என் மீது என்ன கோபம்?'' என்று குழம்பினுன் சாமண்ணு.

''ஏன் பாப்பா, ஏன் ஒரு மாதிரி இருக்கே? என் மேலே ஏதாவது கோபமா?''

''எனக்கென்ன கோபம்? உங்களுக்கு ஞாபக சக்தி குறைஞ் சிட்டு வர மாதிரித் தோணுது. பாவம், ஏகப்பட்ட கவலை உங் களுக்கு. மோதிரம் கழற்றி வைக்க மறந்துவிட்ட மாதிரி, எல் லாத்தையுமே மறந்துடாதீங்க!''

''நான் வேற எதையும் மறக்கலேயே!''

''மறக்காமலிருந்தால் சரி!''

''ராத்திரி நாடகம் எப்படி இருந்தது? அதைப் பற்றி நீ

ஒண்ணுமே சொல்லலையே! நீ இங்கே வந்திருப்பாய். உன்னைப் பார்த்துப் பேசிவிட்டுப் போகலாம்னுதான் அவசரம் அவசரமாகத் தூங்காமக் கூட ஓடி வந்தேன்.''

''என் அபிப்ராயம் உங்களுக்கு அவ்வளவு முக்கியமா என்ன? பெரிய இடத்து ரசிகர்களெல்லாம் உங்களைப் பாராட்டிக் கை குலுக்கறப்போ என் பாராட்டுதானு முக்கியம்?''

''சபையிலே பின் வரிசையிலே நீ உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன். என் கவனமெல்லாம் உன் மீதேதான் இருந்தது. ஆனு நாடகம் முடிஞ்சு திரும்பிப் போறப்பதான் பார்க்க முடியாமப் போயிட்டுது.''

''ஆமாம், முக்கியமாப் பேசறவாகிட்ட பேசி முடிச்சுட்டுத் தானே மத்தவங்களைப் பார்க்க முடியும்?''

எங்கேயோ வலித்தது சாமண்ணுவுக்கு.

''எனக்கு எல்லார் தயவும் வேண்டும். யாரை விட முடியறது?'' என்முன் அவன்.

''உண்மைதான். பாதி ஹீரோ வேஷம் போட்டாச்சு! முழு ஹீரோ ஆயிட வேண்டியதுதானே இனி பாக்கி!''

''ஆமாம்; பெரிய்ய ஹீரோ.... உடுத்திக்கிறதுக்கு நல்லதா ஒரு வேட்டி கிடையாது. ஹீரோவாம் ஹீரோ!''

பாப்பா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் குரலில் தோய்ந்திருந்த வருத்தம் அவளை உலுக்கியது.

சற்று மெலிந்து போயிருந்த சாமண்ணு கசங்கிப் போன சட்டையும் அழுக்கு வேட்டியுமாக வந்திருந்தான்.

முகம் சிறிது ஏழ்மை காட்டியது. கழுத்துக்குக் கீழ் வெறுமையாக வெறிச்சோடிக் கிடந்தது. நேற்று அர்ச்சன வேடத்தில் பார்த்த ராஜ கம்பீர சாமண்ணு எங்கே? இந்தக் குசேல வறுமையில் வாடும் சாமண்ணு எங்கே?''

வாசலில் வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டதும் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். குமாரசாமியும் வக்கீலும் வந்து கொண்டிருந்தனர்.

''சாமண்ணுவை நேத்து பார்க்கலியே நீங்க?'' என்று குமாரசாமியிடம் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார் வக்கீல்.

''இல்லைங்க. நான்தான் அந்த விவகாரமாப் போயிட்டேனே!'' என்முன் குமாரசாமி. அந்த விவகாரம் என்ன என்பது வக்கீலுக்குத் தெரியும்.

''இதோ வந்துடறேன் சாமண்ணு! அஞ்சே நிமிஷம். இவரோடு ஒரு முக்கிய விஷயம் பேசணும்'' என்று சொல்லித் தமது ஆபீஸ் அறைக்குள் குமாரசாமியை அழைத்துச் சென்றார். கதவைச் சாத்திக் கொண்டார். தஸ்தாவேஜுகளை எடுத்து குமாரசாமியோடு அந்தரங்கமாகப் பேசத் தொடங்கினார். ''அந்தப் பையனிடமிருந்து விடுதலைப் பத்திரம் வாங்கிடலாம். அவனே அதுக்குத் தயாரா இருக்கானே! அதனால்

ப்ராப்ளம் இல்லே. அடுத்த வாரத்திலேயே முடிச்சுடலாம்'' என்றார்.

"சீக்கிரமாகவே அதைச் செய்திடுங்க; அப்பத்தான் பாப்பாவுக்கு நிம்மதி'' என்று கூறிய குமாரசாமி வக்கீலிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டபோது பாப்பாவும் தயாராக எழுந்து நின்றாள்.

அவர்கள் இருவரும் வண்டி ஏறும்வரை கீழ்ப் பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்தான் சாமண்ணா.

"சாமண்ணா! என்ன இது? ராத்திரி நாடகம் முடிஞ்சதுக்கப்புறம் நீ பாப்பாவை வந்து பார்க்கவே இல்லேயாமே! அந்த டாக்டருடைய பெண் சகுந்தலாவைப் பார்த்து இளிச்சு இளிச்சு பேசிண்டிருந்தயாம். வழி அனுப்பி வைச்சா எல்லோரையும் சமமாப் பார்க்க வேண்டாமோ? நேற்று வந்த டாக்டர் பெண் அத்தனே ஒசத்தியாயிட்டாளா? 'நான் இருக்கிறதே அவர் கண்ணில பட‌லேயா?' என்று அழுது ஆத்திரப்பட்டாள், பாவம்! பாப்பா என்ன உசத்தி இல்லேயோ? அவள் சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமோ உனக்கு? நினேச்சா, இந்த ஊரையே வாங்கிடலாம்'' என்றாள் கோமளம்.

"தெரியும் மாமி! பணம் இருக்கட்டும் மாமி, அதைக் காட்டிலும் அவளுடைய நல்ல குணம் இருக்கே, அது யாருக்கு வரும்? என் போதாத காலம், இப்படி நடந்து போச்சு. நான் வேணும்னு அப்படிச் செய்யலே. டாக்டர் வந்து விடாப்பிடியாப் பிடிச்சுண்டுட்டார். இல்லாட்டா உங்களே, பாப்பாவை எல்லாரையுமே வழி அனுப்பி வச்சிருப்பேன்'' என்று அழமாட்டாக் குறையாகச் சொன்னான் சாமண்ணா.

"அது போகட்டும். பாப்பா இப்ப இங்கே வந்திருந்தாளே, இப்பவாவது அவளோடு சரியாப் பேசியிருக்கலாமே!''

"பேசினேனே!''

"எங்கே பேசினே? நான் பார்த்துண்டுதானே இருந்தேன்! நீயும் ஒரு நடிகனா இருக்கியே! நடிப்பிலேதான் உன் நேசம், பாசம் எல்லாத்தையும் காட்டுவியா? நிஜ வாழ்க்கையில் மாட்டியா?''

"ஏன் மாமி அப்படிச் சொல்றீங்க?''

"அந்தப் பெண் உன் மேலே உசிரையே வச்சிருக்கு. நீயானா முன்பின் தெரியாத மாதிரி நடந்துக்கறே. அதுக்கு ஒரு வார்த்தை இதமாச் சொல்ல மாட்டேங்கறே!''

"அது பாசந்தானா?'' என்று ஒரு கேள்வி கேட்டு சாமண்ணா நிறுத்தியதும் கோமளம் திகைத்துப் போனாள்.

"ஏன் சாமண்ணா, அதையும் தாண்டி ஒரு படி மேலே போயிட்டாத்தான் என்ன? அதிலே என்ன தப்பு இருக்கு? நீ என்னவோ படிக்கலே. உத்தியோக லேன்லே வரலே. கஷ்டத்திலே பிறந்து நாடகத்திலே சேர்ந்திருக்கே. நாடகம் உனக்கு நிரந்தரமா சோறு போடுங்கறது என்ன நிச்சயம்? உனக்குன்னு ஒரு வாழ்க்கையை அமைச்சுக்க வேணுமா!''

கேள்வியைக் கேட்டு ஊஞ்சலில் சட்டென்று உட்கார, ஆரணி முதலியார் தொப்பென்று கீழே விழுந்தார்.

சாமண்ணா வெலவெலத்து நின்ருன்.

உயிர் ஆழத்தில் ஒரு கேள்வி கேட்ட மாதிரி இருந்தது அது. அவனையே கலக்க வைக்கும் கேள்வி.

அவன் தவிப்பதைப் பார்த்து, ''உட்காரு சாமண்ணு! உட்காந்துக்க!'' என்று கோமளம் சொன்னதும் தட்டுத் தடுமாறி உட்கார்ந்தான் சாமண்ணு.

''மாமி! வாழ்க்கையிலே எல்லாம் நம்பிக்கைதானே!'' என்ருன் சுருக்கமாக.

''என்ன நம்பிக்கை வச்சிருக்கே, சொல்லு!'' என்ருள் கோமளம்.

''நாடகத்திலே நடிச்சுப் பெரும் புகழ் வாங்கி, பெரிய ஹீரோ வாயிடலாம்னுதான்!''

''கடவுள் உனக்கு அனுக்கிரகம் செய்யட்டும். ஆனு இந்தத் துறையிலே லேசா யார் அப்படி ஹீரோவாகி, எத்தனை லட்சம் சேர்த்துட்டா சொல்லு.''

சாமண்ணு திகைத்தான்.

''சேர்த்திருக்க முடியும் மாமி! ஆனு நாலு காசு வரதுக்குள்ள தான் குடியிலேயும், கூத்தியிலேயும் இறங்கிடருளே!''

''எல்லாத்தையும் இழந்துட்டா இல்லையா?''

''ஆமாம்.''

''சரி! எத்தனை நாடகக் கம்பெனி ஒழுங்கா இருக்கு, அதைச் சொல்லு. ஒரு கம்பெனி எத்தனை காலம் வாழ்ந்திருக்கு?''

சாமண்ணு மனக்கண் முன்னுல் ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த நடிகர்கள், நடிகைகள், பாட்டுக்காரர்கள், உரிமையாளர்கள், மானேஜர்கள் எல்லாருமே இன்று அன்னக்காவடிகளாக அலைந்து கொண்டிருப்பதைப் பார்த்தான்.

மாமி சொல்வது எவ்வளவு உண்மை!

ஆனுலும் அதை அவன் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை.

மழபாடி மகாதேவன் பிரமாதமாக வாழவில்லையா?

இன்றைக்கு ஏராளமாய் நிலம் வாங்கி, ஊரையே வளைத்துப் போட்டிருக்கிருனே!


சாமண்ணுவுக்கு உதடுகள் துடித்தன.

''ஏன், மாமி! என் வாழ்க்கை வித்தியாசமா இருக்காதா? எங்க அம்மா உயிரோடு இருந்தப்ப என் சின்ன வயசிலே எனக்கு ஆயிரம் தடவை ஆசீர்வாதம் பண்ணியிருக்கா. அதெல்லாம் வீண் போகாது. நான் ஒரு நாளைக்கு நிச்சயம் பெரிய நடிகனுகத்தான் போகிறேன். பேரும், புகழும், பணமும் குவிக்கப் போகிறேன். அதையெல்லாம் பார்க்க எங்கம்மாவுக்குத்தான் கொடுத்து வைக்கல்லே. நீங்க அவள் ஸ்தானத்துலே இருந்துண்டு பார்க்கத்தான் போறீங்க.''

''சரி! அப்படி நீ பேரும், புகழுமாக வளரணும்னு அதுக்கும் யாராவது ஒருத்தருடைய உதவி இருந்தாத்தானே முடியும்?''

கோமளம் தன்னை மடக்கி மடக்கிப் பேசிய விதம் அவனுக்குத் திகைப்பாக இருந்தது.

# 13



சாமண்ணா சிறிதுநேரம் பிரமித்து நின்றான். கோமளத்தின் அசைக்க முடியாத வாதங்கள் அவனுடைய அடித்தள நம்பிக்கையை அசைத்து விட்டன. கண்களில் அவனது அம்மா மின்னி மறைந்தாள். விசாலாட்சி என்று பெயர். ஒரு காலத்தில் விசாலமாக இருந்த அவள் கண்கள் வயது அறுபத்தைந்தை எட்டிய போது, ஊட்டம், ஆதரவு எல்லாம் இழந்து அவளது அடிப்படை ஆசை குறுகியது போல் கண்களும் குறுகிவிட்டன. வெறும் காலடி ஓசையை வைத்தே— "சாமு, வந்துட்டியாடா!" என்பாள். சாமண்ணா அவளைப் பொறுத்த வரை ஒரு நிழல் தான். அவன் கால், கை, முகம் எல்லாம் சேர்ந்து ஒரு குழப்பமான நிழலாகத் தெரியும்.

ஆபரேஷன் செய்து கண்ணாடி போட்டால் கண் தெரியுமாம். ஆனால் நூறு ரூபாய் செலவாகுமே! எங்கே போவது பணத்துக்கு? அதுவும் சாமண்ணா படிப்பு கிடிப்பு எதுவும் வராமல் வெறும் வெட்டிப் பொழுது போக்கிக் கொண்டிருக்கும்போது? அவள் இறந்து போவதற்கு முன் அவளுக்குக் கண் கொடுக்க முடிந்ததா? தன் பிள்ளையின் உருவத்தைப் பார்த்து மகிழ அவளுக்குக் கொடுத்து வைத்திருந்ததா?

"என்ன பிரமிச்சுப் போய் நிற்கிறே?" என்று வக்கீல் மாமி கோமளம் சீண்டியவுடன் சாமண்ணா தத்தளித்து நிஜ உலகுக்கு வந்தான்.

"நீங்க சொல்றதை எல்லாம் ஒத்துக்கறேன் மாமி! வாழ்க்கையிலே முன்னேறணும்னா நாலு பேர் ஆதரவு வேண்டியதுதான். நான் அதை மறுக்கலே. ஆனா அங்க அம்மாவை

உத்தேசித்து இந்த விஷயத்திலே என்னுலே எதுவும் செய்ய முடியாத நிலே. அதனுல்தான்...''

''அப்படி என்ன நிலே? பெரிய நிலே! சொல்லு!'' என்ருள் கோமளம்.

சாமண்ணு சற்று கலங்கி நின்ருன். மனசுக்குள் ஓர் உணர்வுப் பிரளயம் நடந்து கொண்டிருந்தது.

கர்ணனே அண்ணன் என்று அறிந்த போது நிஜ அர்ச்சுனனுக்குக் கூட அந்த அளவுக்குச் சோகம் தோன்றியிராது.

''கேளுங்கோ மாமி!'' என்ருன். குரலில் விசேஷ அக்கறை தொனித்தது.

''எங்க அப்பாவுக்கு லட்சுமிநாராயணன்னு பேரு. தாத்தா நிறைய சொத்து வச்சுட்டும் போனுர். அத்தனேயும் திண்ணேயிலே சீட்டாடியே தோத்துட்டார். தாத்தா சேர்த்து வைத்ததை மட்டுமில்லே, அம்மா தொங்கத் தொங்க நூறு பவுன் நகையோடு வந்தா; அதையும் சீட்டாடியே விட்டாச்சு! ஒரு பக்கம் வாதம் இழுத்துப் படுக்கையிலே படுத்துட்டார் பாருங்கோ. அப்போதான் என் அம்மா கையைப் பிடிச்சுண்டு அழுதார். பேச முடியவில்லே. அம்மாவோட அருமை அப்பத்தான் தெரிஞ்சுது. ஆனுலும் அம்மா அவரைத் தவிக்க விடவில்லே,. ரெண்டு வருஷம் நாயா உழைச்சு அவரைக் காப்பாத்தினு. அப்பா அழுதுண்டே கண்ணே மூடினுர்.

அப்ப எனக்குப் பத்து வயசு. அப்பா போன கையோடு பிடிவாதம், கோபதாபம் எல்லாம் வந்துடுத்து. படிப்பு மட்டும் ஏறல்லே. தத்தாரிகளோடு அலேஞ்சேன். அம்மாவுக்கு ரொம்ப வருத்தம்.

அப்பப்ப எனக்கு புத்தி சொல்லி திருத்தப் பார்ப்பா. அடம் பிடிப்பேன். அழுவேன். சொல் பேச்சைக் கேட்க மாட்டேன். பேசாம இருந்துடுவா! ரெண்டு வருஷம் என் உதாசீனத்தைப் பொறுத்துண்டிருந்தா. ஒருநாள் குடத்துல தண்ணி எடுத்துட்டு வீட்டுக்கு வரும்போது கீழே விழுந்துட்டா. நான் அன்று தெருக்கூத்து பார்த்துட்டு காலேயில வந்து பார்க்கிறேன். வீடு திறந்திருக்கு. இருட்டா இருக்கு. அம்மா அம்மான்னு உள்ளே போறேன்.

அம்மா விழுந்த இடத்திலேயே கிடக்கிரு. முனகுரு! எழுந்திருக்க முடியலே. தூக்கி வாரி எடுத்தேன். உள்ளே கொண்டு படுக்க வச்சேன். உள்ளூர் வைத்தியனே அழைச்சுண்டு வந்து காண்பிச்சேன். பயன்படலே. நம்ப மாட்டீங்க! அம்மா ஒரு வாரம் படுத்துக்கிட்டே சமையல் செய்தாள், கும்மட்டியைப் பக்கத்திலே வச்சுண்டு...

(சாமண்ணுவுக்கு இப்போது கண்ணீர் வந்தது.)

அப்பவாவது அனுசரணேயா இருந்தேனு! இல்லே; என்

பணிவிடைகளை அவள் எதிர்பார்த்தாளா? அதுவுமில்லை. பத்து நாளைக்கு அப்புறம் ஒருநாள் தானே எழுந்து உட்கார்ந்துட்டா.

அதுக்குப் பிறகு ஒரு வருஷம் இருந்திருப்பாளோ என்னவோ, எப்படியோ நாளை ஓட்டிண்டே வந்துட்டா.

ஒருநாள் அம்மா திருப்பதிப் பெருமாள் படத்துகிட்டே பேசிண்டு இருக்கச்சே கேட்டுட்டேன்! 'பெருமாளே! என்னைப் பலவீனமாக்கறே! சரி! என் பிள்ளையை யார் அப்புறம் கவனிச்சுப்பா? அவனும் படிக்காமல், உலகம் தெரியாமல் இருந்துட்டானே, நாளுக்கு நாள் முடியாமப் போறதே. நான் கண் மூடறதுக்கு முன்னாடி நீதான் அவனுக்கு ஒரு வழி காட்டணும், என் அப்பனே!''

அம்மா பேசினப்புறம் நான் பக்கத்திலே போய் நிற்கிறேன். கண் தெரியலை. என்னைப் பார்க்காமலே அந்தப் பக்கமாப் போறு 'அம்மா'ன்னேன். அப்போதுதான் திரும்பி என்னைச் சூன்யமாப் பார்த்தா. ஒரு வருஷமா பார்வை குறைஞ்சு போயிருக்கு. அதை என்கிட்டே சொல்லவே இல்லை. 'நிழலாத்தான் நீ தெரியறே'ன்னு சொன்னவுடனே எனக்குத் துக்கம் தொண்டையை அடைச்சுது. காரணம், அப்பத்தான் நான் முதல் முதல் சம்பாதிச்சுப் பணம் கொண்டு வந்திருந்தேன். நாடகக் கம்பெனியிலே சேர்ந்திருந்தேன். பக்கத்து டவுன்லே, கிருஷ்ண லீலாவிலே நடிச்சுண்டிருந்தது அம்மாவுக்குத் தெரியாது. ஒன்பது ரூபாய் சம்பளம் கொடுத்தார்கள். அது ஒன்பது கோடி ரூபா. அம்மா கையிலே அதைக் கொடுத்து நமஸ்காரம் பண்ணணும்னு ஆசை. அவள் கையாலே எண்ணிப் பார்த்தால் சந்தோஷப்படுவாளே, கண் பார்வை போயிடுத்தேங்கிறதே நினைக்கிறப்போ துக்கமாப் போயிடுத்து.

கையிலே கொடுத்தேன். வாங்கிண்டா. 'ரூபாயாடா? ரூபாயாடான்னு?' கேட்டா. சம்பாதிச்சேன்னு சொன்னேன். சந்தோஷம் தாங்கலை. 'சுவாமி கிட்டே வேண்டிக் கொண்டேன். உடனே கொடுத்துட்டாரே'ன்னு மகிழ்ந்து போனுள்.

அம்மாவிடம் கம்பெனி வேலைன்னு சொன்னேன். கம்பெனின்னு டிராமாக் கம்பெனின்னு அவளுக்குத் தெரியாது. இப்படி மூணு மாசம் பணம் கொடுத்தேன். அம்மா உடம்பு அதுக்குள்ளே இற்றுப் போச்சு. படுத்துட்டா. நான் தவிக்கிறேன். அவள் கண்ணுக்கு சிகிச்சை கொடுக்கலைங்கற தாபம் என்னை வாட்டி எடுக்கிறது. அந்த அளவுக்கு எனக்கு இன்னும் வரும்படி வரலையேங்கற தாபம். அம்மா என்னைப் பக்கத்திலே உட்காரச் சொல்லி முகத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து ஆசையைத் தீர்த்துக்கிறு. எனக்கு அழுகையா வர்றது. 'அம்மா! நீ மன்னிப்பேன்னு சொன்னு உங்கிட்டே ஒரு உண்மையைச் சொல்றேன்,' அப்படீங்கறேன். 'சொல்லு' என்கிறு.

'நான் கம்பெனிலே வேலே செய்யலே. நாடகத்திலே நடிக்கறேன்' என்கிறேன்.

ஒரு கணம் திகைச்சுப் போயிட்டா. சங்கடப்பட்டாளா? தெரியலே. தெளிஞ்சு என்னைப் பார்த்தாள்.

'சாமு, இதை விட்டுடு' என்ருள்.

'அம்மா! என்னை மன்னிச்சுடு! எனக்கு வேற எந்தத் தொழிலும் வராது! படிப்பு இல்லே! நடிப்பு எனக்குப் பிடிச்சிருக்கு. நான் பிரமாதமா வருவேன்னு எல்லாரும் சொல்ரு'ன்னு சொன்னேன்.

'நீ சொல்றே, ஒத்துக்கறேன். நீ நன்ன இருப்பே. நிச்சயம் முன்னுக்கு வருவே. ஆனு ஒண்ணே ஒண்ணு! நீ நன்ன வாழணும்னு ஆசைப்படறேன். அதனுலே அம்மா சொல்ற வார்த்தையைத் தட்டாதே. நாடகத்துலே நடி. வேண்டாங்கலே. ஆனு ஒரு நடிகையையோ, ஆடறவாளேயோ, பாடறவாளேயோ, தேவதாசிகளேயோ கல்யாணம் பண்ணிக்காதே. இந்த விஷயத்துலே நான் சொல்றதைச் சத்தியமா எடுத்துக்கோ.'

அம்மாவுக்கு அதுக்கு மேலே பேச்சு வரவில்லே. கண் மூடி விட்டது. 'அம்மா! அம்மா! இத பாரு. கண்ணைத் திறந்து பாரு. சத்தியம் பண்றேன்'னு கையைப் பிடிச்சேன்.

அம்மா போயாச்சு. நான் 'சொன்ன வார்த்தை அவள் காதில் விழுந்ததோ இல்லேயோ தெரியாது.

இந்தச் சத்தியம்தான் மாமி என் மனசிலே அப்படியே ஆழமாக் கிடக்கு! இதனுலேதான்... இதனுலேதான்...''

சாமண்ண முகத்தைக் குனிந்து கொண்டு கண்ணீர் உகுத்தான்.

கோமளம் அவனேக் கனிவோடு பார்த்தாள். பார்வையில் இரக்கமும் அனுதாபமும் தெரிந்தன.

''இருக்கட்டும் சாமண்ண! எதுக்கு அழறே? ஏன் விலகி விலகிப் போறேன்னு இப்பத்தான் தெரியறது. உன்னை நான் சங்கடப்படுத்திட்டேன். இல்லே? இதிலே நானும் உன்னைக் குழப்பிட்டேன்னு மனசுலே வச்சுக்காதே. எப்படி எப்படி எல்லாம் நடக்கணுமோ, அப்படித்தான் எதுவும் நடக்கும். பார்க்கலாம். நீ கலங்காமல் போயிட்டு வா'' என்று ஆறுதலாகச் சொல்லி அனுப்பினுள்.

அன்றைக்குச் சூரியகுளம் கொட்டகையில் மீண்டும் கோலாகலம்.

'கர்ண அர்ச்சுன' நாடகம் தனது இணையற்ற இருபத்தைந்தாம் நாளேக் கொண்டாடிக் கொண்டிருந்தது.

நாலு நாளுக்கு மேல் ஒரு நாடகம் தேருத அந்தக் காலத்தில், 'கர்ண, அர்ச்சுன' அந்த ஊரையும் சுற்றுப்புற கிராமங்

களையும் கவர்ந்துவிட்டது. எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு நாடகம் பார்க்க வந்தார்கள். மேல் தட்டு மக்கள் தினம் தினம் தொடர்ந்து வந்தார்கள்.

இருபத்தைந்து நாட்களாகத் தொடர்ந்து நாடகத்துக்கு வரும் பெரும் கூட்டத்தைக் கண்ட வக்கீல் வரதாச்சாரிக்கு ஒரு யோசனை தோன்றியது. சிங்காரப் பொட்டுவைக் கூப்பிட்டு, "இன்னொரு விழா எடுத்துடுவோம். பிரமாத விளம்பரம் கிடைக்கும். ஜனங்கள் ஒரே குஷியிலே இருக்காங்க" என்றார்.

ஏற்கெனவே நாடகத்தில் வரும் பாட்டுக்கள் சில பாமரர் வாயில் தவழ ஆரம்பித்து விட்டன.

"அடே துர்யோதனப் பாதகா! உன்னைத் துடைத்து எடுக்க என் புஜம் புடைத்து நிற்கிறது" என்ற சாமண்ணாவின் வீர கர்ஜனையைத் தெருச் சிறுவர்கள் அவ்வப்போது கூச்சலிட்டுக் காட்டினார்கள்.

'இருபத்தைந்தாவது நாள்' நாடக விழாவன்று பல பேர் டிக்கெட் கிடைக்காமல் வீடு திரும்ப வேண்டியதாயிற்று.

அன்று நாடகத்தில், இடைவேளை வந்தபோது மேடை மீது நாற்காலிகள் போட்டு ஊர்ப் பிர்முகர்களைக் கொண்டு போய் உட்கார வைத்தார்கள். வக்கீல்தான் விழாவை முன்நின்று நடத்தினார்.

சகுந்தலாவின் தந்தை டாக்டர் ராமமூர்த்தி எழுந்து வரவேற்புரை பேச ஆரம்பித்த போது ஏக ஆரவாரம்!

"ஊரிலே வியாதி கூடக் குறைஞ்சு போச்சு (சிரிப்பு) உண்மைதான் என்கிறேன். எனக்கு அது தெரிகிறது. காரணம் இந்த டிராமா! (கரகோஷம்) டிராமான்னா சிங்காரப் பொட்டுதான். சாமண்ணாதான்." (ஒரே கரகோஷம்)

(சபையில் ஒருவர் 'சாமண்ணா இரண்டு மடங்கு' என்று கத்தினார். அதைத் தொடர்ந்து ஒரு பலத்த கரகோஷம்).

"அடேயப்பா! உங்கள் அபிமானம் இப்போதுதான் புரிகிறது. இத்தனை நாளும் சாமண்ணாவின் திறமையை அறிந்து கொள்ளாமல் அந்தப் பிறவி நடிகரை வெறும் கோமாளி ஆக்கி வைத்திருந்தோம். இப்போது அர்ச்சுனன் உயரத்துக்கு அவரைத் தூக்கியாச்சு. இன்னும் அவர் மேலே போய்..."

மேடை நிறைய மலர் மாலைகள் உதிர்ந்து கிடந்தன. பிரமுகர்களுக்கும் மாலை, நடிகர்களுக்கும் மாலை.

அடுத்தாற்போல் வக்கீல் வரதாச்சாரி எழுந்தார்.

"சகோதர சகோதரிகளே!

சாமண்ணா நடிப்பைப் பாராட்டி நாடக அபிமானி ஒருவர் இந்தச் சங்கிலியையும், மோதிரத்தையும் அவருக்குப் பரிசாக அளிக்கிறார். அந்த அபிமானி இந்த சபையில் உட்கார்ந்திருக்

கிறார். ஆனால் அவர் தான் யார் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. 'ஒரு அபிமானி' அவ்வளவுதான்! அவருடைய இந்த அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளும்படி சாமண்ணாவை அழைக்கிறேன்.''

சாமண்ணா சங்கோஜத்தோடு வந்தான். யார் அந்த அபிமானி என்று யோசித்தான்.

வரதாச்சாரி தங்கச் சங்கிலியை எடுத்து அவன் கழுத்தில் போட, சாமண்ணா சற்று அதிகமாகக் குனிய சங்கிலி கீழே விழுந்து விட்டது.

'ஒன்ஸ்மோர்' என்று சபையில் ஒருவர் கத்த ஒரே ஆரவாரம்.

வரதாச்சாரி சங்கிலியை 'ஒன்ஸ்மோர்' பண்ணிக் காண்பித்தார்.

பளபள என்று அபரஞ்சித் தங்கம் சாமண்ணாவின் மார்பு பூராவும் மின்னியது. பெரிய சங்கிலி. நன்றாகக் கனத்தது. சாமண்ணாவுக்குத் தன் தாயார் ஞாபகம் வர, கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

இந்தச் சமயத்தில் முன் வரிசையிலிருந்து சகுந்தலா எழுந்து மேடையை நோக்கிச் சென்றபோது சபையில் இருந்தவர்கள் அத்தனை பேரும் அவளையே கண்கொட்டாமல் பார்த்தனர்.

மேடை ஏறிச் சென்றவள் வரதாச்சாரியிடம் ஏதோ கிசுகிசுத்து விட்டுத் தன் கையிலிருந்ததைக் கொடுக்க அவர் எழுந்து,

''சாமண்ணாவுக்கு இன்னொரு பரிசு! அந்தக் காலத்தில் மகாராஜாக்கள்தான் பொன்னாடை போர்த்துவான்னு சொல்லுவா! இப்ப மிஸ் சகுந்தலா இந்தப் பொன்னாடையை சாமண்ணாவுக்கு அன்பளிப்பா வழங்கறா. நம்ப டாக்டர் மகள் ஒரு ராஜகுமாரி மாதிரிதானே?''

சகுந்தலா நிறையச் சிரித்துக் கொண்டு சாமண்ணா தன்னைப் பார்க்கிறானா என்று கவனித்தாள்.

அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்து கைகூப்பியபடி புன்முறுவல் பூத்ததும் இருப்பிடத்தை நோக்கிச் சென்றாள்.

வக்கீல் மாமி அப்போது சட்டென்று பாப்பா உட்கார்ந்திருக்கும் அடுத்த வரிசையைப் பார்த்தாள். பாப்பா வெறித்து உட்கார்ந்திருந்தாள்.

அந்தப் பார்வை கோமளத்தின் உள்ளத்தைச் சங்கடபபடுத்தியது.

சில நிமிடங்களில் இடைவேளை முடிய, அடுத்து வந்த முதல் காட்சியிலேயே சாமண்ணா தோன்ற, கரகோஷம் சபையைப் பிளக்க, சாமண்ணாவின் தோள் மீது அலங்காரமாக இருந்த அந்தச் சால்வையையே பார்த்துக் கொண்டிருந்தாள் கோமளம்.


அவளுக்கு எங்கேயோ வலித்தது.

பாப்பா தலைகுனிந்து கீழே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவள் கண்களிலிருந்து நீர்த்திவலைகள் கீழே உதிர்ந்து கொண்டிருக்கும் என்பது கோமளத்திற்குத் தெரியும்.

அவள் தொண்டை கரகரத்தது.

# 14



பின் வரிசையில் பாப்பா தலைகுனிந்து இருக்கும் நிலை கண்டு கோமளத்தின் உள்ளம் உருகியது. அந்தப் பருவகால உணர்வுகள் அவள் அறியாததல்ல. அதன் வேகங்கள், சக்திகள், ஆத்திரங்கள், வெறிகள், உன்மத்தங்கள் எல்லாமே அவள் அனுபவித்து அறிந்தவைதான்.

பருவம்அரும்பும்போது அந்தஉணர்வும் அரும்புவதாயிற்றே!

கோமளத்தின் யௌவனம் சற்று முன்னரே தழைக்க ஆரம்பித்துவிட்ட நிலையில், அவளது பதினோராவது வயதில், அவளது அத்தை மகன் ராஜன் கட்டுக் குடுமியுடன் மயில்கண் வேட்டி கட்டி, மலையான முண்டு போர்த்தி வந்து நிற்பானே, அதை யாரால் மறக்க முடியும்?

நன்றாகப் பாடுவான். குரல் தேனாக இனிக்கும். ஹரிகேசவ நல்லூர் பாகவதரிடம் பாடம். 'பையன் பிரமாதமாக வருவான்' என்பது அவர் கணிப்பு.

அவனுக்கு அப்போது பதினெட்டு வயதுதான். அத்தை பத்மாசினியின் ஒரே மகன். அத்தை குடும்பமே சங்கீதக் குடும்பம். ராஜன் அதற்கு முழு வாரிசாக வந்திருந்தான்.

ஒரு ராத்திரி, கோமளத்தின் வீட்டில் நவராத்திரியின் போது அவன் பாடிய அந்தக் காட்சி நினைவில் வந்தது. ராஜன் நடுக்கூடத்தில் நாயகமாக உட்கார்ந்து பாடிக் கொண்டிருக்கிறான். அந்தக் கூடத்தின் விஸ்தாரத்துள் அவன் குரல் சிற்றலையாக அலைகிறது. அதன் ரீங்காரக் குழைவுகள் எல்லோர் உள்ளங்களையும் பிசைந்து எடுக்கிறது. எல்லோரும் மெய்மறந்து கிடக்கிறார்கள்.

பதினேரு பிராயமே ஆகியிருந்த கோமளத்துக்கு, உடல் அமைப்பில் அதற்குள் சிறுமித்தனம் மறைந்து பருவ மாறுதல் நிகழ்ந்து கொண்டிருந்தது. அப்பா ஜாதகக் கட்டைத் தூக்கி மூன்று வருடமாக வியர்த்துக் கொண்டிருந்தார்.

அன்று ராஜன் பாடத் தொடங்கியதுதான் தாமதம்! கோமளத்தை ஒரு புதிய உணர்வு போர்த்திக் கொண்டது.

கோபால கிருஷ்ண பாரதியின் 'வாராமல் இருப்பாரோ என்ற அந்தப் பாடல் வரியும், சுருட்டி ராகத்தின் இனிமையும், அத்தான் ராஜனின் அழகு வடிவமும் ஆண்மையும் எல்லாமே அவள் மனத்துள் ஒரு மயக்க உணர்ச்சியைக் கிளறி விட்டது.

உள்ளே ஒரு கள்ள நினைவு தோன்றி, 'ராஜன், ராஜன் என்று சொல்லிக் கொண்டு அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது.

இரவெல்லாம் உணர்ச்சிப் பெருக்கில் கிடந்து உழன்று விட்டுக் காலையில் எழுந்ததும், "அம்மா, இங்கே வந்து பாரு!" என்று கிணற்றடியில் பாவாடையை ஒரு கையால் சற்றே உயர்த்திக் கொண்டு சிறுமி கோமளம் இரைய,

அம்மா ஓடிவந்து பார்த்து அவளது நிலையை உணர்ந்து, "ஐயோ ராமா! வெளியிலே சொல்லித் தொலைக்காதேடீ. கல்யாணத்துக்கு முன்னாலே திரண்டுட்டாளான்னு நாலு பேர் சிரிக்கப் போறு!" என்று தலையில் அடித்துக் கொண்டது இன்னும் அவள் நினைவில் உள்ளது.

ராஜன்தான் அவளது முதல் விழிப்பு, முதல் காதல், முதல் மோகம்.

அதற்குப் பின் அப்பா பதினைந்தே மாதத்திற்குள் வரன் பார்த்து அவளுக்கு வரதாச்சாரியைத் திருமணம் செய்து வைத்து விட்டார்.

இருந்தும் மனசில் விழுந்த முதல் ஓவியம், ராஜனின் உருவம், மறக்க முடியாதபடி கல்லில் செதுக்கியது போல் நிலைத்து விட்டது.

அத்தை வசதியில்லாவதவள். அப்பாவுக்கு, 'அவன் ஒரு பாடகன்தானே!' என்ற அலட்சியம்! விறுவிறு என்று மூன்று வருடத்தில் முன்னுக்கு வந்த ராஜன் திடீரென்று டி. பி. க்கு ஆளாகிப் பத்து மாதத்தில் உருக்குலைந்து அத்தைக்கு முன்னாடியே இறந்து போனன்.

கோமளத்துக்கு அது ஒரு பலத்த அடி. ராஜனை அவள் மணந்திருந்தால் அவனுக்கு இந்த வியாதியே வந்திருக்காது என்று எத்தனை முறை நினைத்திருக்கிருள்! அந்த வலி இன்னும் அவளிடம் இருந்தது. தொட்டுப் பார்த்தால் குபுக்கென்று அழுகை வந்துவிடும்.

அவளது சமூக அமைப்புக்கும், அந்தப் பழைய நாட்களுக்கும் காதல் என்ற உணர்ச்சியே ஒவ்வாது. அந்த வார்த்தையைக் கூட அவள் உச்சரிக்க முடியாது. ஏதோ அசிங்கத்தைச்



சொல்லிவிட்டது போல் பார்ப்பார்கள்.

ஆனால், சற்று முன்னேறி ஆங்கிலப் பழக்கவழக்கம் அதிகம் பரிச்சயப்பட்ட நாளில்,

ஒரு பெண், அதுவும் தாசி குலத்தில் பிறந்து வளர்ந்தவள் நிச்சயம் காதலைப் பற்றி நினைக்கவும் முடியும், பெறவும் முடியும். எனவே, பாப்பாவின் ஆசையில் எந்தத் தவறும் இல்லை என்று எண்ணிய கோமளம் அவளுக்காக இரக்கப்பட்டாள். அவள் படும் வேதனையைக் காண கோமளத்தால் சகிக்கவில்லை. நாடகம் முடியும் வரை காத்திருந்தாள்.

முடிந்தது. கோமளம் தானே வலியச் சென்று, "வா பாப்பா!" என்று அழைத்தாள்.

பாப்பாவின் முகம் நிமிர்ந்ததும் கோமளத்தின் மனம் பதறியது.

கண்ணீர் மாலை மாலையாகப் பெருகி வாடிய முகம். தலை கலைந்து பிசிறுகளாகப் பறந்தது.

கோமளம் பாப்பாவின் காதோடு, "பைத்தியம்! சாமண்ணா கடைசியிலே உன்னைத்தான் திரும்பித் திரும்பிப் பார்த்தான். நீயானால் நிமிரவே இல்லை போ! சாமண்ணா ராத்திரி தூங்க மாட்டான். சோகமா இருப்பான்" என்றாள்.

பாப்பாவின் இமைகள் கொட்டின. ஒரு சின்ன வெளிச்சம் விழி ஓரத்தில் அடித்தது. "அப்படியா?" என்றாள். துக்கமும் இன்பமும் கலந்து வந்த குரல் வெயில் ஊடே மழை அடிப்பது போல் இருந்தது.

"பைத்தியம்! நல்ல சமயத்தில் பார்க்க மாட்டே! நீ பார்க்காததனால அவன் ரெண்டு வாட்டி கூடவே பார்க்க, அதைப் பல பேர் கவனிச்சா! வா, நாங்க போற வழியில் வெங்கடா லாட்ஜிலதான் சாப்பிடப் போறோம். நீயும் வா!" என்று அவளை ஆதரவுடன் சேர்த்து இழுத்துக் கொண்டு கூட்டத்தின் ஊடே நடந்து சென்றாள் கோமளம்.

கர்ணா — அர்ச்சுனா நாடகம் முப்பத்திரண்டாம் நாளைத் தாண்டிவிட, சிங்காரப் பொட்டு மேல் ஜவ்வாதும் புனுகும் மணம் வீச, இளம் தொந்தி சற்றுப் பெரிதாகியது. தாடை எலும்பு மறைந்து போய்ச் சதைக் கோளம் ஆகிவிட்டது.

டாக்டர் ராமமூர்த்தி தமது விஸ்தாரமான பங்களா தோட்டத்தில் சாமண்ணாவுக்கு விருந்துக்கு ஏற்பாடு செய்து, முக்கியமான ஊர்ப் பிரமுகர்கள் அத்தனை பேரையும் அழைத்திருந்தார்.

பசுமையான வாழை இலைகள் போட்டு, பக்கத்தில் வெள்ளி டம்ளர்கள் பளபளத்தன. காஸ் லைட்டுகள் அங்கே தென்னை மரத்தில் சாய்ந்து கொண்டு பளீர் என்று வெளிச்சம்! தனியாகத்

தென்னங்கீற்று கட்டி, உள்ளே நளபாகம் நடந்து கொண்டிருந்தது. பாயச வாசனை அந்தப் பிரதேசத்தையே தூக்கி அடித்தது.

பாப்பாவுக்கும் அழைப்பு போயிருந்தது. ஆனால் அவளுக்கு என்னவோ இந்த விருந்துக்குச் செல்ல ஒப்பவில்லை. அந்த அழைப்பின் பின்னணியில் சகுந்தலா இருக்கிறாள் என்பதே காரணம். விருந்துக்குப் போய்விட்டு மனத்தை ரணமாக்கிக் கொண்டு திரும்ப அவள் இஷ்டப்படவில்லை.

ஆனால் ஆறு மணிக்குக் கோமளம் வந்து, "நன்னாருக்கு. வராம இருப்பியோ, சாமண்ணா என்ன நினைப்பான்?" என்று செல்லமாக அதட்டியே அவளை அழைத்துச் சென்று விட்டாள்.

ஒரே மினுமினுப்பாக இருந்தது விருந்தினர் வரிசை! அத்தனை பேரும் சீமான்கள், சீமாட்டிகளாக வந்திருந்தார்கள். ப்ரூச், நாகொத்து, ஒட்டியாணம், காது சரம், அட்டிகை எல்லாம் மின்னின. பல ஜரிகைத் தலைப்பாக்கள்!

சாப்பிட்டு முடிந்ததும் ஆரவாரத்திடையே ராமமூர்த்தி எழுந்து பேசத் தொடங்கினார்.

"சகோதர சகோதரிகளே,

நான் என் தொழிலை விட்டுடலாம்னு பார்க்கிறேன். ஒரு டிராமாகம்பெனியைஎடுத்துநடத்துகிறதாகஉத்தேசம்.(சிரிப்பு) வேடிக்கைக்காச் சொல்லவில்லை. இந்த கர்ணா — அர்ச்சுனா நாடகம் அப்படிப் போடு போடென்று போடுகிறது. கம்பெனி வாங்கிய கடன் எல்லாம் அநேகமாக அடைஞ்சுடுத்து. அது மட்டுமில்லை; கம்பெனி நம்ப ஊர் மைதானத்தையே விலைக்கு வாங்கிடும்போல் இருக்கு! (கரகோஷம்).

இவ்வளவும் முப்பத்தைந்தே நாட்களுக்குள். யாரும் இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு அதிகம் சம்பாதிச்சிருக்க முடியாது. இந்த நாடகத்தில, அதென்னவோ அத்தனை ஜனங்களுக்கும் சாமண்ணாவை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. நேத்திக்குப் பிறந்த சின்னக் குழந்தை கூட 'வில் விஜயனே' பாட்டுப் பாடறது. இன்னும் ஒரு மாசம் நாடகம் நடந்துதுன்னா, ஊர்லே முக்கால்வாசிப் பேரும் அர்ச்சுனர்களாக ஆயிடுவா! (ஒரே சிரிப்பு).

அப்படி ஒரு நாடகப் பைத்தியம் ஏற்பட்டுப் போச்சு, சாமண்ணா நடிப்பாலே! சிங்காரப் பொட்டு அவர்களே இதை ஒத்துக் கொண்டிருக்கிறார் என்றால் சாமண்ணாவைப் பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. ஒரு விருந்து நடத்தணும் சாமண்ணா பேருக்குன்னு நான் முதல் முதல் சொன்னப்போ அவர்தான் முன்னாலே நின்னு அது ரொம்பப் பொருத்தம்னு சொன்னவர். இப்படி எல்லோராலும் ஒரே மனதாக எண்ணப்பட்டுப் புகழப்பட்ட சாமண்ணாவுக்கு இந்த

மலர் மாலையை அணிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.''

டாக்டர் ராமமூர்த்தி மாலையைச் சாமண்ணாவின் கழுத்தில் போட அங்கு கூடியிருந்தவர்கள் அத்தனை பேரும் பலத்த கரகோஷம் செய்தனர்.

டாக்டர் பேச்சை ஆமோதித்துப் பலரும் பேச, கடைசியில் சகுந்தலா கையை உயர்த்தினாள்.


''என் மகள் பேசணும்னு ஆசைப்படறா. அவளுக்கு நான் என்னைக்குமே எதுக்குமே தடை விதிச்சது கிடையாது'' என்று சொல்ல, சகுந்தலா எழுந்து நின்றாள். சாமண்ணாவைக் கடைவிழியால் பார்த்தாள். பிறகு பேச்சை ஆரம்பிக்க, அவள் எதிரே இருந்த பாப்பாவின் கண்கள் சற்றே சுழன்றன.

பக்கத்தில் கோமளம், ''பாப்பா! பாப்பா!'' என்று உசுப்பினாள்.

பாப்பா நினைவில்லாமல் நாற்காலியிலிருந்து கீழே சரிந்து விட்டாள்.

'ஆ' என்று பல குரல்கள் எழுந்தன.

# 15



பாப்பா மூர்ச்சையாகிச் சாய்கிறபோதே குமாரசாமி அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார். "டாக்டர்! டாக்டர்" என்று வக்கீல் மாமி கோமளம் குரல் கொடுக்க, டாக்டர் ராமமூர்த்தி ஒரு டம்ளரைத் தவற விட்டுக் கொண்டு விரைந்து வந்தார்.

"எல்லோரும் தள்ளி நில்லுங்க; காத்து வேணும்" என்று சூழ்ந்து நின்ற கும்பலை விலக்கிக் கொண்டு வந்த டாக்டர், பாப்பாவின் கைநாடியைப் பார்த்துவிட்டு, "ஒண்ணுமில்லை. லேசான அதிர்ச்சிதான். கவலைப்படாதீங்க. வீட்டுக்கு அழைச்சிட்டுப் போய் படுக்க வையுங்க. மருந்து அனுப்பறேன்; சரியாயிடும்" என்றார்.

எதிர் வரிசையில் அமர்ந்திருந்த சாமண்ணா எழுந்து நின்று சற்றுத் தள்ளி நின்றபடியே கவனித்தானே தவிர முகத்தில் கவலையோ, பரபரப்போ, எந்தச் சலனமுமோ தெரியவில்லை.

"கொஞ்சம் இங்க வரேளா?" என்று கோமளம் கணவரை அழைக்க, "என்னாச்சு? என்னாச்சு?" என்று பதறிக் கொண்டு வந்தார் வக்கீல்.

"மயக்கமா விழுந்துட்டா! நான் இவளை பீட்டன்ல நம்மாத்துக்கு அழைச்சுண்டு போறேன். நீங்க மீட்டிங் முடிஞ்சதும் சீக்கிரம் வந்து சேருங்க" என்றாள் கோமளம்.

"சரி, சரி! போய் பீட்டனைத் திருப்பி அனுப்பு. வந்துடறேன்."

இரட்டைக் குதிரை பீட்டன் 'டக் டக்'கென்று முகப்பில்

வந்து நிற்க நாலைந்து பேர் தாங்கலாகப் பாப்பாவை அழைத்துச் சென்று அதில் ஏற்றினார்கள்.

வெகுநேரம் தெளிவில்லாமல் சோர்வாகவே படுத்திருந்த பாப்பாவுக்கு டாக்டர் அனுப்பிய மருந்தைச் சாப்பிட்டதும் ஒருமுறை வியர்த்துக் கொட்டியது. அப்புறம்தான் பாப்பா கொஞ்சம் ஈனசுரத்தில் முழங்கத் தொடங்கினாள். கோமளத்திற்கு துக்கம் பொங்கி வந்தது. இளம் தளிர் போலப் படுத்திருந்த பாப்பாவைத் தொட்டுப் பார்த்து, தலையைத் தடவிக் கொடுத்து, "இப்ப எப்படி இருக்கு? ஹார்லிக்ஸ் சாப்பிடறயா? இல்லே ரசம் சாதமாய்க் கரைச்சுத் தரட்டுமா?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள். பாப்பாவுக்குக் கண்களில் நீர் பனித்தது. கோமளத்தை, "அம்மா, நீங்க போய் சாப்பிடுங்க, எனக்கு இப்ப ஒண்ணும் வேணும்" என்றாள்.

"எல்லாம் சரியாப் போயிடும். எல்லையம்மனுக்குப் பொங்கல் படைக்கிறதா வேண்டிக் கொண்டேன். டாக்டரும் வந்து பார்க்கறதாச் சொல்லியிருக்கார். கொஞ்ச நேரத்துல வந்துடுவார்" என்றாள்.

விருந்து முடிந்து ராத்திரி பத்து மணிக்குப் பிறகுதான் டாக்டர் வந்தார்.

பாப்பாவுக்கு ரத்த அழுத்தம் சரியாயிருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்துவிட்டு இரண்டு மாத்திரைகளைக் கொடுத்துச் சாப்பிடச் சொல்லி, "ஆகாரம் கஞ்சிதான்" என்றார்.

"நாளையிலிருந்து சாத்துக்குடியும், ஆப்பிளும் நிறையச் சாப்பிடலாம். பாப்பா முட்டை சாப்பிடுவே இல்லையோ" என்றார்.

மூன்றாம் நாள் பாப்பா சகஜமாக எழுந்து நடமாடத் தொடங்கினாள்.

"மாமி, இவ்வளவு உபசாரம் போதும். யார் இப்படிப் பண்ணுவாங்க? சொந்தத் தாயார் கூடச் செய்வாளாங்கறது சந்தேகம்தான்! எத்தனையோ ஜன்மத்துக்கு உங்களுக்கு நான் கடமைப்பட்டிருக்கேன். நான் பூவேலிக்குப் போயிட்டு ஒரு வாரம் கழிச்சு மறுபடியும் வரேன். நீங்கதான் எல்லாத்தையும் கவனிச்சுக்கணும்" என்று கொஞ்சம் கவலையோடு சொன்னபோது பாப்பாவின் கண்களில் ஜலம் வந்துவிட்டது. அவள் கவலைப்படுவது எதற்காக என்று கோமளம் புரிந்து கொண்டாள்.

"வாசலில் குதிரை வண்டியோட உங்க அப்பா காத்துண்டிருக்கார். எல்லாம் எனக்குத் தெரியும். நான் பார்த்துக்கறேன். நீ புறப்படு, ராகு காலத்துக்கு முன்னே" என்றாள் மாமி.

பாப்பாவைத் தாங்கலாகப் பிடித்துக் கொண்டு போய் வண்டியில் ஏற்றி வழி அனுப்பி வைத்தாள்.

தெரு முழுக்க எட்டிப் பார்த்தது.

"இனிமே பட்டினி, பரிதவிப்பு எதுவும் வச்சுக்காதே. வேளா வேளைக்கு ஒழுங்காச் சாப்பிடு" என்று செல்லமாகப் போலிக் கோபத்துடன் சொன்னாள் கோமளம்.

"வெறும் பட்டினிக்கா மயக்கம் வந்தது மாமி? உங்களுக்குப் புரியாதா?" என்று ஓர் அர்த்தப் பார்வையை வீசினாள் பாப்பா.

குதிரை ஒரு களைப்புக் கனைத்துவிட்டு ஒரு காலன் மூத்திரம் கொட்டித் தீர்த்ததும், சிலிர்த்துக் கொண்டு கிளம்பியது. தெருக் கோடி வரை ஜல் ஜல் ஜல்...

இரண்டு நாட்களாகியும் சாமண்ணா கோமளம் மாமியை வந்து பார்க்கவில்லை. மாமிக்கு இது உறுத்தலாகவே இருந்தது. அப்படி என்ன பவிஷு வந்துவிட்டது, இந்த சாமண்ணாவுக்கு? பாப்பாவிடம் இவனுக்காக எவ்வளவு தூரம் வக்காலத்து வாங்கிப் பேசியிருப்பேன்? ஒரு மரியாதைக்காவது என்னை வந்து பார்த்தானா?" என்று எண்ணிக் கொண்டாள். பிறகு தானாகவே ஒருநாள் சாமண்ணாவைக் கூப்பிட்டனுப்பினாள்.

சாமண்ணா புது நாடகம் தயாரிக்கும் மும்முரத்தில் உலகத்தையே மறந்திருந்தான்.

"என்ன மாமி! கூப்பிட்டேளா?" என்று அவன் எதுவுமே நடக்காத மாதிரி சாதாரணமாய்க் கேட்டுக் கொண்டு வந்த போது அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"சாமண்ணா! இதுதான் மனுஷாளோட நன்றிக் கடமையா? நாம்ப சாப்பிடறது உப்பு யாருடையது என்று நினைச்சுப் பார்க்கணும்டா!" என்று சற்றுக் காட்டமாகவே பேசினாள் கோமளம்.

மாமியிடமிருந்து இப்படி ஓர் அதிர்வெடியை அவன் எதிர்பார்க்கவில்லை. கண் கலங்கிப் பிரமித்துப் போய் நின்றான்.

"மாமி! அடியேன் செஞ்ச அபசாரம் என்னன்னு சொல்லுங்கோ! சாஷ்டாங்கமா நமஸ்காரம் பண்றேன்" என்று விலவிலக்கக் கூறினான் அவன்.

"பாவம், அந்தப் பாப்பாவை ஒரு நடை எட்டிப் பார்த்தயா நீ? இல்லை, ஒரு வார்த்தை யாரிட்டியாவது கேட்டு விட்டியா? ஊரே நம்மாத்துக்கு வந்து அவளைப் பார்த்துட்டுப் போச்சு. சின்னவா, பெரியவான்னு ஒருத்தர் விடாம வந்து போயிருக்கா. பாப்பாவுக்கும் அவாளுக்கும் பந்தமா, பாசமா? ஏதோ ஊரிலே ஒரு பெரிய மனுஷி சொத்தோடு சுகத்தோடு இருக்கா. அம்மா இல்லாதவளா அனாதையா இருக்காங்கற ஒரு இது தானே? நீ வந்து பார்த்தியா? பேசினியா? உடம்பு எப்படி இருக்குன்னு கேட்டியா? கேட்கக் கடமைப்பட்டவனா, இல்லையா? நீ சொல்லு பார்க்கலாம்."

மாமி கோடை மழை போலப் பொழிந்து நிற்க, சாமண்ணு வின் சர்வ நாடியும் ஒடுங்கிவிட்டது.

''மாமி மன்னிச்சுடுங்கோ! நீங்க இப்படிப் பேசுவேள்னு நான் எதிர்பார்க்கலே. என் போதாத காலம். நீங்க மனம் நொந்து பேசும்படி நேர்ந்துட்டது மாமி! உண்மையைச் சொல் றேன்.

என் மனசெல்லாம் இங்கேயேதான் இருந்தது. ஏற்கெனவே நான் சொல்லியிருக்கேன். எங்கம்மா கடைசியா, எனக்குச் சொன்ன வார்த்தை. அது ஒரு லட்சுமணர் கோடு மாதிரி. அதுதான் என்னை இங்கே வரவிடாமல் தடுக்கிறது. பாப்பாவை வந்து பார்க்கலாம், ரெண்டு வார்த்தை இதமாப் பேசலாம்னு பல தடவை நினைச்சேன். ஆனாலும் என் மேலேயே எனக்கு நம்பிக்கை இல்லே மாமி! எங்கே ஒரு வார்த்தை பேசினாக் கூட மனசிலே பாசம் கிளை விட்டிருமோங்கற பயம் தான். அவளோட பார்வை பட்டாக் கூட என் மனசிலே அன்பு கனிஞ்சுடுமோன்னு ஒரு அச்சம். கனிஞ்சா ஒண்ணும் தப்பில்லேதான். ஒத்துக்கறேன். ஆனா எனக்குத் தெரியாம மனசிலே அது வளர்ந்துண்டே போயிட்டால் அப்புறம் என் சத்தியம், உறுதி, அம்மாவுக்குக் கொடுத்த வாக்கு எல்லாம் என்ன ஆறது?''

''இத பார்! சும்மா எதையாவது சொல்லித் தப்பிக்கப் பார்க்காதே சாமண்ணா! நீ என்ன சொன்னாலும் அதை நான் ஒப்புக்க முடியாது. நீ அவளைப் பார்த்திருக்கணும்! உன்னைத் தினமுமா வந்து பார்க்கச் சொன்னா? ஒரே ஒரு வாட்டி, ஒரு ரெண்டு நிமிஷம் மாமாவைப் பார்க்க வர்ற ஜாடையிலே இங்கே அவளை எட்டிப் பார்த்திருக்கலாமே!''

கோமளம் தன் கட்சியை விடாமல் வற்புறுத்தினாள்.

''ஒத்துக்கறேன் மாமி! ஒத்துக்கறேன். தப்புதான், அதை நான் செஞ்சிருக்கணும்தான். அதுக்குள்ளே 'புதிய நாடகம் போடணும்'னு டாக்டர் சொல்லிட்டார். அந்த லட்சியத்துலே, ஆசையிலே எல்லாத்தையும் மறந்துட்டேன்.''

''புது நாடகமா? டாக்டரா அப்படிச் சொன்னார்!''

''ஆமாம், நாடகக் கம்பெனி பங்குதாரர் ஆச்சே! புதுசு போடணும்னு சொல்லிட்டார். அதுக்காக எங்கெங்கேயோ அலைஞ்சு புதுப்புது கதைகளா தேடிப் பிடிச்சுப் படிச்சுப் பார்க் கிறோம். ஒண்ணும் நாடகத்துக்குச் சரிப்பட்டு வரலே. ராம மூர்த்தியோட பெண் சகுந்தலாவே பல புஸ்தகங்களைப் பார்க் கிறா! இதுசம்பந்தமா அவர் வீட்டுக்கும், என் வீட்டுக்குமா அலைஞ்சுண்டு இருந்துட்டேன்...''

கோமளத்துக்குப் பொங்கி வந்தது.

''இந்தா சாமண்ணா! பங்குதாரர், பங்கில்லாதார்னு எதை யேனும் சொல்லிண்டு நிக்காதே! அப்போ எங்க ஆத்துக்காரர் பங்குதாரர் இல்லையா?''

''ஐயோ! இல்லேன்னு சொல்வேளு? அவர்தான் செக்ரடரி ஆச்சே!''

''சாமு! இப்போ ஒரு சமாசாரத்தை உடைச்சுச் சொல்றேன் கேட்டுக்க! இந்த நாடகத்துக்கு நிதி திரட்டிஞர்களே, இதுலே டாக்டரும் பங்குதார் இல்லே, வக்கீல் மாமாவும் பங்குதார் இல்லே. இவா ரெண்டு பேரும் நிஜமாகவே பங்கு போட்ட வான்னு நினைச்சுண்டிருக்கியா?''

சாமண்ணுவுக்குச் சுரீர் என்றது. ''போடலியா மாமி? அப்படின்ஞ பின்னே யார் கொடுத்தா?''

''எங்க வீட்டுக்காரருக்காவது கொஞ்சம் மனசு உண்டு. டாக்டருக்கு அதுவும் கிடையாது. எச்சில் கையாலே காக்கா ஓட்ட மாட்டார். அப்படியே இவர்களெல்லாம் போட்டாலும் நூறு இருநூறுக்கு மேலே போட்டுட மாட்டா. புது டிராமா தொடங்கறதுன்ஞ சும்மாவா? ஆயிரக்கணக்காப் பணம் வேணுமே! அவ்வளவு தொகையை ஒரேயடியா யார் தூக்கிக் கொடுப்பான்னு நினைச்சுப் பார்த்தாயா?''

''இவா யாரும் கொடுக்கலியா?'' என்று தணிந்த குரலில் வியந்தான்.

''ஒத்தை தம்பிடி கொடுக்கல்லே! நான் சொல்றது வெளியிலே தெரிய வேணும். அத்தனை பணத்தையும் கொடுத்தது யார் தெரியுமோ? பாப்பாதான். ஆமாம்; நீ அலட்சியப்படுத்தறயே அதே பாப்பாதான்! ஏன் கொடுத்தா தெரியுமோ? உன் மேலே அவள் வச்சிருக்கிற அபிமானத்திஞலே கொடுத்தா. நீ நல்ல நடிகஞச்சே, முன்னுக்கு வரணுமேங்கற அக்கறையில கொடுத்தா. உன்னை அவ உயிருக்குயிரா நேசிக்கிரு. அதை நினைவிலே வச்சுக்கோ.''

சாமண்ஞ பிரமிப்பில் தோய்ந்தான். வெறும் பிரமிப்பு மட்டுமல்ல. ஒரு வேதனையை உணர்வதாகவும் இருந்தது. கை, கால் இயங்கவில்லை. கண் இமைக்கவில்லை. கோமளம் ஊஞ்சலில் ஆசுவாசமாக அமர்ந்தாள். சற்று நேரம் அங்கே நிசப்தம் நிலவியது.

''சரி மாமி! இப்ப எல்லாம் புரியறது. நீங்க ஏன் என்னை அன்போடு கடிஞ்சீங்கன்னு இப்ப தெரியறது. உண்மை உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. ஆஞ நீங்க அதை என்கிட்டே சொல்ல முடியாமத் தவிச்சிருக்கீங்க! இப்போ உங்களுக்கே பொறுக்க முடியாமப் போகவே உடைச்சு வெளியிலே விட்டுட்டீங்க. எனக்காக ஒரு ஜீவன் அன்பு காட்டறதும் பாடுபடறதும் இப்போ தெரிஞ்சுப் போச்சு! உங்களுக்கு கோடிக் கும்பிடு மாமி! இப்போதே போய் அவளைப் பார்க்கிறேன்.''

''இரு இரு. அவசரப்படாதே! நான் சொன்ன விஷயம் யாருக்கும் தெரியப்படாது. பாப்பாவிடம் போய், 'நீ கொடுத்தாயாமே'ன்னு கேட்கக் கூடாது. நீ அவசரப்பட்டுப் போக


வேண்டாம்! ரெண்டு நாள் கழித்துப் போய்ப் பார். உடம்பைப் பற்றி விசாரி. அன்பா, இதமா நாலு வார்த்தை பேசிட்டு வா. அதனாலே உறவு உடனே ஒட்டிண்டுடும்னு பயப்படாதே!'' என்றாள் கோமளம்.

சாமண்ணா வீடு திரும்பினான்.

இரவு முழுவதும் குழப்பமாக இருந்தது. கண்ணை மூடிக் கொண்டு யோசித்தான். சகுந்தலா திடீரென்று தன் பார்வைக்குள் தோன்றியிராவிட்டால்...? 'கடவுள்தான் அப்படி ஒரு பெண்ணை என் வாழ்க்கையில் குறுக்கிட வைத்திருக்கிறார். அறிவும், அழகும், குலமும், குணமும் உள்ள பெண் சகுந்தலா!

என் லட்சியமே சகுந்தலாவைப் போன்ற ஒரு பெண்ணைக் கைப்பற்றவேண்டும்என்பதுதானே!அந்தஅதிர்ஷ்டம்எனக்குக் கிடைக்குமா? இப்போது சந்தர்ப்பம் கூடி வருவது மாதிரி இருக்கிறது. சகுந்தலா என்னை நேசிக்கிறாளா? என்னைக் காதலிக்கிறாளா? அவள் சிரிப்புக்கும் நெருக்கத்துக்கும் என்ன அர்த்தம்?' பாப்பாவையும் சகுந்தலாவையும் தன் மனத்தராசில் வைத்து எடை போட்டபோது அந்தத் தராசு இப்படியும் அப்படியுமாக ஆடிக் கொண்டிருந்தது. கடைசியாகச் சகுந்தலா நின்ற தட்டுதான் கனத்துக் கீழே இறங்கியது. யோசித்தான். புன்முறுவலாய் அதை அங்கீகரித்தான்.

# 16



"தசாவதாரம்" என்று காண்ட்ராக்டர் கண்ணப்பதாஸ் கூறினார்.

"ஏகப்பட்ட பணம் செலவாகுமே!" என்றார் சிங்காரப் பொட்டு.

"செலவழிச்சு நடத்தினோம்னா கூட்டம் மொய்ச்சுத் தள்ளும்" என்றார் வக்கீல்.

"டாக்டர் என்ன நினைக்கிறாரோ?" என்று சிங்காரப் பொட்டு மெதுவாக நிரவல் செய்தார்.


டாக்டர் கண்ணைக் கொஞ்சம் மூடித் திறந்தார். அதேநேரம் சகுந்தலா என்ன நினைக்கிறாள் என்பதை அவள் முகக் குறிப்பிலிருந்து அறியப் பார்த்தான் சாமண்ணா.

அவள் பார்வை அடிக்கடி சாமண்ணா பக்கம் திரும்பி அங்கேயே லயித்து நின்றது. அது காதலா, கனிவா, அக்கறையா என்பதைச் சாமண்ணாவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

முதல்முதல் சாமண்ணா அவளைப் பார்த்ததிலிருந்தே உள்கதவு திறந்தது போல இருந்தது அவனுக்கு. மென்மையாக ஒரு வாசனைப் புகை போன்ற உணர்வு அவன் உடலெங்கும் நீந்திச் சென்றது. மனசில் ஒரு சின்ன அழுகை கூட வந்தது.

'இந்த உணர்ச்சிக்கெல்லாம் என்ன காரணம்? அதை நினைக்கலாமா?' அந்த ஒரு நினைப்பே பரவசத்தைத் தந்தது.

'அவன் தன்னை ஒரு நடிகன் என்ற முறையில் பார்க்கிறாளா? அல்லது தானே கிழித்துக் கொண்ட எல்லைக் கோட்டுக்கு அப்பாலிருந்து பழகுகிறாளா? அவளை அடையக் கூடிய அந்தஸ்து தனக்கு இருக்கிறதா? ஒருவேளை எட்டாத பழத்துக்கு ஏக்கப்



பெருமூச்சு விடுகிறோமா?

டாக்டர் பேச ஆரம்பித்தார். "தசாவதாரம்னு சொன்ன நிறைய டர்னிங் சீன் போடுவீங்க! மாயா ஜாலங்கள், தந்திரக் காட்சியெல்லாம் காட்டுவீங்க! பத்து அவதாரங்களும் பத்து தினுசான காட்சிகளாச்சே! துண்டு துண்டா வருமே! நடிகர் களுக்குத் தங்கள் நடிப்புத் திறமையைக் காட்டச் சந்தர்ப்பமே இருக்காதே!''

"நானும் அதைத்தான் சொல்றேன்'' என்றார் வக்கீல் வரதாச் சாரி.

"அப்படின்னா மச்சகந்தி போடுவோமா? ரொம்பக் கவர்ச்சியா இருக்கும்! சாரதாம்பாளுக்கு மீன்காரி வேடம் போட்டால் பிரமாதப்படுத்தி விடுவாள்!'' என்றார் பாவலர். அவர்தான் நாடகங்களுக்குப் பாட்டு இட்டுக் கட்டுபவர்.

"நன்னாப் பேசி துடுக்காகவும் நடிப்பா!'' என்றார் வக்கீல்.

"மச்சகந்தின்னா ஆண் நடிகருக்குச் சந்தர்ப்பம் இராது. தவிர, காதல், வீரம், சோகம் எல்லா ரசங்களும் ஒரு கதையில வந்தாத்தான் நாடகம் சோபிக்கும்!''

"ஏன்? மச்சகந்தியில் நிறைய காரம் காட்டலாமே?''

"சிருங்காரத்துக்கு வழி ஏது? ஒருதலைக் காதல்தானே! சந்தனு மகாராஜா மச்சகந்தி மேலே பிரியப் படறார். அவளைப் போய்ப் பெண் கேட்கிறார்., தீர்ந்தது கதை. இதில சிருங்காரத் துக்கு இடம் எங்கே?''

"மாயா பஜார்...?'' என்றார் இன்னொருவர்.

"ப்ஸூ வத்ஸலா கல்யாணமா? ரசப்படாது'' என்று முகத்தை அழுத்தமாக வைத்துக் கொண்டார் டாக்டர்., "சீதா கல்யாணம்?'' என்று சிங்காரப் பொட்டு சொல்ல, டாக்டர் முகத்திலிருந்த இறுக்கம் அப்போதும் தளரவில்லை.

"அப்பா, இதுவரை நான் கிட்டத்தட்ட பன்னிரண்டு நாடகம் படிச்சுட்டேன்'' என்று சகுந்தலா இடைமறித்த போது எல்லார் முகமும் சகுந்தலா பக்கம் திரும்பியது.

"அதில் நல்லதா ஒண்ணு சொல்லேன் பார்க்கலாம்'' என்றார் டாக்டர்.

"நீங்க சொல்ற எல்லா அம்சமும் பொருந்தியிருக்கிற மாதிரி உள்ள ஒரே நாடகம் சகுந்தலாதான்!'' என்றாள்.

"துஷ்யந்தன் — சகுந்தலாவா?'' என்று யாரோ கேட்க, சாமண்ணா சகுந்தலாவைப் பார்க்க, சகுந்தலா சாமண்ணாவைப் பார்த்தாள்.

சிறிது நேரம் நிசப்தம்.

"உங்களுக்குப் பிடிக்கிறதா?'' என்று பாவலர் சகுந்தலா வைக் கேட்டார்.

"எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. ஆனா சாமண்ணாவுக்குப் பிடிச்சிருக்கணுமே, அதுதானே முக்கியம்?'' என்றாள் சகுந் தலா.

அவள் வார்த்தையில் உள் அர்த்தம் இருப்பது போல் தோன்றியது சாமண்ணுவுக்கு.

"எனக்கு ரொம்ப நாளா சகுந்தலா மீது ஒரு கண்தான். அப்படி ஒரு நாடகத்துலே நடிக்கச் சந்தர்ப்பம் கிடைக்குமான்னு காத்திண்டிருக்கேன்" என்று அவனும் பொடி வைத்துப் பேசினான். ரொம்ப சாமர்த்தியமாகப் பேசிவிட்ட மகிழ்ச்சி அவன் முகத்தில் தெரிந்தது.

"அதிலே ஒரு சின்னக் குறை" என்று பாவலர் இழுக்க,

"அதென்ன?" என்று அவர் சொல்லப் போவதை ஆவலுடன் எதிர்பார்த்தனர் மற்றவர்கள்.

"ரெண்டு பேர் பிரதானமா நடிக்கப் பாத்திரம் இல்லாமஇருக்கு."

"யாரு அந்த ரெண்டு பேர்?"

"சிங்காரப் பொட்டுவும், சாமண்ணுவும்தான்!"

"அதுக்குத்தான் நான் சொல்ல வந்தேன்" என்று சிங்காரப் பொட்டு எழுந்து நின்றான்.

"சொல்லுங்க" என்றார் டாக்டர்.

"பெரியவங்க என்னை மன்னிக்கணும். 'கர்ண — அர்ச்சுன' நாடகம் போட்டோம். ஓகோன்னு ஓடியது. பிரமாதமா வசூல் ஆச்சு. இந்த நாடகம் ஓடினத்துக்குக் காரணம் எல்லாரோட ஒத்துழைப்புன்னு சொன்னா மட்டும் போதாது. சாமண்ணுவின் பங்குதான் பெரிய பங்கு. அவரது நடிப்புத்தான் தூக்கி நின்னுது. அவர் பாட்டுத்தான் இன்னிக்குப் பொது ஜனமே பாடறு. அவர் வசனத்தைத்தான் சின்னச் சின்ன வாண்டுகளெல்லாம் கூடப் பேசுது! அதனாலே இந்த சகுந்தலை நாடகத்தையே நாம் எடுத்து நடத்துவோம். எனக்குச் சந்தர்ப்பம் கொடுக்கறது முக்கியமில்லை. துஷ்யந்தன் பாத்திரத்துக்குச் சாமண்ணுதான் பொருத்தமானவன். இதில் சாமண்ணுவை ஹீரோவாக்குவோம். ஒரே ஒரு ஹீரோ போதும். அது சாமண்ணுவாகவே இருக்கட்டும். நானே இப்படிச் சொல்கிறேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்."

சிங்காரப் பொட்டு உட்காரும் போது எல்லோரும் கைதட்டினார்கள்.

"சிங்காரப் பொட்டே ஹீரோவா இருக்கட்டும்" என்று சாமண்ணு வற்புறுத்திய போதிலும் யாரும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. சகுந்தலா தன் அப்பாவின் காதோடு ஏதோ ரகசியம் பேசினாள். உடனே டாக்டர் எழுந்து நின்று, "இந்த நாடகம் ஓடினா, சாமண்ணுவாலேதான் ஓடும்" என்று தீர்க்கமாய் அடித்துச் சொன்ன போது எல்லோரும் கைதட்டி ஆமோதித்தார்கள்.

ஒத்திகை இரவும் பகலுமாக நடந்தது. பாவலர் தலைமையில் சங்கீதப் பயிற்சிகள் மும்முரமாய் நடந்து கொண்டிருந்

தன. சிங்காரப் பொட்டு இந்த முறை டைரக்டர் வேலையைத் தானே எடுத்துக் கொண்டார்.

தமிழ் வருடப் பிறப்பன்றே அரங்கேற்றம் என்று முடிவெடுத்ததும் எல்லோர் உள்ளத்திலும் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. சாமண்ணு, உள்ளத்தில் கரை புரண்ட உற்சாகத்தைத் தன் நடிப்புத் திறமையால் அடக்கிக் கொண்டான். துஷ்யந்தன் கதையைக் கேட்டதும் தன் கையிலிருந்த மோதிரத்தை ஒரு முறை அர்த்தத்தோடு பார்த்துக் கொண்டான்.

ஓவியர் கேசவன் பிள்ளை தூரிகை எடுத்து, காட்சு சீன், ஆசிரம சீன், துஷ்யந்தன் தர்பார் எல்லாவற்றையும் கண் கவர் வண்ணமாகப் 'படுதா'வில் உருவாக்கிக் கொண்டிருந்தார்.

நாடக ஒத்திகைக்குச் சகுந்தலா நாள் தவருமல் வந்து கொண்டிருந்தாள்.,

சாமண்ணுவின் அருகில் அமர்ந்து வசனங்களை ஞாபகப்படுத்தும் சாக்கில் அவனைத் தொட்டுப் பேசும் போதும் சாமண்ணு அந்த வசனங்களை எடுப்பாகப் பேசும்போது சபாஷ் போடும் போதும் ஒரு கிளுகிளுப்பை உண்டாக்கிஞள்.

''மிஸ்டர் ஸாமு...'' என்று 'ச'வுக்குப் பதில் அவள் 'ஸ' போடும் போது சாமண்ணுவுக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது. தமிழ் அவள் இனிய குரலில் கொஞ்சி வருவது போல் தோன்றியது.

''ஸாமு! எனக்கு இந்த வசனம் ரொம்பப் பிடிச்சிருக்கு!'' என்று ஒருநாள் அவள் சொல்ல, ''எது?'' என்று கேட்டான் சாமண்ணு.

நோட் புக்கைத் திருப்பிக் காண்பித்தாள் அவள்.

''ரவிகுல திலகரே! இந்த அடியாளின் மனக்கிடக்கையை இன்னும் நீர் அறியீரோ? அன்ெருரு நாள் என் காலில் தைத்த முள்ளை எடுத்து என் பாதத்தைத் தடவி விட்டீரே! அது தங்கள் நினைவில் உள்ளதா? இன்று என் மனமெல்லாம் முள் தைத்தது போல் நான் வேதனைப்படுகின்றேன். காதல் என்கிற அந்த முள் நெருஞ்சி முள்ளைக் காட்டிலும் கொடியது ஆயிற்றே! இந்த முள் தைக்கப்பட்டவர்களுக்கு அன்னம் பிடிக்காது. பானம் பிடிக்காது. துயில் பிடிக்காது. விரக தாபத்தில் உடம்பு அனலாய்க் கொதிக்கும்! சுந்தரா, சுகுமாரா! என் தாபம் அறிந்து தாங்கள் உடனே வர மாட்டீரா?''

சகுந்தலா இந்த வசனத்தை நின்று நிதானித்து வாசிக்கும் போது அந்த வசீகரமான குரலில் ஓர் ஏக்கம் தெரிந்தது.

''ஏது! நீங்களே சகுந்தலாவா ஆயிட்டீங்க போல இருக்கே!'' என்றான் சாமண்ணு.

''இது வெறும் நடிப்புன்னு நீங்க நினைக்கிறீங்களா, ஸாமு...?''

கேள்வி அவனைத் துளைத்து நின்றது. அவள் பார்வை ஒரு தாபமாக அவன் கண்ணில் வலித்தது. தனக்குள் ஒரு புயல் வீசுவதை உணர்ந்தான் அவன்.

"சாமண்ணா! இவள்தான் உனக்கு ஏற்றவள். மனசை உன்கிட்டே திறக்கிறாப் போல இருக்குதே!''

''இல்லே பயமாயிருக்கு! சகுந்தலா நாகரிகமானவள்! அவள் விகல்பம் இல்லாமல் பேசுவதை நான் தப்பா நினைச்சுக்கப் படாது! அவள் அந்தஸ்து எங்கே? கேவலம் ஒரு நடிகனுன என் அந்தஸ்து எங்கே? நான் இதற்கு ஆசைப்படக் கூடாது. அவள் ஓர் ஆப்பிள். இந்த அன்னக்காவடிக்கு ஆப்பிள் பசி ஏற்படக் கூடாதா?

'ஆசைப்படு சாமண்ணா, ஆசைப்படு! பெரிசை நினைச்சுத் தான் ஆசைப்படணும். ஆமாம்! விடாதே, முயற்சி பண்ணு!'

சாமண்ணாவின் கண்கள் நிறைய வார்த்தைகளோடு தவித்து நின்றன. இருந்தாலும் உள்ளுக்குள் ஒரு பயம் இழுத்து நிறுத்தியது. 'சகுந்தலா படித்தவள். சமூகத்தின் மேல் தட்டில் வாழ்கிறவள். உன்னையாவது... நினைக்கிறதாவது...' என்றது உள்குரல்.

''உணர்ச்சிவசமா அதை உங்களுக்குப் படிச்சுக் காட்டத் தெரியுது. நீங்களே எங்களுக்குப் பயிற்சி கொடுத்தால் கூட நன்றாயிருக்கும்'' என்றான் சாமண்ணா.

அவள் கலகலவென்று சிரித்துக் கொண்டே, ''என்னையே சகுந்தலாவா நடிக்கச் சொன்னாலும் சொல்லுவீங்க போலிருக்கே!'' என்றாள். சாமண்ணாவின் மனம், 'டேய் விட்டுட்டியேடா' என்று இடித்துக் காட்டியது.

டிரஸ் ஒத்திகையன்று ராத்திரி எட்டு மணிக்கு ஒரு பள்ளிக்கூட மேடையில் நடித்துப் பார்த்தார்கள்.

பன்னிரண்டு மணி வரை ஒத்திகை நடந்தது. ஒரு சின்னப் பிழை வரவில்லை. ஒருத்தர் கூட வசனம் பிசகவில்லை. சாமண்ணா அசல் துஷ்யந்தனாகவே ஆகிவிட்டான்.

''இது பிரமாதமான நாடகமா அமையப் போகிறது'' என்று சொல்லிப் பாவலர் பூசணிக்காய் மீது கற்பூரம் வைத்துக் கொளுத்தி திருஷ்டி சுற்றிப் போட்டார்.

சாமண்ணாவுக்கு ஆகாயத்தில் பறப்பது போல இருந்தது. ஒரு ஹீரோ ஆக வேண்டும் என்ற நீண்ட நாள் கனவு நினைவாகும் நாள் நெருங்கி விட்டதை நினைத்துப் பார்க்கும் போது உற்சாகம் சிறகடித்துப் பறந்தது.

தாயாரை நினைத்து மானசீகமாக வணங்கினான்.

அப்போது மூலையில் சற்று ஓரமாக உட்கார்ந்து ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்த இரண்டு வடநாட்டு சேட்டுகள் எழுந்து வந்து சாமண்ணாவைக் கைகுலுக்கிப் பாராட்டினார்கள்.

"இவர்தான் கோவர்த்தன் சேட். பம்பாயிலிருந்து பயாஸ்கோப் எடுக்கணும்னு இங்க வந்திருக்காங்க. அப்பாவுக்கு ரொம்ப வேண்டியவங்க" என்று அவர்களை அறிமுகப்படுத்தினாள் சகுந்தலா.

கோவர்த்தன் சேட் சாமண்ணாவை அப்படியே தழுவிக் கொண்டார். "இந்தாங்க, பிடியுங்க! அட்வான்ஸ்" என்றார்.

"எதுக்கு இந்த அட்வான்ஸ்? என்ன சமாசாரம்?" என்று ஒன்றும் புரியாமல் விழித்தான் சாமண்ணா.

"பம்பாயில் இந்த சகுந்தலா நாடகத்தை அப்படியே மூவி எடுக்கப் போறோம். நீங்கதான் ஹீரோவா நடிக்கறீங்க. அடுத்த மாசம் கல்கத்தாவில் நடத்தலாம்னு திட்டம்" என்று சொல்லி ஒரு கவரையும் ஸ்டாம்ப் ஒட்டிய பேப்பரையும் சாமண்ணாவிடம் நீட்டினார் கோவர்த்தன் சேட். அந்தக் கவரில் ரூபாய் ஐயாயிரம் இருந்தது!

# 17

பெருந்தொகை ஒன்று கைக்குக் கிடைத்ததும் சாமண்ணாவின் மனம் கிறுகிறுத்தது. சட்டென தாயாரின் முகம் மின்னி மறைந்தது. தாயின் கையில் அதைக் கொடுப்பது போலவும், அவள் காலில் விழுந்து வணங்குவது போலவும், அவள் ஆனந்தக் கண்ணீரோடு நிற்பது போலவும் தோன்றியது.

“சேட்ஜி! நாடகம் அரங்கேத்தணும். உடனே நான் கல்கத்தா வருவதென்பது ரொம்பக் கஷ்டம்...”

“காமிராக்காரர், டைரக்டர் எல்லாரும் காத்திருக்காங்க. அடுத்த வாரமே ஷூட்டிங் ஆரம்பிச்சுடணும். அவங்களை சும்மா வச்சிருக்க முடியாது. உங்களுக்கு வர முடியலேன்னா சொல்லிடுங்க. வேறே ஒருத்தரைப் போட்டு எடுத்துடறோம்..”

“இல்லே சேட்ஜி! நான் வந்துடறேன்!”

“அப்போ முதல் வகுப்பு டிக்கெட் எடுத்துரலாமா?”

“சரி” என்றான்.

“கல்கத்தாவுக்குத் தந்தி கொடுத்துரலாமா?”

இன்னொரு சரி.

“உங்களுக்குத் தனி ஜாகை எடுத்துக் கொடுத்துடறேன். சவாரிக்குக் காரும் கொடுத்துடறேன்.”

சேட் வியாபார தந்திரத்தில் கைதேர்ந்தவர். எதைச் சொன்னால் ஆட்கள் பறப்பார்கள் என்று அறிந்தவர்.

சாமண்ணா அதற்குள் பெரிய கோட்டை கட்டத் தொடங்கி விட்டான். முதல் வகுப்பு மெத்தையில் ஜம்மென்று சாய்ந்து பிரயாணம் செய்வது போலவும் எதிரே சில பணக்காரப்

பெண்கள் அவனை அடிககடி ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருப்பது போலவும் கனவு கண்டாள்.

கல்கத்தா வீதிகளில் அவன் கார் பறக்கிறது. கடைத் தெரு, சினிமா ஸ்டூடியோ என்று அலேகிருன். சினிமா சேட் அவனைத் தாங்கு தாங்கென்று தாங்குகிருர்.

"அப்போ உத்தரவு வாங்கிக்கலாமா?" என்று கைகூப்பிப் புறப்பட்டார் சேட்.

விரலில் வைரம் பளபளக்க, இப்படி ஒரு முதலாளி அவனுக்குக் கும்பிடு போடுவது வாழ்க்கையில் இதுதான் முதல் தடவை!

"மறு பேச்சே வேணும். நான் வந்து விடுகிறேன்" என்ருன் சாமண்ணு.

அன்று ராத்திரியெல்லாம் அவன் தூங்கவில்லை. பொழுது விடிந்ததுதான் தாமதம். அவசரமாக டாக்டர் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்று அவரிடம் மெதுவாக விஷயத்தைப் பிரஸ்தாபித்தான்.

"எனக்குத் தெரியுமே! சகுந்தலா ராத்திரியே சொன்னளே! அரங்கேற்றத்துக்கு இன்னும் பத்து நாள் கூட இல்லே, கலெக்டர் கிட்டே வேறே நாங்க 'டேட்' வாங்கியாச்சு. ஊரே அமர்க்களப்படுது. இந்த நேரத்திலே நீ எல்லாத்தையும் அப்படியே விட்டுட்டுக் கல்கத்தாவுக்குப் போகப் போறேங்கறயே, இது சரியா? நன்ன யோசிச்சயா?" என்று கேட்டார் டாக்டர்.

சாமண்ணு பதில் சொல்ல முடியாத நிலையில் தலைகுனிந்தபடி நின்ருன்.

"நீங்க சொல்றது புரியறது டாக்டர். இந்த நேரத்திலே நான் போறது தப்பாத்தான் தெரியும். ஆனல் வாழ்க்கையிலே ஒரு சந்தர்ப்பம் ஒரு வாட்டித்தான் வரும்; அதிருஷ்ட தேவதை ஒரு தடவைதான் கதவைத் தட்டுவான்னு சொல்லுவாங்க. எனக்கு அந்தச் சந்தர்ப்பம் வந்திருக்கு. இதுபோல யாருக்காவது கிடைக்குமான்னு யோசியுங்கோ!" என்ருன் சாமண்ணு.

"அரங்கேற்றதைமுடிச்சுட்டுப் போறது! அதுக்குள்ளே என்ன அவசரம்?" என்ருர் டாக்டர்.

"நானும் அப்படித்தான் நினைச்சேன். ஆனு சேட் அவசரப்படருரே! 'வர முடியலேன்ன சொல்லிடு. இன்னெருத்தரைப் போட்டுக்கறேங்கருரே! அப்புறம் அடுத்த படத்துலே சான்ஸ் தரேங்கருரே! இந்த சான்ஸை விட்டால் மறுபடியும் கிடைக்குங்கறது என்ன நிச்சயம்?" என்ருன்.

"ஒரு சான்ஸ் விட்டா இன்னெரு சான்ஸ் வந்துட்டுப் போறது!"

"வரலேன்ன என்ன செய்வேன்? வீட்டுக் கதவைத் தட்டின ஸ்ரீதேவியை அலட்சியப்படுத்தின மாதிரி ஆகாதா? பயாஸ்கோப் பயாஸ்கோப்னு ஊரெல்லாம் ஒரே பேச்சாயிருக்கு.

யாரைப் பார்த்தாலும் பயித்தியமா அலேயரு! சார்லி சாப்ளின், லாரல் ஹார்டி என்கிரு! பட்டணத்திலே இப்ப பயாஸ்கோப்புக்குத்தான் அதிக மவுசாம்! நாடகம் ரெண்டாம் பட்சம் தாணும். அதுக்குத்தான் காற்றுள்ள போதே தூற்றிக்கணும்னு பார்க்கிறேன்.''

''அப்போ உன்னை நம்பிப் பணம் போட்டவங்களை அம்போன்னு விட்டுடப் போறியா? இவ்வளவு பணத்தைக் கொட்டிப் புது நாடகம் தயார் பண்ணினவங்களுக்கு என்ன பதில் சொல்றது? அவங்க பணமெல்லாம் என்ன ஆறது?'' என்று சற்றுக் கடிந்த மாதிரி பேசினர்.

''அரங்கேற்றத்தைக் கொஞ்சம் தள்ளி வச்சுக்க முடியாதா? ஒரு மாசம் தள்ளிஞ என்ன? அதுக்குள்ளே நான் கல்கத்தா போய் நடிச்சுட்டு வந்துடறேன்'' என்றுன் சாமண்ணு.

''ஹ்ம்! உனக்கு உன் காரியம்தான் பெரிசாப் போச்சு. பணம் போட்டவங்களைப் படிக்கட்டாக்கி மேலே ஏறிக்கப் போறே! இதுதானே உன் நோக்கம்? எல்லாம் வீண்! பண விரயம்!'' என்று சலித்துக் கொண்டார்.

சாமண்ணுவுக்கு அது சுருக்கென்று தைத்தது.

''டாக்டர் ஸார்! என்னைக் கோவிச்சுக்காதீங்க! ஆசீர்வாதம் பண்ணுங்கோ. நான் முன்னுக்கு வர நேரம். கடவுள் புண்ணியத்துலே சேட்ஜி நிறையப் பணம் கொடுத்துட்டுப் போயிருக்கார். இது வரை ஆன ரிஹர்ஸல் செலவை வேணும்ஞ நான் கொடுத்துடறேன்.''

''எனக்குத் தெரியாது. வக்கீலைப் போய்ப் பாரு. அவர் என்ன சொல்ருரோ அதுப்படி நடந்துக்கோ!'' என்று ஒரு அலட்சியத்தோடு சொல்லி எழுந்தார்.

சாமண்ணுவுக்குக் கஷ்டமாக இருந்தது. 'டாக்டர் ஒரு முற்போக்குவாதி. அவரே தன்னுடைய பேச்சை அவ்வளவு சரியாக எடுத்துக் கொள்ளாத போது வக்கீல் என்ன சொல்லப் போகிருரோ?

'கீழேயிருந்து ஒருத்தன் முன்னேறி அவாளுக்குச் சமமா, அந்தஸ்தா வரதை யாருமே ஒத்துக்க மாட்டா! வீண் ஆசைன்னு சொல்லிடுவா! இவா மட்டும் நிறைய ஆசைப்படலாம். எப்படியும் வக்கீல்கிட்டே சொல்லிட்டுப் புறப்பட வேண்டியது தான்.'

இதற்குள் வீட்டுத் தரகர் பல முறை சாமண்ணுவைத் தேடி வந்து விட்டார். ''பழைய தாசில்தார் வீடு! ரொம்ப ராசி. அரண்மனை மாதிரி இருக்கு. குதிரை லாயம் வேறே இருக்கு. வெல்ல மண்டி செட்டியார் அதை வாங்கத் துடிக்கிருர். நான்தான் நிறுத்தி வச்சிருக்கேன்'' என்றெல்லாம் ஆசை வார்த்தைக் காட்டிக் கொண்டிருந்தார்.

''பணம் கையிலே வச்சிருந்தா செலவாகிப் போகும். எதையாவது செய்யுங்கோ'' என்று சுண்டி இழுத்தார்.

மூன்று நாள் யோசித்து யோசித்துக் கடைசியில் தாசில்தார் வீட்டை வாங்குவதென்று முடிவு செய்துவிட்டான் சாமண்ணு.

பெருமிதம் தாங்கவில்லை. இப்போதே நாலு பேர் அவனை ஒரு ஆச்சரியத்தோடு பார்ப்பதுபோல் தெரிந்தது. இதற்குமுன் அவனை அலட்சியமாகப் பார்த்தவர்கள் எல்லாம் இப்போது இவனைக் கண்டதும் மேல் துண்டை இறக்கிவிட்டு மரியாதை காட்டினர்கள்.

''அப்படியா! அப்படியா! அப்படியா!'' என்று நூறு 'அப்படியா' போட்டுவிட்டார் வக்கீல் வரதாச்சாரி.

வக்கீல் மாமி கோமளம் கோவிலுக்குப் போயிருந்தாள். அந்த நேரம் பார்த்து, அந்த ஏழு மணி இருட்டில், அவர் வீட்டிற்கு வந்திருந்தான் சாமண்ணு.

கோமளம் மாமி இருந்தால் சும்மா விட்டிருக்க மாட்டாள். அவளது பேச்சு ஒவ்வொன்றும் அவனை ராமபாணமாய்த் தாக்கியிருக்கும்.

''என்ன சாமண்ணு! எங்கே இந்த இருட்ல?'' என்று கேட்டார் வக்கீல்.

''உங்களைப் பார்க்கத்தான். மாமி இல்லையா?'' என்று தெரியாததுபோல் விசாரித்தான்.

''இப்ப வந்துருவா. கோயிலுக்குப் போயிருக்கா. என்ன விஷயம் சொல்லு'' என்றார்.

சாமண்ணு லேசாகக் கனைத்துக் கொண்டான். எப்படி ஆரம்பிப்பது என்று சற்று யோசித்துப் பிறகு பேசத் தொடங்கினான்.

''நீங்களே சொல்லுங்கோ! இந்தக் காலத்துலே யாருக்குத் தான் ஆசை வராது? யாருக்கு இந்த மாதிரி இவ்வளவு பெரிய தொகை கிடைக்கும்? என் நிலையிலே இப்படி ஒரு அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்க முடியுமா? ஒரு மாசமோ, ரெண்டு மாசமோ வேலை செய்யறதுக்கு யாராவது ஐயாயிரம் கொடுப்பாளா? எனக்கு அந்த அதிர்ஷ்டம் வந்திருக்கு மாமா'' என்றான்.

''அப்படியா?''

''ஆமாம். இதெல்லாம் ஏதோ கடவுள் கிருபை! எனக்கு இப்ப எங்கம்மா இருந்து பார்க்கக் கொடுத்து வைக்கலையேன்னு துக்கமா இருக்கு! நான் முதல் சம்பளம் வாங்கினப்போ ஏழு ரூபாய் கொண்டு கொடுத்தேன். அதை எழுநூறு தரம் கையாலே எண்ணிட்டா. இப்போ ஐயாயிரத்தைக் காண்பிச்சிருந்தா, அப்படியே பெருமையிலே பூரிச்சுப் போயிருப்பா! நான் மட்டும் நல்லபடியா முன்னுக்கு வந்தா அம்மா பேரிலே ஒரு ஸ்கூல்...''

''அப்படியா...?''

வக்கீல் குறுக்கிட்டு ஒரு 'அப்படியா?' போட்டது அவனுக்கு

என்னவோ போல இருந்தது.

பேச்சில் கோர்வை அறுந்து போயிற்று. தடுமாற்றத்தோடு தொடர்ந்தான்.

''நான் என்னமோ தீர்மானிச்சுட்டேன் மாமா! டாக்டர்கிட்டே நாடகப் பணத்தைத் திருப்பித் தந்துடறேன்னு கூடச் சொல்லிட்டேன். ஒரு மாசம் தள்ளி அரங்கேற்றத்தை வச்சிக்கிறதா இருந்தா வச்சுக்கலாம்னும் கறாராச் சொல்லிட்டேன். அடுத்த வாரம் நான் கல்கத்தா போயாகணும். நான் முன்னுக்கு வரதுக்கு நான் எடுத்திருக்கிற தீர்மானம் இது! நீங்கதான் ஆதியிலிருந்து என் மேலே பாசமும் அக்கறையும் வச்சு எனக்கு வழி காட்டிண்டு வறீங்க. அதனுலே உங்களை யும் மாமியையும் பார்த்து நமஸ்காரம் பண்ணி ஆசீர்வாதம் வாங்கிக்கணும்னு வந்திருக்கேன்'' என்று சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்தான்.

''நன்னு தீர்க்காயுசோடு இரு!''

சாமண்ணு தலைநிமிர்ந்தான். ''அப்போ நான் கல்கத்தா போகலாமில்லையா?''

''தாராளமாப் போ! அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வந்திருக்கு. நீ போறதுக்கு யாரு குறுக்கே நிற்பா? ஆனு சட்டம் உன்னை விடாதே!''

''சட்டமா?'' சாமண்ணு முகம் விகாரமாய் மாறியது.


''ஆமாம்; நீ ஜாமீன்லே இருக்கேங்கறதை மறந்துட்டியா? கொலைக் கேஸ்! நீ இந்த ஊரை விட்டு வெளியே ஒரு இஞ்ச் கூட நகர முடியாதே....! போலீஸ்ல விட மாட்டானே!''

''என்ன சொல்றீங்க வக்கீல் ஸார்! அப்படின்னு நான் கல்கத்தா போகவே முடியாதுங்கறேளா?''

''யாராவது ஜாமீன் கொடுத்தாப் போகலாம். ஜாமீன் யார் அம்பதாயிரம் ரொக்கத்தோட கொடுப்பா?''

சாமண்ணு அதிர்ச்சியோடு நின்றுன்.

# 18



சாமண்ணு அதிர்ச்சியிலிருந்து விடுபடச் சிறிது நேரம் ஆயிற்று. மெதுவாகத் தலைநிமிர்ந்து வரதாச்சாரி முகத்தை இரண்டு மூன்று முறை பார்த்தான். சுவர்ப் பல்லியாவது கண்ணை ஆட்டும் போல இருந்தது. வக்கீல் முகத்தில் இம்மிச் சலனம் கூடத் தெரியவில்லை.

"அப்போ ஜாமீன் இல்லாமல் விட மாட்டான்னு சொல் றீங்களா?" என்று கேட்டான்.

வக்கீல் சற்றுக் கோபமாய்த் திரும்பிப் பார்த்தார். "என்ன கேட்கிறே நீ? இதென்ன சாதாரண விஷயமா? விளையாட்டா நினைக்கிறியா? கொலைக் கேஸ்! முனகாலாவுக்குத் தெரிஞ்சுதுன்ணு முட்டியைப் பேர்த்துடுவார்!"

கண்களை உருட்டிக் கொண்டு மேலே பார்த்தார்.

வழக்கமில்லாத தோற்றம் அவனைக் கொஞ்சம் அச்சம் காட்டியது. "ஒரு ஜாமீன்தான் ஏற்கெனவே இருக்கேன்னு நினைச்சேன்" என்றான்.

"அது, நீ ஊரிலேயே இருக்கணும்என்பதற்குத்தான். இதைத் தாண்டி ஒரு அடி எடுத்து வைக்க முடியாது... தெரிஞ்சுதா?"

சாமண்ணு கண்ணைக் கொட்டிக் கொண்டு கெஞ்சுதலாய்ப் பார்த்தான்.

"நீங்கதான் இன்ஸ்பெக்டர் முனகாலா கிட்டே சொல்லி...

"முனகாலா என்ன எனக்கு மாமனு? மச்சானு? இல்லை கேட்கிறேன்."

வக்கீல் குரல் உயர்ந்து விட்டது.

"இல்லே, சட்டத்தைத்தான் அவராலே மீற முடியுமா?

டி.எஸ்.பி.யாருதெரியுமோல்லியோ?ரோனல்டுதுரை.தோண்டிப்புடுவான் தோண்டி...''

அவர் சொல்கிற வார்த்தை சாட்டை அடி போல விழுந்தது.

''ஒண்ணு செய்யறேன். கல்கத்தாவிலே ரெண்டே ரெண்டு வாரம் தங்கிட்டு வந்துடறேன். எல்லோரையும் திருப்திப்படுத்தின மாதிரி ஆயிடும்...''

''ரெண்டு வாரமா? ரெண்டு நிமிஷம் கூட நீ இந்த ஊரை விட்டுப் போக முடியாது.''

சாமண்ணாவுக்குக் கிட்டத்தட்ட அழுகை வந்துவிட்டது. ''அப்போ நான் என்னதான் செய்வேன்? இப்படி ஒரு இக்கட்டுலே மாட்டிக்கிட்டிருக்கேனே! நீங்க எனக்கு உதவி செய்யக்கூடாதா?''

''நான் என்ன செய்ய முடியும்?''

''யாரையாவது கொண்டு ஒரு ஜாமீன்...''

''ஜாமீனா? குறைஞ்சது ஐம்பதாயிரத்துக்குச் சொத்து மதிப்புக் கேட்பாங்க. பணம் வெச்சிருக்கயா? கேஸ் சாதாரணக் கேஸா? கொலைக்கேஸ்! அவ்வளவு பெரிய தொகைக்கு யார் உனக்கு ஜாமீன் கொடுப்பாங்க? இப்ப கொடுத்ததே பெரிசு....''

சாமண்ணாவுக்குக் கண் கலங்கியது.

துக்கத்துடன், ''அப்படிக் கூட இரக்கமில்லாதவங்க இருப்பாங்களா? இந்தக் கொலைக்கும் எனக்கும் சம்பந்தம் ஏதுமில்லைன்னு எல்லோருக்கும் தெரியுமே! ஒருத்தராவது எனக்கு உதவிக்கு வர மாட்டாங்களா?''

''என்னை ஏன் இந்தக் கேள்வி கேட்கிறே? நீயே போய் யார்கிட்டே கேட்கணுமோ, அவங்களைக் கேளு. நீ என்ன சாதாரணமானவனா? பெரிய நடிகனாச்சே? உனக்கு யார் இல்லேம்பா! உன் பேர் ஊர் முழுக்கத் தெரிஞ்சிருக்கே!''


''கேட்கத்தான் போறேன்!''

''கேளு! நீ நான்னு போட்டி போட்டுண்டு முன் வருவாளே!''

''வக்கீல் ஸார் கேலி பண்றாப்ல இருக்கு. ஏன் ஒரு மாதிரி பேசறீங்க? அப்படி என்ன செஞ்சுட்டேன் மாமா?''

''சே,சே! என்ன செஞ்சயா? என்ன செய்யலை? நீ முன்னுக்கு வரணும்னு நாலு பிரமுகர்கள் கிட்டே பணம் பறிச்சு நாடகம் அரங்கேற்றி... உன்னை நாலு பேர் முன்னாலே பெரிய மனுஷனா நிறுத்தி, புது நாடகத்துக்கு கலெக்டரையே அழைச்சு... ஊரையே திமிலோகமாக்கிட்டோம். நீ என்னடான்னா இப்ப எல்லாத்தையும் துண்டை உதர்ற மாதிரி உதறித் தள்ளிட்டு கல்கத்தா போறேங்கறே! உனக்கு உன் காரியம்தான் பெரிசாப் போச்சு!''

வக்கீலின் கோபத்துக்குக் காரணம் புரிந்துவிட்டது.



சாமண்ணு உடனே கேட்டான். "ஏன் மாமா, நான் முன்னுக்கு வரணும்னு நினைக்கிறது தப்பா? நான் ஒரு பெரிய சினிமா ஸ்டார் ஆகணும்னு ஆசைப்படறது குத்தமா?"

வக்கீலின் கோபம் முகத்தில் தெரிந்தது. மூக்கு சிவுசிவு என்று ஆகியது. "உன் லட்சியத்துக்காக நீ மத்தவா முகத்திலே கரியைப் பூசிடறதா? பணம் போட்டவங்க எல்லாம் பட்டை நாமத்தைப் போட்டுக்கணுமா? அதுதான் உன் மரியாதையா? உன் இஷ்டப்படியே செய், போ. இப்பவேபோ. என்கிட்டே வாதாடிண்டு நிக்காதே. இனிமே எனக்கு இதிலே அக்கறை கிடையாது!"

துண்டை எடுத்து மேலே போட்டார். நேராகக் கிணற்றடிக் கோடிக்குப் போய்க் கொண்டிருந்தார்.

சந்தர்ப்பம் வெடித்துவிடும் நிலையில் இருந்தது. வக்கீல் நிறைய அடக்கிக் கொண்டு போகிறார் என்பது தெரிந்தது.

சற்று விக்கித்து நின்றான். பிறகு மெள்ள எழுந்து மெதுவாக வெளியே நடந்தான்.

அடுத்த நாள் தனது பிரச்னையை எடுத்துக் கொண்டு சாமண்ணு ஊரில் சுற்ற ஆரம்பித்தான்.

பாவலரிடமிருந்து தன் வேட்டையை ஆரம்பித்தான்.

தனது நிலையை அவரிடம் விவரமாய் எடுத்துச் சொல்லி, "உங்களால் உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டான்.

பாவலர் தமக்குள்ள சங்கடங்களை விவரித்தார். தமது கடன் சுமையைச் சொல்லித் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறிவிட்டார்.

அடுத்து ராவ்பகதூரைக் கேட்டபோது, "இந்தா, சாமண்ணு! இதைப் போல விவகாரத்தையெல்லாம் இங்கே கொண்டு வராதே! நான் ஒரு பிரின்ஸிபிள்காரன். இம்மாதிரி விவகாரம் எல்லாம் எனக்குப் பிடிக்காது" என்றார்.

பண்ணை பரமசிவத்துக்கு — ஏற்கெனவே கோர்ட்டில் இரண்டு வழக்குகள் நடந்து கொண்டிருந்தன. எனவே, புதுச் சிக்கலில் மாட்டிக் கொள்ள அவர் தயாராயில்லை.

இரண்டு நாள் அலைந்ததில் சாமண்ணுவுக்கு உலகம் சற்றுப் புரியத் தொடங்கியது. எல்லோரும் ஏதாவது ஒரு பிரச்னையை எடுத்துப் போட்டார்கள். உண்மையாகவும் இருக்கலாம். பொய்யாகவும் இருக்கலாம்.

'தன்னை ஊர் புகழ்கிறது, தன்னிடம் எல்லோரும் மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதெல்லாம் தூரத்தில் இருக்கும் வரைதான். யாரையும் அண்டி உதவி கேட்காத வரைதான்' என்று தோன்றியது.

கவலை உள்ளத்தை பாரமாக அழுத்தியது. கடவுள் தன்னை எப்படியும் கைவிட மாட்டார் என்று நம்பினான். மூன்றாம்

நாள் இரவு, கோவிலுக்குப் போகாதவன், போனான். பிரா காரத்து விநாயகரிடம் வெகு நேரம் நின்று வேண்டிக் கொண்டு வெளியே வந்தான்.

அர்ச்சனை முடிந்து திரும்பிப் போகும் கோமளம் மாமியை எதிரும் புதிருமாகப் பார்த்து விட்டான்.

"ஏது சாமண்ணா, ஆளையே காணலை? எங்களையெல்லாம் மறந்துட்டியா?" என்றாள் கோமளம்.

"மறப்பேனா மாமி!" என்று ஈனசுரத்தில்பேச்சைத்தொடங் கியவன் அதுவரை நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் கூறினான். அப்படிச் சொல்லும்போது கூடவே அவன் மனசில் ஒரு சந்தேகமும் ஓடியது. மாமி வேறு எங்கே தன்னைக் கொத்தி எடுத்துவிடப் போகிறாளோ என்ற பயம்தான் அது.

கோமளம் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு சிறிது நேரம் மௌனமாக இருந்தாள்.

ஒருஇடைவெளிக்குப்பிறகுஅவனைப்பார்த்து,"சாமண்ணா, உன் ஆசை எனக்குப் புரியாமல் இல்லை. மத்தவங்க நியாயமும் தெரியறது. வக்கீல் மாமா எல்லாத்தையும் சொன் னார். இதெல்லாம் தர்ம சங்கடமான சமாசாரங்கள். எது சரி, எது தப்புன்னு சொல்ல முடியாது" என்றாள்.

புது நாடகம் தயாரிக்க இத்தனை செலவு செய்துவிட்டு திடீர் என்று கல்கத்தா போகிறேன் என்று சொல்வது அவளுக் கும் பிடிக்கவில்லைதான். ஆனாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் பேசினாள்.

"பரவாயில்லை; ஒண்ணும் கவலைப்படாதே! ஊரிலே நாலு பேர் நாலு விதமாச் சொல்லுவா. எல்லாரும் இனிக்கப் பேசு வாளே தவிர, காரியம்னு வரப்போ தூர விலகிப் போயிடுவா! நான் எங்காத்து மாமாவையும் சேர்த்துத்தான் சொல்றேன்."

"அவரைச் சொல்லாதீங்கோ மாமி. தங்கமானவர்."

"தங்கமானவர்தான். இல்லேன்னு சொல்லலை! அவர் வக்கீலா இருக்கிறதாலே சில அசௌகரியங்கள் உண்டு. ஆமா! இன்ஸ்பெக்டர் முனகாலாவை லேசுப்பட்டவர்னு நினைக்காதே! உள்ளூரப் பகைதான்... விடு... இப்போ ஒண்ணு சொல்றேன். ஏற்கெனவே, உனக்கு யார் உதவி செய்தாளோ, அவள் காலிலேயே போய் விழு. இந்த நெருக்கடியில் அவளைத் தவிர வேறு யாரும் உனக்கு உதவி செய்ய மாட்டா. கையிலிருக் கிற வெண்ணெயை விட்டுட்டு நெய்க்கு அலையாதே! உன் எல்லா விவகாரங்களுக்கும் பாப்பா ஒருத்திதான் ஆதரவு காட்டுவாள்.லேசா வாயைத்திறந்து ஒருவார்த்தை சொன்னாப் போதும். உனக்காக அவள் உயிரையும் கொடுப்பா. யாரையும் எதிர்பார்க்காதே! நேரே அவள்கிட்ட போ! விஷயத்தைச் சொல்லு! ஜாம்ஜாம்னு நடக்கும்."

சாமண்ணா எல்லாவற்றுக்கும் தலையாட்டினான். கோமளம் சொன்ன வார்த்தைகள் இதமாக இருந்தன.

ஆனாலும் அவனுக்கு பாப்பாவை அண்டுவது அவ்வளவு பிடித்தமான காரியமாகத் தோன்றவில்லை.

டாக்டரிடம் கேட்டால் என்ன? அவனது அடிமனத்தில் அந்த ஆசை இருந்தது. போய்க் கேட்டான்.

"ஏன் சாமண்ணா! இந்த விஷயம் போலீஸ் கேஸ்! நான் ஒரு டாக்டர்! நான் எல்லோர்கிட்டேயும் சௌஜன்யமா இருக்கவிரும்பறவன். உன் விஷயத்திலே பலபேர் பலவிதமாப் பேசறாங்க! கடந்த ரெண்டு மூணு நாளா ஊர்லே உன்னைப் பற்றி ஒரே வதந்தியா இருக்கு. இதிலே என் மண்டையும் சேர்ந்து உருளறதை நான் விரும்பலே! வேறே என்ன உதவி வேணாலும் கேளு. செய்யறேன்!" என்றார் டாக்டர்.

ஓர் இருட்டு அடித்தது போல் இருந்தது. டாக்டர் புன்னகை செய்து கொண்டே பேசினார். 'சகுந்தலா எங்கே? அவளைக் காணவில்லையே... அவள் இருந்திருந்தால்...'

முகம் கவிழ்ந்த நிலையில் வெளியே வந்தான்.

அவனது முன்னேற்றத்துக்கு ஊரே எதிர்த்து நிற்கின்றாற் போல் தோன்றியது. ஊகூம்! இதை விடக் கூடாது! ஆமாம், விடக் கூடாது!

மறுநாள் விடியற்காலையில் சாமண்ணா சைக்கிளை எடுத்துக் கொண்டு பூவேலி கிராமத்தை நோக்கிப் புறப்பட்டான். பாப்பா வீட்டு முன்னால் சைக்கிளை நிறுத்திய போது உடம்பு உதறியது. நிமிர்ந்து வாயில் நிலையைப் பார்த்தான்.

அங்கே குமாரசாமி நின்றது சற்று திகைப்பாக இருந்தது. புன்னகை செய்தான். குமாரசாமி பதில் சமிக்ஞை செய்யாமல் அலட்சியமாக நடந்து கொண்டது வேதனையாக இருந்தது.

"வணக்கம்" என்று படியில் ஏறி நடையில் நின்றான்.

"என்ன வேணும்?" என்றார் குமாரசாமி. அந்தக் குரலில் பற்றுதல் இல்லை.

நிலையைப் பிடித்துக் குறுக்கே அவர் நின்று கொண்டிருந்தது அவன் உள்ளே போவதைத் தடுப்பது போல இருந்தது. பழைய உபசாரம் எதுவும் இல்லை. இடுக்கு வழியே உள்ளே பார்த்தான். பாப்பா தென்படவில்லை. எங்கே அவள்?

"என்ன வேணும்?" என்றார், குமாரசாமி சற்று முறைப்பாக.

தன் நிலையை விளக்கி விவரங்களைக் கூற ஆரம்பித்தான். இடையில் எப்படியும் பாப்பா அங்கே வந்து விடுவாள் என்று எதிர்பார்த்தான். அவள் வரவில்லை. குமாரசாமி இரக்கம் காட்டுவார் என்று எதிர்பார்த்தான்.

ஆனால் அவரிடம் எந்தவித மாறுதலும் தெரியவில்லை. எல்லாவற்றையும் கல் போல நின்று கேட்டுக் கொண்டார். அவன் முடித்த பிறகு அவர் ஓர் அழுத்தப் பார்வையாகப் பார்த்தார்.

"இந்தாங்க! உங்களுக்கு இனிமே நாங்க உதவறதுக்கு வழியில்லே. ஆமாம்! இந்த மாதிரி பிரச்னை, விவகாரம் எல்லாம் வச்சுக்கிட்டு இனி இங்கே வராதீங்க. நாங்க இதுவரை பட்டது போதும். நீங்க போகலாம்'' என்றார்.

"பாப்பா!"

"அவளை நீங்க பார்க்க முடியாது!''

ஓங்கி முகத்தில் அடி விழுந்தது போல இருந்தது.


சற்று நேரம் வாயடைத்து நின்றான். பிறகு, "வரேன்'' என்று கூறிவிட்டுத் திரும்பி வாசலில் இறங்கி சைக்கிள் ஏறி மிதிக்க ஆரம்பித்தான். கிராமத்துப் பாட்டை வந்ததும் துக்கம் பொங்கி வந்தது. கண்ணீர் பீறிட்டு இருபுறமும் வழிந்தது. கிராமத்து எல்லையைத் தாண்டி அரை மைல் போயிருப்பான்.

அங்கே இன்னொரு வழியாக அந்தப் பாட்டையைக் குறுக்கிடும் பாதையில் ஒரு மாட்டு வண்டி வந்து கொண்டிருந்தது. வண்டிக்காரர் ஸ்தானத்தில் பாப்பா உட்கார்ந்திருந்தாள். சோர்வான பாப்பா, அசதியான பாப்பா, மெலிந்து காணப் பட்ட பாப்பா.

அவள் கண்கள் அவனையே பார்த்திருக்க, வெலவெலத்து சைக்கிளை நிறுத்தினான். 'இவள் எப்படி இங்கே வந்தாள்?'

அவள் வண்டியை நிறுத்திக் கீழே இறங்கி வந்து அவன் எதிரில் நின்றாள்.

# 19



பாப்பா அவனை உன்னிப்புடன் பார்த்த போது உலகெங்கும் கண்கள் தோன்றி சாமண்ணாவைப் பார்ப்பது போல இருந்தது.

மனசுக்குள் ஓர் அதிர்ச்சி ஓடியது. கண்கள் இமைக்கவில்லை. சைக்கிளை விட்டு இறங்கினான்.

"என்ன?" என்றான், என்ன பேசுவதென்று தெரியாமல்.

பாப்பா தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் நெஞ்சங்கள் விம்மி அமிழ்ந்தன. லேசாக வாடிப் போயிருந்த அவள் உடலில் ஒரு நடுக்கம் ஓடியது.

சாமண்ணா சற்று அருகில் போனான். ஒரு மாட்டைத் தட்டி நின்றான். அது சிலிர்த்துச் சலங்கைகளை ஆட்டியது.

உங்க வீட்டுக்குத்தான் போய்ட்டு வரேன்" என்றான் சாமண்ணா மெதுவாக. தொண்டையில் வார்த்தைகள் சிக்கி வந்தன.

விழிகளைத் தூக்கி, "தெரியும்" என்றாள்.

"தெரியுமா?"

"ஆமாம்!"

"நான் வந்தப்போ வீட்டிலே இருந்தாயா?"

"ஆமாம். பின் கட்டில் படுத்துட்டிருந்தேன்!"

"இன்னுமா உடம்பு சரியாகலே?"

"ஆமாம். தேறல்லேயே!"

"இப்ப உடம்பு முடியாம இருக்கறப்போ எதுக்கு வெளியே வந்தே?"

"என்ன செய்ய? விருந்து போல வந்துட்டீங்க! அப்பா

வெறும் கையா அனுப்பறதைப் பார்த்துட்டேன். நேரே பார்த்துப் பேசிட்டுப் போகலாம்னு வந்துட்டேன். மனசு கேட்கல்லே. அப்பா பேசினதெல்லாம் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன்'' கண் கலங்கி நின்முன்.

''வீட்டிலே இருக்கும் போது நீங்க வருவீங்கன்னு எதிர் பார்த்தேன்.''

''எதிர்பார்த்தாயா?''

அந்த ஒரு கேள்விக்கு மட்டும் அவனது ஆவலான பழைய குரல் திரும்பி வந்தது.

''ஆமாம்!'' என்முள் அவள்.

பாப்பாவின் கண்கள் பலமுறை கொட்டின.

உடம்பு வாடியிருந்தாலும், முகம் சந்திர ஒளி அடித்தது.

''உங்கப்பா என்ன துச்சமாப் பேசிட்டார் பார்த்தயா? மனசு துவண்டு போச்சு'' என்முன் அவன்.

நெற்றியைத் துடைத்துவிட்டு கொண்டாள்.

''என்னைப் பற்றியே நொந்துக்கிட்டேன். பிறந்தா வசதி யோடுபிறந்திருக்கணும். இல்லாட்டிபிறக்கக்கூடாது. கையேந்தி நாலுபேர்கிட்டேஉதவிக்குப்போனு, இப்படித்தான் அவமானப் படணும்.''

பாப்பாவின் கண்களில் அநேகமாக நீர் ததும்பி விட்டது.

''என்னவோ தெரியலே! என் புகழே எனக்கு எதிரே வேலை செய்யறதாத் தோணுது! உங்கப்பா என்னை இவ்வளவு கேவலமா நடத்துவார்னு நான் எதிர்பார்க்கலே. என் தலைவிதி'' என்று தலைகுனிந்து கொண்டான் சாமண்ணு.

''நான் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். உடம்பு இன்னும் சரியாகல்லே எனக்கு! தொய்ஞ்சு போய்ப் படுத்துடறேன். நீங்க வந்து பேசிக்கிட்டிருக்கீங்களா? அப்பா வேறே கூப்பாடு போட்டுட்டிருக்காரா? எனக்காணு மனம் கிடந்து அடிச்சுக்குது. எழுந்துக்கணும்னு பார்க்கிறேன். முடியல்லே. மனசை திடப்படுத்திட்டு நான் எழுந்திருக்கிறதுக்குள்ளே நீங்க போயிட் டீங்க. பதறிட்டேன். உங்க மனசு என்ன பாடுபடுதோன்னு தவிச்சுப் போயிட்டேன். அப்பா இருந்த நிலையிலே உங்களைத் திரும்ப அழைக்க மாட்டார்னு தெரிஞ்சுப் போச்சு. நானும் அவர் முன்னுடி வந்து உங்களைக் கைதட்டிக் கூப்பிட முடியல்லே. பார்த்தேன். வண்டியைக் கட்டித் தோட்டப் பக்கமா குறுக்கு வழியிலே வந்துட்டேன்.''

பாப்பாவுக்கு மூச்சு இழைத்தது. நுகத்தடியில் ஒரு கையை ஊன்றிக் கொண்டாள்.

''நீ வந்ததுக்கு சந்தோஷம். நீ தேவதை மாதிரி எதிரில் வந்து நிற்கிறதைப் பார்க்கிறப்போ, மனசிலே என்னென்னவோ தோணுது. ஏதேதோ பேசணும் போல இருக்கு. ஆனு உன்னேட மனம் விட்டுப் பேச முடியாமல் தவிக்கிறேன். என்னை மன்னிச்சுடு பாப்பா!''





"இப்போ நீங்க சினிமாவிலே நடிக்கப் போறீங்களா?"

"ஆமாம். எனக்கு அதிலே நிறையப் பணம் வரும். இந்த நாடகத்திலே நான் ஆயுசு பூரா நடிச்சாலும் என் தரித்திரம் போகாது. கல்கத்தா போனு பண வசதி பெருகும். ஆனு எனக்கு உதவி செய்ய ஒருத்தரும் தயாராயில்லையே! நான் என்ன செய்ய?"

"டாக்டர்கிட்டே கேட்டீங்களா?"

"எல்லாம் கேட்டேன். அந்தப் பேச்சே எடுக்காதேன்னுட்டார்!"

"வக்கீல் கிட்டே?"

"வக்கீலா? அவர்தான் ரொம்பவும் சோதிக்கிருர்."

ஒரு கணம் நிசப்தம் விழ, சாமண்ணு வெறுமையாக தூரத்தில் பார்த்தான்.

பிறகு தணிந்த குரலில், "பாப்பா, எல்லோரும் என்னைக் கைக்கு அடக்கமா வச்சுக்க நினைக்கிரு! நான் என்ன செய்ய முடியும்? இந்தப் பாழாப் போன கொலைக் கேஸ் எனக்கு இப்படிச் சத்துருவா வருமா? இந்த கண்டத்திலிருந்து எப்படித் தப்பிக்கிறது? எப்படி முன்னுக்கு வறதுன்னே தெரியல்லே."

"நான் ஒண்ணு சொல்றேன்..." என்ருள் பாப்பா. சாமண்ணு ஆவலோடு அவளைப் பார்த்து "என்னது?" என்ருன்.

"வக்கீலை நாளைக்குப் பாருங்கோ!"

"திரும்பவுமா?"

"ஆமாம்! நான் சொல்றதைக் கேளுங்க. அவசியம் போய்ப் பாருங்க."

அவன் நம்பிக்கையில்லாமல், "சரி" என்ருன். பிறகு, "வரேன்" என்று சொல்லி சைக்கிளில் ஏறினுன்.

'வக்கீல்கிட்டே திரும்பிப் போகணுமா?' மனசு ஒன்று வக்கரித்துக் கேட்டது. அதற்கு மற்ருெரு மனம் பதில் சொல்லவில்லை.

அவனுக்கு வக்கீலைச் சந்திக்க விருப்பமில்லை. அவர் முகமே இப்போது முள் குத்துவது போல இருந்தது.

'ஹூம் அவர்கிட்டே போனுல், 'அந்தச் சின்னப் பெண்ணை ஏமாத்தினியா?'ன்னு கேட்பார். இன்னும் ரெண்டு டோஸ் கொடுப்பார். அத்தனையும் வாங்கி மடியிலே கட்டிக்கிட்டு வரணும். இதுதான் நடக்கும். ஊஹூம். நான் போகப் போறதில்லை' என்று உறுதி செய்து கொண்டான்.

வெளியில் எங்கும் போக விருப்பமில்லை. அந்தப் பெரிய வீட்டுக்குள் வெறுமையாக நடமாடினுன். 'தாசில்தார் வீட்டை வாங்கியாச்சு. இது நிரந்தரமா இருக்கப் போகிறதா அல்லது...

மூன்றும் நாள் காலையில், ''சாமண்ணு சாமண்ணு'' என்று யாரோ அழைக்க, வாசலுக்கு வந்தான்.

சிங்காரப்பொட்டுவெற்றிலைக்காவிச்சிரிப்போடுகைகூப்பினுன்.

''வீடு ஜோராப் போச்சு! இன்னும் வண்டி ஒண்ணு வாங்கிடணும். அப்புறம் எனக்கு ஒரு அண்ணியும் வந்துட்டாப் போதும். வாழ்க்கையிலே வேறே சொர்க்கம் என்ன இருக்கு?'' என்று உற்சாகமாய்ப் பேசினுன். பிறகு, ''அப்போ எந்த வண்டியிலே போறீங்க! எத்தனை மணிக்குப் புறப்படறீங்க? தகவல் எதுவும் தெரியலியே! அவங்க என்னடான்னு நோட்டீஸ் அடிக்கச் சொல்லிப்போட்டு அதை நிறுத்திட்டாங்க'' என்ருன்.

''சிங்காரப் பொட்டு. நீங்க என் சகோதரன் மாதிரி. உங்களை ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லுங்க. இப்போ இந்த பம்பாய் சேட் உங்ககிட்டே வர்ருர். ஐயாயிரம் கொடுக்கருர்! உடனே வந்து நடிக்கச் சொல்ருர். நீங்க என்ன செய்வீங்க?''

''இதென்ன கேள்விங்க? உடனே ரயில் ஏறிடுவேன்! கிடைக்கிற சந்தர்ப்பத்தை விடலாமா?''

''இதைத்தானே நானும் செஞ்சிருக்கேன்!''

''சொல்றவன் சொல்லிட்டுப் போருன். அவங்க பெரிய மனுஷங்க! அவங்களுக்கு என்ன? அவங்க தொழிலுக்கு கலெக்டர் தயவு வேணும். கலெக்டர் பார்வையில் இருக்கணும். இதுக்காக இவரைப் போய்ப் பார்த்துத் தேதி முடிவு பண்ணித் தலைமை தாங்க ஒப்புக்க வெச்சுட்டாங்க. இப்போ நீங்க அதுக்கு முட்டுக்கட்டை போடவே உங்க மேலே சாடருங்க! நான் சொல்றேன் சாமண்ணு! இந்தப் பெரிய மனுஷங்க எல்லாருமே சுயநலக்காரங்க!''

''நீங்க சொல்றது என்னைப் பரவசமாக்குது சிங்காரம்!''

''கவலையே படாதீங்க சாமண்ணு! நீங்க செஞ்சது சரி. இந்த நாடகத்திலே நடிச்சுக்கிட்டே இருந்தா இந்த வீடு கிடைச்சிருக்குமா? ஒரு அஞ்சு ரூபா உங்களுக்கு அதிகம் கிடைக்குமா? செய்வாங்களா? பேச்சுப் பேசருங்களாம். நீங்க போகலைன்னு...''

சாமண்ணு யோசித்து நிமிர்ந்தான். ''இருந்தாலும் சிங்காரம், நம்ப குடுமி இந்தப் பெரிய மனுஷங்க கையிலே அகப்பட்டுப் போச்சு! இனிமேல் எதுவும் செய்யறதுக்கில்லை. நான் பயாஸ்கோப்ல நடிக்கிறதை மறந்துட வேண்டியதுதான். எனக்கு இந்த ஊரை விட்டுப் போறதுக்கு வழியில்லே. அதனுலே தீர்மானிச்சுட்டேன். இங்கேயே டிராமாவிலே நடிக்கிறதுன்னு. அடுத்த வாரம் இன்னெரு பவுடர் ஒத்திகை போட்டுடுவோம். எல்லோரையும் தயார் பண்ணுங்க!''

''சாமண்ணு இதென்ன விபரீதம்?''

"இல்லே சிங்காரம். இதிலே வேறே வழியில்லே, விட்டுடுங்க."

சாமண்ணாவுக்கு ஒரு தற்காலிக அமைதி வந்திருந்தது. சாயங்காலம் கோவிலுக்குக் கிளம்பினான். துர்க்கைசந்நிதியில் மனம் உருகப் பிரார்த்தனை செய்தான்.

வெளியே வந்து சந்நிதித் தெருவில் நடக்கும்போது, "என்ன சாமண்ணா!" என்று ஒரு பழக்கப்பட்ட குரல் கேட்டுத் திரும்பினான்.

பேஸரி டால் அடிக்க, கோமளம் மாமி பூஜைத் தட்டுடன் நின்று கொண்டிருந்தாள்.

"என்ன சாமண்ணா கண்லயே காணோம்? உனக்கு விஷயம் தெரியுமோ?" என்று கேட்டு, கன்னமெல்லாம் குதூகலத்தில் பூரிக்க அவனைப் பார்த்தாள்.

"என்ன மாமி?"

"வீட்டுக்கு வா, அவசரம்."

மௌனமாய் பதில் சொல்லாமல் நின்றான்.

"என்ன பேசாம இருக்கே? நீ வா. சீக்கிரம் வந்துடு. ரொம்ப ரொம்ப முக்கியம்."

கோமளம் இருளில் மறைந்தாள். சாமண்ணா கடையை நோக்கிப் போவது போல் போனான். மனம் சலித்தது. ஏன் அவளைச் சந்தித்தோம் என்று நினைத்தான். போகாமலிருந்தால் அதுவும் தப்பாகிவிடும். மனம் சம்மதிக்கவில்லே. தயங்கிய படியே ஓட்டலுக்குப் போய் காப்பி குடித்துவிட்டு வக்கீல் வீட்டுக்கு நடந்தான்.

வக்கீல் வீட்டை நெருங்க நெருங்க கலக்கமாக இருந்தது. நல்லவேளை வரதாச்சாரி அறையில் வெளிச்சம் இல்லே.

இதற்குள் வீடு திரும்பியிருந்த கோமளம் மாமி, "வா! வா! வா!" என்று ஆவலாய் அழைத்தாள்.

"உனக்கு யோகம் போ! ஜாமீன் கிடைச்சாச்சு!"

"என்ன மாமி சொல்றீங்க, நிஜமாவா!" என்று வியப்பில் வாய் பிளக்கக் கேட்டான் சாமண்ணா.

# 20

ஜாமீன் கிடைத்து விட்டது என்கிற செய்தி அளித்த மகிழ்ச்சியிலும் வியப்பிலும் சாமண்ணு ஆழ்ந்து விட்டபோது கோமளம் மாமி தொடர்ந்து சொன்னுள்.

''மாமாகிட்டே பாப்பா வந்து கரையாக் கரைச்சு சொல்லிட்டா! அவரும் ஏற்பாடு பண்ணியாச்சு! மூணு நாளைக்கு முன்பே உன்னை எங்காத்துக்கு வரச் சொல்லியிருந்தாளாமே! நீ அவளைப் பார்க்கப்போயிருந்தாயாமே! எல்லா விவரமும் சொன்னுள்.''

சாமண்ணு மனமெல்லாம் பொங்க, ''ஆமாம் மாமி! ரெண்டு நாளா ஒரே தலைவலி. படுத்துட்டு இருந்துட்டேன். இன்னிதான்...''

வார்த்தைகள் பசப்பிக் கொண்டு வந்தன.

''சாமண்ணு! இதை மாத்திரம் சொல்லிட்டேன். நினைவு வச்சுக்கோ. இன்னிக்குத் தேதியிலே உனக்கு யாருமே ஜாமீன் கொடுக்க வந்திருக்க மாட்டா! எல்லோரும் பேசுவாளே தவிர, ஒரு டிராமாக்காரனைப் பார்த்து முன் பணமோ, ஜாமீனே யாரும் கொடுத்துட மாட்டா! இந்தச் சந்தர்ப்பத்திலே உனக்கு ஒரு புதுக் கம்பெனி ஆரம்பிக்கிறதுக்கும் சரி, புது நாடகம் போடறதுக்கும் சரி, நீ வடக்கே போய் சினிமாவிலே சேர்ந்து நடிக்கிறதுக்கும் சரி, எல்லாத்துக்குமே பாப்பாதான் உதவி செய்துண்டு இருக்கா! அதை ஞாபகம் வெச்சுக்கோ.''

''நீங்க என்னைத் தப்பாப் புரிஞ்சுண்டிருக்கேள் மாமி! நீங்க சொல்லவே வேண்டாம்.''

"புரிஞ்சுண்டா சரிதான்! அப்போ ஒண்ணு சொல்றேன் கேளு. நாளைக் காலையில் எழுந்ததும் பாப்பா கிட்டே போய் அவள் செஞ்சதுக்கெல்லாம் ஒரு வார்த்தை நன்றி சொல்லிட்டு அப்புறம் ரயில் ஏறு! அதைத் தவிர அந்தப் பெண்ணுக்கு வேறே எதுவுமே வேண்டியதில்லை... ஆமா..."

"ஆகட்டும் மாமி! காலையிலே எழுந்த உடனே போயிட றேன்" என்றான் சாமண்ணா.

மிகுதியான மகிழ்ச்சியில் அன்றிரவு அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

காலையில் எழுந்து தோட்டத்தைச் சுற்றி வந்தான். மணி ஒன்பது அடித்த போது வாசலில் 'பீபிப்பீம்' என்று ஹாரன் அடித்துக் கொண்டு புதிய கார் ஒன்று வந்து நின்றது.

சாமண்ணா எட்டிப் பார்த்தான். அந்தப் புது ஸெடானி லிருந்து தரகர் வராகசாமி இறங்கி வந்தார். அதன் சிவப்பு நிறம் கிளுகிளு என்று கண்ணைப் பறித்தது. ஜெர்மன் ஸில்வ ரில் பிடிகள் பளபளத்தன.

"இப்பத்தான் மரக்காயர் கடையிலேருந்து எடுத்துட்டு வந்தேன். வெல்ல மண்டி செட்டியார் இந்தக் கலர்தான் வேணும்னு ஒத்தைக் காலிலே நிக்கிறாரு. அவருக்குத் தெரி யாமல் உங்களுக்குன்னு சொல்லி எடுத்திட்டு வந்துட்டேன். மரக்காயருக்கு உங்க நாடகம், உங்க நடிப்புன்னா உயிராச்சா! 'சாமண்ணாவுக்குத்தானே! சரி, எடுத்துட்டு போ'ன்னு சொல் லிட்டார்" என்றார் வராகசாமி.

தரகர் வராகசாமி ஒரு வீட்டுக்கு வந்தால் அதுவே ஒரு அந்தஸ்து! பெரிய புள்ளிகள் வீட்டில் மட்டிலுமே காணக் கூடிய இந்த வராகசாமி தன்னையும் தேடி வரும் காலம் ஒன்று உண்டு என்று சாமண்ணா எதிர்பார்த்திருந்தான். இதோ வந்து விட்டார். இப்போது சொந்த வீட்டில் வேறு குடி புகுந்தா யிற்று. அடுத்தது காரா?

அவனை விட்டுப் போன எல்லா சொர்க்கமும் திரும்பி வந்தது போல உணர்ந்தான்.

வராகசாமி தாழ்வாரத்தில் அமர்ந்தார்.

"விலை என்ன சொல்றார் மரக்காயர்?" என்று கேட்டான் சாமண்ணா.

"சாமண்ணா ஸார்! நீங்க விலை கேட்கலாமா? விட்டுட்டுப் போன்னு சொல்லுங்க போதும். உங்ககிட்டே பேரமோ, கீரமோ பேச மாட்டார்."

உச்சி குளிர்ந்தது சாமண்ணாவுக்கு.

இதற்குள் ஸெடானைப் பார்க்க நாலைந்து பேர் சூழ்ந்து கொண்டனர். டிரைவர் அவர்களைத் தள்ளி நின்று பார்க்கச் சொன்னான். பெட்ரோல் வாசனை கும்மென்று வந்து மூக்கை

நிறைத்தது. சாமண்ணுவுக்கு அந்த மணம் ரொம்பப் பிடிக்கும். பெரிய மனிதர்கள் வீட்டு போர்டிகோவில் இப்படித்தான் வாசனை வீசும். இழுத்து இழுத்து அதை அனுபவித்திருக்கிருன்!

ஒரு கணத்தில் அதிலிருந்து சகுந்தலா இறங்குவது போலவும், நீளப் படிக்கட்டுகளில் இடுப்பை இப்படியும் அப்படியும் வளைத்து ஏறுவது போலவும் காட்சி துவங்கியது. மனசில் இன்பச் சுரப்பிகள் நிறையச் சுரந்தன.

அவன் பார்வையில் ஏற்பட்ட மோகத்தை வராகசாமி நொடியில் அறிந்து கொண்டார்.,

எழுந்தார். 'வெள்ளோட்டம் பார்த்துடுவோமா?'' என்ருர்.

அவர் முன்னே செல்ல, சாமண்ணு பெரிய சமஸ்தானுதிபதி போல் பின்னே சென்ருன்.

வரி வரியாகப் படிகள்.

நான்கு படிகள் இறங்கியதும், கிசுகிசு என்று காதில் குறுகுறுத்தது.

சாமண்ணு சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தான். அது ஒரு விஸ்தாரமான தெரு. அதன் நீள வியாபகம் பூராவும் கண்ணில் தெரிய, அத்தனை வீட்டு வாசலிலும் அவரவர் நின்று, அந்த செடானையும் சாமண்ணுவையும் விநோதமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் காட்சி நெஞ்சில் ஆழ்ந்து படிய, சாமண்ணுவின் நடையில் மிடுக்கு ஏறியது. பார்வையில் ஒரு பெரிய மனுஷத்தனம் தொற்றியது. கம்பெனி டிரைவர் காக்கிச் சட்டை யூனிபாரத்தில் சாமண்ணுவுக்கு ஒரு ஸல்யூட் அடித்தான். பிறகு பின்புறக் கதவை உலோக நாதத்துடன் அவன் திறக்க, ஏராளமான சூரியப் புள்ளிகள் நாலாபுறமும் சிதறின.

சாமண்ணு ஏறிக் கொண்டான்.,


ஸீட்டில் அமர்ந்த போது ஏதோ இங்கிலீஷ்காரி மடியில் அமர்ந்தது போல் அவ்வளவு சொகுசாக இருந்தது.

டிரைவர் அந்தக் கதவை ஓர் அடிமைப் பணிவோடு குனிந்து அடைத்துவிட்டு, முன் பக்கம் போய் பானெட் துவாரத்தில் நீளக் கம்பியைக் கொடுத்து விருட் விருட்டென்று சுழற்றி மோட்டாரைக் கிளப்பினுன்.

இரைச்சலோடு சிறுசிறு குவியல்களாகப் புகை விட்டுக் கொண்டு ஜம்மென்று புறப்பட்டது கார்.

ஏழை சாமண்ணு அவனிடமிருந்து உதிர்ந்து விட்ட மாதிரி இருந்தது.

கார் ஊரை விட்டுப்பெருஞ்சாலையில்ஓடியபோதுகப்பலில் மிதப்பது போன்ற உணர்வில் பிரயாணம். உடம்பு அதிகம் நலுங்கவில்லை. சில்லுசில்லு என்று முகத்தில் வீசிய காலைக் காற்றின் குளுமை கன்னத்தில் கொஞ்சியது.



அன்று காலையில் பாப்பாவைப் போய்ப் பார்க்க வேண்டு மெனத் திட்டமிட்டிருந்தான். வக்கீல் மாமி கண்டிப்பாய்ச் சொல்லி அனுப்பிய வார்த்தைகள் காதில் ரீங்கரித்தன. இப்போது பாப்பாவின் நினைவு வர 'சாயங்காலம் போய்ப் பார்த்தால் போயிற்று' என்று பயணத்தைத் தள்ளிப் போட்டான். இந்தக் காரின் சுகத்தை அடைய புது ஜன்மமே எடுக்க வேண்டும்.

பதினொரு மணிக்குக் கார் திரும்பியது. "மாலையில் அந்த 'மல்லிகை ஓடை' வரை இன்னொரு வெள்ளோட்டம் போய் வரலாமா?" என்று வராகசாமி ஆசையைக் கிளப்பி விட்டார்.

ஐந்து மைலில் மல்லிகை ஓடை இருந்தது. அதன் இரு கரைகளிலும் மல்லிகைப் பந்தல்கள் மண்டிக் கிடந்தன! அவற்றை ஒட்டினாற்போல் தென்னை மரங்கள். மாந்தோப்புகள்.

கார் அருந்ததி தெருவைத் தாண்டிய போது சாமண்ணா, "நிறுத்து!" என்றான்.

அங்கே பெரிய மைவிழிகளோடு சகுந்தலா அவன் காரில் செல்வதை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"எங்கே இப்படி?" என்று அவன் கேட்க,

"கார் வாங்கியாச்சா?" என்று ஆவல் தெறிக்க அருகே வந்தாள் சகுந்தலா.

நீல நிற ஸில்க் அணிந்து, பளிச்சென்று வெட்டும் மோதிரம் அணிந்திருந்தாள். கண்கள் நீலங்களாக ஒளிர்ந்தன. சிவந்த உதடுகள்.

சாமண்ணாவின் கண்கள் பிரமித்தன.

"கார் வெள்ளோட்டம் பார்க்கிறேன்."


"ஓ! பிரமாதம்!"

"ஏறிக்குங்க! திருப்பிக்கொண்டுவந்துவிடறேன்" என்றான்.

புன்னகை குழிய ஏறினாள்.

கார் ஓடைக்கரை நோக்கிப் பறந்தது.

# 21



மல்லிகை வாடை அடர்ந்து கமழ மந்தார வானம் வெயிலைத் தணித்தது. தென்னம் ஓலைகள் வானத்தை வரி வரியாகக் கீறியது. கிள்ளைகளின் குரல்கள் அடுத்தடுத்துக் கொஞ்சின.

கார் ஓரிடத்தில் போய் நிற்க, சாமண்ணாவும் சகுந்தலாவும் கீழே இறங்கித் தென்னை நிழல்களில் நடந்தார்கள். வெகு தூரம் நடந்த பின்னர் மனித நடமாட்டம் இல்லாத இடத்தை அடைந்தார்கள்.

தூரத்தில் குன்றுகள் மெல்லிய நீலத்தில் தெரிந்தன. சுற்றி வரப் பயிரும் தழையும் சேர்ந்து பசும் சோலையாக இருந்தன.

இருவரும் ஒரு பாறை அருகே நின்ற போது அதன் ஓரமாக மாலை போலச் சிறு ஓடை மினுக்கிக் கொண்டிருந்தது.

''என்ன அழகாக இருக்கு பாருங்க!'' என்றாள் சகுந்தலா.

சாமண்ணாவின் உள்ளத்தில் கீதம் போல் ஒரு கிளுகிளுப்பை உண்டாக்கியது ஓடைத் தண்ணீர். அவன் ஒரு போதையில் தோய்ந்தான். ஸெடானும் சகுந்தலாவும் அவனை முற்றிலும் மாற்றியிருந்தார்கள். மூச்சு கூட இன்பத்தில் திணறியது.

''இனி வாரம் ஒரு முறையாவது இங்கே வரணும் சாமு!''

''நீயும் நானும் மட்டும்தானே!''

''எனக்கு இன்னிக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை! அவ்வளவு மகிழ்ச்சியா இருக்கேன்'' என்றாள்.

''நானும் அப்படித்தான்.''

இருவர் கண்களும் பின்னிக் கொண்டு நின்றன.

சகுந்தலா தாழம்புதர் ஓரம் சுற்றி வர 'ஆ' என்றாள்.

''என்ன, என்ன?'' என்று பதறினான் சாமண்ணா.

அவள் நொண்டிக் கொண்டு வர, சாமண்ணா குனிந்து அவள் காலைப் பார்த்தான். காலின் பக்கவாட்டில் ஒரு பெரிய முள் தைத்திருந்தது.

''ஐயோ, அப்படியே நில்லு. இதோ எடுத்துடறேன்.''

அவன் அவள் இடது பாதத்தை மெதுவாகப் பிடித்து முள்ளை அகற்ற முயன்றபோது அவள் பாலன்ஸ் வேண்டி அவனது தோளில் கையை ஊன்றினாள்.

சாமண்ணா முள்ளை எடுத்து அப்பால் எறிந்ததும் சற்று நொண்டியபடியே அவனை விட்டு விலகிக் கொண்டாள்.

பார்வையை ஒரு மாதிரியாகச் சுழற்றிக் கொண்டு, சிரிப்பு உண்டாக்கிய கன்னக் குழிவுகளுடன், ''உங்க சகுந்தலை நாடகம் மாதிரி இல்லை!'' என்றாள் அவள்.

அவனுக்குப் பெருமூச்சு வந்தது.

''ஆனா இந்த நாடகத்தில் உன் பெயர் பொருந்துகிற மாதிரி என் பெயர் பொருந்தலையே! சுத்த நாட்டுப்புறமான பெயர்!'' என்றான் சலித்துக் கொண்டே. சோர்வுடன் அவன் ஒரு பாறை மீது சாய, அவன் அருகே பாறை மீது கைவைத்த வண்ணம் நின்றாள் சகுந்தலா.

''ஏன் சாமு! பெயர் பொருந்தினாத்தான் எல்லாம் பொருந்தினதா அர்த்தமா?''

அவள் தணிவான குரலில் கேட்டாள். அந்தத் தணிவு அவளது அந்தரங்கத்தைத் தொடும் அந்நியோன்யத்தைக் காட்டியது.

''பெயராவது பொருத்தமா இருக்க வேண்டாமா!''

''ஏன் அப்படிச் சொல்றீங்க? பொருத்தமாய்த்தானே இருக்கு! சாமு — சகுந்தலா!''

''இல்லை, உனக்கு எந்த விதத்திலும் பொருத்தம் இல்லாதவன் நான்.''

''அதை எப்படி நீங்க சொல்ல முடியும்? நான்தான் சொல்லணும்!'' என்றாள் ஓர் உரிமையோடு.

''அப்போ நீயே சொல்லு. நான் பொருத்தமானவன் தானா?''

சாமண்ணாவின் கண்கள் அவள் பார்வையை நோக்கிப் படபடத்தன.

''என் மனம் அதைக் கண்டுபிடித்து விட்டது.''

''பொருத்தமானவன் என்றா?''

''ஆமாம்.''

''ஹும்! என்னிடம் அப்படி என்ன வசீகரம் இருக்கு!''

''சாதாரண நடிகரா நீங்க? உங்களிடம் உள்ள அந்த நடிப்புக் கலை ஒன்று போதாதா?''

''அது ஒன்று மட்டும் போதுமா?''



''போதுமே! அதுவே கோடி பெறும்!''

சாமண்ணு மேலே பேசவில்லை. எல்லாம் சொல்ல வேண்டும் என்று நினைத்தவன், எதுவும் சொல்ல முடியாமல் மௌனமாய் விட்டான்.

தூரத்தில் கார் வரும் ஓசை கேட்டு அவன் திரும்ப, அவளும் விலகிச் சாலையைப் பார்த்தாள். அந்த ஸெடான் அவர்கள் அருகே வந்து கொண்டிருந்தது.

''ஸார்! நீங்க கையைக் காட்டின மாதிரி இருந்தது. அதான் வந்துட்டேன்!'' என்றார் டிரைவர்.

இருவரும் வண்டியை நோக்கி நடந்தார்கள். பொழுது சாய்ந்து கொண்டிருக்கிறது என்பது அவர்களுக்கு அப்போது தான் தெரிந்தது.

திரும்பும் பிரயாணம் பூராவும் அந்த இனிமை மௌனம் நீடித்தது.

அந்த இனிமையில் பாப்பாவின் நினைவு மறந்தே போய் விட்டது அவனுக்கு.

மூன்றாவது நாள்தான் அவனது கல்கத்தா பயணம்!

காலையில் சிங்காரப் பொட்டு பெரிய மாலையுடன் சாமண்ணுவின் கழுத்தில் அந்த மாலையைப் போட்டு விட்டு, ''நீங்க பெரிய நடிகரா வரணும்'' என்று கைகூப்பி வணங்கினார். இருவரும் தழுவிக் கொண்டார்கள்.

சிங்காரப் பொட்டு இவ்வளவு நல்ல உள்ளத்துடன் வந்து தனக்கு நல்வாழ்த்துக் கூறியது சாமண்ணுவின் உள்ளத்தைத் தொட்டது.

மத்தியானம் அவன் ரயில் நிலையத்திற்குப் புறப்பட்ட போது, பலரும் நிலையத்திற்குத் தன்னை வழி அனுப்ப வருவார்கள் என்று எதிர்பார்த்தான்.

ஆனால், ரயில் நிலையத்துக்குப் போன போது பிளாட்பாரத்தின் வெறுமை அவனுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. அங்கு பயணிகளைத் தவிர அவனுக்குத் தெரிந்தவர்கள் யாரையுமே காணவில்லை.

நாடகக் கம்பெனி ஆசாமிகளைக் கூடக் காணோம். இன்னும் வக்கீல், டாக்டர், பாவலர் ஒருவருமே வரவில்லை!

முதல் வகுப்பில் போய் ஏறிக் கொண்டான், அவனைத் தவிர அந்தப் பெட்டியிலும் வேறு பயணிகள் யாரையும் காணவில்லை. வண்டி புறப்படுகிற போதாவது யாரேனும் வருவார்களா என்று எதிர்பார்த்தான். முதல் மணி அடித்து இரண்டாம் மணியும் அடித்தாயிற்று. எவருமே அவன் கண்ணில் தென்படவில்லை. மனம் வெதும்ப, எழுந்து வந்து, வாயில் நிலையைப் பிடித்து நின்றான். வண்டி புறப்பட்டு விட்டது. அப்போதுதான் அந்த வெறுமை அவன் மனசில் இறங்கியது.

நேற்று வரை எல்லோரும் எப்படித் தன்னைப் போற்றிப் புகழ்ந்தார்கள்! இன்று அவர்களில் யாருமே ரயில் நிலையத்திற்கு வரவில்லையே! தனக்குள்ளாக நினைத்துக் கொண்ட அந்தஸ்து, மதிப்பு, கௌரவம் எல்லாம் வெறும் ஏமாற்று விஷயங்கள் தானே? சகுந்தலா? அவளையும் காணோமே!

வண்டி நகர்ந்து கொண்டிருக்க, பிளாட்பாரத்தில் தூரத்து 'கேட்'டைத் திறந்து அந்த உருவம் வந்து கொண்டிருக்க, சாமண்ணா வெளியே எட்டிப் பார்த்தான். கையை உயர்த்தி, ஆட்டினான். ஆனால் அதற்குள் வண்டி வேகம் பிடித்து விட்டது. உருவத்தின் ஓட்டம் அதனோடு ஈடுகொடுக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் அது இளைத்துக் கொண்டு நிற்க, சாமண்ணா கண்ணை அகலத்தில் கொண்டு பார்த்தான்.

யார் அது? சகுந்தலாவா? பாப்பாவா?


உயரம் பார்த்தால் பாப்பா மாதிரி தெரிந்தாள்.

ஆனால் அந்த நடை சகுந்தலா போலவே தோன்றியது.

சாமண்ணாவுக்கு ஒரு நிச்சய நினைவு. சகுந்தலாவைத் தவிர வேறு யார் இப்படி ரயில் நிலையம் வர முடியும்? இதற்கெல்லாம் ஒரு நாகரிகம் வேண்டுமே! அது சகுந்தலாவுக்குத்தான் உண்டு. பாப்பாவிடம் நிச்சயம் இராது.

பிளாட்பாரம் மங்கியதும் சாமண்ணா உள்ளே தலையை இழுந்தான். அவனுக்கு நிம்மதி இல்லை. இருக்கை கொள்ளவில்லை.

# 22



"அவன் கண்ணிலே நன்னா பட்டயோ இல்லையோ?" என்று கவலையோடு கேட்டாள் கோமளம்.

"என்னை நல்லாப் பார்த்துட்டார். கையை ஆட்டினாரே!"

"கையை ஆட்டினாரா?"

"ம். சன்னலுக்கு வெளியே கை நீட்டி ரொம்ப நேரம் ஆட்டினார்."

"போடி அசடு! நீ கொஞ்சம் சீக்கிரம் போயிருக்க வேண்டாமோ!"

பாப்பா கவலை தோய்ந்த முகத்துடன் சாமண்ணாவின் நினைவில் லயித்தவளாய் ஊஞ்சலில் உட்கார்ந்தாள்.

"நான் என்ன செய்வேன் மாமி! அப்பாவுக்குத் தெரியாமல் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியிருந்தது."

"அவர் கோபம் தணியலையா?"

"இன்னும் இல்லை! நாடகக்காரன் சகவாசமே வச்சுக்காதேன்னு தீர்மானமாச் சொல்லிட்டார். அப்படியிருக்கும்போது, அப்பா முன்னாலே எப்படி நான் வெளியே புறப்பட முடியும்? அதனாலே அவர் வெளியில போற வரை காத்திருந்தேன். அப்புறம்தான் குதிரை வண்டியைப் பிடிச்சு.... ஒரே வேகமா ஸ்டேஷனுக்குப் போனேன். இறங்கி டிக்கெட் வாங்கிட்டுப் போய்ப் பார்க்கிறேன். ரயில் நகர்ந்துக்கிட்டிருக்கு! மனசெல்லாம் கிடந்து தவிச்சுது. அடடா! ஏமாந்துட்டேனேன்னு நினைச்சேன்."

"அவனை வழி அனுப்ப யாராவது வந்தாங்களா?"

''யாரும் வந்ததாத் தெரியலே.''
''சிங்காரப் பொட்டு....?''
''அவர் வீட்டுக்கே போய் வழி அனுப்பிச்சுட்டார்னு அப்புறம்தான் தெரிஞ்சுது. ஸ்டேஷனுக்கு யாருமே.வரல்லே.''
''தெரியும் பாப்பா. அப்படித்தான் நடக்கும்னு எனக்குத் தெரியும். யாருக்கும் அவன் கல்கத்தா போறதில் இஷ்டமில்லே.''
''அது என்னவோ! நான் முதல் வகுப்பைத் தேடிக் கண்டுபிடிச்சு, கையைத் தூக்கிக் காண்பிச்சு அதை நோக்கி ஓடறதுக்குள்ளே, ரயில் ரொம்ப தூரம் போயிருச்சு, அது அவர்தான்னு புரிஞ்சுக்கிட்டேன். ஏன்னு பெட்டி வாசல்லேயே நின்னார். அந்தச் சால்வையைப் போர்த்திக் கொண்டு.''
கோமளம் துணுக்குற்றாள்.
''சகுந்தலா போர்த்தின சால்வையா?''
''ஆமாம்! அதேதான். அந்த நீலக் கலர் சால்வையேதான். நல்லாத் தெரிஞ்சுதே!'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினாள் பாப்பா!
''அதனாலென்ன! அவன்கிட்டே வேறே சால்வை இருந்திருக்காது. இப்போதானே அவனும் நாலு பேர் பார்க்கும்படியா மனுஷனாயிருக்கான். பாப்பா! எனக்கு என்னவோ ஒரே சந்தோஷமா இருக்கு! உன்னைப் பார்த்துட்டுக் கையை ஆட்டினான் பாரு!''
''அது சரிதான் மாமி! எனக்கு இப்போ வருத்தம் என்னன்னு, அவர் போய் ஒரு வாரம் ஆச்சு. இதுவரைக்கும் ஒரு லெட்டர் போடல்லே. இப்படி இருக்கலாமா?'' என்றாள் பாப்பா தாபத்தோடு.
''ஒரு வாரந்தானே ஆச்சு? ஒரு மாசம் ஆகல்லேயே! போன இடத்திலே என்ன அசந்தர்ப்பமோ! அதுக்குள்ள லெட்டர் வரலேன்னு குறைப்படலாமோ! அப்புறம் பாரு பாப்பா! என்னதான் இருந்தாலும் அவன் ஒரு இள வயசுப் பிள்ளை. உனக்கு நேராக் கடிதம் எழுதுவானோ? எங்களுக்கு எழுதுவான். அதிலே, பாப்பா சௌக்கியமா, பாப்பாவை விசாரித்ததாகச் சொல்லுங்கோன்னு போடுவான். உனக்கு நேரா எழுதக் கூச்சப்படுவான்'' என்றாள் கோமளம்.
மாமி அப்படிச் சொன்னது பாப்பாவுக்கு நியாயமாகப் பட்டது. கொஞ்சம் ஆறுதலாகவும் இருந்தது.
அவளை மீறி ஒரு புன்னகை அவளது உதட்டில் அரும்பியது.

* * * * *

''அன்புமிக்க சகுந்தலாவுக்கு வணக்கம்,
கல்கத்தா போய்ச் சேர்ந்ததும் உங்களுக்குத்தான் முதல் கடிதம் எழுதுகிறேன். ஊர் இங்கே இந்திரலோகம் போல

இருக்கிறது. தெருக்களில் கார்கள், சாரட்டுகள் ஏராளம். நிறைய வெள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள். 'லேக் ஏரியா' பக்கம் நான் தங்கியிருக்கிறேன். பெரிய வீடு எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். வேளா வேளைக்குச் சாப்பாடு. ஷூட்டிங் இன்னும் இரண்டு தினங்களில் ஆரம்பமாகிறது. ஸ்டூடியோவில் எல்லாம் வெள்ளைக்காரர்களாம். 'ஆஷூன் போஷூன்' என்று வங்காளிகள் எனக்கு ரொம்ப மரியாதை கொடுக்கிறார்கள் இங்கே.

ஊரெல்லாம் சுற்றிப் பார்த்தேன்.

வாழ்க்கையில் என் அம்மாவுக்கு அடுத்தபடி உங்கள் அப்பாவைத்தான் நினைக்கிறேன். எனக்கு அவ்வளவு ஒத்தாசை செய்திருக்கிறார்.

இன்று கல்கத்தாவில் பயாஸ்கோப்பில் நடிக்கும் அளவுக்கு நான் வளர்ந்திருப்பது உங்கள் அப்பாவால்தான்.

அப்புறம் உங்களைப் பற்றிச் சொல்ல வேண்டாமா! ஆத்மாவுக்கு எது ரொம்ப அருகில் இருக்கிறது என்று உபன்யாசகர்கள் கேட்பார்கள். பகவான் என்று பதில் சொல்லுங்கள் என்பார்கள். நான் சகுந்தலா என்று சொல்லுவேன். நம் இருவரும் அவ்வளவு நெருக்கமாகி இருக்கிறோம்.

இங்கே கல்கத்தா வந்தபிறகு என்ன நினைக்கிறேன் தெரியுமா? நீங்கள் இங்கே வந்தால் இங்குள்ள புதுமைகளை எப்படி எப்படிப் பார்ப்பீர்கள், எப்படி எப்படி ரசிப்பீர்கள் என்று யோசித்துப் பார்க்கிறேன். உங்கள் ரசிப்பையே நான் அனுபவிக்க விரும்புகிறேன்.

இப்படி நினைப்பதற்கு ஆதாரம் மல்லிகை ஓடைப் பக்கம் அன்று நாம் நடந்து சென்றபோது ஏற்பட்ட நெருக்கம்தான்.

இங்கே வேலை எல்லாம் முடிந்ததும் உடனே ஊருக்குத் திரும்பி வந்துவிடுவேன்.

ஒருவேளை, நீங்கள் கல்கத்தா வர சந்தர்ப்பம் கிடைத்தால், அதை எண்ணிப் பார்க்கும்போதே மனம் சிலிர்க்கிறது.

தங்கள் அன்பார்ந்த
சாமண்ணா.

அந்தக் கடிதத்தை சகுந்தலா ஆறு தடவை படித்துவிட்டாள்.

முதலில் படித்தபோது ஒரு அசுவாரசியமான புன்னகை ஏற்பட்டது.

சாமண்ணா கையெழுத்து கோணல்மாணலாக இருந்தது. அதிகம் படித்திருக்க மாட்டான். ஆனாலும் இவ்வளவு அழகான வார்த்தைகளை எப்படி எழுதியிருக்கிறான்? உண்மையிலேயே என்னிடம் ஏற்பட்டுள்ள அன்பின் சக்திதான் அழகான வார்த்தைகளாக வந்திருக்கின்றன!

அப்புறம் இரண்டாம் முறை. மூன்றாம் முறை என்று படித்தபோது மனம் அங்கங்கு ஆதங்கமுடன் நின்று முறுவல்

பொழிந்தது. பின்னும் வாசித்தபோது உள் உணர்வில் மென்மையாக ஒரு புதுமை உணர்ச்சி கலந்ததுபோல் இருந்தது. மேனி எங்கும் ஒரு அரும்பு நடுக்கம் பரவியது.

பார்வை அடிக்கடி கடிதத்தை விட்டு வெளியேறி சூன்யத்தை அன்போடு பார்த்தது.

ஒரு துஷ்யந்த கம்பீரத்தில் சாமண்ணுவின் முகம் ஒரு வசீகர வடிவில் தோன்றி மறைந்தது.

"கடிதம் எழுதிவிட்டார் பார்த்தியா?" மெதுவான குரலில் அவள் உள் மனம் குதூகலித்தது.

கல்கத்தா போய் பத்து நாட்களுக்குப் பிறகுதான் ஷூட்டிங் தொடங்கியது.

தளவாடங்களையும் மனிதர்களையும் ஒரு அரும்பாடுபட்டுத் தயாரிப்பாளர்கள் குறித்த இடத்தில் கொண்டு குவிப்பதற்கு அத்தனை நாட்களாகிவிட்டன.

காலையில் எட்டு மணிக்கே சாமண்ணுவை ஸ்டுடியோவுக்கு அழைத்துச் சென்றார்கள்.

கேட்டுக்குள் நுழைந்ததும், அருமையான பாதைகள், நிழல் தரும் வயதான மரங்கள்.

மேக்—அப் அறையில் எத்தனை கண்ணாடிகள்! எத்தனை வர்ண புட்டிகள்!

மேக்—அப்காரர் ஒரு வங்காளிக்காரர். ஆங்கிலம் கலந்த வங்காளியில் பேசினார். அவர் இரண்டு தரம் முகத்தில் பூசியதுமே, அதில் ஜாலிப்பு வந்துவிட்டது.

அரிதாரம் பூசினால் விறுவிறு என்று இருக்குமே, அது மாதிரி இல்லை.

அரைமணி நேரத்தில் தலையில் டோபா வைத்து, கிரீடம் வைத்து, ஆடையணிகள் பூட்டி சாமண்ணுவை துஷ்யந்தனாக்கி விட்டார்கள்.

சாமண்ணு பெரிய நிலைக் கண்ணாடியில் முழு உருவத்தைப் பார்த்ததும் கண் துள்ளியது. ஒரு அடி பின்னால் நகர்ந்து, 'உண்மைதானா' என்று பார்த்தான். உண்மைதான்!

'எனக்கு இவ்வளவு முகவெட்டா? இப்படி ஒரு மன்மதத் தோற்றமா? அம்மா! நீ இருந்து இதைப் பாராமல் போய் விட்டாயே' என்று உள் மனம் சிலும்பியது.

"துஷ்யந்தன் ரெடியா?" என்று ஒரு குரல் கேட்க, ஒருவர் உள்ளே ஓடிவந்து, "வாங்க, வாங்க" என்று அவனை உபசரித்து அழைத்துச் சென்றார்.

அந்த கேட்டில் நுழைந்ததும் சாமண்ணுவின் கண்கள் பரபரத்தன. அந்தப் படப்பிடிப்பு வகையறாக்களை அப்போதுதான் வாழ்வில் முதல்முறையாகப் பார்க்கிறான். கீழே தரை எங்கும் பாம்புகள் போல ரப்பர் ஒயர்கள் ஓடின. ஆச்சர்யமாக எதிரே

ஒரு அரண்யக் காட்சியை அட்டையினாலும் துணிகளாலும் உண்டாக்கியிருந்தார்கள்.

கொளுத்துகிற பகல் போல் அங்கே வெளிச்சம் சாடியிருந்தது.

சாமண்ணாவை அங்கே நிறுத்திவைத்ததும், ஒருதண்டவாளத்தில் காமிரா மிஷின் நகர்ந்து வந்தது. இரண்டு பேர் அந்தக் காமிரா வண்டியைத் தள்ளி வந்தார்கள்.

நெடிதான ஒரு வெள்ளைக்காரர் சாமண்ணா அருகில் வந்து, "யூ ஆர் த ஹீரோ?" என்று குழைவாகக் கேட்டார்.

அந்த வெள்ளைக்காரர்தான் டைரக்டர் என்று தயாரிப்பாளர் சேட் சாமண்ணாவிடம் தெரிவித்தார்.

அவனிடம் குழைந்து பேசிய அந்த டைரக்டர் அடுத்தகணம் மற்ற சிப்பந்திகளிடம் பேசும்போது மிகவும் கெடுபிடியாக இருந்தார்.

ஸவுண்ட் இஞ்சினியர் ஓடி வந்து, நீண்ட கழி போன்ற மைக் பகுதியை சாமண்ணாவின் தலைக்குமேலே நிறுத்தி வைத்தார்.

பக்கவாட்டத்தில் மிருதங்க, வயலின், ஹார்மோனியப் பாடகர்கள் தயாராக இருந்தார்கள்.

எல்லாம் தயாரான நிலையில் டைரக்டர், 'ரெடி' என்று கூறியதும்,

சேட், ஒரு தேங்காய் மீது கற்பூரத்தைக் கொளுத்தி வந்து திருஷ்டி சுத்தினார்.

அவசரமாக டைரக்டர், வசனத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கச் சொல்லிக் காதால் கேட்டுக் கொண்டார்.

"ரைட்! இந்த ஷாட்லே ஆரம்பிக்கலாம். ஹீரோயினை உடனே அழைச்சுட்டு வா!" என்றார் டைரக்டர்.


இரண்டே நிமிடத்தில் சாமண்ணா அருகில் சகுந்தலை வேடம் தரித்த ஒரு பெண் மின்னல் போல் வந்து நின்றாள்.

"இவங்கதான் சகுந்தலையா நடிக்கிறாங்க! வங்காள நாடகத்திலே பிரபலமானவங்க! சுபத்ரா முகர்ஜின்னு பேரு!" என்று சேட் அறிமுகப்படுத்த சாமண்ணா அவளைப் பார்த்தான்.

அழகான மீன் விழிகள் கொஞ்சிக் கொண்டு பார்க்க, முகம் பட்டுச் சிவப்பில் மினுமினுக்க,

சுபத்ராவின் அழகில் பிரமித்து மயங்கி நின்றான் அவன்.

# 23



அந்த வட இந்திய அழகியின் கடல் போன்ற விழிகளும், நிறமும், வித்தியாச அமைப்பும் சாமண்ணாவை பிரமிக்க வைத்தன.

'இப்படி எல்லாம் அழகிகள் இருக்கிறார்களா உலகில்?'

''நொமஷ்கார்'' என்றாள்.

முறுவலை விரித்தபோது அரும்பிய பல் வரிசை முத்துக்களாய்ப் பளிச்சிட்டன. இளம் குருத்து போன்ற வயிற்றின் சருமம் அவனை சொர்க்கத்துக்கு இழுத்தது. இடுப்பில் இறுக்கியிருந்த சாரியும், அதை அடுத்த விஸ்தீரணமான இடுப்புப் பகுதியும் போதையை ஏற்படுத்தின.

முதல் ஒத்திகை நடந்தது. 'சைலன்ஸ்' என்ற இரைச்சலுக்குப் பின் நிசப்தம் நிலவ, டைரக்டர் 'ஆக்ஷன்' என்றார்.

சுபத்ரா முகர்ஜி கையில் குடத்துடன் நடந்து வந்தாள். ஆசிரமப் பெண் போன்ற அசல் சாயலில் மென்மையாகக் குலுங்கி, ஒரு பூங்கொடி அசைந்து வருவது போல் வந்தாள்.

செட்டில் நிற்பதுபோல் தெரியவில்லை. ஒரு ஆசிரமத்துக்கு அருகே அசல் சகுந்தலையைப் பார்த்து நிற்பதுபோல் தோன்றியது. அந்தக் கணத்தில் ஒரு பழங்காலத்துள் போன மாதிரி இருந்தது.

''ஆ!''

அந்த முள் குத்திய முகபாவம் பிரமாதமாக வந்தது. நெற்றியில் படிந்த சுருக்கமும், முகத்தில் ஓடிய வலியும் அப்படியே தத்ரூபம். முகத்தில் தோன்றிய அந்த பாவத்தில் அவள் வலி அவனுக்கே ஏற்பட்டது போன்ற பிரமை தோன்றியது.




''குட்'' என்றார் டைரக்டர். ஒத்திகை நின்றது. சுபத்ரா முகத்தில் வியர்வை அரும்ப, உதவிப் பெண் அவள் அருகே ஓடினாள்.

''பிரமாதம், உங்கள் நடிப்பு!'' என்று அவளிடம் சாமண்ணா சொன்னபோது, அவள் மலர்ச்சியாகச் சிரித்து, ''தாங்க்ஸ்'' என்றாள்.

அடுத்த 'ஷாட்'டில் சாமண்ணா 'ஆ' என்ற குரல் கேட்டு சகுந்தலாவைத் திரும்பிப் பார்க்கிறான். பிரமிப்பும், திகைப்பும் காட்டுகிறான். முள்ளை எடுக்கத் துடிக்கிறான்.

அடேயப்பா! சாமண்ணாவுக்கு அந்த நடிப்பு உச்சம் எப்படி வந்தது? திரும்பிய முகத்தில் அத்தனை உணர்ச்சியும் பின்னல் போட்டதோடு ஒரு துளிக் காதல் உணர்வும் தனித்துத் தெரிந்தது.

அசந்து போனார் டைரக்டர்.

சாமண்ணா அருகில் வந்து, ''எக்ஸெலண்ட்'' என்றாள் சுபத்ரா.

''தாங்க்ஸ்'' என்றான் அவன்.

அடுத்து ஆரம்பக் காதல் வைபவங்கள் ஒவ்வொன்றாகச் சுடப்பட்டன. எல்லாம் கண்களின் நடிப்பாகப் போய்விட, இருவரும் அத்தனை உணர்ச்சிகளையும் முகத்தில் கொண்டு வந்து காட்ட, ஸெட்டில் பார்த்தவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் உள்ளங்களில் 'காதல்' அரும்புவதை உணர்ந்தார்கள்.

டைரக்டர் 'குட், வெரிகுட்' என்றெல்லாம் பாராட்ட, சேட் ஆகாயத்தில் மிதந்து கொண்டிருந்தார்.

அந்தக் காட்சிகள் இரண்டு நாள் தொடர்ந்து நடந்தன. ஒவ்வொரு நாளும் ஷூட்டிங் பார்க்கும் கூட்டம் அதிகம் கூடியது.

சாமண்ணா — சுபத்ரா நடிப்பு பார்ப்பவர் மனதில் ஓர் ஆழமான முத்திரையை ஏற்படுத்தி மறக்க முடியாத காட்சியாக மனத்தில் பதிந்துவிட்டது.

மூன்றாம் நாள் சுபத்ரா சாமண்ணாவை இரவுச் சாபபாட்டுக்குத் தன் வீட்டுக்கு அழைத்தாள்.

ஹூக்ளிக் கரையில் பெரிய நந்தவனத்துடன் மாளிகையாக இருந்தது சுபத்ராவின் வீடு. இளநீலத்தில் பட்டு உடுத்தி, நகை ஏதும் இல்லாமல், தலையை அருவியாக அவிழ்த்து விட்டிருந்தாள். அவளுடைய இயற்கை வடிவம் செயற்கையோடு கைகோத்துக் கொண்டு ஒரு மாற்று அழகு காண்பித்தது.

சொப்பனத்தில் புகுந்தது போன்ற உணர்வில் சாமண்ணா மயங்கினான். சில மாதங்கள் முன் வரை வறுமையில் வாடியவனுக்கு, அழுக்கு வேட்டியும், ரெடிமேட் கதர்ச்சட்டையும் போட்டு அலைந்த அவனுக்கு, இப்படி ஓர் அரண்மனை யோகம் கிடைக்கும் என்று நினைக்கவே இல்லை! அவளோடு அரைகுறை

ஆங்கிலத்தில் பேசினுன். அதை அவள் ரசித்தாள்! அவளுடைய சிரிப்பு காரணத்தோடும் வந்தது. காரணம் இல்லாமலும் வந்தது. ஒரு கோப்பையில் மதுவும், தாம்பாள வெள்ளித் தட்டில் சைவ உணவும் பரிமாறினுள் அவள். விருந்து முடிந்து பத்து மணிக்குமேல் சுபத்ராவிடம் விடை பெற்று, காரில் ஏறச் சென்றபோது உடம்பு காற்றில் மிதந்தது. எதை நினைத்தாலும் 'கிளுகிளு'த்தது. வாழ்க்கையில் இவ்வளவு உல்லாசங்கள் இருக்கின்றனவா?

பத்து நாள் போனதே தெரியவில்லை. பொழுது எப்போது முடிந்தது எப்போது ஆரம்பமாகியது என்பதே புரியவில்லை. ஆனந்தமயமான நினைவுத் தொடரில் சஞ்சரித்தான்! சுபத்ரா பேசினுள், சிரித்தாள். காதலோடு பார்த்தாள். ஆலிங்கனம் செய்து கொண்டாள். அத்தனை உணர்வுகளும் அவனைப் புதுமையாக்கிக் கொண்டிருந்தன.

பதினேராம் நாள்தான் டூயட் எடுக்க ஆரம்பித்தார்கள். கிட்டத்தட்ட முக்கால் இந்தி ட்யூனில் பாட்டு. அவனுக்கு சுலபமாக முடிந்தது. சுபத்ரா தமிழ் வார்த்தையில் கஷ்டப்பட்டாள்.

இருவரும் ஒரே ஒரு அடியைப் பாட, பக்கத்தில் அனைத்து வாத்தியக்காரர்களும் நின்று கொண்டே வாசிக்க, பாடல் பதிவு நடந்து கொண்டிருந்தது.

சின்ன இடைவேளைவந்தபோதுதான் நாற்காலியில் அமர்ந்திருந்த அவனை, 'ஸார்' என்று ஒரு சிப்பந்தி அழைத்தான். திரும்பிப் பார்த்தபோது ஸெட்டில் யாரோ வந்திருப்பது தெரிந்தது. யார் அது?

சகுந்தலா வந்து கொண்டிருந்தாள்.

"வாங்க!" என்று ஒரு அலட்சியத்தோடு நாற்காலியைக் காட்டினுன் சாமண்ணு.

"எப்ப வந்தீங்க? எங்க இப்படி திடுதிப்புன்னு?" என்று காற்றை நோக்கிக் கேட்டான்.

"அப்பா ஒரு மெடிகல் கான்பரன்ஸுக்காக வந்தார். நானும் வந்துட்டேன்!" என்று கூறிய சகுந்தலா, "நான் இங்கே ஏன் வந்தேன் தெரியுமா?" என்று குழந்தைத்தனமாகப் புதிர் போட்டு நிறுத்தினுள்.

"கல்கத்தா பார்க்கத்தானே?" என்ருன் அவன்.

"இல்லே! கல்கத்தா பார்க்கிற சாக்கில்...." என்று இழுத்தாள்.

"சாக்கில்?" என்று கேள்வியைத் தூக்கி நிறுத்தினுன் சாமண்ணு.

அவள் பொய்க் கோபமாகச் சிணுங்கி, "புரியலையா? சொல்லட்டுமா?" என்று கேட்டாள்.

"ம்...." என்ருன்.

"இலுப்புச் சட்டியும், வாளியும் வாங்க வந்திருக்கேன்!" என்று கூறிக் கலகலவென்று சிரித்தாள்.

"அதற்கு இவ்வளவு பணத்தைச் செலவழித்துக்கொண்டா?" என்றான்.

சகுந்தலா பேசவில்லை.

ஸெட்டை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்த சாமண்ணா, வந்திருந்த உதவியாளரிடமிருந்து அடுத்த உரையாடலைக் கேட்டுக் கொள்ள ஆரம்பித்தான்.

இரண்டு மூன்று முறை நெட்டுருச் செய்துவிட்டு, அவன் சகுந்தலாவைப் பார்த்தபோது தலைகுனிந்து நின்றிருந்த அவள் முகத்தில் நிழலிட்டிருந்தது.

"அப்புறம் எத்தனை நாள் இருப்பீங்க?" என்றான் ஒரு பொதுக் கேள்வியாக.

"இரண்டு நாள் இருப்போம்" என்றாள்.

"முடிஞ்சா வந்து பார்க்கிறேன். இங்கே ரொம்ப பிஸி! நேரம் கிடைக்கிறதில்லை. இன்னொரு படம் உடனே இங்கே 'புக்' ஆகும் போல இருக்கு" என்றான்.

காரியதரிசியை அழைத்தான். "இவர்தான் என் ஸெக்ரிடரி" என்று அறிமுகப்படுத்தினான்.

"இவங்க அட்ரஸ் வாங்கி வச்சுக்க, இவங்களுக்கு நம்ப ஷூட்டிங் தேதி, ஸெட், ஃப்ளோர் எல்லாம் எழுதிக் கொடு" என்று அவனிடம் கூறிவிட்டு எழுந்து, அடுத்த காட்சிக்காக ஸெட்டுக்குள் சென்றான்.

# 24

ஷூட்டிங் முடிந்ததும் சாமண்ணு சோர்வுடன் ஸெட்டுக்கு வெளியே வந்தபோது, அங்கே இன்னும் சகுந்தலா காத்திருப்பதைப் பார்த்தான். கண்கள் சற்று இடுங்கின. ''இங்கேயா இருக்கீங்க?'' என்ருன்.

''ஆமாம் சாமு! உங்களுக்காகக் காத்துக்கிட்டு'' என்ருள்.

''எனக்கா! எனக்கு எங்கேஜ்மெண்ட் இருக்கே!''

சகுந்தலா முகம் சுண்டியது.

''இன்னிக்குத் தவிர்க்க முடியாத வேலை இருக்கு. இன்னெரு நாள் பார்ப்போமே!''

''ஊஹூம், இன்னிக்கு இப்போ என் கூடத்தான் வரணும்.''

அவள் கண்கள் கொஞ்சுதலாய்க் கெஞ்சி நின்றன.

''இல்லே, சகுந்தலா! இப்போ நான் நிச்சயம் ஒரு முக்கியஸ்தர் வீட்டுக்குப் போகணும். ரொம்ப எதிர்பார்த்துக்கிட்டிருக்காங்க. இன்னெரு சினிமா பற்றிப் பேசப் போருேம். நான் வரேன்! அப்புறம் சந்திக்கலாம்.''

கையை இரண்டு ஆட்டு ஆட்டிவிட்டு அடுத்த வாசலை நோக்கி விரைந்தான்.

சகுந்தலா வெளியேறினுள். வாசலில் முன் இரவுக் காற்று குளுமையாக அவளைக் கோதியது. சற்று நேரம் காற்று வாங்கி நின்ருள். பிறகு சற்று நடந்து டாக்ஸி தேடினுள்.

பின்னுல் ஒரு கார் வந்து கொண்டிருப்பதை வெளிச்சம் அறிவித்தது. சகுந்தலா ஒதுங்கி நின்ருள்.

கார் அவள் அருகே சற்று மெதுவாகிப் போக, சாமண்ணு அதில் உட்கார்ந்திருப்பதை அரைக் கண்ணுல் கவனித்துக் கொண்டாள்.

சகுந்தலாவின் கண்கள் சாமண்ணு அருகில் இருந்த இரண்டாவது நபரையும் கவனிக்கத் தவறவில்லை. அது சுபத்ரா முகர்ஜி என்று தெரிந்ததும் மனத்தில் சுருக்கென்று முள் தைத்தது. குனிந்து கொண்டே நடந்தாள்.

காலையில் டாக்டர் ராமமூர்த்தி தங்கியிருந்த பார்க் ஹோட்டலுக்கு சேட் வந்து சேர்ந்தார்.

''நாளை ராத்திரி ஒரு டின்னர் அரேஞ்ச் பண்ணியிருக்கேன். நீங்க அவசியம் வரணும்!'' என்றார்.

ராமமூர்த்தி, ''எதுக்கு இதெல்லாம்? வேணும்!'' என்று மறுக்க, சேட் வற்புறுத்த, ராமமூர்த்தி கடைசியில் ஒத்துக் கொண்டார்.

நகர்ப்புறத்தில் 'டோவர் காஸில்' என்ற பெரிய பங்களாவில் அந்த விருந்து நடந்தது.

தோட்டம் சூழ்ந்த மாளிகை, அன்றிரவு அதில் மின்சாரப் பூக்களாகச் சொரிந்தன.

காஸ் விளக்குகள் மின்ன, தோட்டத்துப் புல் வெளியில் துணி போர்த்திய மேஜைகளில் விருந்து.

இரு வரிசைகளில் பிரமுகர்கள் உட்கார்ந்து அறிமுகம் எல்லாம் ஆகிவிட்ட நிலையில் சற்று உரக்கப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சாமண்ணுவுக்குப் பக்கத்தில் டாக்டர் ராமமூர்த்தி டைகட்டி அசல் ஐரோப்பிய நாகரிகத்தில் உட்கார்ந்திருந்தார்.

அவரை அடுத்து சகுந்தலா, அழகான மெஜன்டா நிறத் துகிலில் அப்சரஸ் போல மின்னிக் கொண்டிருந்தாள்.

டாக்டர் ராமமூர்த்தி, ''என்ன சாமண்ணு, பேசாமல் இருக்கே?'' என்று கேட்டதும், ''அன்னிக்குப் பார்த்தீங்களே ஷூட்டிங், எப்படி இருந்தது? அப்பாகிட்டே சொல்லுங்க'' என்றான் சகுந்தலாவைப் பார்த்து ஒப்புக்காக.

''பிரமாதம் அந்த ஸெட் அப்படியே தத்ரூபமா காடு போல இருந்தது.''

சகுந்தலா ஓரமாகக் கண்ணை ஒதுக்கி அவனைப் பார்க்க, அவன் புன்னகை மாறாமல் அவளைப் பார்ப்பது இன்னும் கொஞ்சம் ஆச்சரியத்தை விளைவித்தது.

சுபத்ரா முகர்ஜி ஒரு ஸீட் தள்ளி அமர்ந்திருந்தாள். பாஷை தெரியாததால் இடைஇடையே செயற்கையாய்ச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

''டாக்டர் ஸார், உங்களுக்குத்தான் நான் நன்றி சொல்லணும். நீங்க மட்டும் சாமண்ணுவை எங்களுக்கு அனுப்பி வைக்கலேன்னு இவ்வளவு பெரிய நடிகர் எங்களுக்கு வேறே யார் கிடைச்சிருக்கப் போறாங்க? அவர் நடிப்பைக் கண்டு

எல்லோரும் மலேச்சுப் போருங்க'' என்று பரவசமாகக் கூறினார் சேட்.

''ஸெட்டுலே வந்து நின்னுர்னு எல்லார் பார்வையும் அவர் பேரிலேதான்'' என்ருர் துணை டைரக்டர்.

சாமண்ணு எல்லோரையும் பார்த்துவிட்டு சகுந்தலா பக்கம் திரும்பினன்.

''சாமண்ணு பற்றி ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு! ஊரிலே போய் சொல்றேன்'' என்ருர் ராமமூர்த்தி.

''நிச்சயம் சொல்லணும். அதுக்கு முன்னுடி நீங்க ஒருமுறை ஸெட்டுக்கு வரணும். ராஜ தர்பார் போட்டிருக்கோம். அதை அவசியம் வந்து பார்க்கணும். காலேயிலே கார் அனுப்பறேன்'' என்ருர் சேட்.

சாமண்ணு அன்று படுக்கைக்குச் செல்லும்போது மணி பதினென்று. உறக்கம் வரவில்லே. அந்த பாண்டு இசையும், சிரிப்பும், பாட்டும், பேச்சும், பார்ட்டியின் அத்தனை ஜொலிப்புகளுமே அவன் உணர்வில் ஊடுருவியிருந்தன.

இத்தனை களிப்புகளுக்கும் மூல புருஷன் தான்தான் என்று எண்ணும்போது சாமண்ணுவின் மனம் சிறகடித்தது.

சில மாதங்களுக்குமுன் தனது வாழ்க்கை எப்படி இருந்தது என்று எண்ணிப் பார்த்தான். துவைத்த சட்டை மீது அழுக்குத் துண்டைப் போர்த்திக் கொண்டு தெருக்களில் அலேந்தது, மிளகாய்க் காரத்துடன் ஓட்டலில் சாப்பிட்டது. எல்லாரும் 'டா' போட்டுப் பேசியது, குழைந்து பதில் சொன்னது, ராத்திரி வெறும் கட்டையைத் தலேக்கு வைத்துக் கொண்டு படுத்துறங்கியது....

'அந்த சாமண்ணுவா நான்? இப்போது எப்படி மாறிவிட்டேன்! என்னே வாட்டிய வறுமையும் அதை ஒட்டிய துன்பங்களும் இப்போது எங்கே போயின?

இன்று இந்த கல்கத்தாவின் பிரபுக்களும் பிரமுகர்களும் என் நட்பைத் தேடி வருகிருர்கள்! என்னேடு சிநேகமாயிருப்பதை ஒரு சமூக அந்தஸ்தாகக் கருதுகிருர்கள்.

அவனது மற்ருெரு மனம் அப்போது குறுக்கிட்டுப் பேசியது. 'சாமு! இதெல்லாம் உனக்கு என்ன சும்மா கிடைக்கின்றனவா! உன்னிடம் திறமை இருக்கிறது. வித்தை இருக்கிறது. அதை ரசித்துத்தான் உன்னிடம் எல்லோரும் பணத்தைக் கொண்டு வந்து கொட்டுகிருர்கள்!

இதோ இந்த டாக்டர் ராமமூர்த்தியே உனக்கு எவ்வளவு எட்டாத உயரத்தில் தெரிந்தார்!

இந்த சகுந்தலாவே... ஆமாம், இவளே எத்தகைய தேவலோக அந்தஸ்தில் தெரிந்தாள்!

ஸெட்டில் ராஜ தர்பார் ஜொலித்துக் கொண்டிருந்தது உள்ளே நுழைந்த ராமமூர்த்தி பிரமிப்பில் மூழ்கினுர்

உயரமும் விசாலமும் நிறைந்த தர்பார். தங்க முலாம் பூசிய விதானங்கள், சாமண்ணாவும் சபா பிரமுகர்களும் அசல் சரித்திர கால புருஷர்களாகத் தெரிந்தார்கள்.

'ஜய விஜயீ பவ' கோஷங்களுக்கு இடையே சாமண்ணா தர்பாருக்குள் நடந்து வந்தான்.

'அடே சாமண்ணா! உன்னிடம் இவ்வளவு திறமை இருக்கா?" என்று நினைத்தார் ராமமூர்த்தி.

சகுந்தலாவுக்குக் கண்களில் ஈரம் பனித்தது.

தாள வரிசைகள் முழங்க, இரு மின்னல் பெண்கள் நீள சடையும், சலங்கையுமாய் ராஜசபை நடுவில் பளீர் பளீர் என்று ஒளிப் பின்னலாக ஆடி வர அதைப் படமாக்கினார்கள்.

குறுநகை, உவகை, பரவசம், ஆனந்தம், புன்சிரிப்பு, முறுவல், மந்தகாசம் இதெல்லாம் ஒரே உணர்ச்சி அல்ல. அவற்றுக்குத் தனித் தனித் துல்யங்கள் உண்டு என்று காட்டியது அவன் நடிப்பு.

''பிச்சு உதர்றான்'' என்றார் ராமமூர்த்தி பரவசமாகி.

''ஆமாப்பா! இவ்வளவு பிரமாதமா நடிப்பார்னு யாருமே எதிர்பார்க்கலை'' என்றாள் சகுந்தலா ஆச்சரியக் குரலில்.

''பெண்ணே, நீ யார்?'' என்று துஷ்யந்த சாமண்ணா எதிரில் நின்ற பெண்ணைக் கேட்க,

சுபத்ரா முகர்ஜி திடுக்கிடுகிறாள்.

''மகாராஜா என்னைத் தெரியவில்லை? நான்தான் சகுந்தலை" என்று பதில் சொல்லுகிறாள்.

''யாரம்மா நீ? புதிர் போடுகிறாயே!'' என்று துஷ்யந்தன் வினவுகிறான்

''முன்பு ஒருநாள் தங்கள் அரண்யத்தில் வேட்டையாட வந்தபோது கண்வரிஷி ஆசிரமத்தில் என்னைச் சந்திக்கவில்லையா?''

சுபத்ராவின் கண்களும் வார்த்தைகளும் கவலையைத் தெரிவிக்கின்றன.

''கண்வ ரிஷி ஆசிரமமா? ஆமாம், வந்தேன். ஆனால் உன்னைப் பார்த்த நினைவு இல்லையே!''

''நான் அவரது வளர்ப்புப் பெண்!''

''சரி, அதனால் என்ன?''

மிகச் சாதாரணமாகக் கேட்டான் துஷ்யந்தன்.

''தாங்கள் என் காலிலிருந்து முள்ளை எடுக்கவில்லை?''

''முள் எடுத்தேனா!''

''கண்வ ரிஷி ஆசிரமத்தில் தங்கி என்னோடு பழகினீர்களே. அதைக் கூடவா மறந்துவிட்டீர்கள்?''

சாமண்ணாவின் பார்வையே சந்தேகம் காட்டியது.

''பழக மட்டும் செய்யவில்லை. என் மீது நேசம் வைத்தீர்கள். 'உன்னை விரும்புகிறேன். உன் மீது பிரேமை கொண்டிருக்

கிறேன்' என்றெல்லாம் சொன்னீர்கள்.''

"என்ன?'' சாமண்ணாவின் முகத்தில் ஒரு பழியை ஏற்க மறுக்கும் துடிப்பு தெறித்து வந்தது.

"நான் உன்னை நேசித்தேனா? ஏதாவது கனவு கண்டாயா, பெண்ணே?''

"இல்லை. என் மீது பிரேமை வைத்தீர்கள். என்னுடன் உல்லாசமாகத் திரிந்தீர்கள். சல்லாபம் செய்தீர்கள்.''

"என்ன!'' என்று சாமண்ணா கேட்டபோது முகத்தில் ஒரு கோபக் கீற்று ஜ்வாலையிடுவது தெரிந்தது.

'ஆ! அற்புதம்' என்கிற பாவனையில் பலர் கையைத் தூக்கினார்கள். ராமமூர்த்தி சகுந்தலா கையை அழுத்தினார்.

"பெண்ணே! உனக்கு புத்தி பேதலித்துவிட்டதா? பார்! என்னைச் சரியாகப் பார்! கவனித்துப் பார்! வீணாக என் மீது பழி போடாதே!''

டக்கென்று ஆத்திர மிகுதியில் சாமண்ணா எழுந்தபோது குலுங்கிய அவனது அணிமணிகளில் கூடப் பதற்றம் தெரிந்தது.

"இல்லை மகாராஜா! நிஜம்! நிஜம்!''

"நிஜம் என்பதற்கு சாட்சி?''

"என் தோழி அனுசூயா! இதோ இருக்கிறாள்.''

"மன்னர் மன்னா! தாங்கள் என்னையும் மறந்துவிட்டீர்களா! என்னைத் தூது அனுப்பித்தானே சகுந்தலையைத் தங்கள் பக்கம் வரவழைத்தீர்கள்!''

"பொய், பொய். எல்லாம் பொய்! வீணாக ஒரு மன்னன் மீது பழி சுமத்துகிறீர்கள். நான் நம்பமாட்டேன்.''

"மகாராஜா! தாங்கள் என்னை காந்தர்வ விவாகம் செய்து கொண்டபோது அடியாளுக்குப் போட்ட மோதிரம் என்னிடம் உள்ளது!''

"நான் மோதிரம் போட்டேனா? ஹாஹா! எங்கே அதைக் காட்டுங்கள்.''

சுபத்ரா, தன் விரலிலிருந்து மோதிரத்தைக் கழற்றப் பார்க்கிறாள். விரலில் மோதிரம் இல்லை!

"ஐயோ! அனுசூயா! மோதிரம் எங்கே? எங்கே அந்த மோதிரம்?''


"ஹும்! கொடுத்திருந்தால்தானே இருக்கும்!''

"ஆஹ்ஹாஹ்ஹா....' துஷ்யந்தன் சிரிப்பு ஏளனத்தோடு மிதந்தது.

சகுந்தலை மூர்ச்சையாகிக் கீழே விழுகிறாள்.

சுற்றி நின்றவர்கள் வெறும் நடிப்பென்று எண்ணினர். மூர்ச்சை கலைந்து இதோ எழுந்திருப்பாள் என்று எதிர்பார்த்தனர். வெகு நேரமாகியும் சகுந்தலையாக நடித்த சுபத்ரா முகுர்ஜி எழுந்திருக்கவில்லை. திடுக்கிட்ட டைரக்டர் அவளை நோக்கி விரைந்தார்.

# 25



சாமண்ணா அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் போனபோது சுபத்ரா முகர்ஜிக்கு மூர்ச்சை தெளிந்திருந்தது. ஆனாலும் மெலிந்து வாடிப் போயிருந்தாள். ஈனசுரத்தில் பேசினாள். உதடுகள் தெளிவில்லாத ஓசைகளை விடுத்தன. நகரின் புகழ் பெற்ற டாக்டர் மக்டனால்ட் துரையே வந்து அவள் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "'பல்ஸ்' சரியாக இருக்கிறது. யூ ஆர் ஆல் ரைட்!" என்று சொல்லி, விட்டுப் போனார். இரண்டு ஐரோப்பிய நர்சுகள் எந்நேரமும் படுக்கை அருகிலேயே இருந்தார்கள்.

சாமண்ணா உள்ளே நுழைந்தபோது யாரோ வசீகரமான வாலிபன் ஒருவன் கட்டிலுக்கருகில் உட்கார்ந்திருந்தான். கிருதா மீசை வைத்திருந்தான். அவனைப் பார்த்தபோது சாமண்ணாவுக்கு ஏதோ மாதிரி இருந்தது. நெஞ்சில் உஷ்ணமாக ஜ்வாலை வீசியது.

யார் அவன்?

சுபத்ராவைத் தொட்டு அந்நியோன்யமாய்ப் பேசுகிறான். ஜோக் அடித்துச் சிரிக்கிறான். அவளும், 'கோஷ்! கோஷ்!' என்று கொஞ்சி அழைத்து நெருக்கம் கொண்டாடி இழைகிறாள். எல்லோரும் அவனுக்கு மரியாதை கொடுக்கிறார்கள்.

செக்கச்செவேர் என்று நிறம். திண்மையாகப் புருவம், பளபள என்று வாரிவிட்ட கிராப்!

சாமண்ணா தெரிந்தவர்களிடம் நாசூக்காக விசாரித்த போது, அவன் பெரிய ஜூட் மில் சொந்தக்காரர் மகன்

என்றும் சுபத்ராவிடம் ரொம்ப நாளாகப் பழக்கம் என்றும் சொன்னார்கள்.

இரவில் சுபத்ராவைப் பற்றிய இன்ப எண்ணங்கள் குமிழ் குமிழாகச் சுழித்து வந்தபோது அங்கங்கே அந்த இளைஞனின் நினைவு ஒரு முள் போலத் தோன்றி அந்தக் கண்ணாடிக் குமிழ்களைக் குத்திவிட்டுச் சென்றது.

இவர்களுக்குள் அப்படி என்ன உறவாக இருக்க முடியும்? தூரத்து உறவுக்காரனோ? காதலனா, கல்லூரித் தோழனா? யார் இவன்?

இரண்டாம்நாள் சாமண்ணா ஆஸ்பத்திரிக்குப் போனபோது, சேட் அவனைத் தனியாக அழைத்துப் போய், "சாமண்ணாஜி! சுபத்ரா எழுந்தாச்சு. இப்போ உடம்பு குணமாயிட்டுது! ரெண்டு நாளில் 'ஆக்ட்' பண்ணலாம்னு டாக்டர் சொல்லிட்டார். ஆனா தர்பார் சீனை இப்போ எடுக்க வேணாம். வேறே சீன் எடுங்கன்னு சொல்லியிருக்கார்."

"ஏனாம்?" என்றான் சாமண்ணா.

"அந்த சீன்லே உங்க நடிப்புதான் அவளை இந்த அளவுக்குப் பாதிச்சுட்டுதாம். அதனாலே அதைத் தள்ளிப் போடச் சொல்லி யிருக்கார்."

"அப்படியா?"

"ஆமாம். ஆஸ்பத்திரியில்கூட சுபத்ரா புலம்பிக்கிட்டே இருந்தாங்க. 'நான் நிஜ சகுந்தலை! நான் நிஜ சகுந்தலை'ன்னு. டாக்டர் இதை ஒரு அபூர்வ கேஸ் என்கிறார். அதாவது தான் நடிக்கிற பாத்திரமாகவே மாறி, தன்னை சகுந்தலையாகவே அந்த அம்மா நினைச்சுக்கறாங்களாம். அந்த நினைப்பில்தான் அன்னிக்கு மூர்ச்சை ஆயிட்டாங்களாம்!"

சேட் சொன்னதும் சாமண்ணாவுக்குப் பளிச்சென்று ஓர் எண்ணம் உதித்தது. ஒருவேளை தன்னை அவள் கணவனாகவே தீர்மானித்துக் கொண்டு, அந்தப் பிரமையில் துஷ்யந்தன் நிராகரிப்பதை உண்மையாக எடுத்துக் கொண்டு விட்டாளோ?


சாமண்ணா மனதுக்குள் பொங்கிய மகிழ்ச்சியை வெளிக் காண்பிக்கவில்லை. அன்று வார்டுக்குள் நுழையும்போது சுபத்ராவே அவன் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

மெல்லிய வெளிச்சத்தோடு அறை நிதானமாக இருந்தது.

சாமண்ணாவைக் கண்டதும், "வாங்க சாமண்ணா!" என்றாள் ஆர்வத்தோடு.

தன் அருகில் உட்கார்ந்திருந்த கோஷை அலட்சியமாகப் பார்த்து, "சரி, அப்புறம் பார்க்கலாம் கோஷ்" என்றாள்.

சாமண்ணா வந்ததும் அவள் மாறுதலாக நடந்துகொள்வதை கோஷ் புரிந்து கொண்டபோதிலும் எழுந்திருக்காமல் தயங்கினான்.



"எனக்கு ஓய்வு வேணும். நல்லாத் தூங்க விரும்பறேன். ஒரு ரெண்டு நாள் யாரும் வராம இருந்தா நல்லது" என்று ஆங்கிலத்தில் கூறினாள் அவள்.

கோஷ் அப்போதும் அமைதியாக உட்கார்ந்திருப்பதைக் கண்ட சுபத்ரா,

"கோஷ்! உங்களைத்தான் சொல்கிறேன்" என்று சற்று அழுத்தமாகக் கூறினாள்.

கோஷ் குமைவது தெரிந்தது.

இந்தச் சமயத்தில் சாமண்ணாவுக்கு அங்கிருப்பது உசிதமாகப் படவில்லை. அவன் திரும்பி வெளியே நடந்தான். "சாமு! நீங்க எங்கே போறீங்க? நீங்க இருங்க" என்றாள் சுபத்ரா. வெறும் குரலாக இல்லை அது! அவளுடைய ஆன்மாவின் அந்தரங்க தொனியாக ஒலித்தது.

"இல்லை சுபத்ரா! நான் அப்புறம் வரேன்..." என்று கூறிக்கொண்டே சாமண்ணா அந்த இடத்தைவிட்டு அகலப் பார்த்தான்.

"சாமு!" என்று தாபத்துடன் மேலும் தீர்க்கமாக அழைத்தது அவள் குரல்.

கோஷ் அவர்கள் இருவரையும் கடுமையாகப் பார்த்துவிட்டு வேகமாக எழுந்து வெளியேறினான்.

சுபத்ரா படுக்கையிலிருந்து நிமிர்ந்து உட்கார்ந்து சாமண்ணாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். அந்தப் பிடியின் அழுத்தத்தில் ஆயிரம் அந்தரங்கங்கள் இருந்தன. "சாமு.... சாமு.... நீங்க வந்தால்தான் எனக்கு மனசுக்கு இதமாக இருக்கு!" என்று குழந்தைபோல் சொல்ல, சாமண்ணா எதுவும் பேசாமல் அவளைக் கனிவோடு பார்த்தான்.

இருவரும் அந்தப் பரவச நிலையிலே சிறிது நேரம் மெய்ம் மறந்து இருந்தார்கள்.

ஏதோ சப்தம் கேட்டுக் கைகளை விடுவித்துக் கொண்ட சாமண்ணா திரும்பியபோது ராமமூர்த்தியும், சகுந்தலாவும் உள்ளே வந்து கொண்டிருந்தனர்.

"வாங்க! வாங்க!" என்றான் சாமண்ணா.

"வாங்க டாக்டர்! அன்னிக்கு நீங்கதான் எனக்கு முதலுதவி செஞ்சீங்களாம். ரொம்ப நன்றி" என்றாள் சுபத்ரா.

சகுந்தலா எந்த பாதிப்பும் இல்லாததுபோல் சலனமற்று நின்றாள்.

"ஊருக்குப் போகணும். வந்து நாளாச்சு" என்று பேச்சை ஆரம்பித்தார் ராமமூர்த்தி.

"டாக்டர் ஸார்! அதுக்குள்ள என்ன அவசரம்? மெதுவாப் போகலாம் இருங்க. ஊரைச் சுற்றிப் பார்த்தீர்களா? பேலூர் மடம், காளி கோவில் எல்லாம் பார்க்க வேண்டாமா? நான் வேணும்னு நாளைக்குக் கார் அனுப்பறேனே!" என்றான் சாமண்ணா.

''நீ என்ன சொல்கிறாய்?'' என்பதுபோல் சகுந்தலாவைப் பார்த்தார் டாக்டர்.

''என்ன சகுந்தலா, நான் சொல்றது?'' என்று கேட்டுக் கண்களைச் சிமிட்டி சகுந்தலாவிடம் மாறாத அன்பு கொண்டவன்போல் ஒரு பிரமையை உண்டாக்கினான் அந்த நடிப்புக் கலைஞன்.

சகுந்தலாவின் அடி உதட்டல் அரைகுறையாகச் சின்னப் புன்னகை தோன்றி மறைந்தது. சாமண்ணாவின் கபட நாடகம் அவளுக்குப் புரியாமலில்லை. ஆனாலும் தன் உணர்ச்சிகளை அவள் வெகு திறமையோடு மறைத்துக் கொண்டாள்.

''ஏன் சாமண்ணா, கதாநாயகி திரும்பற வரைக்கும் ஷூட்டிங் கிடையாதுதானே? நீயும் நாளைக்கு எங்களோடு வாயேன்" என்றார் ராமமூர்த்தி.

''நானா?'' என்று ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்த சாமண்ணாவின் குரலில் வறட்சி தெரிந்தது. சகுந்தலா ஒய்யாரமாகத் திரும்பி அர்த்தத்தோடு அவனை ஒரு பார்வை பார்த்தாள்.

''என்னது? என்ன விஷயம்?'' என்றாள் சுபத்ரா.

''ஒன்றுமில்லை. நாளைக்கு இவர்களோடு நான் ஊர் பார்க்க வரணுமாம்!''

''நோ, நோ, நீங்க என்னை விட்டுட்டுப் போயிடாதீங்க. நீங்க எப்பவும் என் பக்கத்திலேயே இருக்கணும். அப்போதான் நான் உடம்பு தேறி சீக்கிரம் ஷூட்டிங் வர முடியும்!'' என்றாள்.

''ரொம்ப சரி. சாமண்ணா உங்களோடயே இருக்கட்டும். நாங்கள் தனியாகவே ஊர் சுற்றிப் பார்த்து விடுகிறோம். என்ன சாமண்ணா! நீங்க என்ன சொல்றீங்க?'' என்று கேட்டார் ராமமூர்த்தி. 'சரி' என்பதுபோல் தலையாட்டிய சாமண்ணா அவர்களை ஜாடை காட்டி வெளியே அழைத்துப் போனான்.

''எதுக்கும் நான் சாயங்காலம் இவளுக்கு டிமிக்கி கொடுத்துட்டு வந்துடப் பார்க்கறேன். இன்னும் ஒரு அவுட்டோர்தான் பாக்கி. அப்புறம் இவளையும் இந்தக் கல்கத்தாவையும் விட்டுட்டு வந்துடறேன், பாருங்கோ!'' என்றான்.

ராமமூர்த்தி அர்த்தமில்லாமல் தலையாட்டிப் புறப்பட்டார்.

வாசல்வரை அவர்களைக் கொண்டுபோய் விட்டு வந்தான் சாமண்ணா.

அன்று இரவு சாமண்ணா உறங்கவில்லை. தங்க மயமான சொர்க்கம் அவன் மீது இறங்கியிருந்தது. எங்கே திரும்பினாலும் தெய்வ வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. அவ்வளவு இன்பத்தையும் தாங்க முடியாமல் திணறினான் சாமண்ணா.

சுபத்ரா அவன் கையைப் பற்றிய இடம் இன்னும் குளிர்ந்து கொண்டிருந்தது. அதிலிருந்துதான் அத்தனை ஆனந்தங்களும் உற்பத்தி ஆகின. அமிருதத் துளிகள் சுரந்து உடல் எங்கும் பரவி நின்றன.

'நீங்கதான் எனக்குத் துணை' என்று அவள் கூறிய வார்த்தை செவிகளில் தேனாய் ஒலித்தது.

"என்னை விட்டுப் போயிடாதீங்க, சாமண்ணா."

ஒருநிலை கொள்ளா ஆனந்தம் அவனது சரீரத்தை ஆட்கொண்டு சுழற்றுவது போலிருந்தது.

சுபத்ராவா! அந்தக் கல்கத்தா ராணியா? வங்கத்துக் கனவு சுந்தரியா? அவளா என்னை நேசிக்கிறாள்? அவளா இப்படியெல்லாம் பேசுகிறாள்? நினைக்க முடியவில்லையே!

ஏன்? என்னிடம் திறமை இருக்கிறது. தகுதி இருக்கிறது. அந்தஸ்து இருக்கிறது. அதனால்தான் சுபத்ரா என்னிடம் இப்படி மயங்கிக் கிடக்கிறாள்! எப்படிப்பட்ட பெரியவங்க, ஜமீந்தாருங்க சமஸ்தான ராஜாக்கள் எல்லாம் அவள் காலடியில் விழத் தயாராயிருக்கிறபோது அவள் என் காலைப் பிடிச்சு கெஞ்சத் தயாராயிருக்கிறாள்!


காலையில் எழுந்ததும் ராமமூர்த்திக்குக் கார் அனுப்ப வேண்டிய நினைவு வந்தது.

சகுந்தலாவின் சலனமற்ற முகத்தை ஆராய்ச்சியோடு எண்ணிப் பார்த்தான்.

ஹூம்! இந்தப் பேரழகி சுபத்ராவின் முன்னால் அவள் ஒன்றுமே இல்லை. அவனுக்கு உயர் ரக ஆப்பிளே கிடைத்தாயிற்று. இனிமேல் சொந்த ஊரில் விளைந்த கிச்சிலிப்பழம் இனிக்குமா?

மணி அடித்து டிரைவரை அழைத்தான்.

# 26



‘விக்டோரியா மெமோரியல்’ பார்த்துவிட்டு, அப்படியே எதிரில் மியூசியத்தையும் பார்த்தானதும், “அப்பா வீட்டுக்குப் போகலாமா?” என்றாள் சகுந்தலா.

“ஏன் இதுக்குள்ளவா களைச்சுட்டே!” என்று கேட்டார் ராமமூர்த்தி.

“இதிலெல்லாம் எனக்கு அவ்வளவா இன்ட்ரஸ்ட் இல்லை” என்றாள் சகுந்தலா.

“சரி, கொஞ்சம் லேக் பக்கம் பார்த்துட்டு அப்படியே வீட்டுக்குப் போயிடலாம், வா!” என்றார் ராமமூர்த்தி. அங்கிருந்து இருவரும் லேக் ஏரியாவுக்குப் போனார்கள்.

சகுந்தலா உற்சாகமில்லாமல் காணப்பட்டாள். காரிலேயே வீட்டுக்குப் போய் இறங்கிக் கொண்டார்கள்.

டிரைவர் மறுபடியும் இரண்டு மணிக்கு வந்து, “புறப்படலாமா?” என்று கேட்டபோது, “இல்லை; நீங்க வண்டியை எடுத்துட்டுப் போயிடுங்க! இன்றைக்கு இனிமே நாங்க வெளியிலே போகப் போறதில்லை!” என்றாள் சகுந்தலா.

“நாளைக்கு வரட்டுமா?” என்று கேட்டான் டிரைவர்.

“நாளைக்கும் வேண்டாம்.”

ஊர் சுற்றிப் பார்த்த களைப்பில் ராமமூர்த்தி அயர்ந்து தூங்கிவிட்டார். கண் விழித்ததும் கெடியாரத்தைப் பார்த்தார். “ஐயோ, நாழியாயிடுத்தே! வெளியே போகவேண்டாமா, சகுந்தலா?” என்று கேட்டார்.

சகுந்தலா சோபாவில் மௌனமாய் யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

''என்ன சகுந்தலா! ஏன் இப்படிப் பிரமை பிடிச்ச மாதிரி இருக்கே? என்ன ஆச்சு உனக்கு? சீக்கிரம் புறப்படு, கார் வந்துடும்'' என்றார் ராமமூர்த்தி.

''அப்பா! உடம்பு ஏதோ மாதிரி இருக்கு. மனசிலும் உற்சாகமில்லே. வண்டியைத் திருப்பி அனுப்பிச்சுட்டேன்'' என்றாள் சகுந்தலா.

''அப்படியா? பேலூர் மடத்துக்குப் போகணும்னு ஆசைப் பட்டியே!''

''ஆமாம். இப்ப வேணாம். இன்னொரு சமயம் வரும்போது பார்த்துக்கலாம்'' என்றாள். அவளுக்கும் ஆசைதான். ராம கிருஷ்ணரை நிறையப் படித்திருக்கிறாள். அவர் உபதேசம் ஒவ்வொன்றும் உபநிஷதம்போல இருப்பதாகச் சொல்லியிருக் கிறாள்.

''அம்மா பசி வந்தவுடன் என்னை எழுப்பு. சாப்பிடுகிறேன்" என்றது குழந்தை.

''உன் பசியே உன்னை எழுப்பிவிடும்'' என்றாள் தாய்.

அடேயப்பா! எத்தனை சுருக்கமாக அமைந்துவிட்ட தத்துவம் இது! இந்தச் சுருக்கத்திலும் எத்தனை சுலபமாக அர்த்தத்தை வெளிக் காண்பிக்கிறது!'

அந்த உயர்ந்த மகானின் பாதம் பட்ட பேலூர் மடத்தைப் பார்க்க வேண்டும் என்ற கட்டுக்கடங்காத ஆசை இப்போது அமுங்கிப் போயிருந்தது.

''என்ன சகுந்தலா இது! உன் உடம்புக்கு என்ன? மறுபடியும் எப்போ கல்கத்தா வரப் போகிறோம்? எப்போது பேலூர் பார்க்கப் போகிறோம்? டாகூர், டாகூர்னு உயிரை விடுவயே! அவர் வீட்டையாவது போய்ப் பார்க்க வேண்டாமா?'' என்றார் ராமமூர்த்தி.

மனசின் அடி ஆழத்தில் ஒரு 'தீ' கிழித்த மாதிரி இருந்தது. ஒருகணம் உடலில் பளிச்சென்று வெளிச்சம் பரவி அடுத்த கணம் அழிந்தது. ''அப்புறம் பார்த்துக்கலாம். அதுக்காகவே ஒருமுறை வந்தாப் போச்சு!'' என்று தீர்மானமாய்க் கூறிவிட் டாள். அவள் உற்சாகம் குன்றி வித்தியாசமாக நடந்துகொண்ட விதம் ராமமூர்த்திக்குக் கவலை தந்தது.

''வெளியே போயிட்டு வரலாம், வா. அப்புறம் எல்லாம் சரியாயிடும்'' என்றார்.

''இல்லேப்பா!''

''ஏம்மா, என்ன விஷயம்? மறுக்காமல் சொல்லு'' என்று ராமமூர்த்தி குனிந்து அவளது கையை எடுத்து நாடி பார்த்தார். நெற்றியில் கை வைத்தார்.

''காய்ச்சல் எதுவும் இல்லேயே!''

''உள்ளுக்குள் இருக்கப்பா!''

''மருந்து ஏதாவது?''

''வேண்டாம்.''

ஆஸ்பத்திரியிலிருந்து மாலையில் சுபத்ராவை விடுதலை செய்தார்கள். பளபளக்கும் ரோல்ஸ் ராய்ஸில் ஏறப் போனவளை நிறுத்தி, ப்ளாஷ் பல்புகள் பளிச்சிடப் பத்திரிகைக் காரர்கள் சுபத்ராவைப் படம் எடுத்துக் கொண்டார்கள்.

சுபத்ராவின் கார் அவளது வீட்டு வாசலில் போய் நின்ற போது அங்கேயும் நிருபர்கள் கூட்டம் அவளைச் சூழ்ந்து கொண்டது. புகைப்படக்காரர்கள் அவளைப் பல கோணங் களில் படமெடுத்ததும், "ஸார், நீங்களும் சேர்ந்து நில்லுங்க" என்று சாமண்ணாவை அழைத்து அவள் பக்கத்தில் நிறுத்திப் போட்டோ எடுத்தார்கள்.

"சமீபத்தில் தங்களுக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று சுபத்ராவிடம் கேட்டனர்.

"ஓ! அது என் வாழ்க்கையிலேயே பெரிய அனுபவம்! சாமண்ணாவின் நடிப்பு என்னை அந்த அளவுக்கு உணர்ச்சி வசப்படுத்திவிட்டது. அதென்னவோ, அந்த நடிப்பு அவரை நிஜ துஷ்யந்தனாகவே ஆக்கிவிட்டது. நான் அவரை நிஜ துஷ்யந்தன் என்றே நம்பிவிட்டேன்" இதைச் சொல்லிவிட்டு அவள் சாமண்ணாவைப் புன்னகையோடு பார்த்தாள்! எதையோ, எண்ணியவளாய்க் கலகலவென்று சிரித்தாள்.

"மன்னிக்கணும் மேடம்! நீங்களும்கூட நிஜ சகுந்தலையாவே ஆயிட்டீங்களே!"

"ஆமாம்."

"இனிமே நீங்க சாமண்ணா கூடத்தானே ஜோடியா நடிப் பீங்க?"

"ஆமாம்! எப்பவுமே இனி சேர்ந்தேதான் எல்லாமே..." என்று அந்த வார்த்தையை அவள் முடிக்குமுன்பே பலத்த கரகோஷம்!

போர்ட்டிகோவிலிருந்து எல்லோரும் உள்ளே போனார் கள். மேற்கத்தி முறையில் மது வழங்கப்பட்டது. கிராமபோன் இந்திப் பாடல்களைப் பாடியது. இரண்டு பெரிய பங்காக்கள் ஹாலில் ஆடின. சுபத்ரா விருந்தாளிகளிடையே அங்கங்கே நின்று உரையாடினாள். அவ்வப்போது சாமண்ணாவின் கை களைப் பிடித்துத் தன் இடுப்போடு அணைத்துக் கொண்டாள்.

சாமண்ணா அந்த ஸ்பரிசத்தில் காந்தர்வ பரவசமாகிக் காற்றில் மிதப்பதுபோல் உணர்ந்தான். தன் பழைய நிலை யைச் சற்றே எண்ணிப் பார்த்தான்.

அவனது கிராமம். அவனது குடும்பம். அவனது தாயார். அந்த வறுமை....

'சாமண்ணா! எப்படி ஆயிட்டேடா நீ! நான் பார்க்கக் கொடுத்து வைக்கலியேடா!'

விருந்து வைபவங்கள் எல்லாம் முடிந்து ஒவ்வொருவராக விடைபெறும்போது ராமமூர்த்தியும் சகுந்தலாவும் அவன் நினைவில் குறுகுறுத்தார்கள். 'அதான் காரை அனுப்பியாச்சே!

ஊரெல்லாம் சுற்றிக் காட்டச் சொல்லியாச்சே! இதுக்கு மேலே என்ன செய்துட முடியும்?' என்று ஆத்திரத்தோடு மனச்சாட்சிக்குப் பதில் கூறிக் கொண்டான்.

ஊருக்குத் திரும்பிய சகுந்தலா, சில நாட்கள் காய்ச்சலோடு இருநதாள். சாதாரண ஜுரம்தான்.

நாலு நாட்கள் படுக்கையிலேயே இருந்தபின் ஐந்தாவது நாள் மெல்ல எழுந்து தோட்டத்தில் உலாவத் தொடங்கினாள்.

"சகுநதலா! உனக்கு என்னம்மா, என்னம்மா?" ராமமூர்த்தி இதற்குள நூறு தடவை கேட்டுவிட்டார்.

"ஒன்றுமில்லை" என்ற சாரமற்ற சொல்தான் அவளிடமிருந்து வந்த பதில்.

பின்னொரு நாள் மாலை சகுந்தலா காரை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பியதும், 'சகுந்தலா பழைய நிலைக்கு வருகிறாள்' என்று எண்ணி மகிழ்ந்தார்.

முதலில் பிரதான சாலைக்குள் காரை ஓட்டிச் சென்ற சகுந்தலா அங்கிருந்து ஊரைவிட்டுச் சற்றே விலகினாள்.

ஓரிடத்தில் காரை நிறுத்திப் புதுக்காற்றை சுவாசித்தாள். வெளி இயற்கையின் மெலிதான மணம் அதில் பரவியிருந்தது. உள்ளே இருதயமெல்லாம் புகுந்து குளிர்ச்சி தருவதுபோல் இருந்தது. பிறகு திரும்பவும் கார் ஏறி மேலும் சற்று தூரம் சென்று அந்தக் கிளைப்பாதை ஓரம் நிறுத்தினாள். கீழே இறங்கியதும் கால் நடுங்கிற்று. அடிகளை மெதுவாக முன்னே வைத்து நடக்க ஆரம்பித்தாள்.

சாலை ஒரு அவிழ்ந்த நாடா போலக் கிடந்தது. மாலை மயக்கத்தில் இடதுபுறம் வயலும், பாறைகளும் நிழல் சித்திரங்களாய் மாறிக் கொண்டிருந்தன.

வலதுபுறம் மல்லிகைப் புதர்களிலிருந்து வந்த மணத்தில் சாமண்ணாவை நுகர்ந்தாள்.

ஏன் இந்த ஓடையில் துக்கம் நிரம்பியிருக்கிறது? இதைப் பார்த்ததும் என் மனத்தில் ஏன் சுமை ஏறுகிறது? இயற்கையே அங்கங்கு சோகங்களை ஒளித்து வைத்திருக்குமோ?

அந்த சகுந்தலைக் காட்சி பனியிலிருந்து விலகியது போல் பிரத்யட்சமாயிற்று.


....காலில் முள் குத்துகிறது. பாறையைப் பிடித்துக் கொண்டு நிற்கிறாள். 'சாமு' குனிந்து அந்த முள்ளை எடுக்கிறான்...

மேலே நடந்தாள்.

அந்தப் பிரதேசமே துக்கத்தை இறுக்கமாக வைத்திருப்பது போல் தோன்றியது.

"சாமூ!" என்று முனகலாய் அழைத்தாள். பழைய மாலைப் பொழுதில் இங்கே நிச்சிந்தையாய், நிர்மலமாய் அவனுடன் உலாவிய காட்சிகள் அவள் கண்ணீரில் கரைந்தன

# 27



அடிக்கடி பெருமூச்சு விட்டுக் கொண்டு நடந்தாள் சகுந்தலா. உலகத்து ஆனந்தத்தை, உல்லாசத்தை, இன்பத்தை யாரோ அப்படியே ஒரு போர்வை போல் உருவி எடுத்து விட்ட மாதிரி இருந்தது அவளுக்கு. இந்த மல்லிகை ஓடையில் முன்பெல்லாம் இருந்த ஒரு குதூகலமான உயிரோட்டம் இப்போது எங்கே?

உணர்ச்சியின் முதல் திவலை கண் ஓரம் வந்தது. சகுந்தலா தேம்பினாள். நெஞ்சு அடிக்கொரு முறை விம்மியது. அந்தத் தனிமையில், லேசாக இருள் சூழ்ந்து கொண்டிருந்த நிலையில் அவளால் மனம் விட்டு அழ முடிந்தது.

அவள் தனிமையில் நின்று அழுவதைச் சற்று தூரத்தில் ஒளிந்து கவனித்துக் கொண்டிருந்தது ஓர் உருவம். அதை சகுந்தலா கவனிக்கவில்லை. இருள் கனக்கவே, அதற்கு மேல் அந்த இடத்தில் இருப்பதற்கு அஞ்சியவளாய் காருக்குச் சென்றாள். உடனேயே அந்த உருவமும் லேசாக ஓடி அங்கே மரத்தோடு சாத்தி வைத்திருந்த சைக்கிளில் ஏறிக் காற்றாய்ப் பறந்தது.

அந்த உருவம் ராமமூர்த்திதான். தம் மகளுடைய போக்கில் ஏதோ துயரம் நேர்ந்திருப்பதை ஊகித்த அவர், அவள் தனிமையில் எழுந்து சென்றதுமே ரகசியமாகப் பின்தொடர்ந்து போய் மறைந்து நின்று கவனித்தார். இப்போது அவளுக்கு முன்னால் குறுக்கு வழியில் புகுந்து வேகமாய் வீடு போய்ச் சேர்ந்து விட்டார்.

வீட்டுக்குள் நுழைந்ததுமே, "மிஸ்டர் ராமமூர்த்தி!" என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டது.

"இன்னிக்கு என்ன கிளப்புக்கு வரல்லியா?" என்று கேட்டுக் கொண்டு வந்தார் பஞ்சாபகேசன்.

"இல்லே! எனக்கு உடம்பு சரியில்லே."

"அப்படியா! சரி; ஓய்வு எடுங்க! நான் வரேன்!" என்று போய் விட்டார் பஞ்சாபகேசன்.

சகுந்தலாவை எண்ணிய போது ராமமூர்த்திக்குக் கண்ணீர் வந்துவிட்டது. கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டார். இதற்குள் சகுந்தலா வந்து விட்டாள். அவள் காரிலிருந்து இறங்கும் போதே, "வந்துட்டியா சகுந்தலா! ஒரே கவலையாயிடுத்து!" என்றார்.

கல்கத்தாவுக்குப் போகும் போது அவளிடமிருந்த ஆனந்தம், அங்கே அவளிடம் காணப்பட்ட குதூகலம் எல்லாம் இப்போது மேகத்தில் மறைந்து விட்டன.

கல்கத்தாவைச் சுற்றிப் பார்க்கக் கூட விருப்பமின்றித் திரும்பி விட்ட விரக்தி, ஊருக்குத் திரும்பியதும் சோர்ந்து படுத்துவிட்ட நலிவு, காய்ச்சல், அவளை விட்டுப் போய்விட்ட அந்த நிரந்தர உல்லாசம், சிரிப்பு, புன்னகை — இதற்கெல்லாம் என்ன காரணம்?

இன்று மல்லிகை ஓடைப் பாதையில் அவள் தனிமையில் அழுது கொண்டிருந்ததைப் பார்த்த பிறகுதான் புரிந்தது.

காதல் என்ற மாயப்பிணி சகுந்தலாவையும் பற்றிக் கொண்டிருப்பதை உணர்ந்தார். அந்தக் காதல் யார் மீது?

'சாமண்ணா மீதா? படிப்பு வாசனையே இல்லாத அந்தப் பாமர நடிகனையா சகுந்தலா காதலிக்கிறாள்?

இவ்வளவு நாகரிகமாக வளர்ந்துள்ள சகுந்தலாவா சாமண்ணாவைக் காதலிக்கிறாள்?

தனக்குச் சற்றும் பொருத்தம் இல்லாத, அந்தஸ்து இல்லாத ஒரு சாதாரண நடிகனைத் தேர்ந்தெடுக்க அவள் மனம் எப்படி ஒப்பியது?

ஒருவேளை அவன் கலையில், நடிப்புத் திறமையில் மயங்கி விட்டாளா? ஆச்சரியம்!

சகுந்தலா! வாழ்க்கையில் எத்தகைய தவறு செய்து விட்டாய் நீ! உன் உள்ளத்தை நீ ஒருவனிடம் பறிகொடுப்பது தவறல்ல! அது இயற்கை, ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அந்த 'ஒருவன்' அதற்குத் தகுதியானவன்தானா என்பதைச் சிறிதாவது யோசித்துப் பார்த்தாயா? படித்த பெண்ணான நீயா இப்படிச் செய்வது?'

மறுநாள் மாலை டாக்டர் டிஸ்ட்ரிக்ட் கிளப்புக்குப் போயிருந்த போது அங்கே 'ஸில்வர் ஸ்க்ரீன்' என்ற பத்திரிகை வந்திருந்தது.



அதன் நடுப் பக்கத்தில் காணப்பட்ட வண்ணப் படம் ஒன்று அவருக்கு எரிச்சல் மூட்டியது.

சாமண்ணாவும், சுபத்ரா முகர்ஜியும் தம்பதி போல் ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு நின்றனர்.

கீழே ஆங்கிலத்தில்.... "இவர்கள் வெறும் திரை ஜோடி மட்டுமல்ல! வாழ்க்கை ஜோடியாகவும் திட்டமிட்டிருக்கிறார் கள்" என்று ஒரு வாசகம்.

'தூ' என்று அதைத் தூக்கி எறிந்தார். வெளியே போக எழுந்தவர் ஒரு கணம் தயங்கி அந்தப் பத்திரிகையைக் குனிந்து கையோடு எடுத்துக் கொண்டார். நேராக வீட்டுக்குப் போய் சகுந்தலாவின் அறைக்குள் எட்டிப் பார்த்தார். அவளை அங்கே காணவில்லை. சட்டென அவளது மேஜை மீது அந்தப் படத்தைப் பரப்பி வைத்துவிட்டு வெளியே வந்தார். 'சகுந்தலா அந்தப் படத்தைப் பார்ப்பாள். பார்த்துவிட்டுக் கண்ணீர் விடுவாள். சாமண்ணாவின் துரோகம் அவளைச் சுட்டுப் பொசுக்கும். உடம் பெல்லாம் தணலாய் தகிக்கும். அந்தத் துயரம் மிக்க உச்சத்தில் அவள் கண்ணீர் விடும்போது நாம் அருகில் இருக்கக் கூடாது. எங்காவது வெளியே போய்விட வேண்டும்''. உடனே சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளப் கட்டடத்தை நோக்கி விரைந்தார்.

கல்கத்தாவைப் பார்த்ததும் சிங்காரப் பொட்டு மலைத்து நின்று விட்டான். ஆடம்பரங்கள் நிறைந்த குபேரப் பட்டண மாக மின்னியது அது. நிறைய இங்கிலீஷ் காரிகள் உலாவி னார்கள். கார்கள் புதிது புதிதாக ஓடின. பெரிய மாளிகை களும் அடுக்கு மாடிக் கட்டிடங்களும், சாலை மரங்களும் கம்பீர மாக நின்றன. ஹௌரா பிரிட்ஜ் ஆச்சரியத்தைத் தந்தது. டிராம் கார் 'கிணுங், கிணுங்' என்று மணி அடித்தது.

தமிழர் பகுதியில் 'கோமள விலாஸ்' ஓட்டலில் ரூம் பிடித்து, குளித்து சாப்பிட்டு முடித்ததும் அங்கிருந்து கிளம்பி சாமண்ணாவைச் சந்திக்கப் புறப்பட்டு விட்டான். 'உனக்கு வாழ்வு தந்த நண்பனை வெறுங்கையோடு பார்க்கலாமா?' என்று கேட்டது உள் குரல். வழியில் வங்காளிப் பெண் ஒருத்தி ஆஸ்திரேலிய திராட்சையைக் கூவி விற்றுக் கொண்டிருந் தாள். அழகாயிருந்தாள். பேரம் செய்யாமல் வாங்கிக் கொண் டான்.

பிறகு சாமண்ணாவின் விலாசம் கண்டுபிடித்து அந்தப் பெரிய பங்களா முன்னால் போய் நின்ற போது காக்கிச் சட்டை காவல்காரன் தடுத்து நிறுத்தினான். உடம்பு குறுகிவிட்டது. "சாமண்ணாவின் நண்பன். கிராமத்திலிருந்து வந்திருக்கிறேன்" என்று சொல்லி அனுமதி பெற்றான். சிறிதும் பெரிதுமாகப் பல கார்கள் சாமண்ணாவுக்காகக் காத்திருந்தன. வராந்தாவில்

நின்ற இளைஞன் ஒருவன் சிங்காரப் பொட்டுவின் பெயரைக் கேட்டுச் சீட்டில் எழுதி வாங்கிக் கொண்டு, "இப்படி உட்கா ருங்க. கூப்பிடறோம்" என்று முகப்பு ஹாலில் உட்கார வைத் தான்.

மேலே பிரம்மாண்டமான 'சேண்ட் லியர்' ஒன்று காற்றில் அசைந்த போது சிறுசிறு கண்ணாடிக் குழல் சரங்கள் 'கிணு கிணு'த்தன.

எதிரே சுவரில் கங்கைக் கரைக் காட்சியின் ஓவியம் தத்ரூப மாக இருந்தது. சில்க் பிடிகளுடன் நீளநீளமாய் வெல்வெட் சோபாக்கள்! நடுவில் ஓவல் வடிவத்திலிருந்த மேஜையின் பளபளப்பு பிரதி பிம்பம் காட்டியது.

சிங்காரப் பொட்டுவுக்கு முன்பே வந்து ஹாலில் காத்திருந் தவர்கள் ஒவ்வொருத்தராக உள்ளே போய் வந்தார்கள். 'அண்ணன் சாமண்ணாவைப் பார்க்கவா இவ்வளவு கூட்டம்! அண்ணனுக்கு இவ்வளவு மரியாதையும் மதிப்பும் வந்து விட்டதா!'

மனசில் சந்தோஷம் புரண்டது.

'அடேடே, ஊரிலேர்ந்து வக்கீல் ஐயா, அவங்க சம்சாரம், குமாரசாமி, பாப்பா இவங்கல்லாம் வந்து பார்க்காமப் போயிட்டாங்களே!'

எல்லோரும் போன பிறகு சிங்காரப் பொட்டு கடைசியாக அழைக்கப்பட்டான்.

உள்ளே ஒரு நடையைத் தாண்டி அந்தப் பெரிய அறைக்குள் காலை வைத்ததும் சாமண்ணா தென்பட்டான். அந்தக் குசேல சாமண்ணாவுக்கும் இப்போது காணும் குபேர சாமண்ணாவுக் கும் எத்தனை வித்தியாசம்! மேனியில் பணக்காரத்தனம் தெரிந் தது. பாவனைகளில் பெரிய மனுஷத்தனம் இருந்தது. "வா சிங்காரம், எப்ப வந்தே? முன்னாடி ஒரு லெட்டர் போட் டிருக்கக் கூடாதா? ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பியிருப் பேனே? எல்லாரும் நல்லாயிருக்காங்களா? நாடகமெல்லாம் நடக்குதா?" என்று ஒரு தோரணையுடன் கேள்விகளை அடுக் கினான்.

மேஜைகளும் மற்ற சாதனங்களும் விதவிதமாய்க் குவிந் திருக்க, மேலே சில்க் பங்கா ஒன்று பெரிய ஊஞ்சல் போல ஆடியது.

"அண்ணே!" என்று கூறிய சிங்காரப் பொட்டுவுக்குச் சந்தோஷத்தில் நெஞ்சு விம்மியது. அவனையும் மீறித் தாவிப் போய் பரதன் வேடத்தில் ராமனைக் கட்டிக் கொள்வது போல் தழுவிக் கொண்டான்.

அப்படியே அவன் தோள் மேலே வளைத்துக் கை போட்டுக் கொண்டு யாரும் பார்க்காதபடி அடுத்த அறைக்குள் அழைத் துப் போய் விட்டான்.

''இந்தா சிங்காரம்! நம்மூர் மாதிரி உரக்கப் பேசாதே! நாட்டுப்புறம்னு நினைப்பாங்க! இப்படி உட்காரு. உன்னைக் காக்க வெச்சதுக்குக் காரணம் அவங்களை முதல்லே அனுப் பிச்சுட்டு உன்னோடு சாவகாசமாப் பேசணும்னுதான்.''

இன்னும் உணர்ச்சி வசத்தில் இருந்த சிங்காரப் பொட்டு, ''அண்ணே, நீங்க இப்படி இவ்வளவு பெரிய ஆளா வருவீங் கன்னு எனக்கு அப்பவே தெரியும். அதனாலேதான் நீங்க கல்கத்தா போறதை நான் தடுக்கலே. இப்போ உங்க வாழ்க்கை அடியோடு மாறிப் போச்சு! என் மகிழ்ச்சிக்கு அளவு கிடை யாது... எனக்குக் கொஞ்சம் இடம் கொடுங்க'' என்று சொல்லி திடீரென்று முழங்கால் போட்டு சாமண்ணாவின் கால்களைப் பற்றினான்.

''இந்தா! இந்தா! சிங்காரம்! என்ன இதெல்லாம்?'' என்று சாமண்ணா பதற்றத்தோடுகால்களை உயரத்தில்தூக்கிக்கொள்ள, பிடிவாதமாய் அவன் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டான் சிங்காரம்.

''உங்ககிட்டே ஒரு முக்கிய சமாசாரம் சொல்லணும் அண்ணே! அதுக்குத்தான் கல்கத்தா வந்திருக்கேன்!''

''சிங்காரம்! நீ எது வேணுமானாலும் சொல்லு. ஆனா இந்த 'அண்ணே அண்ணே' மட்டும் வேணாம். இப்ப சொல்லு. அதென்ன அப்படிப்பட்ட சமாசாரம்?'' என்று கேட்டான் சாமண்ணா.

''நீங்க நாடகத்தை விட்டுட்டுப் போனீங்களா? உங்க இடத்தை எனக்குத் தந்துட்டுப் போனீங்களா? நானும் அதிலே நடிச்சேனா? இப்போ பேரும் புகழுமா வாழறேன். பணங் காசும் நிறையவே கிடைக்குது. அண்ணன் புண்ணியத்திலே, (நாக்கைக் கடித்துக் கொண்டு) உங்க புண்ணியத்திலே நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்!'' என்றான் சிங்காரப் பொட்டு.

கையோடு கொண்டு வந்திருந்த திராட்சைப் பழங்களை எடுத்துச் சாமண்ணாவின் முன் வைத்தான்.

சாமண்ணாவின் இடது மூக்கோரம் ஒரு வரி தோன்றி சட் டென்று மறைந்தது. ''இதெல்லாம் எதுக்கு?'' என்று ஒரு பந்தாவோடு செல்லமாகக் கண்டித்தான்.

''இன்னிக்கு உங்களால்தானே எனக்கு இந்தப் பவிசெல் லாம்? அதை நான் மறந்துட முடியுமா?''

''சிங்காரம்! நீ எனக்கு ஒரு முறை விட்டுக் கொடுத்தாய். அதைப் போல நான் ஒருமுறை உனக்கு விட்டுக் கொடுக்கிறேன். ஒருத்தருக்கொருத்தர் பரஸ்பர உதவி! அவ் வளவுதானே?'' என்றான் சாமண்ணா.

''எனக்கு நீங்க செஞ்ச உதவி சாதாரணம் இல்லே. நீங்க போட்ட பிச்சையிலே வாழ்ந்துக்கிட்டிருக்கேன். இல்லாட்டி எனக்கு இப்படி ஒரு கௌரவம் கிடைச்சிருக்குமா?''

"சிங்காரம்! உன் அன்பை இங்கே இவ்வளவு தூரம் வந்து தெரிவிச்சிருக்கணும் என்கிறதில்லே. ஒரு காலணா கார்டு போட்டிருந்தாலே போதுமே! அதையே நான் பெரிசா நினைச்சிருப்பேன். நீ மேலுக்கு வந்தது, உனக்குப் புகழ் வந்தது எல்லாம் கேட்கிறப்போ சந்தோஷமா இருக்கு. நீ இன்னும் பிரமாதமா வரப் போறே பாரு! வாழ்க்கையிலே திறமை இருந்தா அதை யாரும் தடை போட முடியாது! இப்போ... இப்போ..."

பேச்சு பாதி யந்திரத்தனமாக வந்தது. அடிக்கடி சாமண்ணா வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இப்போ நீ ரொம்பக் களைச்சுப் போயிருப்பே! ஓய்வு எடுத்துட்டு அப்புறமா வா. சாவகாசமாப் பேசலாம். நான் கொஞ்சம் வெளியிலே போக வேண்டியிருக்கு. ஆமாம்; நீ எங்கே தங்கி இருக்கேன்னு சொன்னே?"

"கோமள விலாஸ்" என்றான் சிங்காரப் பொட்டு.

"ரைட்! நம்பளவங்களுக்கு அதுதான் சரியான இடம்! ஓட்டல்காரர் பாலக்காடு ஐயர்தான். எனக்குத் தெரிஞ்சவர் தான். ஓட்டல் பில் பணத்தை நான் கொடுத்திடறேன். நீ ஒரு சல்லிக் காசு செலவழிக்கக் கூடாது..."

"உங்க பிரியம்..."

"நிறையப் போடாதே! நாகரிகமா நடந்துக்கணும்" என்று கண் சிமிட்டி வலது கட்டை விரலை வாய்க்கு நேராய்க் காட்டினான் சாமண்ணா.

அந்த நேரத்தில் வாசலில் ஒரு ரோல்ஸ் ராய்ஸ் வந்து நிற்க, சாமண்ணா விரைந்து போய் காரின் பின் கதவைத் திறக்க, அதிலிருந்து பேரழகி சுபத்ரா முகர்ஜி சொகுசாக இறங்கி வந்தாள்.


நீற நிறத்தில் பனாரஸ் பட்டு உடுத்தியிருந்தாள். பவுன் களை அடிக்க, சந்திரன் முளைத்தது போல ஒரு தோற்றம்.

சிங்காரப் பொட்டுவின் கண்கள் சலனமற்று நின்றன. உள் மனசு பேசியது! "அடேங்கப்பா! என்ன அழகு? அசல் அப்சரஸ் மாதிரில்லே இருக்காங்க! இவங்க முன்னாலே நம்ப ஜில்ஜில் ரமாமணி ஒரு தூசு மாதிரி! இவங்களை மட்டும் ஊருக்கு அழைச்சிக்கிட்டுப் போய் மேடைலே ஏத்திட்டா, அத்தனை பயகளும் சொக்கிப் போயிடுவானுக!"

சாமண்ணாவும் சுபத்ராவும் கைகோத்துப் படியில் ஏறினார்கள்.

"மெதுவா நடங்க, மெதுவா!" என்று சாமண்ணா சொல்லிக் கொண்டிருந்தான். இருவரும் அந்தரங்க அறைக்குள் சென்று மறையும் வரை சிங்காரப் பொட்டு காத்திருந்தான். கண் கொட்டாமல் அவர்களையே பார்த்து நின்றான்.

# 28



சாமண்ணுவும் சுபத்ராவும் உள்ளே நுழைந்ததும் சிங்காரம் ஹால் சோபாவில் போய்க் காத்திருந்தான். கோமள விலாஸ் போவதற்கு சாமண்ணு கார் அனுப்புவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் ஒரு சிப்பந்தி பெரிய வெள்ளித் தட்டில் சீமை பாட்டில் ஒன்றை வைத்து உள்ளே போய்க் கொண்டிருந்தான்.

'அண்ணன் குடிப்பாரோ?'

அடுத்தாற்போல் இரண்டு சிப்பந்திகள் தட்டு நிறையத் தின்பண்டங்களை எடுத்துப் போனார்கள்.

ஹாலில் தாத்தா காலத்துக் கடிகாரம் ஒன்று நீளமான பெண்டுலத்தை ஊஞ்சலிட்டுக் கொண்டிருந்தது.

சாமண்ணு இருந்த அறைக் கதவு திறக்கும்போதெல்லாம் கே. ஸி. டேயின் சங்கீதம் விட்டு விட்டு ஒலித்தது.

நிமிட முள் இருபது முறை கடிகார முகத்தைச் சுற்றும் வரை காத்திருந்தான். பசி எடுத்தது. ஆயாசம் வந்தது. 'என்ன, ஒருவேளை அண்ணன் மறந்துட்டாரா?''

யாரோ இரண்டு பேர் உள்ளே வந்தார்கள். புது ஆசாமிகள். ''நீங்க யாரு?'' என்று சிங்காரத்தைக் கேட்டார்கள்.

''ஐயா இருக்கச் சொன்னாரு!''

''யாரு, சாமண்ணுவா?''

''ஆமாம்.''

''அவர் இனிமே இன்னிக்கு வெளியே வர மாட்டார். நீங்க போகலாம்'' என்றனர்.

"வர மாட்டாரா? என்னைக் காத்திருக்கச் சொல்லிட்டுப் போனாரே! கார் அனுப்பறதாச் சொன்னாரே!"

"சொல்லியிருப்பார். இப்போ யாரோ வந்துட்டாங்க! முக்கியமான விஷயம் பேசிட்டிருக்காங்க. இப்ப அவர்கிட்டே யாரும் போய் எதுவும் பேச முடியாது. நீங்க நாளைக்கு வாங்க."

இங்கும் அங்கும் பார்த்து விட்டு மெள்ள வெளியே சென்றான். 'அண்ணன் ஒரு வார்த்தை டிரைவர் கிட்டே சொல்றதுக்குள்ளே மளமளன்னு இவ்வளவும் நடந்து போச்சு! அண்ணன் என்ன செய்வாரு, பாவம்! மறந்திருப்பாரு!'

வாசல் தோட்டம் பூராவும் நடந்து போய்த் தயங்கினான். கேட்டில் நின்ற காக்கிச் சட்டை ஒரு மாதிரியாகப் பார்க்க, 'பாஷை தெரியாதவன். ஏதாவது திட்டப் போகிறான்' என்று அஞ்சி அவசரமாக வெளியே நடந்தான்.

'சினிமான்னா அது வேற மாதிரிதான். அண்ணனும் அந்த அம்மாவும் ஒத்திகை எடுக்கறாங்க போல இருக்கு! அடேயப்பா! அந்த அம்மா என்னமா இருக்காங்க!'

ரிக்ஷாவைத் தேடினான்.

'ஒருவேளை இவங்களை ஜோடி ஆக்கி வச்சுட்டாக் கூட...

அப்படி நினைக்க சிங்காரப் பொட்டுவுக்கு மனம் ஒப்பவில்லை. அந்த எண்ணத்தோடு இணங்க அவன் மனம் மறுத்தது. தமிழ்நாட்டை விட்டு சாமண்ணாவையும் அவனது அபார நடிப்பையும் வெளியே விட்டுவிடத் தயாராக இல்லை.

ஊர் சுற்றிப் பார்த்தான். வீதிகளில் நடந்தான். கால் வலி எடுக்கும் வரை அலைந்தான். பசி எடுக்கவே கோமள விலாஸுக்குப் போய்ச் சாப்பிட்டான். பிறகு படுத்ததுதான் தெரியும். அயர்ந்து தூங்கி விட்டான். மறுநாள் காலை ஒன்பது மணிக்கு மீண்டும் அந்த பங்களாவுக்கு வந்து சேர்ந்தான்.

முந்திய தினத்தைப் போலவே இன்றும் பல பேர் உட்கார்ந்திருந்தார்கள்.

தற்செயலாய் அந்தப் பக்கம் வந்த சாமண்ணா சிங்காரத்தைப் பார்த்துவிட்டு, "என்ன சிங்காரம்! நீ வந்திருக்கே இல்லே! நேத்து வந்தே இல்லே! மறந்தே போயிட்டேன். எப்படி மறந்தேன் என்று எனக்கே தெரியலை. கோமள விலாஸ்லதானே தங்கியிருக்கே! அங்கேயே இருந்துக்க. செலவைப் பற்றிக் கவலைப்படாதே. அதெல்லாம் நான் பார்த்துக்கறேன். எத்தனை நாள் இருப்பே?" என்று நேற்று சொன்னதையே திரும்பச் சொன்னான்.

"எனக்கு இங்கே என்ன வேலை? உங்களைப் பார்த்தாச்சு, புறப்பட வேண்டியதுதான். அதுக்கு முன்னாடி ஒரே ஒரு ஆசை!"

"என்ன சொல்லு."

"நீங்க சினிமாவிலே நடிக்கிறதை என் கண்ணாலே பார்த்துடணும்!"

''இவ்வளவுதானு? சினிமா எடுக்கிறதைப் பார்க்கணுமா?''

''ஆமாம்!''

''அடப் பாவமே! வெளிப்புறக் காட்சியெல்லாம் எடுத்தாயிட்டுதே! நாளைக்கு மறுபடியும் காட்டுக்குள்ளே போய் எடுக்கப் போருங்க. அதுதான் கடைசி.''

''நானும் வரேன், காட்டுக்குள்ளே!''

''அங்கே விருந்தாளிங்க யாரையும் அழைச்சுட்டு வரக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க!''

''அதுக்கப்புறம் வேற எங்கயும் எடுக்க மாட்டாங்களா?''

''மங்களக் காட்சி மட்டும் இங்கே திரும்பி வந்து எடுப்பாங்க! ஒரு வாரம் ஆகும். அதுவரை நீ இங்கேயே தங்கிடு!'' அடுத்த வாரம் அந்த மங்களக் காட்சியைப் பார்த்துட்டுப் போகலாம்!'' என்ருன் சாமண்ணு.

''ரொம்ப சந்தோஷம்.''

''அப்போ, ஓட்டலுக்குப் போறியா? வண்டியிலே உன்னை அனுப்பி வைக்கிறேன். யாரப்பா! டிரைவரைக் கூப்பிடு.''

இந்த முறை ரிக்ஷாவுக்கு அலையாமல் கப்பல் போன்ற காரில் மிகப் பெருமையோடு போய் ஓட்டல் வாசலில் இறங்கினன் சிங்காரப் பொட்டு.

முந்திய நாள் தோன்றிய சிறுமை நினைவுகள் யாவும் இன்று அழிந்து விட்டன; சந்தோஷ அலைகள் மனத்தைப் புரட்டி எடுத்தன.

ஓட்டலில் தங்கிக் கொண்டு தினம் ஒரு இடமாகப் போய்ப் பார்த்து விட்டு வந்தான். தினமும் கொஞ்சம் 'விஸ்கி' போட்டுக் கொண்டான்.

கல்கத்தா உண்மையில் பெரிய அதிசயபுரியாகத் தோன்றியது. இரவில் பார்க் தெருப் பக்கம் போனபோது விளக்குகள் செய்த ஜாலங்களும் நாகரிக யுவதிகளின் நடமாட்டமும் சொப்பனம் போல் இருந்தன.

ஒரு வாரம் ஓடியதே தெரியவில்லை. கணக்காக எட்டாவது நாள் சாமண்ணு வீட்டில் போய் நின்ருன்.

சாமண்ணு இன்னும் அவுட்டோர் ஷூட்டிங்கிலிருந்து திரும்பி வரவில்லை என்று சொன்னர்கள்.

எப்படியும் அண்ணன் சினிமாவில் நடிப்பதை ஒருமுறையாவது பார்த்துவிட வேண்டும் என்று தீர்மானமாய்க் காத்திருந்தான்.

மேலும் ஒரு வாரம் தாமதித்த பின் மீண்டும் சாமண்ணுவைத் தேடிச் சென்றபோது வீட்டு வாசலில் பலர் கும்பல் கும்பலாகக் கூடி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். சூழ்நிலையில் சோகம் தெரிந்தது.

தோட்டத்தில் ஆம்புலன்ஸும் கார்களும் பரபரப்பாயிருந்தன. சாமண்ணு திரும்பி வந்திருக்கும் அறிகுறிகள் தென்பட்

டன. கூட்டமாக நின்றவர்கள் முகத்தில் ஈயாடவில்லை. ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்று அறிந்தபோது 'திகீர்' என்றது. டாக்டர்களும் நர்ஸுகளும் இங்குமங்கும் போய்க் கொண்டிருந்தார்கள். "சாமண்ணாவுக்கு என்ன? ஏதாவது விபத்தா?" உள்ளே சென்று விசாரித்தான்.

"ஆமாங்க. காட்டுக்குள் குதிரை ச்வாரி பண்ணி வரப்போ கீழே விழுந்துட்டார். பலத்த அடி. பேச்சு மூச்சில்லாமல் கிடக்கிறார்."

"ஐயோ! உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே?"


"காலிலே அடின்னு சொன்னாங்க!"

"சாதாரண அடிதானே!"

"தெரியாது; இன்னும் நினைவு வரவில்லை."

சிங்காரப் பொட்டு வேகமாக நடந்து முன்னேறிப் போனான். தடுப்பவர்களை அவன் பொருட்படுத்துவதாக இல்லை. அப்படி ஒரு பாச வெறி அவனிடம் கிளைத்திருந்தது.

# 29



சிங்காரப் பொட்டு உள்ளே ஒரு வேகத்தில் பாய்ந்து விரைந்தபோது யாரோ, "அடடே! சிங்காரம்!" என்று கூறியது கேட்டு நிமிர்ந்து பார்த்தான். சேட்ஜி நின்று கொண்டிருந்தார்.

"வாங்க! எப்ப வந்தீங்க?" என்று விசாரித்த சேட்ஜி அவனை சாமண்ணா இருந்த அறைக்குக் கூட்டிச் சென்று காட்டினார். சாமண்ணா நினைவு தப்பிய நிலையில் படுத்திருந்தான். சுற்றிலும் ஒரு சிறு கூட்டம்.

சிங்காரத்துக்கு உடம்பு பதறியது. 'அண்ணே' என்று கத்திவிடலாம் போல இருந்தது. கண்களில் நீர் தளும்பியது.

அவன் சங்கடத்தை உணர்ந்த சேட்ஜி அவனுடைய கைகளைப் பிடித்து இழுத்து, "வாங்க போகலாம்" என்று வெளியே அழைத்துச் சென்றார்.

"இன்னும் அஞ்சு நிமிஷத்திலே சாமண்ணாவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் போறாங்க. காலில் பலத்த அடி. இங்கேயே இப்படியே நில்லுங்க. அதோ டாக்டர் வரார். அவரைப் பார்த்துட்டு வந்துடறேன்" என்று ஓடினார்.

சேட்ஜி திரும்பி வந்தபோது அவர் முகத்தில் கவலை கவ்விக் கொண்டிருந்தது.

"டாக்டர் என்ன சொல்கிறார்?" என்று பதறினான் சிங்காரம்.

"ஆஸ்பத்திரிக்குப் போனப்புறம்தான் எதுவும் தெரியுமாம். எக்ஸ்ரே எடுத்துப் பார்க்கணுமாம். காலை எடுத்துடுவாங்களோ, என்னவோ?" என்று கவலைப்பட்டார் சேட்.

"ஐயோ! எங்க அண்ணனுக்கு அப்படியெல்லாம் ஆயிடக் கூடாது" என்று தலையைப் பிடித்துக் கொண்டு அழுதான்.

அடுத்த சில நிமிடங்களுக்குள்ளாகவே சுபத்ரா முகர்ஜி வந்து சேர்ந்தாள். வாசலில் பெரும் கூட்டம் சேர்ந்து விட்டது.

''தள்ளுங்க! தள்ளுங்க!'' என்று சில குரல்கள்.

சுபத்ராவுக்கு வழி ஏற்படுத்தி அவளை உள்ளே அழைத்துச் சென்றார் சேட். சாமண்ணாவின் கால்களைப் போர்த்தியிருந்தார்கள். சாமண்ணா அறைக்குச் சென்ற சுபத்ரா அதிக நேரம் அங்கு நிற்கவில்லை. உடனே ஹாலுக்குத் திரும்பி விட்டாள். அவள் முகம் கரைந்து போயிருந்தது. சேட் துயரம் தோய்ந்த முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு அவள் அருகில் போய் நின்றார். ''வீட்டுக்கு வாங்க சேட்! விவரமாப் பேசணும்!'' என்று கூறிவிட்டுக் கார் ஏறிப் போய் விட்டாள்.

இதற்குள் ஆஸ்பத்திரிச் சிப்பந்திகள் வந்து சாமண்ணாவை ஸ்ட்ரெச்சரில் தூக்கி வைத்து ஆம்புலன்சில் ஏற்ற, அது பெரிய ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்தது.

சிங்காரத்திற்கு இருப்புக் கொள்ளவில்லை. சாமண்ணாவுக்கு ஏற்பட்ட விபத்து அவனைக் கலக்கிவிட்டிருந்தது. ஆஸ்பத்திரி இருக்குமிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு தனியாகச் சாலை ஓரமாகவே நடக்க முற்பட்டான்.

அப்போது யாரோ கையைத் தட்டி அழைப்பது தெரிந்தது. திரும்பினால் சேட்!

''இந்தாங்க சிங்காரம்! இப்போ எங்கே தங்கியிருக்கீங்க?'' என்று கேட்டார்.

''கோமள விலாஸ்லே.''

''சௌகரியமா இருக்கா?''

''அண்ணன்தான் ஏற்பாடு பண்ணியிருக்கு! ஆனா அண்ணனுக்கு இப்படி ஆயிடுச்சே!'' என்று புலம்பினான்.

''நீங்க கவலைப்படாதீங்க. தெய்வம் துணை புரியும். இப்ப நீங்க ஓட்டலுக்குத்தான் போயிட்டிருக்கீங்களா?''

''அண்ணனை இந்த நிலையில விட்டுட்டு எப்படிங்க போக முடியும்? ஆஸ்பத்திரிக்குப் போயிட்டிருக்கேன்.''

''இப்ப ஆஸ்பத்திரியில் யாரையும் அனுமதிக்க மாட்டாங்க. நீங்க ஓட்டலுக்குப் போறதுதான் நல்லது. வாங்க உங்களை ஓட்டலிலே விட்டுறச் சொல்றேன், கம்பெனி வண்டி இருக்கு'' என்று கூறிய சேட் தம் கையைத் தூக்கிக் காண்பிக்க வரிசையாக நின்ற கார்களில் ஒன்று வரிசையிலிருந்து விடுபட்டு அவரைத் தேடி வந்தது.

''ஏறிக்குங்க.''

சிங்காரம் அரை மனத்தோடு ஏறிக் கோமள விலாஸுக்குச் சென்றான்.

சேட்ஜி ஆஸ்பத்திரி வரை சென்று சாமண்ணாவை ஸ்பெஷல் வார்டில் சேர்த்துவிட்டு, ''இதோ வந்துடறேன்'' என்று

வார்டு நர்ஸிடம் சொல்லிக் கொண்டு வீடு திரும்பிய போது வழியில் கோமள விலாஸில் இறங்கிச் சிங்காரத்தின் அறைக் கதவைத் தட்டினர்.

''என்னங்க! சாமண்ணுவுக்கு ஒண்ணுமில்லையே!'' என்று கேட்டான் சிங்காரம்.

''ஒண்ணுமில்லே. ஆபரேஷன் உண்டா இல்லையான்னு சாயந்திரம்தான் சொல்வாங்களாம். இப்ப அதுக்குள்ள நான் உங்களைப் பார்க்க வந்தது ஒரு முக்கிய விஷயம் பற்றிப் பேச லாம்னுதான்.''

''சொல்லுங்க......''

''ஊரிலே உங்க நாடகம் சக்கைப் போடு போடுதாமே?''

''உங்களுக்கு யார் சொன்னுங்க?''

''என் மகன் எழுதியிருந்தான்.''

''அப்படீங்களா? அண்ணன் புண்ணியத்துலே எனக்கு நாடகத்துலேஹீரோவாசான்ஸ்கிடைச்சுது.நாலுபேர்மெச்சும்படிப் பேரும் கிடைச்சுட்டுது. அண்ணன்தான் எனக்கு வாழ்க்கை அமைச்சுத் தந்தவர். இப்படி ஆயிட்டுதேன்னு நினைக்கிறப்போ எனக்கு ரொம்ப துக்கமாயிருக்கு சேட்!''

''கவலைப்படாதீங்க. பெரிய பெரிய டாக்டரெல்லாம் வந்து பார்த்துக்கிட்டிருக்காங்க.. குதிரை ஏற வேணும்னு சொன்னோம். ஹண்டர்வாலி சினிமாவெல்லாம் பார்த்துட்டு அவங்களைப் போல இவரும் செய்யணும்னு நினைச்சார். சொன்னக் கேட்கல்லே. இன்னும் ரெண்டே ஷாட்தான் பாக்கி. அதுக்குள்ளே இப்படி ஆயிடுச்சு. டைரக்டர் வந்திருந்தாரே பாத்தீங்களா?'' என்று கேட்டார் சேட்.

''நான் பார்க்கலையே!''

''மரத்தடியிலேதான் நின்னுட்டிருந்தார். பாவம், அவருக்குத் தான் ஏகப்பட்ட கவலே! நீங்களும் நானும் பேசிட்டிருந்தோமா! உங்களைப் பற்றி என்கிட்டே விசாரிச்சாரு. சொன்னேன்! அவர் என்ன சொல்றர்ன, மீதி ஷாட்டுக்களை உங்களை வச்சே எடுத்துரலாமேங்கறர்!''

''என்னை நடிக்கச் சொல்றீங்களா?''

''ஆமாம்.''

''அடையாளம் தெரிஞ்சுடுமே?''

''தெரியாது. உங்க முகத்தை க்ளோஸப்ல காட்டாமல் லாங் ஷாட்ல முடிச்சுடலாம். டயலாக் எதுவும் கிடையாது.''

சிங்காரம் யோசித்தான்.

''ஏங்க! அண்ணன் இடத்திலே நான் நடிக்கலாமா?''

''அப்படிச் சொல்லாதீங்க. பெரிய சான்ஸ் இது. விட்டுராதீங்க. நீங்க செய்றது தப்பே இல்லே! அவர் ஒத்துப்பாரு! நீங்க இல்லாட்டி எப்படியும் வேறே ஆளைப் போட்டு எடுக்கப் போறேம்.''

"எதுக்கும் அண்ணனை ஒரு வார்த்தை கேட்டுடுவோம்."

"அவர் என்ன சொல்லப் போருர்? படம் நல்லபடியா முடிஞ்சாப் போதும்னுதான் நினைப்பார். நீங்க நடிக்கிறதைத் தான் அவரும் விரும்புவார். அது எனக்குத் தெரியும்!" என்ருர் சேட்ஜி.

மறுநாளே சிங்காரத்தை அழைத்துக் கொண்டு காட்டுக்குப் போனுர்கள். குதிரைக்குப் பதில் கார் உச்சி மீது ஒரு ஆசனம் வைத்து, அதைக் குதிரை சவாரி போல் சாமர்த்தியமாகப் படமாக்கினுர்கள்.

அரண்மனையிலும் ஒன்றிரண்டு காட்சிகள் எடுத்தார்கள். அப்புறம் இரண்டே வாரத்துக்குள் முடித்து விட்டார்கள்.

இடையில் சிங்காரம் இரண்டு முறை சேட்டோடு ஆஸ்பத்திரிக்குப் போய் சாமண்ணுவைப் பார்த்துவிட்டு வந்தான்.

"ஆபரேஷன் ஆகியிருக்கு!" என்று மட்டும் சொன்னுர்கள். மேற்கொண்டு விவரம் எதுவும் சொல்ல மறுத்து விட்டனர்.

ஷூட்டிங் வேலை முழுவதுமாக முடிந்ததும் சேட்ஜி அந்தப் படத்தில் நடித்தவர்கள், டெக்னீஷியன்கள் எல்லாரையும் ஒருநாள் விருந்துக்கு அழைத்திருந்தார். சாமண்ணுவைத் தவிர எல்லோரும் வந்திருந்தனர். சுபத்ரா வந்திருந்தாள். டைரக்டர் அவளுக்கு மாலை அணிவித்துப் பாராட்டிப் பேசினுர். "இந்த நேரத்திலே சாமண்ணு இங்கே இல்லாதது பெரும் குறைதான்" என்ருர்.

விருந்து முடிந்து எல்லோரும் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றதும் சேட்ஜி சிங்காரத்தைத் தனியாக அழைத்துப் பேசினுர்.

"இந்தா, சிங்காரம்! சகுந்தலை படம் நல்ல விலைக்கு வித்துப் போச்சு! அடுத்தது சாவித்திரி எடுக்கப் போறேன், அப்புறம் 'தேவயானி'. அந்த இரண்டு படங்களிலும் நீங்கதான் நடிக்கணும். என்ன சொல்றீங்க?" என்று கேட்டார்.

சிங்காரத்திற்கு வியர்த்தது.

"நானு!" என்று இழுத்தான்.

"ஆமாம்! உங்களுக்கு நல்ல நடிப்புத் திறமை இருக்காம். டைரக்டர் சொல்ருர். உங்களை அவருக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. சுபத்ராவும் ஒத்துக்கிட்டாங்களாம்!"

திடீரென்று அவனுக்குச் சொர்க்க வாசல் திறந்து விடுவது போலிருந்தது. கூடவே சாமண்ணுவின் நினைவும் தோன்றிச் சங்கடப்படுத்தியது.

"ஏங்க! அண்ணன்தான் வீட்டுக்கு வந்தாச்சே! அப்புறம் என்ன? உடம்பு தேறினதும் கொஞ்ச நாளில் அவரையே போட்டு எடுத்துட வேண்டியதுதானே? எதுக்கும் அவரை ஒரு வார்த்தை கேட்டுருங்க. அவர் இடத்தை அவர் சம்மதம்

இல்லாம எடுத்துக்க என் மனசு ஒப்பல்லே. அண்ணன் ஆசீர்வாதம் செய்து நடிக்கச் சொன்னால் தாராளமா நடிக்கறேன்'' என்றான் சிங்காரம்.

''அண்ணன் நிச்சயம் ஆசீர்வாதம் செய்வார் பாருங்க'' என்றார் சேட்ஜி.

''அதெப்படிச் சொல்றீங்க?''

''அவராலே இனிமே நடிக்கவே முடியாது!''

''முடியாதா? ஏன்?''

''அவர் வலது கால் போயிட்டுது!''

''என்ன சொல்றீங்க சேட்ஜி?''

''சாமண்ணாவின் வலது கால் எலும்பு நொறுங்கி அதை வெட்டி எடுத்தாச்சு. இனிமே அவராலே நடிக்க முடியாது.''

சிங்காரத்தின் ஒரு தாபவேகம் சுர்ரென்று சீறியது. ''என்னது? எங்க அண்ணனால் இனிமே நடிக்கவே முடியாதா?'' என்றான் ஆவேசத்துடன்.

சேட்ஜி மௌனமாய் நின்றார்.

''அப்போ நானும் நடிக்க மாட்டேன். அவருக்குத் துரோகம் செய்ய மாட்டேன்'' என்றான்.

''சிங்காரம்! உணர்ச்சி வசப்படாதீங்க. உங்களுக்குக் கடவுளாக் கொடுத்திருக்கிற சந்தர்ப்பம் இது! முடியாதுன்னு சொல்லாதீங்க!''

''ஊஹூம்! நீங்க என்ன சொன்னாலும் நான் ஒத்துக்க மாட்டேன். அண்ணன் சொன்னாத்தான்.''

''அண்ணனை இன்னிக்கு நாங்க சாயங்காலம் சந்திக்கப் போறோம். அப்போ நீங்களும் வர்றீங்களா? அவரையே கேட்டுருவோம்.''

''வரேன்!''

அருகில் சுபத்ரா நின்றாள். அலட்சியமாக, எதிலும் ஆர்வம் இல்லாதவள் போல் காணப்பட்டாள்.

''நீங்களும் சாயந்திரம் ரெடியா இருங்கம்மா'' என்று சுபத்ராவிடம் சொன்னார் சேட்.

''இன்னைக்குச் சாயந்திரமா?'' என்று கேட்டாள் சுபத்ரா,.

''உங்ககிட்டே முன்னாடியே சொல்லியிருந்தேனே! வரேன்னு சொல்லியிருந்தீங்களே!''

''அப்ப சொன்னேன்...'' என்று இழுத்தவள், ''சாயந்திரம் வேலை இருக்கும் போல இருக்கே...'' என்றாள்.

''சாமண்ணாவின் காலை எடுத்தப்புறம் நீங்க அவரைப் பார்க்கவே இல்லையே! அவர் சுபத்ரா வரலையான்னு தினமும் கேட்டுக்கிட்டே இருக்காரே!''

சுபத்ரா சுவாரசியமில்லாமல் நின்றாள். அவளுக்கு விருப்பம் இல்லை போல் தெரிந்தது.

''நீங்க எத்தனை மணிக்குப் போகப் போறீங்க?'' என்று


கேட்டாள்.

"ஆறு மணிக்கு!" என்றார் சேட்.

"ஸாரி! எனக்கு வேறு 'எங்கேஜ்மெண்ட்' இருக்கு. முடிஞ்சா நானே வந்து பார்க்கறேன். நீங்க எனக்காகக் காத்திருக்க வேணாம்!" என்று கூறி விட்டுக் காரில் ஏறிப் படீரென்று கதவை அடித்தாள்.

அந்த அடி சிங்காரத்தின் மனத்தில் ஓங்கி அடித்தது போலிருந்தது.

# 30



சாயங்காலம் எல்லோருமாக ஆஸ்பத்திரிக்குப் போகும் போது, சுபத்ராவுக்காகக் காத்திருந்தார்கள். அரைமணி காத்திருந்த பிறகு,

சேட் எழுந்து போய் டெலிபோன் பண்ணிப் பார்த்துவிட்டு,

“இன்னும் வீட்டுக்கு வரலையாம் ஜீ” என்று டைரக்டரிடம் சொன்னார். டைரக்டர் பொறுமை இழந்து கொண்டிருந்தார்.

“வந்திரட்டம். அவங்க இல்லாம போனா நல்லா இருக்குமா?” என் டைரக்டரைப் பார்த்துக் கேட்டார்.

டைரக்டர் பதில் பேசாமல், குழாயில் புகையிலைத் தூளை நிரப்பிக் கொண்டிருந்தார். எல்லோரும் மணியை அடிக்கடிப் பார்த்தார்கள். ஆறு, ஆறேகால், ஆறரை, ஆறேமுக்கால், ஏழு. எல்லோரும் நிதானமிழந்த நிலையில் சேட்டைப் பார்த்தனர். அவர்களது பார்வை சேட்டைக் கிளப்பி விட்டது.

போன் அருகில் உட்கார்ந்து திரும்பவும் சுழற்றினார்

“நான்தான் சேட் பேசறேன்.”

“......”

“எல்லோரும் காத்திருக்கோமே!”

“......”

“அதெப்படி நீங்க இல்லாமப் போயிரலாமா?”

“......”

அதற்குப் பிறகு சேட் வெகுநேரம் ஹாம் ஹாம் என்று குரல் கொடுத்துக் கொண்டே இருந்தார்.

அவர் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. போனைச் சோர்வுடன் கீழே வைத்தார்.

"என்ன சொல்ருங்க?" என்ருர், டைரக்டர்.

"இப்பத்தான் வீட்டுக்கு வந்திருக்காங்களாம். 'ரொம்ப களைப்பாஇருக்கு.நான்இப்பவந்துஎன்னசெய்யப் போறேன்? நீங்க எல்லோரும் பார்த்துவிட்டு வாங்க. நான் அப்புறம் பார்த்துக்கறேன்' என்கிருங்க."

அவர் மனக்குறிப்பை உணர்ந்து டைரக்டர், "எல்லோரும் வாங்க போவோம்" என்ருர்.

எல்லோரும் ஒவ்வொருவராக வெளியே காத்திருந்த வேனை நோக்கிப் போனுர்கள்.

சிங்காரப் பொட்டும், சேட்டும்தான் மிச்சம்.

சிங்காரம் சிலை போல் நின்ருன். கண்கள் ஒன்றில்தான் மனம் தெரிந்தது.

"சிங்காரம்!" என்ருர் சேட் கரகரத்த தொனியில். "பணம் தெய்வமாகப் போச்சு!" என்ருர் பிழியும் குரலில். சிந்தனை தோய்ந்த அடியாக வைத்து அவர் வாசலுக்குப் போக, சிங்காரப் பொட்டு அவரைப் பின்பற்றினுன்.

"வெள்ளைக்காரன் அரசாள வந்துட்டானில்லே! வியாபாரம் சிம்மாசனம் ஏறும். மனிதாபிமானம் இறங்கும்" என்று தாழ்ந்த குரலில் கூறிக் கொண்டே நடந்தார்.

எல்லோரும் வேனில் ஏறினுர்கள்.

ஆஸ்பத்திரி நிறைய 'கார்பாலிக்' நெடி மெலிதாக வீசியது.

உள்ளே வார்டுகள் வெளிச்சங்களாகத் தெரிந்தன. வரிசையான கட்டில்கள் அனைத்தும் மௌனமாக இருந்தன.

நர்ஸ் யாராவது நடந்தால்தான் சலனம்! மற்றபடி எல்லாமே அசைவற்றுத் தெரிந்தன!

'ஏ' வார்டுக்குள் அவர்கள் நுழைந்தார்கள். ஒரு கர்ப்பக் கிருக அமைதி! மெல்லிய பாத உரசல்கள் மட்டும் கேட்டன.

அத்தனை பேர் பார்வைகளும் உறைந்து கிடக்க, சாமண்ணு கட்டிலில் வெள்ளைப் போர்வைக் குவியலாகக் கிடந்தான். கண்கள் பனிக்கப் பார்த்தான்.

சேட் அவன் அருகில் போய் முக்காலியில் அமர்ந்தார்.

"சாமு!" என்றவர், இதயம் கரைந்தது போல், "உங்களுக்குப் புகழ் வரணும்னு அழைச்சிட்டு வந்தேன்! இப்படிக் காலை இழந்துடுவீங்கன்னு நினைக்கலை" என்று வெதும்பிச் சொன்ஞர்.

அறை ஒருமுறை விம்மியது.

சாமண்ணுவால் பேச முடியவில்லை.

கண்கள் பொங்கிக் கொண்டு பார்த்தன. கூட்டத்தில் அத்தனை பேரும் 'மனித நன்றி'களாகத் தெரிந்தார்கள்.

அவனது மௌனம் எல்லோரையும் கலக்கிவிட்டது. சுற்றி

நின்ற அத்தனை பேரும் தங்கள் கால்களையே இழந்தவர்களைப் போல் வருத்தம் தோய்ந்து நின்றனர்.

இப்போதுதான் சாமண்ணாவுக்கு ஓர் உண்மை பளிச்சிட்டது. இத்தனை நாளும் ஸ்டுடியோவில் கும்பலாக இருந்து உரசி, தழுவி, ஏசி, இணைந்து தனித்தனி மனிதர்களாக இயங்கினார்கள். இவர்கள் அத்தனை பேர் ஊடேயும் இப்போது தனியான நேசம் ஒன்றும் ஒரு குடும்பப் பாசமாக மாறியிருப்பதை உணர்ந்தான்.

இல்லாவிடில் அன்னிய நாட்டில் பிறந்த இந்த வெள்ளைக்கார டைரக்டர் எனக்காக ஏன் அழ வேண்டும்?

சாமண்ணா கையை அவர்பால் உயர்த்தினான்.

அதைச் சட்டென்று பற்றிக் கொண்டு, "ஸாம்—யூ" என்று வழக்கமான முறையில் அவன் பெயரை உச்சரித்தார். அதற்கு மேல் வார்த்தை வராமல் தத்தளித்து நின்றார்.

காற்று ஒருமுறை விசும்பிக் கொண்டது.

"சாமூ! நாங்கள் எல்லாரும் என்னென்னவோ செஞ்சு பார்த்தோம்! கவர்னர்கிட்டே பேசி, ஆஸ்பத்திரி டீன் கிட்டே சொல்லச் சொன்னோம். அவங்களும் எவ்வளவோ செஞ்சு பார்த்தாங்க! வேற வழியில்லாமல் போச்சு. காலை எடுத்துடணும், எடுக்காட்டி உயிருக்கு ஆபத்துன்னு சொல்லிட்டாங்க" என்றார் சேட்.

சேட்டிடம் அவ்வளவு பெரிய இதயம் இருக்கும் என்று சாமண்ணாவுக்குத் தெரியாது.

சொந்த மகனுக்கு நேர்ந்ததுபோல் அவர் விசித்ததைக் கூடியிருந்தவர் எல்லாருமே கண்டு கண்கலங்கினர்.

சாமண்ணாவின் மனம் நெகிழ்ந்து கூழாகிவிட்டது. இதயம் அடைத்தது.

அவர்கள் வரும் அந்த நிமிடம்வரை, 'இந்த வாழ்க்கை இனி எதற்கு?' என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தான்.

ஆனால் இப்போது இவர்களது இரக்கங்களைப் பார்க்கிற போது எங்கிருந்தோ ஒரு புதிய தென்றல் வீசி அவனைப் பரவசமாக்கியது.

ஆகா, இவர்களது பாசத்தை அடைவதற்காகவே வாழ வேண்டும் என்று மனசு அடித்தது.

"சேட்! ரொம்பப் புண்ணியம் பண்ணி இருக்கேன். உங்க அன்பைப் பெற்றதற்கு! என்னை உயரத்தில் கொண்டு வைக்கணும்னு ரொம்பப் பாடுபட்டீங்க. அதிலே ஏதோ ஒரு அம்சம் ஆண்டவனுக்குப் பிடிக்கலே. இப்படி ஆயிட்டேன்! என் சொப்பனத்திலேகூட நினைக்கலே, நான் இப்படி ஆவேன்னு! ஒரே நிமிஷத்திலே கடவுள் என்னை ஒரு வயோதிகன் ஆக்கிட்டாரே!"

மேலே பேச்சு ஓடவில்லை. கலகல என்று நீர் கொட்டியது.

சேட் அவன் கையைப் பிடித்தார். மார்பை மென்மையாகத் தொட்டார்.

"சாமு! கவலைப்படாதீங்க! ஆண்டவன் எப்போதும் தவறே செய்யமாட்டார். தவறுமாதிரிதோன்றினாலும் அதுநன்மையிலே தான் முடியும். இப்போ படத்தை முடிச்சுட்டேன்! வாங்கற துக்குப் போட்டாப் போட்டி! சாமு! இதிலே பணம் சம்பா திச்சா, நான் பேசின தொகைக்கு மேலே இன்னொரு மடங்கு கொடுத்துருவேன்! உங்களை அம்போன்னு விட்டுற மாட்டேன். நீங்க கவலைப்படாதீங்க. மனோதிடத்தோடு இருங்க!"

பிறகு, கூட வந்தவர்களும் தனித்தனி மனங்களைத் திறந்து தைரியத்தைப் பொழிந்தார்கள்.

இவர்களோடு பேசிக் கொண்டிருந்தபோதிலும் சாமண்ணா வின் மனம் மட்டும் அலைபாய்ந்து கொண்டிருந்தது. அடிக்கடி அறை வாயிலைப் பார்த்துக் கொண்டிருந்தன சாமண்ணாவின் கண்கள்.

கடைசியில் அடக்க முடியாத நிலையில், "சுபத்ராவுக்குத் தெரியுமில்லே?" என்று கேட்டான்.

"தெரியும். அவங்ககூட இப்போ எங்களோடு வர்றதாத்தான் இருந்தாங்க! அதுக்குள்ள ஏதோ அவசரமா ஏதோ வேலைன்னு..." என்றார் சேட்.

"அவங்களும் கோஷும் கார்லே போயிட்டிருந்தாங்க! நான் புறப்பட்டபோது பார்த்தேன்!" என்று ஒரு வெகுளி துணைக் காமிராமேன் கூறினார்.

சாமண்ணாவின் முகத்தில் இறங்கிய அந்த நிழலை சிங்காரப் பொட்டு ஒருவனால்தான் கண்டுபிடிக்க முடிந்தது.

சிலகணங்கள்வரை, சாமண்ணாவின் பார்வை வெறுமை ஆகியது. சாமண்ணாவின் உள்ளம் வேதனைப் படுவதை உணர்ந்து கொண்ட சேட்,

"ஒருபுரோக்ராமுக்குப்போறாங்க. வந்துருவாங்க!" என்றார். அது தனக்காகச் சொல்லப்படும் ஆறுதல் வார்த்தை என்பதை சாமண்ணா புரிந்து கொண்டு வறட்சியாக ஒரு புன்னகை காட்டினான்.

பிறகு உரையாடல் சினிமாவைப் பற்றித் திரும்பியது.

எல்லோரும் சிறிது பரவசமாகப் பேசினார்கள்; அந்தக் கணத்தில் சாமண்ணாவின் துக்கத்தை எல்லோருமே மறந்தார் கள்.

அரைமணியில் எல்லோரும் பேசிவிட்டுப் புறப்பட்டுப் போக, ஒரே ஒரு நிழல் மட்டும் தயங்கித் தயங்கி நின்றதை சாமண்ணா கவனித்தான். எல்லோரும் வெளியேறிவிட்ட பிறகும் சிங்காரப் பொட்டு திரும்பி வந்து நிற்பதைக் கண்ட சாமண்ணா, "என்ன சிங்காரம்?" என்று கேட்க, முகத்தை இறுக மூடிய வண்ணம் பதில் பேசாமல் நின்றான் சிங்காரப் பொட்டு.

சாமண்ணா அவனைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண் டான்.

"அண்ணே! இந்தக் கோலத்திலேயோ நான் உங்களைப் பார்க்கணும்? என்னால் தாங்க முடியலையே!"

புலம்பி விசிக்க, சிங்காரப் பொட்டுவின் விம்மல் அடங்க நேரம் ஆயிற்று.

"இந்தா பாரு, சிங்காரம்! நீ அழுதயானா எனக்கு துக்கம் அடக்க முடியாம வந்துடும்! நீதானே என்னைச் சமாதானம் பண்ண வந்திருக்கே! அதை விட்டுட்டு நீயே அழலாமா?" என்றான்.

சிங்காரம் அழுகையை அடக்கினான்.

"இனிமே மாட்டேன்! இனிமே அழமாட்டேன். சாமா அண்ணே! கவலையே படாதீங்க! இதனாலே என்ன நடந்தாலும் சரி, இனிமே இந்த அடியவன்தான் தங்களுக்கு ஊன்றும் காலாய் இருப்பேன்! ஆமாம், நான்தான் அது! நானுத்தான் இருப்பேன்!" என்றான் ஆவேசம் வந்தவன் போல.

"சிங்காரம், பதட்டப்படாதே! மெதுவாகப் பேசு! மெதுவா...." என்று சொல்லியவாறு சாமண்ணா அடிக்கடி வாசல் பக்கம் பார்த்துக் கொண்டே இருந்தான்.

சிறிது நேரம் வரை சாமண்ணாவின் அலையும் கண்களுக்கு இடம் கொடுத்துவிட்டு,

"அண்ணே!" என்றான்.


சிங்காரத்தின் நா தழுதழுத்தது.

சாமண்ணா திடுக்கிட்டுத் திரும்பினான்.

"அவள் வரமாட்டா!"

சிங்காரம் தணிந்த குரலில் சொன்னான்.

# 31



சற்று தலை குனிந்திருந்த சாமண்ணா நிமிர்ந்தான். என்ன சொல்றே சிங்காரம்?'' என்றான்.

''அவங்க அந்த் கோஷ்கூடப் போயிட்டிருக்காங்க'' என்றான் சிங்காரப்பொட்டு.

''சிங்காரம்! இந்த ஊர் நாகரிகம் வேற! இங்கிலீஷ்ல நாலு பேர்கிட்டே தைரியமாப் பேசுவாங்க! அவ்வளவுதான்; அப்புறம் வந்துருவாங்க பாரு'' என்றான்.

சிங்காரப் பொட்டுக்குச் சொல்வது போல் தனக்குத் தானே ஆறுதலாகக் கூறியது போல் இருந்தது அது.

பேச்சை மாற்றி சாமண்ணாவை உற்சாகப்படுத்தும் நோக்கில், ''உங்க நடிப்பை ஸ்டுடியோக்காரங்களெல்லாம் ரொம்பப் பாராட்டறாங்க'' என்றான்.

இதனால் அண்ணனுக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படாது என்பது அவனுக்குத் தெரியும். அந்த வார்த்தைகள் சாமண்ணாவை மேலும் ஆழ்ந்து எதையோ நினைக்க வைத்தன.

சிங்காரம் மேலும் சிறிது நேரம் இருந்துவிட்டு விடைபெற்றான்.

அன்றிலிருந்து தினமும் அவன் வந்தான். ஊர் உலகத்தைப் பற்றி இரண்டு வார்த்தை பேசினான். சற்று நேரம் இருந்துவிட்டுத் திரும்பினான்.

சாமண்ணா மௌனங்களில் சோகத்தைக் கரைத்துக் கொண்டிருந்தான். அதிகம் பேசுவதில்லை. பேசினால் ஒன்றிரண்டு வார்த்தைகளோடு நின்றன. கண்கள் வெறுமையாகப் பார்த்தன. புன்னகைகள் வறண்டு வெகு நாட்களாயின.

ஆனால் பார்வை மட்டும் வாசலையே நோக்கி இருந்தன. ஒரு சின்ன நிழல் பட்டாலும் உடம்பு சிலிர்த்தது. பிறகு அந்த நிழல் ஒரு நர்ஸ், அல்லது சிப்பந்தியாக மாறும்போது அவன் முகம் வாடியது.

இன்னும் அவன் கண்கள் சுபத்ராவைத் தேடி அலைவது சிங்காரத்துக்குத் தெரியும். அவள் இனி வரமாட்டாள் என்பது சிங்காரத்துக்குத் தெரியும். சாமண்ணா நம்பிக்கையோடு அவள் வருவாள் என்று காத்திருப்பதும் தெரியும்.

ஓர் இரவு சிங்காரம் புறப்படும்போது சாமண்ணா அவனை அழைத்தான். பத்திரமாக ஒட்டியிருந்த ஒரு கவரை அவனிடம் கொடுத்தான்.

''பெட்டியிலே போட்டுடட்டுமா அண்ணே?'' என்று கேட்டுக் கவரை இப்படியும் அப்படியும் திருப்பி விலாசம் இல்லை என்பதை உணர்ந்தான்.

சிங்காரம் தலைநிமிர, ''அவகிட்டே நேரிலேயே கொடு'' என்றான். வார்த்தை மெல்லிய குரலில் வந்தது.

''சுபத்ராவிடமா?'' என்றான் சிங்காரம்.

''ஆமாம்!'' என்று கூறாமல் அந்த அர்த்தத்தில் தலையாட்டினான்.

சிங்காரப்பொட்டு மறுநாளே அதை சேட் மூலம் சுபத்ராவுக்குக் கொடுத்தனுப்பி விட்டான்.

அன்றிலிருந்து மாலை சிங்காரம் வரும் போதெல்லாம் சாமண்ணா ஆவலோடு எதிர்பார்த்தான். அவன் கண்களே அந்தக் கேள்வியைக் கேட்டன. ''ஏதாவது பதில் உண்டா?''

அதை எதிர்பார்த்து, சிங்காரமும் சொல்லிக் கொண்டிருந்தான். ''இல்லை, ஊரிலே இல்லை போல இருக்கு!''

சாமண்ணா ஆஸ்பத்திரியை விட்டுப் புறப்பட இரண்டு நாட்களே இருந்தன. சேட் அவனைப் பார்ப்பதற்கு வந்தார். அவன் கைகளைப் பற்றித் தழதழப்போடு பேசினார்.

''சேட்ஜி, என்னை எல்லாரும் மறந்துட்டாங்க சேட்ஜி! நீங்கள்தான் எனக்கு ஆறுதலா வந்து போய்க்கிட்டிருக்காங்க'' என்று கண்ணீர் பெருக்கினான்.

''சாமு! எல்லாரும்னு சொல்லாதீங்க! எல்லோரும் உங்களை நினைவு வச்சுக்கிட்டுத்தான் இருக்காங்க. எனக்கு வசதி இருக்கு, தவிர கடமை இருக்கு! நான் உங்களைப் பார்க்க ஓடி வந்துட்டேன். அவங்களுக்கெல்லாம் என்ன வேலையோ?

''அப்படிச் சொல்லாதீங்க! வசதி இருக்கறவங்களுக்கு மனசு இல்லை... அவ்வளவுதான்'' என்றான் சாமண்ணா.

''எனக்குத் தெரிஞ்ச ஒரே ஒரு நபர்தான் வசதி, நேரம், கடமை மூணும் இருந்தும் உங்களைப் பார்க்க வரலை. அதை நான் யாருன்னே சொல்ல வேணும்!'' என்றார்.

சாமண்ணாவின் புருவம் உயர்ந்தது.

"உலகத்திலே யாரால் அதிக துக்கம் வரும்னு சொல்லுங்க?'' என்று கேட்டார்.

''சாமண்ணு யோசித்தான். ''தெரியலையே, சேட்ஜி!'' என்றான்.

''இது தெரியலையா? உலகத்திலே யார் மீது அதிக அன்பும் பாசமும் வைக்கிறோமோ அவர்களாலேதான் துக்கம் நிறைய வரும்னு சொல்லுவாங்க'' என்றார் சேட்!

சாமண்ணு பேசவில்லை.

''பந்தம் வச்சுக்கக் கூடாது.''

அவன் கண்களில் கண்ணீர் பீறிட்டது.

''பந்தம் வச்சுக்கிற இடத்திலே இரண்டு பேருக்கும் நோக்கம் சரியாயிருக்கான்னு பாக்கணும். உங்க நோக்கம் என் நல்வாழ்க்கை மேலே இருந்து என் நோக்கம் உங்க பணத்து மேலே இருக்கக் கூடாது. இருவர் நோக்கமும் சம நோக்கா இருக்கணும். சம அளவா இருக்கணும். தாரதம்மியம் இல்லாம இருந்தா அது உன்னதமான நட்பா இருக்கும்.''

சாமண்ணு இன்னும் தவித்தான்.

''நான் சொல்லலை; பெரியவங்க சொல்லி இருக்காங்க! சாமண்ணு, இதெல்லாம் நான் சொல்லி நீங்க தெரிஞ்சுக்க வேண்டியதில்லை. நீங்க தவறான இடத்திலே அன்பு செலுத்தி மனசைக் கெடுத்துக்கிட்டீங்க! அதை மறந்துருங்க! ஊஹூம் வேண்டாம்! ஏதோ போன இடத்திலே புகுந்த அர்த்தமில்லாத பாசம்னு நினைச்சு விட்டுடுங்க! இல்லாட்டி இவ்வளவு இழைஞ்சவங்க, இந்த ஆஸ்பத்திரிக்கு ஒரு நடை வந்து பார்த்திருக்க மாட்டாங்களா?''

சாமண்ணு தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

''லெட்டர் எழுதி விட்டீங்களே! ஒரு வார்த்தை பதில் எழுதினாங்களா? உடுங்க! உங்களுக்கு அந்தப் பாசம் வந்திருக்க வேணும். வெளுத்ததைப் பால்னு நினைச்சுக்கிட்டீங்க! இங்கே இந்த நகரத்திலே இங்கிலீஷ்காரன் நினைப்பு இறங்கியாச்சு. விடுங்க! ஒரு கெட்ட நினைவு! கை மாறிப் போனப்புறம் இன்னும் நினைவு வச்சா நாம்பதான் பைத்தியக்காரங்க!''

சாமண்ணுவின் கை சேட் கையோடு இறுகியது. வார்த்தை வரவில்லை. தேவையுமில்லை! எல்லாமே பளிச்சென்று வெயில் பட்டுத் துலங்குவது போல் சேட் விளக்கிவிட்டார்.

சாமண்ணுவுக்குக் குமுறிக் கொண்டு அழுகையே வந்தது.

ஓர் ஆசுவாச நிலை வந்ததும், ''சாமு!'' என்று மீண்டும் ஆரம்பித்தார் சேட். ''மனசை ஆற்றிக்கிடுங்க. ரெண்டு நாள்ல டிஸ்சார்ஜ் ஆகப் போறீங்க. உங்களுக்கு இங்கே ஒரு வீடு எடுத்துத் தர்றேன். இன்னும் ஒரு மூணு மாசம் தங்குங்க. ஊருக்குப் போறதைப் பற்றி அப்புறம் நினைக்கலாம்'' என்றார்.

"இங்கே இருக்க வேணும் சேட்ஜீ! நான் உடனே புறப்பட றேன். என்னை ரயில் ஏற்றி விடுங்க!" என்றான் அவன்.

"அப்படியா சொல்றீங்க? ஒரே ஒரு மாசம் இருங்க! உடம்பு தேறணுமில்ல? நாங்களும் உங்களைக் கவனமாப் பார்த்துப் போம்."

"இல்லே சேட்! ஒரு நாள்தான்! ஒரே ஒரு நாள்தான் இருப்பேன். அதுகூட ஏன்னு சொல்லிடறேன். நான் இங்கே வந்தபோது பேலூர் மடம், கல்கத்தா காளி எல்லாம் காட் டறதாச் சொன்னீங்க. அப்போ எனக்கு அதிர்ஷ்டம் இல் லாமப் போச்சு! இப்போ பார்த்துடறேன். கண் கெட்ட பிறகு நமஸ்காரம் என்பாங்க! நான் கால் கெட்ட பிறகு பண்றேன். அடுத்த நாள் வண்டி! தயவு செய்து சேட்ஜீ, எனக்கு இதை ஏற்பாடு பண்ணி வையுங்க."

**சா**மண்ணாவின் ரணப்பட்ட நெஞ்சத்துக்குக் காளி கோயிலும் பேலூர் தரிசனமும் இதமாக இருந்தன.

மறுநாளே சென்னைக்கு ரயில் ஏறி விட்டான். ராமசாமி என்கிற துணையை சேட் ஏற்பாடு பண்ணியிருந்தார்.

கூடைகளாகப் பழங்கள் ஏறியிருந்தன.

சேட்ஜீயே அவனைத் தாங்கலாகத் தூக்கிச் சென்று உள்ளே ஸீட்டில் உட்கார வைத்த பாங்கு அவன் மனத்தைத் தொட்டது.

சேட்ஜீ எவ்வளவு பெரிய பணக்காரர்! நினைத்தால் பாதி கல்கத்தாவை சாயங்காலத்துக்குள் வாங்கிவிட முடியும்!

சிங்காரப்பொட்டு வந்திருந்தான். கண்ணீரோடு நின்று கொண்டிருந்தான்.

"விடுங்க, சேட்ஜீ! நானும் ஊருக்குப் போயிடறேன். அண்ணைக் கவனிக்க அங்கே ஆளு இல்லே. விடுங்க" என்றான்.

"சிங்காரம்! சொன்னாக் கேளு! ஊருக்குப் போனா எல்லா நேரமும் சாமு பக்கத்திலே இருப்பீங்க! அவ்வளவுதானே! அப்புறம் சாமுவுக்குச் சம்பாதிக்கிறது யாரு? அவரை ஆயுசு வரைக்கும் வைத்துக் காப்பாற்ற ஒரு வருவாய் வேண்டாம்? ஆண்டவன் புண்ணியத்திலே நீங்க இருக்கீங்க அதுக்கு! அண் ணை அப்படி உள் அன்போடு நேசிக்கிறீங்க! ரெண்டு மூணு படம் பண்ணிக் கொடுங்க! சாமண்ணா உங்களுக்குச் செஞ்ச நன்றியை மறக்காம அவருக்குக் கடைசிவரை உபகாரியாய் இருங்க! என்ன நான் சொல்றது?" என்று சாமண்ணாவைப் பார்த்துத் திரும்பினான் சேட்.

சாமண்ணா சன்னலோரம் அமர்ந்திருந்தான். கம்பியை விரலால் பிடித்திருந்தான். அவன் விழியில் ஒரு திவலை ஆடிற்று. அதன் முன் பிளாட்பாரமும், அதில் உள்ள யாவருமே

நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

தலையை மட்டும் ஆமோதிப்பில் ஆட்டினுன். இன்னும் கூட அவன் அடித்தளத்தில் ஒரு நினைப்பு!

இந்தச் சமயத்தில் சுபத்ரா வந்து கையைக் காட்டி, "போய் வாருங்கள்" என்று ஒரு வார்த்தை சொல்வாளோ என்று.

கண்ணைத் துடைத்தான். ஹௌரா. ஸ்டேஷனின் பெருத்த இரும்புக் கூடாரத்தைப் பார்த்தான். உள்ளே பிளாட்பாரங் களைப் பார்த்தான்.

எல்லாருக்கும் எத்தனை பேர் வந்து வழி அனுப்புகிருர்கள்! அவனுக்கும் எத்தனை பேர் வந்திருக்க வேண்டியது!

கால் மட்டும் சரியாக இருந்து அவன் ஊருக்குத் திரும்பி யிருந்தால், பிளாட்பாரத்தில் கல்கத்தாவே கூடியிருக்கும்.

சுபத்ரா சன்னல் ஓரம் நின்று சோகத்துடன் பேசுவாள். சுற்றிலும் ஒரு காமிரா கூட்டமே அலையும்.

வந்தபோது அவனுக்குக் கிடைத்த விமரிசை என்ன? இப்போது நடக்கும் மௌனப் பிரிவு உபசாரம் எப்படி?'

மணி அடித்தது. சேட்ஜி கையைக் காண்பித்தார்.


ரத்தினங்கள் போல் கண்கள் சொட்ட சாமண்ணு கையைக் காண்பித்தான்.

"அண்ணே, விட மாட்டேன் அண்ணே!" என்று சிங்காரப் பொட்டு பெட்டிக்குள் பாய்ந்தான்.

"அண்ணே! உங்க கூடத்தான் வருவேன். இங்கே வந்தது உங்களைப் பார்க்கத்தான். இடையிலே வந்த சினிமா வேணும். நீங்கதான் வேணும்" என்ருன்.

அவனை அத்தனை நேரமும் நிறுத்தி வைத்திருந்த சேட்ஜியும் சட்டென்று படியேறி உள்ளே புகுந்தார்.

# 32



ரயிலில் சிங்காரப் பொட்டுவும், சேட்டும் ஏறினது சிங்காரத்தை 'இறங்கு! இறங்கு!' என்று சேட் சொன்னது, "நான் மாட்டேன்! நான் மாட்டேன்!" என்று சிங்காரம் மறுத்தது எதுவுமே சாமண்ணாவின் கவனத்தில் பதியவில்லை.

அவன் பார்வை நகரும் பிளாட்பாரத்தில் லயித்திருந்தது. தூரத்தில் தெரிந்த நுழைவாயில் மீதும், மாடிப்படிகள் மீதும் அலைந்தது. இந்தக் கடைசி நேரத்தில் கூட மனத்தில் அந்த ஆசை துளிர்த்திருந்தது. அவள் வரமாட்டாளா?

ஆமாம்; சுபத்ரா அவசரமாக அந்த வாயில் வழியாக ஓடி வந்து, அவனைப் பார்த்துக் கையை ஆட்டுவாள் என்று எதிர் பார்த்தான். அப்படி நடக்காதா என்று ஏங்கினான். அந்த ஒரு நிகழ்ச்சியைத் திரும்பத் திரும்ப மனத்திரையில் பார்த்துக் கொண்டே சென்னை வரை போய் விடலாம்; அந்த இனிய நினைவில் உடல் உபாதையோ, மன வேதனையோ மறந்து போகும் என்று எண்ணினான்.

ஊருக்குப் போன பின்னர் சுபத்ராவை, அவள் நினைவை மனத்தில் பூஜித்து, ஓர் இழந்த காதலின் இன்பமான சோகத்தை வாழ்க்கை முழுதும் அனுபவித்துக் கொண்டிருக்க லாம். மனத்தின் இடையறாத பொழுது போக்காக அது இருந்து கொண்டிருக்கும்.

பிளாட்பாரம் விரைவாக நகர்ந்தது. வாசல் மறைந்தது. மேலே கூரை மறைந்தது. ஜனங்கள் பின்தங்கினார்கள். பரந்த வெளி தோன்றி அதன் பரப்புகளில் தண்டவாளப் பின்னல் தெரிந்தது. அதை அடுத்து கல்கத்தாவின் வானம் நீலமாகத்

தெரிய ஆரம்பித்தது.

என்ன அற்ப ஆசை! தன்னைத் தானே பரிகசித்து, விழியின் அடிவாரத் திவலையை வழித்தான்.

அப்போதுதான் சிங்காரம் அவனது காலடிகளைப் பற்றி யிருந்தான்.

"அண்ணே, உங்களை விடமாட்டேன். உங்களை விட மாட்டேன்" என்று டிராமாவில் வசனம் பேசுவது போல் பேசினான்.

தமது முயற்சி வீணாவதைக் கண்ட சேட்ஜி சாமண்ணாவை நோக்கி, "சாமு! இவருக்கு ஒரு உத்தரவு போடுங்க!" என்றார்.

"இந்தா சிங்காரம்! சொன்னா கேட்க மாட்டே நீ! எழுந் திருக்கப் போறயா, இல்லையா?" என்று சற்று அதட்டலாகக் கேட்டான் சாமண்ணா.

அவனது காலைப் பூப்போலப் பற்றியிருந்த சிங்காரம், மெள்ள எழுந்திருந்தான். அவன் கண்கள் கலங்கி இருந்தன.

"சிங்காரம்! இதென்ன? எனக்காக நீயும் வாழ்க்கையைப் பாழாக்கிக்கப் போறயா? ஒரு ஊனத்தின் மேலே இரக்கப்பட்டு எல்லாரும் தங்களை ஊனமாக்கிக் கொள்ளக் கூடாது. இரக்கம் உண்மையான இரக்கமாயிருந்தால் மற்றவர் ஊனத்தின் வேதனையைப் போக்குவதற்குப் பாடுபடணும். நீ சினிமாவிலே சேர்ந்து நல்லா சம்பாதி! நிறையப் பணம் சேர்த்து ஊனமுற்றவங்களுக்குப் பள்ளியோ, விடுதியோ நடத்து. என் ஒருத்தன் ஊனத்தை மட்டும் முக்கியமாக் கருதாதே. எனக்குக் காலில் தான் ஊனமே தவிர, மனசிலே இல்லை. அதனாலே நான் தைரியமா இருந்துப்பேன். மனசிலே தைரியம் இல்லாம இருப்பாங்க பாரு, அவங்களைக் காப்பாத்து..."

"நீங்க இப்படியெல்லாம் சொல்லாதீங்க. உங்களுக்காகத் தான் நான் வாழணும்னு நினைக்கிறேன். நீங்க என்ன சொன்னாலும் சரி, உங்களை விடப் போவதில்லை" என்று ஆவேசத்துடன் கூறினான் சிங்காரம்.

"சரி! நீ என்னைக் காப்பாத்தணும்னா அதுக்குப் பணம் வேணுமா? வெறும் கை முழம் போடுமா? நீ சம்பாதிச்சாத் தானே என்னைக் காப்பாத்த முடியும்! வீண் ஆவேசம் சோறு போடாது. முதல்லே சேட்ஜி சொல்றதைக் கேளு. அப்புறம் என்னைக் கவனிக்கலாம். சேட்டுக்குத் தொந்திரவு கொடுக்காதே!"

சிங்காரத்திற்கு சாமண்ணாவின் வார்த்தைகள் சரியாகப் பட்டன.

"அண்ணே! நீங்க சொல்றதை ஏத்துக்கிடறேன். ஆனா ஒரே ஒரு வருஷம்தான் இந்தக் கல்கத்தாவில் இருப்பேன். அப்புறம் ஊரோட வந்துருவேன். அதுக்கப்புறம் ஆயுசு முழுதும் உங்க கூடத்தான். இது சத்தியம்!" என்றான்.

"அப்படிச் சொல்லுங்க சிங்காரம்! இப்பத்தான் சரியாப் பேசறீங்க!" என்று சேட்ஜி சந்தோஷப்பட்டார்.

"சரி; ரயில் நகர்ந்துட்டுது. இப்போ எப்படி இறங்கு வீங்க?'' என்று சாமண்ணு கேட்கும்போதே வண்டியின் வேகம் குறைந்தது.

அவுட்டரில் அது அனுமதிக்காகத் தங்க, "வா சிங்காரம். இப்ப இறங்கிடுவோம்!'' என்ருர் சேட்.

வண்டிக்குள்ளிருந்த துணை நடிகன் ராமசாமி சேட்டின் கைகளைப் பற்றி மெள்ள இறக்கினுன். சிங்காரம் 'பொத்' தென்று குதித்தான்.

சேட் அப்படியே எம்பி ராமசாமியைப் பார்த்தார். "தம்பி! ஐயாவை ஜாக்கிரதையாகக் கொண்டு போய் ஊரிலே சேர்த்துடு! தூங்கிடாதே! ஜாக்கிரதை. கூடையிலே பழம், ஸ்வீட் ரசகோலா எல்லாம் வெச்சிருக்கேன். வால்டேர்ல சாப்பாடு வாங்கிக் கொடு. நீயும் சாப்பிடு. அப்புறம் ஊர்ல ரெண்டு நாள் தங்கியிருந்துட்டு அவர் 'போ'ன்னு சொன்னப்புறம் புறப்பட்டு வா. வரபோது தேவராஜ முதலி தெருவிலேர்ந்து ஜாலர் துணியும், காகித மல்லியும் மறந்துடாமே வாங்கிட்டு வா'' என்று சேட்ஜி குரலை உயர்த்திச் சொன்னுர்.

வார்த்தைகள் வெளிக்காற்றில் பறந்து போயின.

இரண்டு இரவுகளும் ஒரு பகலும் பிரயாணம் செய்த அலுப்பும் களைப்பும் சாமண்ணுவின் முகத்தில் தெரிந்தன. ஒரு வார்த்தை பேசவில்லை. சுபத்ராவின் நினைவுச் சுழலில் சிக்கி ஒரு உன்மத்த நிலையிலிருந்தாள்.

உலகம் முழுவதும் இப்போது அன்னியமாகத் தோன்றியது அவனுக்கு. வழியில் குறுக்கிட்ட ஆறுகள், வயல்கள், ஸ்டேஷன்கள் யாவும் வெறும் சூன்யங்களாகத் தோன்றின.

இரண்டாம் நாள் காலையில் ஆந்திரத்து ஊர்கள் வரிசையாக வந்தன.

'இன்னி சாயங்காலம் ஆயிடுமோ ஊர் போய்ச் சேர' என்று யோசித்தான்.

மாலையில் ஊரில் அடையாளங்கள் வந்தவுடன் ஒரு கனவிலிருந்து உண்மைக்கு வருவதுபோல் இருந்தது.

சட்டென்று கால்களைத் தூக்கிக் கீழே போட, அப்போது தோன்றிய வலி அவனது உண்மைக் கோலத்தை விளக்கிற்று. அவன் ஊனம்!

"ஐயா, மெதுவாக!'' என்ருன் ராமசாமி.

சாமண்ணு அவன் தோளில் படிந்து கொண்டான். ஒற்றைக் காலைத் தாவித் தாவிக் கதவருகில் வந்தான்.

அவனை மெதுவாகப் பிடித்து உட்கார வைத்து இறக்கினுன் ராமசாமி.

இதற்குள் வண்டி நகர்ந்து வேகம் பிடிக்கவே, "இந்தாங்க, இதை மறந்துட்டீங்களே!'' என்று ஒரு குரல் வண்டியிலிருந்து கேட்டது.

முதல் வகுப்பிலிருந்த ஒருவர் வெளியே எட்டி அவனது 'க்ரச்' இரண்டையும் எடுத்துப் போட்டார்.

வண்டி பளிச்சென்று விலகிப் போய்விட, அதுவரை தொடர்ந்த ஒரு துணையான ஜனக் கூட்டமே தன்னைத் தனிமையாக்கிவிட்டது போன்ற உணர்வுடன் ஸ்டேஷனைப் பார்த்தான்.

வெறிச்சென்றிருந்தது. கிராதி வேலி நெடுந்தூரம் போய் ஒரு வெறுமையை வளைத்துக் கொண்டிருந்தது. சற்று எட்டத்தில் அவன் இரண்டு 'க்ரச்'களும் அலங்கோலமாய்க் கிடந்தன.

''யார் யாருக்கோ தந்தி கொடுத்திருக்கிறேன் என்று சேட் கூறினாரே! ஒருவரையுமே காணோமே! சாமூ! இதுதான் வாழ்க்கையின் அப்பட்டம்'' என்று ஒரு குரல் ஒலித்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். யாருமில்லை.

பிளாட்பாரத்தில் சேட் கொடுத்திருந்த பழக் கூடை கவிழ்ந்திருந்தது. அதன் மீது சுற்றிக் கட்டியிருந்த கோணி கிழிந்து இரண்டொரு ஆப்பிள் வெளியே விழுந்திருந்தது.

அவற்றில் ஒரு ஆப்பிளைக் கையில் எடுத்தான். அதில் சுபத்ராவின் முகம் தெரிந்தது.

பற்களால் அதைக் கடித்துச் சுவைத்தான். சட்டென்று நிறுத்தினான். ஸ்டேஷனையும் சுற்றுப்புறத்தையும் பார்த்தான். மறுகணம் 'தூ தூ' என்று துப்பினான்.

கையிலிருந்த அந்த ஆப்பிளை அப்படியே தண்டவாளத்தில் எறிந்தான்.

'பசிக்கு ஆப்பிள் சாப்பிடலாமா? அதுவும் இனிமே' மனம் முனகியது.

''ராமசாமி!''

''என்ன ஐயா?''

''போலாம்.''

''சரி ஐயா!''

ராமசாமி க்ரச்சை எடுத்துக் கொடுக்க, சாமண்ணா தன்னைத் தாங்கிக் கொண்டு மெதுவாக நடந்தான். ஒவ்வொரு அடிக்கும் உலகம் எம்பி எம்பி விழுந்தது. ஸ்டேஷன் வெளியே ஜட்கா ஒன்று காத்திருந்தது. வண்டிக்காரன் சாமண்ணாவை ஏற இறங்கப் பார்த்தான்.

'என்ன அப்படிப் பார்க்கிறே? நான்தான் நாடக நடிகன் சாமண்ணா' என்று சொல்ல வேண்டும் போல இருந்தது.

'ஹூம்! நாடகத்தை அவன் எங்கே பார்த்திருக்கப் போகிறான்!' என்றது இன்னொரு மனம்.

''எங்கே போகணுமுங்க?''

''கோட்டை மைதானத்துக்கு அடுத்த அஞ்சு ராந்தல் தெருவுக்குப் போ!''

''ஒரு ரூபாய் கொடுங்க''. வண்டியைத் தாழ்த்தி சாமண்ணாவை ஏற வைத்தான் வண்டிக்காரன்.

''ராமசாமி! பின் படுதாவைப் போடு'' என்றான் சாமண்ணா. படுதா விழுந்தது.

ஊரைப் பார்க்க சாமண்ணாவுக்கு விருப்பமில்லை. வண்டி வீட்டு வாசலில் போய் நின்றதும் மெதுவாக இறங்கினான். தெரு விளக்கு மஞ்சளாய்ச் சிணுங்கிக் கொண்டிருந்தது. யாரையுமே காணோம்.

வீடு நிசப்தமாக இருந்தது. அவனை சோகத்துடன் அது பார்க்கும் பிரமை ஏற்பட்டது.

'டக் டக்'.

க்ரச்சின் ஓசை இப்போது அவன் காதிலேயே வித்தியாச மாகக் கேட்டது.

படிகளை அணுகினான்.

வராந்தாவில் படுத்திருந்த உருவம் மெள்ள எழுந்தது. தள்ளாடித் தூணைப் பிடித்தவாறு அவனை உற்று நோக்கியது.

''என்ன கந்தா! நான்தான் வந்திருக்கேன்! கதவைத் திற'' என்றான்.

கந்தப்பன் வாய் பொக்கையாக அவிழ, ''ஐயாவா, வரணும், வரணும்'' என்று சொல்லி அவசரத் தடுமாற்றத்துடன் ஓடிக் கதவைத் திறந்தான். லாந்தர் ஏற்றியதும் வீடு பளிச்சிட்டது.

ஆவலுடன் ஒவ்வொரு அறையாகப் போய்ப் பார்த்தான். பழமை நினைவுகள் ஒவ்வொரு பகுதியிலும் ஒட்டியிருந்தன.

கடைசியாகக்கூடத்துக்குப்போனபோதுகந்தப்பன் அவனது க்ரச்சுகளைக் கவனித்துவிட்டான்.

''சாமி! இதென்ன!'' என்று பதறினான்.

''ஒண்ணுமில்லே கந்தப்பா! கொஞ்ச நாள் ஆட வேண் டாம்னு கடவுள் சொல்லிட்டாரு! கட்டுப் போட்டிருக்கேன்! அவ்வளவுதான்'' என்றான் சாமண்ணா.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ராமசாமி சாமண்ணாவை அணுகி, ''அப்போ நான் புறப்படட்டுங்களா?'' என்றான்.

''சரி, நீ போயிட்டு வா. சேட் கிட்டே ரொம்ப விசாரிச்ச தாச் சொல்லு! இனி கந்தப்பன் என்னைக் கவனிச்சுக்குவான்'' என்றான் சாமண்ணா.

மூன்று நாட்களாகியும் சாமண்ணா வந்திருப்பதை அந்த ஊரில் யாரும் கவனிக்கவில்லை. மனசில் அந்த எண்ணம் ஒரு பாறையாக அமிழ்ந்தது. 'எல்லோரும் என்னை மறந்துவிட்டார் களா?'

கூடத்தில் எரிந்து கொண்டிருந்த லாந்தர் விளக்கு காற்றில் மெல்ல ஆடியது.

'எவ்வளவு பெரிய வீடு இது! பரிவாரத்தோடு இதில் நிறைந்து வாழப் போகிறோம் என்று நினைத்தோமே!' இப் போது அதன் விசாலமே அவனுக்கு வேதனையாக இருந்தது.

சட்டென்று ஒரு குரல்: ''மாமா!''

அந்த அச்சச்சோ பெண் எதிரில் நின்றாள்.

''அச்சச்சோ! நீங்க வந்துட்டேளா! லைட் எரிஞ்சதுன்னு பார்த்தேன். எப்போ வந்தேள்? இத்தனை நாளா எங்கே போயிருந்தேள்? நான் ரொம்பப் பயந்து போய்ட்டேன் மாமா!'' என்றாள்.

அந்த நேரத்தில் அவள் பேச்சு எவ்வளவு பெரிய ஆறுதலைத் தந்தது! சாமண்ணாவின் மனசில் சோகமான இன்பம் பொங்கியது.

''ஏன் பயந்தே?''

''ரொம்ப நாளாக் காணல்லையா? உங்களை ஜெயில்லே போட்டுட்டாளோன்னு நினைச்சேன்.''

''என்னையா, எதுக்கு?''

''எங்க அப்பாவைக் கொலை செஞ்சீங்கன்னு போலீஸ்காரா உங்களைப் பிடிச்சுண்டு போனா இல்லையா?''

''ஆமாம்!''

''அதுக்காக உங்களை ஜெயில்லே போட்டுட்டாளோன்னு நினைச்சேன். இன்ஸ்பெக்டர் முனகலா மாமாவைப் பார்த்து நானே சொல்லணும்னு நினைச்சேன்!''

''என்ன சொல்ல நினைச்சே?''

''சாமண்ணா மாமாவை விட்டுடுங்க! எங்க அப்பாவை அவர் கொலை செய்யலை. அது வேறே மாமான்னு சொல்லணும்னு நினைச்சேன்.''

சாமண்ணா நிமிர்ந்து பார்த்தான். சற்று அதிர்ந்தான்.

''யார் அந்த வேற மாமா?''

''காதர் பாட்சா மாமா!''

''யார்? அந்த ஆர்மோனியக்காரனா?''

''மாமா! அவன்தான் விறகுக் கட்டையாலே எங்க அப்பா தலையிலே அடிச்சுக் கொன்னுட்டான்.''

''நீ பார்த்தியா?''

சாமண்ணா ஆச்சரியத்தோடு கைகளை ஊன்றி இன்னும் நிமிர்ந்தான்.

''ஆமாம், நான் அப்ப பாத்ரூம்ல இருந்தேன்.''

''நிஜம்மா?''


''நிஜம்மாத்தான்! அந்தக் கடன்காரனைக் கண்டதும் பயந்து போயிட்டேன். கட்டையாலே அடிச்சு, அந்தக் கட்டையைக் கொண்டு போய் புழைக்கடை ஓலைக் கூரையிலே சொருகிட்டு ஓடிட்டான். கண்ணாலே நான் பார்த்தேன்.''

''அப்போ நீ ஏன் இதை அன்னிக்கே சொல்லலை!''

''என்னை யாரும் கேட்கலையே மாமா? கேட்டிருந்தா சொல்லியிருப்பேன்!''

தாவணி கட்டிய அவள் துக்கம் காட்டியது வயசுக்கு மீறி இருந்தது.

# 33



அசட்டு 'அச்சச்சோ' லல்லு சொன்ன செய்தி சாமண்ணாவை அதிசயத்தில் ஆழ்த்தியது.

எந்தக் கொலைக்கும் ஒரு சாட்சி உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறான்.

ஹோட்டல் அதிபர் கொலையில் அது இல்லையே என்று நினைத்திருக்கிறான். முனகாலா தன்னை அழைத்துப் போய் விசாரித்துத் துன்புறுத்திய போதெல்லாம், 'புராணத்தில் நடப்பது போல் கடவுளே நேரில் வந்து உண்மையை உரைக்க வேண்டும்' என்று நினைத்திருக்கிறான்.

கடவுள் வரவில்லை. ஆனால் பிரதிநிதியாக லல்லுவை அனுப்பியிருக்கிறார். தன்னுடைய சோகம் நிறைந்த வாழ்க்கையில் அது ஒரு சின்ன அமிர்தத் துளி போலிருந்தது அவனுக்கு.

அந்தப் பெண் இன்னும் சற்று நேரம் அசட்டுப் பிசட்டென்று பேசிவிட்டுப் பிறகு கொக்கரித்துக் கொண்டு வெளியேறினாள். அவள் போனதும் அவன் சோகம் மீண்டும் மூண்டது. அந்த அசட்டுப் பெண்ணாவது பக்கத்தில் இருந்தால் தேவலை என்று தோன்றியது அவனுக்கு.

சன்னல் பக்கம் அமர்ந்து ஊரைப் பார்த்தான். வெளிப்புறம் இருட்டியிருந்தது. காற்றில் ஒரு நாட்டுப்புற மணம் வீசியது. யாரோ பேசிக் கொண்டு போகும் பேச்சுத் துணுக்குகள் தெளிவில்லாமல் கேட்டன.

கல்கத்தா நினைவுகள் ரயில் தொடர் போல் ஊர்ந்து வந்தன. சகுந்தலைக் காட்சிகளில் அவன் நடித்ததும் சுபத்ரா அவனிடம் சல்லாபித்ததும் பளிச்சென்று தோன்றின. ஆச்சரியம்! அவ்

வளவு அழகும், புகழ்பெற்ற நட்சத்திரம் தன்னைக் கண்டு மோகித்தது ஒரு கிளுகிளுப்பை உண்டாக்கியது.

அதே சமயம் மல்லிகை ஓடையின் நினைவுகளும் மனத்தில் பூத்தன. ஆனால்... சுபத்ராவின் அழகுக்கு முன் சகுந்தலா எங்கே?

சகுந்தலா கல்கத்தா வந்தபோது அவள் மீது மனம் நாடவில்லை., சுபத்ராவின் போதையில் மூழ்கியிருந்தவனுக்கு சகுந்தலா துச்சமாய்த் தோன்றினாள்.

ஆனால்... இன்று...

காலும் மனமும் ஊனமாகி, கேட்பாரற்ற நிலையில் அனாதை யாகி ஊர் திரும்பியிருக்கிறான்.

"என்னை யாருமே திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்களா? நான் இறந்தாலும் அழுவதற்கு ஆள் கிடையாதா? நானேதான் அழ வேண்டுமா? நானேதான் கொள்ளி போட்டுக் கொள்ள வேண்டுமா?"

அதையெல்லாம் நினைத்துப் பார்த்த போது துக்கம் பீறிட்டது. சுய அனுதாபம் தோன்றி சகுந்தலா வரலாம் என்று நெஞ்சின் அடிவாரத்தில் தேசலாய் ஓர் ஆசை பிறந்தது. அதுவும் இப்போது மறைந்து விட்டது.

அவள் மனத்தை எவ்வளவு துவைத்து விட்டேன்! என் அலட்சியம் அவளை எத்தனை வேதனைக்குள்ளாக்கியிருக்கும்!

பகல் தூக்கம் தூங்கிய பிறகு கட்டிலில் எழுந்து உட்கார்ந்த போது ஆறு மணி ஆகியிருந்தது.

சாமு என்று ஒரு குரல்! மெலிதான ஒரு குரல் கேட்டது. பழக்கமான குரல்! உடம்பில் பரவசம்!

ஜன்னலில் ஒரு நிழல் தெரிய, "யாரு?" என்று கட்டிலில் இருந்தவாறே கேட்டான்.

"யாரு! உள்ளே வாங்க!" என்றான்.

"நான்தான் சாமு! கோமளம் வந்திருக்கேன்."

"யாரு? வக்கீல் மாமியா?"

"அடேடே!" என்று தன்னை மறந்து எழுந்திருக்க, கால் ஒரு போடு போட்டது.

"பல்லைக் கடித்து வேதனையை அமுக்கிக் கொண்டு, "வாங்கோ மாமி! உள்ளே வாங்கோ!" என்று உபசாரக் குரலில் அழைத்தான்.

"இருக்கட்டும் சாமு! நான் இங்கேயே நிற்கிறேன். உள்ளே வர்றதுக்கு இல்லை" என்றாள் கோமளம்.

சாமண்ணா யோசித்தான். 'அந்த மூன்று நாட்களாக இருக்குமோ! சீ! அந்த நாட்களில் மாமி வீட்டை விட்டு வெளியே இறங்க மாட்டாளே?'

ஆண் பிள்ளை தனியாக இருக்கும் வீட்டுக்குள் வரத் தயங்குகிறாளோ? க்ரச்சை எடுத்துக் கீழே வைத்தான். வலி இன்னும்

தீரவில்லை. காலைத் தூக்கி வைக்க முடியவில்லை.

''கொஞ்சம் இருங்கோ மாமி! நானே வர்றேன்!'' என்றான் அவன்.

''வேண்டாம் சாமு, வேண்டாம்! நீ இங்கே வராதே! அங்கேயே இரு! காரணமாகத்தான் சொல்றேன். நானும் உள்ளே வர்றதுக்கு இல்லை!'' என்றாள்.

சாமண்ணாவின் திகைப்பு அடங்கவில்லை. தயங்கியபடியே கட்டிலில் அமர்ந்து கொண்டான்.

''சௌக்கியமா வந்து சேர்ந்தியா? எல்லாம் கேள்விப்பட்டேன்! நாட்டைக் கலக்கிண்டு வருவேன்னு நினைச்சேன். உன் புகழ் ஊர் உலகமெல்லாம் பரவற நேரத்திலே, கடவுள் உன்னைச் சிறகொடிந்த பறவையாக்கிக் கூண்டிலே அடைச்சுப் போட்டுட்டாரே! அந்தக் கடவுளுக்குக் கண் இல்லை சாமு!'' என்று கேவி அழுதுவிட்டாள் மாமி.

"கடவுள் மேலே பழி போடாதீங்க. நம்ப தலை எழுத்து அப்படி! மாமா சௌக்கியமா இருக்காரா?'' என்றான்.

கோமளத்திடமிருந்து பதில் வரவில்லை.

மாமி விசிக்கும் சத்தம் கேட்டு, ''ஏன் மாமி அழறீங்க? அழாதீங்க. என் கால் போனதுக்கா?''

பதில் இல்லை.

''மாமி, மாமி!''

''இங்கேதான் இருக்கேன்!'' என்று கம்மிய குரலில் பேசினாள் மாமி.

''என்ன ஆச்சு? உடம்பு சரியில்லையா உங்களுக்கு?''

''எனக்கென்ன? சரியாத்தான் இருக்கேன்.''

''நானே ஆத்துக்கு வந்திருப்பேன் மாமாவைப் பார்க்க! மனசே சரியில்லை! யாரையும் நானே வந்து பார்க்கிற அளவுக்கு ஆண்டவன் என்னை விட்டு வைக்கலை. ஊனப்படுத்திட்டான்.''

''இல்லை சாமு! நீ வந்திருக்கேன்னு தெரிஞ்சா மாமா சும்மா இருப்பாரா? அவரே வந்திருப்பாரே...'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினாள் கோமளம்.

''மாமா ஊரிலே இல்லையா?''

மீண்டும் விசிப்பு.

''அழாதீங்க மாமி! விஷயத்தைச் சொல்லுங்க.''

''அவர் இந்த உலகத்திலேயே இல்லை சாமு. நான் கொடுத்து வெச்சது அவ்வளவுதான்,'' குரல் உடைந்து கூறினாள்.

''என்ன மாமி?''

''மாமா போயிட்டார் சாமு!''

''ஐயோ, நிஜமாவா? எப்ப மாமி?''

கோமளம் பேசவில்லை,. அவள் அடங்குவதற்குக் காத்திருந்தான்.



"ஒரு மாசம் ஆச்சுப்பா. கோர்ட்டிலேர்ந்து வந்தார். நெஞ்சு வலிக்கிறதுன்னுர். படுத்துண்டார், போயிட்டார்."

"வக்கீல் மாமா போய்ட்டாரா?" அவன் புலம்பினுன்.

சாமண்ணுவுக்குக் கண் இருண்டது. ஒருகணம் இரண்டாவது காலும் போய் அந்தரத்தில் மிதப்பது போல் தோன்றியது.

"மாமி! என்னுலே இந்த துக்கத்தைத் தாங்க முடியலேயே! அவரைப் பார்க்க முடியாமல் போகும்னு கல்கத்தாவே போயிருக்க மாட்டேனே! அவர் சிரிப்பும் சீசூர்ணமும், தலைப் பாகையும், மாமி இனி எந்த ஜன்மத்தில் பார்ப்பேன்?"

சாமண்ணுவிடமிருந்து அவை சத்திய வார்த்தைகளாக வந்தன.

மாமியின் தழதழக்கும் தொண்டை மட்டும் சிறிது கேட்டது. விசித்தாள்.

மாமியின் தோற்றம் நினைவுக்கு வந்தது. தாமரை முகம். மூக்கில் பேசரியும் உதட்டில் புன்னகையும் சுடர் அடிக்கும். இன்னிக்கும் மாமி இருபத்தைந்து போல இருப்பாள். அவளை இப்போது எப்படிப் பார்ப்பது?

"மாமி! என்னுலே இந்த துக்கத்தைத் தாங்கிக்க முடியலே மாமி! இப்படியா சோதனை பண்ணுவார் கடவுள்! எனக்கு நேர்ந்தது கூடப் பெரிசல்ல; உங்களுக்கு இப்படி ஒரு இடியா?"

"உனக்கு என்ன ஆச்சு சாமு?" என்று மாமி துயரத்துடன் கேட்டாள்.

"மாமி! சினிமா ஷூட்டிங்கில் குதிரை மேலேருந்து விழுந்து பெரிய ஆக்ஸிடெண்ட். காலை எடுத்துட்டாங்க."

மாமி கலங்கிப் போனுள்.

"சாமு!" தன்னை மீறி அவள் கூச்சல் போட்டு விட்டாள். "உனக்கா கால் இல்லை? உன் காலையா கடவுள் பறிச்சுட்டார்? என்னுலே தாங்க முடியவில்லையே சாமு! கடவுள் உன்னை இப்படிச் சீரழிச்சுட்டாரே!"

மாமிக்குக் குமுறிக் குமுறி வந்தது.

"சாமு! நாளைக்கு நான் மல்லமங்கலம் போறேன். எங்க அம்மா ஊரு அது! பந்துக்கள் இருக்கா! இனிமே இந்த ஊர்லே எனக்கு என்ன இருக்கு? உன்னையும் பார்த்துப் பேசியாச்சு. அம்மாவோடு போய்க் கிராமத்திலேதான் இனிமே வாழ்க்கை! நீ வந்திருக்கேன்னு அந்த ஓட்டல்காரப் பெண் சொன்னு. அதிலேர்ந்து துடிச்சிண்டிருந்தேன். உன்கிட்டே ரெண்டு வார்த்தையாவது பேசிட்டுப் போகணும். ஊர் ஒத்துக்காது. மனுஷா ஒத்துக்க மாட்டா. இப்படி அவர் போய் ஆறு மாசத்துக்குள்ளே வெளியிலே கிளம்பிட்டாளேன்னு கைகொட்டிச் சிரிப்பா. ஆனுல் நான் தீர்மானிச்சுட்டேன்! என்ன ஆனுலும் உன்கிட்டே ரெண்டு வார்த்தை பேசிட்டுப் போறதுன்னு. பேசிட்டேன். நான் வரட்டுமா? யாரும் பார்க்கிறதுக்கு முந்தி

இருட்டோட ஆத்துக்குப் போயிடறேன். வரட்டுமா சாமு? வரட்டுமா?'' என்று மனமில்லாமல் அங்கிருந்து புறப்பட்டாள்.

''போய் வாங்க! உங்களை மறக்க மாட்டேன் மாமி! ஆயுசு முழுவதும் உங்க அன்பு என் மனசிலே பதிஞ்சு போயிருக்கும்.''


சாமண்ணா எழுந்து 'க்ரச்' எடுத்து வாயிலுக்கு வருமுன் அவள் படி இறங்கி நடந்து கொண்டிருந்தாள்.

பின்புறமும் பக்கவாட்டும்தான் தெரிந்தன. ஒரு திடீர் இடி அவன் மீது விழுந்தது போலிருந்தது.

கோமளம் தலையை மழித்து வெள்ளைப் புடைவையால் மூடியிருந்தாள்.

அவள் உருவம் மெலிதாகத் தெருவில் இறங்கி விரைவாக மறைந்தது.

# 34



கோமளம் சென்ற பிறகு சாமண்ணா கட்டிலில் போய் 'தொப்'பென்று அமர்ந்தான். மூச்சு முட்டியது. இதயத்தை அமுக்கிக் கொண்டான். அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட ஏக நேரம் ஆயிற்று.

எனக்குத்தான் துக்கம் நிகழ்ந்துவிட்டது என்றால் என்னைத் தெரிந்தவர்களுக்குமா இந்த கதி! மகாலட்சுமி மாதிரி இருந்தாளே கோமளம் மாமி!' களை பொருந்திய அந்த வைர பேசரி முகத்தை அவனால் மறக்க முடியவில்லை. வைரத்துக்கு ஈடு கொடுக்கும் சிரிப்பு. கையில் பூக்கூடை எடுத்து நின்றால் ரவி வர்மா சித்திரம்!

அந்த ஓவியத்தை தெய்வம் இப்போது அலங்கோலமாக அழித்துவிட்டிருந்தது!

''ஐயா சாப்பிடலீங்களா?'' எனக் கேட்டான் கந்தப்பன்.

''வேண்டாம்பா, நீ வீட்டுக்குப் போ'' என்று கூறி அனுப்பி விட்டான் சாமண்ணா.

கந்தப்பன் மனமில்லாமல் தயங்கியபடி கதவைச் சாத்திக் கொண்டு வெளியேறினான்.

சாமண்ணாவுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். வாசலிலிருந்து வந்த பவழ மல்லியின் வாசனை மூக்கைத் தாக்கியது. சன்னல் ஓரம் நகர்ந்து போய் வெளியே பார்த்தான். தெரு ஓரத்திலிருந்த பவழமல்லி மரம் பூக்களை உதிர்த்துப் பாவாடை விரித்திருந்த காட்சி நிலாவுடன் கொஞ்சியது. அந்த அடக்கமான மணம் உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டாக்கியது. சகுந்தலா கண்முன் வந்தாள். பவள

மல்லியாய்ச் சிரித்தாள். அவளை அலட்சியப்படுத்திய காட்சி கள் அடுத்தடுத்து வந்தன. மன்னிக்க முடியாத குற்றம் இழைத்து விட்ட கொடுமையை எண்ணிக் குமுறினன். மெதுவாகத் தத்தி நடந்து வந்து மீண்டும் கட்டிலில் படுத்தான்.

எண்ணச் சூழலில், சகுந்தலா சுற்றி வந்தாள். கோயில் பக்கத்திலிருந்து வாத்திய ஒலிகள் வந்தன.

பக்கத்துப் பெருமாள் கோவிலிலிருந்து ஊர்வலம் புறப் பட்டிருக்கும். ஆனித் திருமஞ்சனம். போன வருடம் இந்த உற் சவத்தை முன்னிட்டு ஸ்பெஷல் நாடகம் போட்டார்கள். கூட்ட மான கூட்டம்.

நாதஸ்வரம் 'குகசரவணபவ'வில் குழைந்து கொண்டிருந் தது. பாண்டு வாத்திய முழக்கம் 'கும்'மென்று ஊரை மயக்கி யது. வேலூர் நாதமுனி கோஷ்டியாயிருக்க வேண்டும். பத்துப் பதினைந்து பேர் சேர்ந்து இழையும்போது என்ன இனிமை!

ஊர்வலம் அவன் வீட்டை நெருங்கி வருவதை காஸ் லைட்டு கள் பளீர் பளீர் என்றி அறிவித்தன. ஊர்வல முன்வரிசை பார்வைக்கு வந்தது. பிரமுகர்களும் பட்டுப் புடவைகளும் காரைச் சூழ்ந்து நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

நாதஸ்வர வித்வான் கழுத்தில் பவுன் சங்கிலிகள் ஜொலிக்க, இடுப்பில் பட்டு வஸ்திரம் சுற்றி, மேலே குடுமியை வாரி இழுத்துப் பின் கூம்பலாக மூட்டை கட்டி, நெற்றியில் ஜவ்வாது சந்தனத்துடன் காதுகளில் வைரக் கடுக்கன் மின்ன நடந்து வந்தார்.

நாதமுனி கோஷ்டியின் விசித்திர உலோக வாத்தியங்கள் வெளிச்சத்தில் மின்னிக் கொண்டு வந்தன.

'அது யார்? வேட்டியும் சட்டையுமாய் இடுப்பில் சரிகை உத்தரீயத்தை இழுத்துக் கட்டிக் கொண்டு? டாக்டர் ராமமூர்த்தி யா! ஓகோ! தெரிந்தவர் வீட்டுக் கல்யாணமோ?' அடுத்து மலர் அலங்காரத்துடன் ஊர்வலம் சென்ற கார் அன்னம் போலத் தவழ, அதில் அந்த இளம் தம்பதியர் உட்கார்ந்திருக்க, சாமண்ணாவின் குடல் உள்ளே சுருண்டது.

மணமகன் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனல் மணமகளைப் பார்த்ததும், யார் அது? சகுந்தலாவா?

நெற்றிச் சரத்திலும், மாட்டலிலும், மூக்குத்தியிலும், அந்தச் சிற்ப முகம் ஜொலித்தது. அந்தக் கரு விழிகளின் இன்பச் சுழல்களில் அவன் எத்தனை முறை மயங்கியிருக்கிருன்!

இதயத்தில் ஒரு கன நாடி டண் என்ற சத்தத்துடன் அறுந் தது. கைகள் சன்னல் கம்பிகளை இறுகப் பற்றின. அவற்றை விடுவித்துக் கொண்டு நெற்றிப் பொட்டை சுழிகளில் வைத்து அழுத்தினன்.

'நீதான் அவளைப் புறக்கணித்தாயே! இப்போது ஏன் வேதனைப்படுகிருய்? உனக்கும் அவளுக்கும்தான் பந்தம் இல்லை யே! அவள் இப்போது இன்னொருத்தன் மனைவி! இனி அவள்

உனக்குச் சொந்தமல்ல, உன்னை ஏறெடுத்தும் பாராள்!'

ஊர்வலம் நகர நகர, பெரிய பெரிய நிழல்கள் சன்னல் வழியே உள்ளே விழுந்து பூதாகாரமாய் இயங்கின.

சிறிது நேரத்தில் தெருவில் எல்லாம் மறைந்து பழைய அமைதிக்கு வந்துவிட்டது. சந்திர ஒளியுடன் கூடிய அமைதி.

சாமண்ணு இதயத்தை அமுக்கிக் கொண்டு கட்டிலை நோக்கி நகர்ந்தான். கன்னம் முழுதும் நனைந்திருந்தது. காற்றின் அசைவுகளில் தூரத்திலிருந்து வந்த 'சக்கனி ராஜா' விட்டு விட்டுச் சிறிதும் பெரிதுமாய்க் கேட்டது. இரவு முழுதும் எதையோ பறி கொடுத்துவிட்ட சோகத்துடன் உறக்கமின்றிப் புழுங்கிக் கொண்டிருந்தான்.

பொழுது புலர்வதற்குள்ளாகவே கந்தப்பன் வந்து, "ஐயா, கிளப்லேர்ந்து இட்லி காப்பி வாங்கி வந்திருக்கேன். சாப்பிட றீங்களா? சுடச் சுட இருக்குது" என்றான். சாமண்ணுவுக்கு எரிச்சலாக இருந்தது. தானும் தன் தனிமையும் அப்படியே இருக்க வேண்டும் போலிருந்தது! குறுக்கீடு பிடிக்கவில்லை. "சூடு! எல்லாமே காலம் கடந்து ஆறிப் போச்சு' என்று எண்ணிக் கொண்டான்.

மனதில் அந்த ஊர்வலமும், சகுந்தலாவின் குளிர் முகமும் மாப்பிள்ளை யாரென்று தெரியாத வேதனையும் சூழ்ந்து கொண் டிருந்தன. அந்தச் சிற்ப முகம், நெற்றிச் சரம், மாட்டல்....

உள்ளம் குமைந்து பழைய கணக்குகளைப் புரட்டிக் கொண் டிருந்தது. வாழ்வில் எங்கெங்கே சரியான வழியை விட்டு விலகினோம் என்பது புரிந்தது. புகழும் பணமும் கண்களை மறைத்துவிட்டது தெரிந்தது. பழைய வாழ்க்கை முன் ஜன்மம் போல் இருந்தது. இப்போது அதுதான் அவனுக்குச் சொந்தம் போலவும் தோன்றியது.

சிங்காரப் பொட்டுவின் ஆறுதலான வார்த்தைகள் நினை வுக்கு வந்தன. அதெல்லாம் உணர்ச்சிவயத்தில் கூறிய வார்த்தை கள்! இந்தக் காலத்தில் யாரையாவது யாராவது ஆயுசு வரை பாதுகாக்க முடியுமா?

'சாமண்ணு, இந்தத் தண்டனை உனக்கு வேண்டியதுதான். அழு, வாய் விட்டுக் கதறி அழு! அப்போதும் உன் துக்கம் தீராது. அப்போதே உன் அம்மா சொன்னாள். நினைவு இருக் கிறதா? பள்ளிக்கூடம் போடா, பள்ளிக்கூடம் போடான்னு அடிச்சிண்டாளே! கேட்டயா? ஊர் ஊராகத் திரிஞ்சியே, நாடகத்திலே சேர்ந்து எல்லாம் கிழிச்சுடப் போறேன்னு சொன்னியே, அம்மா உனக்கு முழு மனசா அதுக்கு அனுமதி தந்தாளா?

பெரியவங்களுக்குத் தெரியாதா? கலை உலகம் எவ்வளவு மோசமான உலகம்னு! நேத்திக்குப் பணக்காரன் இன்னிக்கு விலாசம் இல்லாமல் போயிடுவான். அவன் போகாவிட்டா



லும், தன்னைத்தானே அழிச்சுக்கிற சுபாவம் அவனைச் சூழ்ந்துடும். அடேயப்பா! கல்கத்தாவிலே என்ன ஆட்டம் ஆடினாய்! டாக்டரை விசாரிச்சியா? சகுந்தலாவைச் சரியானபடி கவனிச்சியா? சிங்காரப் பொட்டுவைத்தான் நல்ல முறையில் நடத்தினயா? அகங்காரம், பணத் திமிர், புகழ்ச் செருக்கு உன் கண்களை மறைத்துவிட்டன!

சுபத்ரா மீது கொண்ட மோகத்தில் அப்படித் தலை கால் தெரியாமக் கிடந்தியே! சுவர்க்கமே கிடைச்சுட்ட மாதிரி இறுமாந்தியே! அப்ப சகுந்தலா கிள்ளுக் கீரையாத் தோணினளே! அத்தனையும் என்னாச்சு? சொப்பனம் போல எல்லாம் போயிடலையா? வாழ்க்கையை முறிச்சுகிட்டியே! இன்னும் குறை நாளை எப்படி வாழப் போறே? யார் உனக்கு என்ன செய்துடப் போரு?

"அம்மா" என்று திடீரென்று பொங்கி வந்த துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான். உள் குரல் தீனமாக ஒலித்தது.

'அம்மா! உன் சொல்லைக் கேட்காமல் ஆட்டம் போட்டேன். தப்புதான். இறுமாப்பில் எல்லாரையும் உதாசீனப்படுத்தினேன். குற்றம்தான். இப்ப அதையெல்லாம் நினைச்சு துக்கப்படுகிறேன். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் இது என்பதை உணர்கிறேன். சோற்றுப் பசி வந்தா நல்லது. எனக்கு ஆப்பிள் பசி வந்துட்டுது. அதுக்காக மேலே உச்சத்துக்குப் போய் டமால்னு விழுந்துட்டேன். கால் மட்டும் இல்லை, வாழ்க்கையே ஊனமாயிட்டுது. என்ன செய்யப் போறேம்மா?'

கந்தப்பன் பிடிவாமாய் காப்பியும் இட்லியும் எதிரில் வைத்து சாப்பிடச் சொன்னன்.

சாமண்ணவின் கண்களில் கண்ணீர் அருவி போல் கொட்டியது. இயந்திரம் போல இட்லிகளை விழுங்கினன். காப்பியைக் குடித்தான்.

மத்தியானம், "மாமா!" என்று குரல் கேட்டு வாசல் பக்கம் பார்த்தபோது அச்சச்சோ லல்லு வந்திருந்தாள்.

"இந்தாங்கோ! கடிதாசி!" என்றாள்.

"ஏது?" என்றான் சாமண்ணா.

"வக்கீலாத்து மாமி தந்தா! ஊருக்குப் புறப்பட்டுப் போருளோன்னே! உங்களுக்குச் சொல்லிக்கிரு."

"இட்லி சாப்பிடறியா லல்லு!" என்று கேட்டான்.

"வேண்டாம் மாமா! கல்யாண வீட்லே இப்பத்தான் சாப்பிட்டுட்டு வரேன்."

"கல்யாண வீடா? யாருக்குக் கல்யாணம்?"

"சகுந்தலாவுக்குத்தான். மாப்பிள்ளை ரொம்ப அழகாயிருக்கான் மாமா, சகுந்தலா கொடுத்து வெச்சவள்!"

'சொரேர்' என்றது சாமண்ணவுக்கு. மௌனமாக அந்தச் செய்தியை இட்லித் துண்டோடு சேர்த்து விழுங்கினன். அப்புறம் கடிதத்தைப் பிரித்தான்.

அன்புள்ள சாமு,

உன் விஷயம் கேள்விப்பட்டதிலிருந்து எனக்குத் துக்கம் பொங்கி வருகிறது. இந்தச் சமயத்தில் எங்க ஆத்துக்காரர் இல்லாமல் போனார்.

நான் உன்கிட்டே பேசினப்போ ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன். அதை நான் மறக்கலாமோ? எவ்வளவு பெரிய தப்பு! நம்ப பாப்பா பற்றித்தான். ஊருக்குப் போயிருக்கா அவள். நாளை காலையிலே வந்துடுவாள். நீ வந்திருக்கிறதோ, உனக்கு நடந்திருக்கிறதோ அவளுக்கு எதுவும் தெரியாது. நான் கடிதாசியிலே எழுதி அவளுக்குக் கொடுத்தனுப்பியிருக்கேன். இந்த ஊர்லேருந்து புறப்பட்டபோது உன்னை வழி அனுப்ப ஸ்டேஷனுக்கு அவள் ஓடி வந்து பார்த்தாளாம்! வண்டி புறப் பட்டுடுத்தாம். அப்புறம் கல்கத்தாவுக்கே வந்து உன்னைப் பார்க்கணும்னு துடிச்சிண்டிருந்தா! ஆனா சந்தர்ப்பமே இல்லாமல் போயிட்டுது. நீ போனதிலிருந்து எங்க வீட்டுக்கு அடிக்கடி வந்து உன்னைப் பற்றி விசாரிச்சுண்டே இருந்தாள்.

அந்தப் பெண் வேற குலத்திலே பிறந்துட்டுதே தவிர, அதைப் போல நல்ல பெண்ணை உலகத்திலே பார்க்க முடியாது. ஞாபகம் வச்சுக்க, நீ ரெண்டாம் முறை நாடக சபை ஏற் படுத்தினியே, அது யார் பணம்னு நினைச்சே? எங்காத்து மாமா வும் மத்தவாளும் சேர்ந்து பணம் போட்டிருக்கான்னுதானே? இல்லே. உண்மையில எல்லாப் பணமும் பாப்பாதான் போட் டிருக்கா! உன்னை எப்படியும் முன்னுக்குக் கொண்டு நிறுத் தணும்னு அவளுக்கு அத்தனை ஆர்வம். எங்கேயோ பிறந்து எங்கேயோ தப்பிதமா ஒருமுறை திருமணமும் நடந்து போச்சு! ஆனாலும் உன்னை அவள் மறக்கவேயில்லே. சதா உன் நினைவு தான். எனக்குத் தாலி கட்டாத கணவர் அவர்தான்னு உன்னைப் பற்றி அடிக்கடி சொல்லிண்டிருக்கா.

(''வாழ்நாள் முழுக்க ஒருத்தி ஒருவனோடு வாழணுங்கற தெல்லாம் இப்ப இல்லே. காலம் மாறிப் போச்சு. ஒருவனைப் பிரிஞ்சப்புறம் இன்னொருவனுடன் வாழறதிலே தப்பில்லேன்னு ஆயிட்டுது. ஒருவனை விடாம இன்னொருவனுடன் வாழறதுதான் தப்பு. ஒரு பெண் எப்போது எவனோட வாழறாளோ அப்போது அவனுக்குத் துரோகம் செய்யாமலிருந்தாப் போதும். அது தான் கற்புன்னு ஏதோ ஒரு புஸ்தகத்துலே படிச்சிருக்கேன். எனக்கு அந்தக் கருத்து புடிச்சிருக்கு. நான் அப்படித்தான் வாழப் போறேன்! அப்படி இன்னொருத்தனுடன் வாழறதுன்னு தீர்மானிச்சா அந்த இன்னொருத்தர் நீங்களாத்தான் இருப் பீங்க...''

பாப்பா எப்போதோ சொன்ன இந்த வார்த்தைகள் அவன் காதில் இப்போது ரீங்கரித்தது...).


உனக்கு எத்தனை சமயங்களில் எப்படியெல்லாம் உதவி செஞ்சிருக்கா தெரியுமா?''

அப்படிப்பட்டவன் உனக்கு நேர்ந்த விபத்தைக் கேட்டு சும்மா இருப்பாளா? நாளைக்குத்தான் அவள் சொந்தக் கிராமம் பூவேலிக்குத் திரும்பி வரா. நாளைக்கு அவங்க ஊர்க் கோவில்லே படையலாம். மறுநாளே உன்னை ஓடி வந்து பார்ப்பாள்!

நான் சொல்றதைக் கேளு, சாமு! வாழ்க்கைய இனிமேலும் பாழாக்கிக்காதே! அந்தப் பெண் உன்னையே நம்பிண்டு இருக்கா! நீ என்ன நிலையிலே இருந்தாலும் உன்னை அவள் ஏத்துப்பா. அப்படி ஒரு பெரிய குணம் அவளுக்கு.

உன் பிரியமுள்ள,
கோமளம்.

# 35



நினைக்க நினைக்க மனசில் வேதனையும் ஆச்சரியமும் பெருகியது சாமண்ணுவுக்கு.

'தொடர்ச்சியாக எந்த பின்னமும் இல்லாமல் என் மீது உயிரை வைத்துள்ள பாப்பாவை உதாசீனப்படுத்தி விட்டேன். இது எவ்வளவு பெரிய தவறு?

சில நாட்களே பழகிய சுபத்ரா என்னை அலட்சியப்படுத்து கிறாள் என்று தெரிந்தபோது மனம் என்னமாய்த் துடித்தது? எத்தனை வேதனைப்பட்டேன்? அப்படித்தானே துடித்திருப் பாள்?'

ஆதியிலிருந்தே அடிபிசகி விட்ட குற்றத்தை இப்போது உணர்ந்தான். 'ஏதாவது ஓரிடத்தில் ஸ்திரமாக மனம் ஊன்றிப் பழகாமல் எட்டாத கனிக்கு ஆசைப்பட்டேனே' என்று வருந்தினான்.

'பாப்பா மீது அரும்பு சிநேகம் வைத்தேன். அதை வாட விட்டு விட்டேன். சகுந்தலா மீது மலர் சிநேகம் வைத்தேன். அது காய்க்காமலே போய் விட்டது. சுபத்ரா மீது கனி சிநேகம் வைத்தேன். அது கனியாமலே போய் விட்டது.

இதற்கெல்லாம் நானேதான் காரணம். ஒருவர் மீதும் நிலைக்காமல் மேலே மேலே மேலே போனதால் ஒருநாள் தடால் என்று பாதாளத்தில் விழவேண்டி வந்தது.

ராத்திரி சகுந்தலாவின் திருமண ஊர்வலம் போன போது ஏற்பட்ட மன எழுச்சி இன்னும் அடங்கவில்லை. அதன் வேதனை இன்னும் அடிமனத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அப்படி

யானல் எத்தனையோ தியாகங்கள் செய்து, எத்தனையோ முறை ஏமாற்றத்துக்குள்ளாகியும் விடாமல் தொடர்ந்து என்னையே எண்ணிக் கொண்டிருக்கும் பாப்பாவின் மனம் என்ன பாடு பட்டிருக்கும்! என்னுடைய அலட்சியம் எவ்வளவு வேதனை தந்திருக்கும்?

ஒவ்வொரு கணமும் நரகத்தில் இருந்தது போல் உணர்ந் திருப்பாள். சொல்லொணுத் துயரம் அடைந்திருப்பாள்.'

''சரி; இப்போதாவது அவளைத் தேடிச் சென்று செய்த குற்றத்துக்கு மன்னிப்புக் கேட்டுவிடு'' என்றது உள்மனம்.

''இப்போதா? வேறு கதி இல்லை என்றுதெரிந்ததும்அடையும் சரணுகதி இது என்பது பாப்பாவுக்குப் புரியாதா?''

''அப்படியானல் அவளை மறந்துவிடப் போகிருயா நீ? அவளைப் பார்க்கப் போவதே இல்லையா?''

''நிச்சயமா இல்லை.''

''மாமி கடுதாசியிலே எழுதியிருக்காளே! நாளை அந்தத் திருவிழா முடிஞ்சதும் பாப்பா உன்னைப் பார்க்க ஓடோடி வரப் போகிறேளே!''

''வரட்டும்!''

''நீ எந்த நிலையில் இருந்தாலும் பரவாயில்லை. உன்னை அவள் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிருள். உன்னிடம் மாருத, அழியாத, அசைக்க முடியாத அன்பு வைத்திருக்கிருள். அந்தத் தூய்மையான, உண்மையான உள்ளத்தில் உன்னைத் தவிர வேறு யாருக்குமே இடமில்லை என்று கூறுவாளே, அப்போது நீ என்ன பதில் சொல்லப் போகிருய்?''

சாமண்ணு யோசித்தான். 'நாளை பாப்பா வந்தால் அவள் முகத்தில் எப்படி விழிப்பேன்? சகுந்தலையை அடியோடு மறந்து போயிருந்த துஷ்யந்தனைப் போல் அல்லவா நான் இத்தனை நாளும் பாப்பாவை மறந்திருந்தேன்! இப்போது அவள் முகத்தில் எப்படி விழிப்பேன்?'

'அவள் நாளைக்கு இங்கே உன்னைத் தேடி வரத்தான் போகிருள். உன்னைப் பார்த்ததும் புதையலில் கிடைத்த பொக்கிஷம் மாதிரி மகிழப் போகிருள்!'

சாமண்ணு நிமிர்ந்தான். ''கந்தப்பா!'' என்று அழைத்தான். கந்தப்பன் ஓடி வந்தான்.

''நேத்து மாசிலாமணி முதலியார் வந்தாருன்னு சொன் னியே!''

''ஆமாங்க! நீங்க தூங்கிட்டிருந்தீங்க. அதனலே உங்களை எழுப்ப வேணும். அப்புறம் வர்றேன்னு சொல்லிட்டுப் போயிட் டாரு.''

''ஊர்லேதான் இருக்காரா?''

''ஆமாங்க!''

''அவரை இப்ப அழைச்சுட்டு வர முடியுமா?''

''வரேங்க.''

மத்தியானம் மாசிலாமணி குடையோடு வந்தார். அவர்தான் அந்த வீட்டை சாமண்ணுவுக்கு முடித்துக் கொடுத்தது. கல்கத்தாவுக்குப் போகுமுன் கொஞ்சம் முன்பணம் கொடுத்திருந்தான். இரண்டு மாசத்தில் மீதியைத் தருவதாக ஒப்பந்தம். இப்போது மூன்று மாதங்கள் ஓடி விட்டன.

மாசிலாமணி வந்தபோது, "மன்னிக்கணும். இந்த வெயிலில் உங்களை வரச் சொன்னதுக்கு" என்றான் சாமண்ணு.

"என்ன அப்படிச் சொல்றீங்க? நீங்க எவ்வளவு பெரிய நடிகர்! எவ்வளவு புகழ்! இப்ப கால் போயிட்டுது. அதனாலே ஊரோடு வந்து சேர்ந்துட்டீங்க. நீங்க நல்ல நிலையிலே இருக்கறப்போ ஆயிரம் பேர் வருவாங்க. இப்ப திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாங்க. இதுதான் உலகம். வாழ்வும் தாழ்வும் மனுஷங்களுக்கு சகஜம். அதை மறக்கக் கூடாது. அப்படிச் சில பேர்தான் இருப்பாங்க. இப்ப அந்த நிலையிலும் உங்களைத் தேடி வர்றவங்கதான் உங்ககிட்ட உண்மையான அக்கறை உள்ளவங்க. இது புரிஞ்சாப் போதும்" என்று மாசிலாமணி கூறியபோது, சாமண்ணுவுக்குப் பாப்பாவின் நினைவு தோன்றி 'சொரேர்' என்றது. கண் கலங்கினான்.

"முதலியார்! நாளைக்கு நான் ஊருக்குப் புறப்படறேன். இப்ப எதுக்குக் கூப்பிட்டேன்னு — நீங்க என்ன செய்வீங்களோ தெரியாது. முழு வீட்டையும் எழுதி வாங்கிக்குங்க. எனக்கு இப்பப் பணம் தேவைப்படுது. நான் கொடுத்த 'அட்வான்ஸ்' மூவாயிரத்தையும் திருப்பித் தந்துட்டாப் போதும். நீங்கதான் அதுக்கு ஏற்பாடு செய்யணும்" என்றான் சாமண்ணு.

"ஊருக்கா? எந்த ஊருக்குப் போறீங்க?"

"சொந்த ஊருக்குத்தான். பூர்விகம். எங்க அம்மா பிறந்து வளர்ந்த ஊர்! என் ஆயுசு வரை இருக்க அது இடம் கொடுக்கும். கையில் இருக்கிற சொற்பப் பணத்தை பாங்கிலே போட்டு வச்சா அந்த வட்டியிலே என் காலம் ஓடிடும்! போதும்; கடவுளை எப்பவும் மறக்காமல் இருக்க அவரே வழி சொல்லிக் கொடுத்து இப்போ நேரமும் அமைச்சுக் கொடுத்துட்டார்!"

"கவலைப்படாதீங்க! நாளைக்குப் பணத்தோடு உங்களை வந்து பார்க்கிறேன். ஒருநாள் டயம் கொடுங்க" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் மாசிலாமணி.

மறுநாள் விடியும் போதே மேகத் திரளோடு இருந்தது. பகல் மந்தமாக இருந்தது.

சாமண்ணு கந்தப்பனை அழைத்துத் தன் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னான்.

கந்தப்பன் தயங்கினான். "என்ன யோசனை பண்றே? சாமான்களை எடுத்து வை" என்றான் சாமண்ணு.

"ரெண்டு நாள் கழிச்சுப் புறப்படலாங்க; பரணி கிருத்திகை

குறுக்கே நிக்குது'' என்றான் கந்தப்பன்.,

சாமண்ணா விரக்தியோடு சிரித்தான். ''இனிமே நாள் நட்சத்திரம் பார்க்கறதா இல்லே. அதெல்லாம் என்னை இனி ஒண்ணும் செய்யாது. செய்ய வேண்டியதையெல்லாம் செஞ்சுட்டுது. பாக்கி ஒண்ணும் இல்லே. ஆக வேண்டியதைப் பாரு'' என்று தீர்மானமாய்க் கூறினான் சாமண்ணா.

ராகுகாலம் கழித்து மாட்டு வண்டி ஒன்று கொண்டு வந்தான் கந்தப்பன். வயதான வண்டிக்காரர் கையில் சாட்டையுடன் கும்பிடு போட்டார்.

''ராமர் கோயில் அக்கிரகாரத்துக்கு எப்போ போய்ச் சேரலாம்?'' சாமண்ணா கேட்டான்.

''ராத்திரி ஒன்பதுக்குள்ளே போயிரலாங்க! இப்போதே புறப்பட்டாத்தான் முடியும். மழை வர மாதிரித் தெரியுது.''

''மாசிலாமணி முதலியார் வந்துரட்டும். இதோ இப்ப வந்துடுவார்.,''

மாசிலாமணி சொன்னபடியே பணத்தோடு வந்துவிட்டார்.

''இப்ப இதை வெச்சுக்குங்க. வீட்டு விஷயம் அப்புறம் பேசிக்கலாம்,'' என்று கூறி ஆயிரம் ரூபாயைக் கொடுத்தார்.

மெள்ள க்ரச்சை ஊன்றி வாசலுக்கு வந்தான் சாமண்ணா.

வண்டி ஏறும்போது சற்றுத் தயங்கி ஊரை ஒருமுறை வளைத்துப் பார்த்தான். தெருக்கோடியில் பெருமாள் கோயில் கோபுரம் தெரிந்தது.

அந்த ஊரில் அவனோடு பழகிய அத்தனை பேரும் அவன் கண்ணில் தெரிந்தார்கள். இறந்து போன வக்கீல் தொடங்கி, டாக்டர், சகுந்தலா, நாடக நடிகர்கள், பாட்டுக்காரர்கள், ஓட்டல்காரர், ஆர்மோனியக்காரர், மாடிப்படி நாய் எல்லாருமே!

கண்ணில் நீர் பெருகியது. ஏதோ போன ஜன்மத்தில் அவர்களோடு வாழ்ந்தது போல் தோன்றியது. தெருவும் ஊருமே இப்போது அந்நியமாகத் தோன்றியது.

வண்டி புறப்பட்டதும் கந்தப்பன் கைகூப்பினான். தெரு முடிந்ததும் சாலை இரு பக்க மர வரிசை நடுவே ஓடியது. கருத்த ஆகாயம் பிரம்மாண்டமாகத் தெரிய, காற்று ஊசி வாடையாக அடித்தது.

'ஹய் ஹய்' என்றான் வண்டிக்காரன்.

'கிறிச் கிறிச்' என்று சத்தமிட்டுக் கொண்டு புறப்பட்டது அந்த வண்டி.

''அம்மா வருகிறேன்'' என்று துக்கம் பொங்க வாய்விட்டுக் கூவினான் சாமண்ணா. தும்பைப் பூ நரையோடு, அம்மா அவனை இடுங்கிய கண்களால் பார்ப்பது போல உணர்ந்தான்.

''அம்மா! உன் சந்நிதானத்திற்கே வந்து விடுகிறேன். கால் ஊனமாயிட்டுது! தெரியுமோ? நம்ம பழைய வீட்டிலேதான் இருப்பேன்! என்னை ஆசீர்வாதம் பண்ணு!''



*சின்னச் சாலையிலிருந்து வண்டி பெரிய சாலைக்குத் திரும்பியது. வானம் கரியதாகி நாலு திசையும் விரிந்திருந்தது. மழை மேகங்கள் அடுக்கடுக்காகப் புரண்டன. பிரம்மாண்ட இருட்டு ஒன்று அவன் வண்டியை நோக்கி வந்து கொண்டிருந்தது. பூமி அத்தனையும் குளிர்ந்துவிட்டது.*


*திடீரென்று பாப்பா உருவம் தோன்றியது. அமைதியாக அலையும் ஆழ்ந்த கருவிழிகள். சாந்தம் நிறைந்த புன்னகை முகம்! இளம் சிவப்பில் உதடுகள். ரேகை இழைகள் போல் காது வழியே வழியும் கூந்தல்!*

*''பாப்பா!''*

*தொண்டை கிழியக் கத்தினான்.*

*காற்று அதை அள்ளிச் சென்றது. வண்டிக்காரன் திரும்பிப் பார்த்தான்.*

# 36



மாட்டு வண்டியில் அமர்ந்திருந்த சாமண்ணா மீண்டும் வெளியே பார்த்தான். "பாப்பா!" என்று வாய்விட்டுக் கூவினான். வானத்தில் மேகங்கள் மத்தியில் அவள் முகம் அந்தரமாகத் தெரிந்தது.

"பாப்பா! உன்னுடைய தியாகம், அன்பு, பாசம் எல்லாம் இப்போதுதான் தெரிகிறது. நீ சாதாரண மனுஷி அல்ல; தெய்வத்துக்குச் சமமானவள். உன்னை நான் பெரும் துன்பத்தில் ஆழ்த்திவிட்டேன். இனி ஒருபோதும் என்னால் உனக்குச் சங்கடம் இராது. நான் உனக்கு இழைத்த குற்றங்களுக்கெல்லாம் ஆண்டவன் என்னைத் தண்டித்துவிட்டான். நீ ஓடி வருவாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் உனக்கு ஒரு பாரமாக இருக்க விரும்பவில்லை. ஒருவேளை என் கால் சரியாக இருந்தால் உன்னை நானே வந்து பார்த்தாலும் பார்த்திருப்பேன். ஆனால் இப்போது இந்த நிலையில் வரவே மாட்டேன். என்னுடைய அகம்பாவத்துக்குக் கிடைத்த பரிசு இது. உன்னைப் பார்க்கவே வெட்கப்படுகிறேன்.

பாப்பா, என் இஷ்டப்படி உயர உயரப் பறக்கலாம் என்று இறுமாப்புடன் வாழ்ந்தேன். கடவுள் என்னைப் பாதாளத்தில் வீழ்த்திவிட்டார். நான் இந்த கதிக்கு ஆளாவேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. இப்போது என் கிராமத்திற்கே போகிறேன். உன்னைப் பார்க்கக் கூட எனக்குத் தைரியமில்லை. நான் உனக்கு இனி எவ்விதத்திலும் பொருத்தமில்லாதவன். என்னை மன்னித்து விடு."

சீரான குளிர் காற்று வண்டியை நோக்கி வீசியது. கணத்துக்குக் கணம் அதன் வேகமும் வாடையும் கூடியது.

''விறைக்குதுங்க!'' என்று சொல்லிக் கொண்டே வண்டிக்காரன் ஒரு துண்டை இழுத்து உடம்பைச் சுற்றிக் கொண்டான்.

'சொட சொட' என்று சத்தம். மழை வண்டிக் கூரையைத் தாக்கியது. வண்டிக்காரன் நடுங்கி ஓரமாக ஒடுங்கினான்.

புறப்பட்டபோது சாமண்ணாவுக்கு உடம்பு ஒரு மாதிரி இருந்தது. சரியாகச் சாப்பிட்டு இரண்டு நாள் ஆயிற்று. இப்போது அவனுக்கும் உடம்பு வெடவெடத்தது. தொடர்ந்து கன மழை பெய்தது. சாதாரணத் திவலைகள் அல்ல. ஒரு சமுத்திரம் சொரிந்தது. வண்டிக்குள் இம்மி பாக்கி இல்லாமல் அத்தனையும் நனைந்து தெப்பலாகிவிட்டது. சாமண்ணா வெடவெடத்தான். பெட்டியிலிருந்து மற்றொரு போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டான். 'அம்மா, அம்மா' என்று அரற்றினான். பெட்டி மீது சாய்ந்து கொண்டான். சாதாரணக் கல் பாவிய பாதையாதலால் கடக் கடக் என்று சக்கரம் அரைக்க, கூண்டு பெரிதாக ஆடியது. இருபக்கமும் அடர்த்தியான மர வரிசைகள் பேய் போல வடிவம் காட்டின.

''வண்டிக்காரரே! இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?'' என்று கேட்டான் சாமண்ணா.

''ஆறு கல்!'' என்றான் வண்டிக்காரன்.

''ஆறு மைலா?''

ஒரு நிலையாகப் படுக்க முடியவில்லை. மழை நின்றபாடில்லை. வண்டிக்காரன் 'தா! தா!' என்று குரல் கொடுத்து மாடுகளை அதட்டிக் கொண்டிருந்தான்.

சாமண்ணாவுக்கு நெஞ்சு படபடக்க, ஜுரக் குளிர் வேகமாக அடிக்க, ''அம்மா! அம்மா!'' என்றான். கண்ணைத் திறக்க முடியவில்லை.

சட்டென்று வண்டி எங்கேயோ நின்றது. வண்டிக்காரன் எட்டிப் பார்த்தான். முதலில் அவனுக்கு எதுவும் தெரியவில்லை. பிறகு எதிரில் நீர்த் தகடு தெரிந்தது. ஏதோ ஒரு ஓடை நிரம்பி ஓடுகிறது என்பதைப் புரிந்து கொண்டான்.

''ஐயா, ஐயா!'' என்று சாமண்ணாவை எச்சரித்தான். உள்ளே பதில் இல்லை.

வண்டிக்காரன் குதித்தான். மாடுகள் புத்திசாலித்தனமாக நின்றன.

அவற்றின் தலைக்கயிறுகள் இரண்டையும் பற்றிக் கொண்டு முன்னால் தண்ணீருக்குள் மெதுவாக நடந்தவாறு போனான். வண்டியும் பின்னாடி சென்றது. மறுபக்கம் மேடு ஏறினதும், ''ஐயா'' என்று அழைத்தபோதும் சாமண்ணா பதில் கூறாமல் படுத்துக் கிடந்தான்.



பின்புறமாக வந்து உசுப்பினான். தொட்டவுடன் கை சுட்டது.
''ஐயா, ஐயா!''

வெறும் முனகல்தான்.

திடீரென்று வண்டி பக்கவாட்டில் சாயத் தொடங்கியது. ஓடையில் வந்த வெள்ளத்தின் கனமும் வேகமும் கூடுதலாயிற்று. மாடுகள் தடுமாறின. வண்டிக்காரன் திடுக்கிட்டான். தண்ணீரின் ஆவேசம் அதிகமாகி இதற்குள் வண்டி பள்ளத்தில் இறங்கிக் குடை சாய்ந்தது. ''ஐயா!'' என்று அலறினான் வண்டிக்காரன்.

சாலை உடைப்பெடுத்திருந்ததால் பள்ளத்தில் இறங்கிய வண்டி உருண்டுவிட்டது.

சாமண்ணா முகத்தை மெள்ள மெள்ளத் திருப்பினான். கண்ணை விழித்துப் பார்த்தான்.

எங்கே இருக்கிறோம் என்று தெரியவில்லை. எதுவும் புரியவில்லை.

''அம்மா.... அம்மா!''

உடம்பு வெடவெடத்தது. அவனது காதில் மட்டும் பிரக்ஞை இருக்கிறதோ? 'ஓ' என்று இரைச்சல் கேட்கிறதே! ஷவர் இப்படிச் சத்தம் போடாதே! ஒருவேளை! மழையோ!

நாட்கணக்கில் அங்கே இருப்பது போன்ற பிரமை! திரும்பி உணர்வு வந்தபோது 'ஷவர்' நின்றுவிட்டது. யாரோ அவனைத் தொடுகிறார்கள்.

''உயிர் இருக்கு குமாரசாமி!'' என்றது ஒரு குரல்.

''பாவம்! யாரோ தெரியலே. நினைவு இல்லாமக் கிடக்கிறாங்க!'' இன்னொரு குரல்.

''இந்தா முருகேசா! முதல்லே ஆளைத் தூக்கி நம்ம வண்டியிலே போடுவம்! ராத்திரி வீட்டிலே வச்சிருந்து காலையிலே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவம்.''

சாமண்ணாவுக்குச் சிறிது நேரம் எதுவும் தெரியவில்லை. பிறகு ஈரத்தை விட்டு உடல் மேலே மிதப்பது தெரிந்தது. அடுத்து, ஒரு வைக்கோல் மெத்தையில் கிடப்பது தெரிந்தது.

'ஊரை விட்டுப் புறப்பட்டோமே! மழை அடித்ததே! இப்போது இல்லையே! என்னவோ குரல் கேட்கிறதே!'

''நல்லா நனைஞ்சிருக்காரு குமாரசாமி!''

''ஆமாம். ஜுரம் வேற அடிக்குது. ஜன்னி கண்டிருக்கு.''

''வீட்டிலே போய் உடனே உலர்ந்த துணி போட்டுத் துவட்டிக் கம்பளியாலே போர்த்தணும்.''

கண்ணை மூடுகிறான். எல்லாம் இருட்டாகிறது.

எத்தனை யுகமான இருட்டு? தெரியாது.

கண்கள் லேசாக விழிக்க, பார்வை மங்கலாகத் தெரிய, ஏதோ ஒரு வீட்டின் அறைக்குள் இருப்பது புலனாகிறது.

'என்ன இது? எங்கே வந்திருக்கிறோம்? என் சொந்த கிரா

மத்துக்குத்தானே புறப்பட்டேன்? இப்போது இங்கே எப்படி வந்தேன்! இது யார் வீடு?'

நிதானமாக அறை முழுதும் பார்த்தான். வெளிச்சம் முன்னைக் காட்டிலும் கூடியிருந்தது. அறை புதிது. இடம் புதிது. அவன் மீது உள்ள ஆடை புதிது! போர்வை புதிது!

அறைக்குள் யாரோ வரும் நிழல் தெரிந்தது. அந்த உருவத்தை வியப்போடு பார்த்தான். அடி வயிற்றில் ஒரு அதிர்ச்சி! வாய் அவனையறியாமல், ''பாப்பா!'' என்று அழைக்கிறது. ஆனால் சத்தம் வரவில்லை.

பிரமித்துப் பார்க்கிறான். மலங்க மலங்க விழிக்கிறான்.

''யாரு?''

பாப்பாவிடம் இப்போது ஒரு கம்பீர யௌவனம் வந்திருந்தது. அமைதியாக, அடக்கமாக, அன்பின் உருவமாக நின்றாள்.

''பாப்பா!''

உணர்ச்சி பரவசத்தில் அழைத்தான்.

மந்தகாசமாக முறுவலித்தாள்.

'இந்த ஜன்மமா, அடுத்த ஜன்மமா?'

வண்டியிலும், மழையிலும் அவன் ஜன்மம் முடிந்துவிட்டதா? அதன் பிறகு எப்படி இதைப் போன்ற ஒரு அமைதியான காட்சி எழுந்தது?

''பாப்பா!''

அவள் இன்னும் அருகில் வந்தாள்.

''நீதானா?''

''ஆமாம்....''

''இங்கே எப்படி வந்தேன்?''

''உங்க வண்டி மழையிலே தடம் மாறிக் குடை சாஞ்சிட்டுது. நீங்க பள்ளத்திலே கிடந்து உயிருக்குப் போராடிக்கிட்டிருந்தீங்க., நல்லவேளை! அந்தச் சமயம் எங்க அப்பா அந்த வழியா வந்திருக்காரு. அவர் மட்டும் பார்த்திராட்டா, நீங்க இந்நேரம் உயிரோடு இருக்க மாட்டீங்க!''

''இது.... இது.....''

''இது எங்க வீடுதான்!''

''இங்கே வந்துட்டனா?''

''ஆமாம்!''

''நான் எங்க ஊருக்குப் போகலையா?''

''இனிமே உங்க ஊர், வீடு எல்லாமே இதுதான்!''

''என்ன சொல்றே?''

''இனி, நீங்க இங்கேதான் இருக்கப் போறீங்க. நான் உங்களைத் தனியா விடப் போறதில்லே'' என்றாள் பாப்பா.

சாமண்ணாவுக்கு அந்தக் குரலும், அதன் இதமும், தாய்க்கு நிகரான பாசமும், உயிருக்கு உயிரான நேசமும் சட்டென்று பளிச்சிடுவதுபோல இருந்தது.

"பாப்பா, என் கால்.... என் கால்...." என்று துக்கம் பீறிட அழுதுவிட்டான். பாப்பா அவன் வாயைப் பொத்திளுள். "எனக்கு எல்லாம் தெரியும். இனி உங்களுக்கு வாழ்நாள் முழுதும் நான்தான் க்ரச்" என்ருள்.

பாப்பாவும் அவளது அமைதி சிந்தும் வதனமும் தனக்குச் சொந்தமாகத் தோன்றியது.

அவளை மணந்தாலும் சரி, அம்மா சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து மணக்காமல் சிநேகமாகவே அவளுடன் வாழ்ந்தா லும் சரி; இனி அவனுக்கு இதுதான் நிரந்தரமான வீடு.

முற்றும்



## ஆசிரியர் சாவியின் நூல்கள்

வாஷிங்டனில் திருமணம்
விசிறி வாழை
வழிப்போக்கன்
வடம் பிடிக்க வாங்க, ஜப்பானுக்கு
வேதவித்து
கேரக்டர்
பழைய கணக்கு
இங்கே போயிருக்கிறீர்களா?
ஊரார்
திருக்குறள் கதைகள்
கோமகனின் காதல்
தாய்லாந்து
உலகம் சுற்றிய மூவர்
என்னுரை (கலைஞரின் முன்னுரையுடன்)
சாவியின் கட்டுரைகள்
சாவியின் நகைச்சுவைக்கதைகள்
ஆப்பிள் பசி
நான் கண்ட நாலு நாடுகள்
நவகாளி யாத்திரை
சிவகாமியின் செல்வன்

**சாவி பப்ளிகேஷன்ஸ்**
8-A, 7வது பிரதான சாலை
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28